92 முதல் 2003 வரை

# G.C.E - O/L

## 12 PAPERS

# சைவ சமயம்
# SAIVAM

Astan Publications

Work hard victory shall follow

அஸ்ரன் வெளியீடுகள் :-

க.பொ.த சாதாரணதரம் (G.C.E O' Level)

(12 வருட பரீட்சை வினாக்களும் விடைகளும்)

* தமிழ்மொழியும் இலக்கியமும்
* விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்
* சமூகக்கல்வியும் வரலாறும்
* வணிகக்கல்வியும் கணக்கீடும்
* கணிதம்
* ஆங்கிலமொழி
* சைவசமயம்

க.பொ.த உயர்தரம் (G.C.E A' Level)

(10 வருட பரீட்சை வினாக்களும் விடைகளும்)

* இரசாயனவியல்
* உயிரியல்
* பொருளியல்
* கணக்கீடு
* தமிழ்
* புவியியல்
* பௌதிகவியல்
* இணைந்த கணிதம்
* வணிகக்கல்வி
* அளவையியல்
* அரசியல் மூலதத்துவங்கள்
* இந்து நாகரிகம்

* பொதுவிவேகம் - ஆண்டு - 5 புலமைப்பரிசில்

(10 வருட பரீட்சை வினாக்களும் விடைகளும்)

பொதுப் பரீட்சைகள் :-
(வினா விடைப் பயிற்சிகள்)

* எழுதுவினைஞர் பரீட்சை
* ஆசிரிய போட்டிப் பரீட்சை
* SLAS
* SLEAS

Astan Publications

No : 100 A/1, W. A. Silva Mawatha, Colombo - 06.

# Ordinary Level

# சைவசமயம் I&II

## 12 papers
பரீட்சை வினாக்களும் விடைகளும்
(1992 - 2003)

அஸ்ரன் பதிப்பகம்
100 A/1 W. A. சில்வா மாவத்தை, கொழும்பு – 06.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2003 டிசெம்பர்

# சைவசமயம் I

ஒரு மணித்தியாலம்

01. கருவறையிலே விநாயகர் அங்கியுடன் சிவலிங்கம் அமைந்துள்ள ஆலயம்
(1) மாமாங்கேஸ்வரம் (2) முன்னேச்சரம்
(3) நகுலேச்சரம் (4) ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம்

02. சிவபெருமான் யோகியாய், ஞானவடிவினராய், முதற் பரமாசாரியாராய் எழுந்தருளியுள்ள மூர்த்தம்
(1) நடராச மூர்த்தம் (2) வைரவ மூர்த்தம்
(3) இலிங்கோற்பவ மூர்த்தம் (4) தட்சிணா மூர்த்தம்

03. இறைவனின் ஐந்தொழில்கள்
(1) பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், சதாசிவன், மகேஸ்வரன்
(2) படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்
(3) உண்ணுதல், உறங்குதல், உடுத்தல், ஆடுதல், பாடுதல்
(4) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

04. கோயில் என்று சிறப்பாகக் குறிப்பிடப்படுவது
(1) திருவண்ணாமலை (2) இராமேஸ்வரம் (3) சிதம்பரம் (4) திருவானைக்கா

05. சிவாகமங்கள்
(1) ஆலயம் அமைத்தல், கிரியைகள், வழிபாட்டு முறைகள் பற்றிக் கூறுகின்றன.
(2) சந்தான குரவர்களால் அருளப் பெற்றன.
(3) தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கியுள்ளன.
(4) சைவத்தின் பொதுநூலாகக் கொள்ளப்படுகின்றன.

06. பின்வருவனவற்றுள் இதிகாசங்கள் என அழைக்கப்படுபவை
(1) இராமாயணமும் மகாபாரதமும் (2) திருவாசகமும் திருக்கோவையாரும்
(3) திருக்குறளும் திவ்வியபிரபந்தங்களும் (4) வேதங்களும் ஆகமங்களும்

07. தாய், தந்தை, குரு, தெய்வம் ஆகியோரைப் பேணியும் போற்றியும் வாழ்பவர்கள்
(1) குருலிங்க சங்கம வழிபாடு செய்பவர்கள் ஆவர்.
(2) மண்ணில் நல்ல வண்ணம் வாழ்பவர்கள் ஆவர்.
(3) வாழ்க்கையில் பலவீனர்களாகக் கருதப்படுகின்றனர்.
(4) சற்புத்திரமார்க்கத்தில் நின்று ஒழுகுபவர்கள் ஆவர்.

08. வடமொழிப் பதினெண் புராணங்களில் ஒன்றைத் தழுவித் தமிழில் செய்யப்பட்ட புராணம்
(1) திருவிளையாடற் புராணம் (2) பெரிய புராணம்
(3) கந்த புராணம் (4) சிவ புராணம்

09. பின்வருவனவற்றுள் திருக்கேதீச்சரத்தைக் குறிக்கும் பாடலடி
(1) "பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே."
(2) "கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த ........."
(3) "வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்"
(4) "போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே"

10. "ஆருத்திரா தரிசனம்" என்பதுடன் தொடர்புடையது
(1) மகா சிவராத்திரி (2) வைகுண்ட ஏகாதசி (3) பிரதோஷம் (4) மார்கழித் திருவாதிரை

11. நைமித்தியக் கிரியைகளை உள்ளடக்கிய தொகுதி
(1) உஷ்க்காலப் பூசை, உச்சிக் காலப் பூசை, அர்த்தயாமப் பூசை
(2) பூர்வக் கிரியைகள், உத்தரக் கிரியைகள், அபரக் கிரியைகள்
(3) தைப்பூசம், ஆவணிச் சதுர்த்தி, நித்தியக் கிரியைகள்
(4) மகோற்சவம், சுக்கிரவாரப்பூசை, கும்பாபிஷேகம்

12. "தில்லைவாழ் அந்தணர் ........" என்னும் தொடரை முதலாகக் கொண்ட திருத்தொண்டத் தொகையைப் பாடியவர்
(1) சுந்தரமூர்த்தி நாயனார் (2) சேக்கிழார்
(3) நம்பியாண்டார் நம்பி (4) காரைக்காலம்மையார்

13. திருநாவுக்கரசருக்குக் கொடிய சூலை நோய் வருவதற்குக் காரணமாக அமைந்தது
(1) நீற்றறைக்குள் பல நாட்கள் பூட்டி வைக்கப்பட்டிருந்தமை.
(2) வாந்திபேதி நோய் பரவிய பிரதேசத்தில் வாழ்ந்தமை.
(3) சைவசமயத்தை விட்டு வேற்றுச் சமயத்திற்கு மதம் மாறியமை
(4) உண்ணாநோன்பின் விளைவாக ஏற்பட்ட போசாக்கின்மை.

14. ஆன்மா மும்மலங்களின் பிடியிலிருந்து விடுதலை பெற்று இறைவனை அடைந்து பேரின்பத்தில் திளைத்தல் என்பதைக் குறிக்குஞ் சொல்
(1) சத்து (2) அசத்து (3) முத்தி (4) சித்தி

15. சிந்துவெளியில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் பயனாக உறுதி செய்யப்பட்டது
(1) சூரிய வழிபாட்டின் தொன்மை (2) சிவ வழிபாட்டின் தொன்மை
(3) வேதங்களின் தொன்மை (4) மெய்யியல் வளர்ச்சி பெற்றிருந்தமை

16. அருணந்தி சிவாச்சாரியார் அருளிய நூல்
(1) சிவஞானபோதம் (2) சிவஞானசித்தியார் (3) திருவருட் பயன் (4) திருப்புகழ்

17. கொலை, களவு, மது அருந்துதல், காமம், குருநிந்தை என்பன
(1) ஐம்பெரும் கடமைகள் (2) ஐம்பெரும் யாகங்கள்
(3) ஐம்பெரும் போதகங்கள் (4) ஐம்பெரும் பாதகங்கள்

18. மனிதன் மனிதத் தன்மைகளுடனான மனிதனாக வாழ்வதற்கு
(1) பொருளும் போகமும் அவசியம் (2) பதவியும் பட்டமும் அவசியம்
(3) புகழும் கீர்த்தியும் அவசியம் (4) நல்லொழுக்கமும் கடவுள் பக்தியும் அவசியம்

19. "தொண்டர் சீர் பரவுவார்" என்னுஞ் சிறப்புப் பெயர் பெற்றவர்
(1) திருமூலர் (2) அப்பூதியடிகள் (3) அப்பரடிகள் (4) சேக்கிழார்

20. சைவத்தின் தோத்திர நூல்கள்
(1) மெய்கண்ட சாத்திரங்களில் அடங்குகின்றன. (2) பன்னிரு திருமுறைகளில் அடங்குகின்றன.
(3) பதினெண் புராணங்களில் அடங்குகின்றன. (4) வேதங்கள் ஆகமங்களில் அடங்குகின்றன.

21. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகிய இருவகைப் பாடல்களையும் பாடிய பெருமைக்குரியவர்
(1) சேந்தனார் (2) கருவூர்த் தேவர் (3) திருமாளிகைத் தேவர் (4) குமரகுருபரர்

22. சைவசிந்தாந்தக் கோட்பாட்டின்படி, வரையறை இல்லாத அறிவுடைய பொருள்
(1) பதி (2) பசு (3) பாசம் (4) ஆணவம்

23. வாய்மை எனப்படுவது
(1) பணிவுடையன் இன்சொலன் ஆதல். (2) பிறருக்குச் தீங்கு பயவாத சொற்களைச் சொல்லுதல்.
(3) பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல். (4) இன்னா செய்தாரை ஒறுத்தல்.

24. வட இலங்கையில் தோன்றிச் சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்தவர் ஆறுமுகநாவலர். அதேபோன்று கிழக்கிலங்கையில் தோன்றிச் சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பணிபுரிந்தவர்
(1) சுவாமி ஞானப்பிரகாசர் (2) மறைமலை அடிகள்
(3) சுவாமி விபுலானந்தர் (4) சி.வை. தாமோதரம் பிள்ளை

25. "ஒரு பொல்லாப்பும் இல்லை", "முழுவதும் உண்மை", "ஆர் அறிவார்" ஆகிய மகாவாக்கியங்களை வெளிப்படுத்திய ஈழத்து ஞானி
(1) பட்டினத்தார் (2) கடையிற் சுவாமிகள் (3) செல்லப்பா சுவாமிகள் (4) நவநாத சித்தர்

26. ஒருவர் இறந்த பின், அன்னாரின் ஆன்மா பாசங்களினின்றும் நீங்கிச் சிவத்துவம் அடைய வேண்டிச் செய்யப்படும் கிரியைகள்
(1) அபரக் கிரியைகள் (2) பூர்வக் கிரியைகள்
(3) நித்தியநைமித்தியக் கிரியைகள் (4) ஆகமக் கிரியைகள்

27. சங்க இலக்கியங்களில் "பிறவாயாக்கைப் பெரியோன்" என்னும் தொடர்
(1) திருமாலைக் குறிக்கின்றது. (2) அரசனைக் குறிக்கின்றது.
(3) முருகனைக் குறிக்கின்றது. (4) சிவனைக் குறிக்கின்றது.

28. சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் எழுதிய சைவசமய நூல்கள் அடங்கும் தொகுதி
(1) மதங்க சூளாமணி, யாழ்நூல், விஞ்ஞானதீபம்
(2) சைவபோதம் முதலாம் புத்தகம், சைவக்கிரியை விளக்கம், சைவசமயசாரம்
(3) திருவருட் பயன், சைவவினாவிடை, இலங்கை பூமிசாத்திரம்
(4) கந்தபுராண விளக்கம், சிவராத்திரி புராணம், நல்லைக் கலிவெண்பா

29. சிவபெருமானால் உதைபட்டு இறந்துபட்ட யமன் உயிர்த்தெழுந்ததும் அவனிடம் வெளிப்பட்டது
(1) கோபம் எனும் குணம் (2) அகந்தை எனும் ஆணவம்
(3) பணிவு எனும் பண்பு (4) பகைமை என்னும் உணர்ச்சி

30. மார்க்கண்டேயர் கதை மூலம் காசிபர் சூரனுக்கு விளக்கிய உண்மை
(1) விதியின் வலிமை (2) கூற்றுவனின் வலிமை (3) தவத்தின் வலிமை (4) உடலின் வலிமை

31. இரு வினைகள்
(1) செய்வினை, செயப்பாட்டுவினை (2) சுத்தமாயை, அசுத்தமாயை
(3) ஆகாமியம், சஞ்சிதம் (4) நல்வினை, தீவினை

32. "கொல்லா விரத மொன்று கொண்டவரே நல்லோர்;
அல்லாதார் யாரோ? அறியேன் பராபரமே".

இங்கு கொல்லா விரதம் என்பது
(1) வெள்ளிக்கிழமை விரதம் ஆகும்.
(2) பொய் பேசாதிருத்தலாகும்.
(3) உயிர்களைக் கொல்லாதிருத்தல் என்னும் விரதமாகும்.
(4) தனித்திரு, பசித்திரு, விழித்திரு என்னும் விரதமாகும்.

33. "நல்லவர்களோடு கூட வேண்டும். நல்லவர்களுடைய சரித்திரங்களை வாசிக்க வேண்டும். நல்லெண்ணம், நற்பேச்சு, நற்செயல் ஆகியவற்றில் ஈடுபாடு கொள்ள வேண்டும்". - இக் கருத்துக்கள்
(1) இக் காலத்திற்குப் பொருந்தாதவை. (2) எக்காலத்திற்கும் பொருத்தமானவை.
(3) வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளவை.
(4) சமய வாழ்வுக்குக் குந்தகமானவை.

34. பின்வருவனவற்றுள் நல்வினைக் குணங்கள் அடங்கிய தொகுதி
(1) அன்பு, உண்மை, பணிவு, நீதி, சாந்தம்
(2) அழுக்காறு, அவா, வெகுளி, பகைமை, அஹிம்சை
(3) காமம், குரோதம், மதம், மாற்சரியம், காருண்ணியம்
(4) அறம், பொருள், இன்பம், வீடு, பொறாமை

35. சகலர் ஆகிய எம் போன்றோர்க்கு, சிவபெருமான் நேராக வராமல்
(1) குருவை அதிட்டித்து நின்றே அருள் செய்கின்றான்.
(2) அவதாரம் எடுத்து வந்து அருள் செய்கின்றான்.
(3) நண்பனாக வந்து அருள் செய்கின்றான்.
(4) மறைந்து நின்று தண்டனை வழங்குகின்றான்.

36. எமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது
(1) பொருள் தேடி இன்பம் அனுபவிப்பதன் பொருட்டேயாகும்.
(2) அழகுபடுத்தி ஆனந்தம் பெறும் பொருட்டேயாகும்.
(3) பிறரை வருத்தியேனும் உயர்வு பெறும் பொருட்டேயாகும்.
(4) கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்.

37. சகலகலாவல்லி மாலை
(1) அலைமகளை நோக்கிப் பாடப்பட்டது. (2) கலைமகளை நோக்கிப் பாடப்பட்டது.
(3) மலைமகளை நோக்கிப் பாடப்பட்டது.
(4) துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய முத்தேவியர்களையும் நோக்கிப் பாடப்பட்டது.

38. மகாவிஷ்ணுவின் வலக்கரத்திலும் இடக்கரத்திலும் இருப்பவை,
(1) வேலும் வில்லும் (2) சூரியனும் சந்திரனும் (3) சக்கரமும் சங்கும் (4) மானும் மழுவும்

39. பாலாவி, பாவநாசம், கீரிமலைச்சுனை, துர்க்கா புஷ்கரணி என்பன
(1) புனித தலங்கள் (2) புனித தீர்த்தங்கள் (3) புனித தல விருட்சங்கள் (4) புனித ஊர்திகள்

40. "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே" - இது
(1) நடைமுறைக்கு ஒவ்வாதது. (2) சைவநெறிக்குப் புறம்பானது.
(3) சமயஞ் சார்ந்த கருத்தல்ல. (4) சைவநெறிக்கு உடன்பாடானது.

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2003 டிசெம்பர்

# சைவசமயம் II

இரண்டு மணித்தியாலங்கள்

01. "சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை" - திருமந்திரம்

(i) இப் பாடலடிகளிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ளும் உண்மை யாது? பசுபதி என்பதன் பொருள என்ன?
(ii) பரம்பொருள், மெய்ப்பொருள் என்பதால் நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன?
(iii) சைவசமயம் இறைவன் ஒருவனே எனக் குறிப்பிடுகின்றது. இதனை உறுதிப்படுத்தும் மூன்று ஆதாரங்களையும், அவை இடம்பெறும் நூல்களின் பெயர்களையும் எழுதுக.
(iv) மனிதர்கள் அனைவரும் இறைவனின் பிள்ளைகள் எனச் சைவநெறி உணர்த்தும் உண்மையைத் தெளிந்து கொண்டு ஒழுகினால் உலகில் ஏற்படும் நன்மைகள் யாவை?

02. "திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும் ............. ஊரல்ல அடவிகாடே" - தேவாரப் பாடலடி
(i) ஓர் ஊரின் சிறப்புக்கு ஆதாரமாக உள்ளது எது என மேற்படி தேவாரப் பாடலடி குறிப்பிடுகின்றது?
(ii) தான்தோன்றியீச்சரம் என்பதால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது? இலங்கையிலுள்ள இரண்டு தான்தோன்றியீச்சரங்களைக் குறிப்பிடுக. அங்கு மூலமூர்த்தியாக விளங்குவது யாது?
(iii) குளக்கோட்டன் என்னும் மன்னன் ஆற்றிய ஆலயத் திருப்பணிகள் பற்றிச் சுருக்கமாக விவரிக்க.

(iv) தெல்லிப்பளை துர்க்கை அம்பாள் தேவஸ்தானம் ஆற்றி வரும் சமய, சமூகப் பணிகளைக் குறிப்பிடுக.

03. "மனமே திருமுறைகள் ஓதுவாய்"

(i) சைவத் திருமுறைகளைத் தொகுக்கும் பணியில் முதலில் ஈடுபட்டவர் யார்? அவரை இப்பணியில் ஈடுபடுத்தியவர் யார்?

(ii) பன்னிரு திருமுறைகளில், முதல் ஏழு திருமுறைகளிலும் அடங்கும் திருப்பதிகங்கள் யாவை? அவற்றை அருளியவர்கள் யாவர்? அவற்றிற்குப் பண் அமைத்து உதவியவர் யார்?

(iii) தேவார திருவாசகப் பாடல்களைத் தினமும் மனமுருகி ஓதுபவர்கள் அடையும் பயன்களைக் குறிப்பிடுக.

(iv) திருமுறைகள் தொடர்பான சமய நிகழ்ச்சிகள் நான்கு கூறுக. அவற்றின் மூலம் சைவ மக்களிடையே சமய விழிப்புணர்வை ஏற்படுத்த முடியுமென்று கருதுகிறீர்களா? உங்கள் கருத்தைத் தெளிவுபடுத்துக.

04. "மன்ற லந்தரு மிடைந்தபூங்
கயிலையில் மலைவல்லி உடன்கூட
வென்றி வெள்விடைப் பாகர்தாம்
வீற்றிருந்தருளிய பொழுதின் கண்
ஒன்று சிந்தைநம் ஊரனை
உம்பர்வெள் ளானையின் உடனேற்றிச்
சென்று கொண்டிங்கு வாருமென் (று)
அயன்முதல் றேவர்கட் கருள்செய்தான்" - பெரியபுராணம்

(i) கயிலைநாயகன் யார்? அவர் அயன் முதலிய தேவர்களுக்கு வழங்கிய ஆணை யாது?

(ii) கயிலை நாயகன் இவ்வாணையை வழங்க வேண்டி வந்ததற்குரிய சந்தர்ப்பத்தை விளக்குக.

(iii) சுந்தரர் பின்பற்றிய மார்க்கம் யாது? அதனால் அவர் என்ன சிறப்புப் பெயர் பெற்றார்?

(iv) சுந்தரர், சேரமான் பெருமாள் ஆகிய இருவருக்கிடையே நிலவிய நட்பின் திறனை விவரிக்க.

05. "மூன்று திறத்(து) உள்ளாரும் மூலமலத்(து) உள்ளார்கள்
தோன்றலர்தொத்(து) உள்ளார் துணை" - திருவருட்பயன்

(i) மூவகை ஆன்மாக்கள் எவை? மும்மலங்கள் எவை?

(ii) மலப்பிணிப்பு அல்லது பாசத்தளை பற்றி நீங்கள் அறிந்தவற்றைச் சுருக்கமாக எழுதுக.

(iii) ஆன்மா "சதசத்து" என ஏன் அழைக்கப்படுகின்றது?

(iv) சந்தான குரவர் நால்வரின் பெயர்களையும் குறிப்பிடுக. அவர்களில் ஒருவர் சைவசிந்தாந்த வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளைச் சுருக்கமாக விவரிக்க.

06. "கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே
கர்ப்பூரவொளி காணாக் கண்ணென்ன கண்னே" - நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

(i) இலங்கையில் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புப் பெற்ற முருகன் ஆலயங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் நடைபெறும் பூசை முறை, திருவிழா என்பன பற்றிக் குறிப்புரை எழுதுக.

(iii) உங்கள் ஊரில் அல்லது அயலூரில் அமைந்துள்ள ஒரு சைவ ஆலயத்தின் பெயரைக் குறிப்பிட்டு, அதன் அமைவிடம், மூர்த்தி, தீர்த்தச் சிறப்பு, அங்கு நடைபெறும் பூசைகள், விழாக்கள் என்பன பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(iv) முருகனுக்குரிய விரதங்கள் மூன்று எழுதுக.

07. "சிவபூமி எனத் திருமூலரால் சிறப்பித்துக் கூறப்பட்ட இலங்கையில் பண்டைக் காலம் முதலே சைவ சமயம் நிலைபெற்று வளர்ச்சியுற்றிருந்தது.

(i) இலங்கையின் பூர்வீகக் குடிகள் சிவ வழிபாட்டினர் என்பதற்கு இரண்டு ஆதாரங்கள் தருக.

(ii) பொலன்னறுவைக் காலத்தில் இலங்கையின் சைவசமயம் உன்னத நிலையில் இருந்தது என்பதனை உறுதிப்படுத்தும் சான்றுகள் இரண்டைக் குறிப்பிடுக.

(iii) ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் சைவ சமய வளர்ச்சிக்குப் பாதகமாக அமைந்த காரணிகள் மூன்று எழுதுக.

(iv) பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் சைவசமய மறுமலர்ச்சிப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட பெரியோர்கள் நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுக. அவர்களில் ஒருவர் மேற்கொண்ட சமயப் பணி பற்றிச் சுருக்கமாக எழுதுக.

08. (i) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(ii) அவற்றைப் பாடியோர் யார் என்பதையும் அவை எச் சந்தர்ப்பங்களில் பாடப்பட்டன என்பதையும் கூறுக.

(iii) அவற்றின் பொழிப்புரையினை எழுதுக.

(அ) "நங்க டம்பனைப் ..................." (ஆ) "நத்தார்படை ................."

(இ) "சொல்லாண்ட சுருதிப் ..........." (ஈ) "தண்ணளிவெண் குடை ............"

(உ) "பத்தியால் யானுன்னைப் ..........."

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2003 டிசெம்பர்

# சைவசமயம் I

### விடைகள்

| வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 4 | 21. | 1 | 31. | 4 |
| 02. | 4 | 12. | 1 | 22. | 1 | 32. | 3 |
| 03. | 2 | 13. | 3 | 23. | 2 | 33. | 2 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 3 | 34. | 1 |
| 05. | 1 | 15. | 2 | 25. | 3 | 35. | 1 |
| 06. | 1 | 16. | 2 | 26. | 1 | 36. | 4 |
| 07. | 2 | 17. | 4 | 27. | 4 | 37. | 2 |
| 08. | 3 | 18. | 4 | 28. | 2 | 38. | 3 |
| 09. | 3 | 19. | 4 | 29. | 3 | 39. | 2 |
| 10. | 4 | 20. | 2 | 30. | 3 | 40. | 4 |

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2003 டிசெம்பர்

# சைவசமயம் II

### விடைகள்

01. (i) சிவபெருமானே முழுமுதற் கடவுள். சிவனுக்கு ஒப்பான தெய்வம் தேடினாலும் கிடையாது என்பதாகும்.
பசு - ஆன்மா பதி - தலைவன்
ஆன்மாக்கள் எல்லாவற்றிற்கும் தலைவனான சிவன் பசுபதி என அழைக்கப்படுகிறான்.

(ii) பரம்பொருள் என்பது எல்லாவற்றிற்கும் மேலான ஒப்புயர்வு அற்ற பொருள்.
மெய்ப்பொருள் என்பது உண்மைப் பொருள். இந்த உண்மைப் பொருள் தோன்றுவதும் இல்லை அழிவதும் இல்லை என்றும் நிலைத்துள்ள பொருள். இவ்விரண்டு பொருளும் சிவனைக் குறிக்கிறது.

(iii) 'ஒன்றவன் தானே' - இவ்வாறு திருமந்திரம் இறைவன் ஒருவனே என்பதை நிலைநாட்டுகிறது.
'ஒருவனே தேவன்' - திருமந்திரம்.
'ஏகம் சத் விப்ரா பஹுசதா வதந்தி' இதில் உண்மைப் பொருள் ஒன்றே, அது பலவாறாகப் பேசப்படுகிறது. - இந்த வேதவாக்கியமும் திருமந்திரமும் இறைவன் ஒன்றே என்பதை வலியுறுத்துகின்றன.

(iv) இவ்வுலகில் வாழும் மனிதர்கள் அனைவரும் ஒரே இறைவனின் பிள்ளைகள் எனச் சைவநெறி உணர்த்தும் உண்மையைத் தெளிந்து நடப்பின் இவ்வுலகில் சமத்துவம், சகோதரத்துவம், சமரசம், ஆன்மீக ஒருமைப்பாடு, சாந்தி, சமாதானம் என்பன ஓங்கி வளரும்.

02. (i) ஆலயம் ஓர் ஊரின் சிறப்புக்கு ஆதாரமாக உள்ளது.

(ii) தானாகவே தோன்றிய இலிங்கம் அமையப் பெற்ற சிவத்தலம். இறைசக்தி மிக்கதாக இருப்பதுடன் சிற்பியால் செதுக்கப்படாததுமாகும். இதனைச் சுயம்புலிங்கம் என்றும் கூறுவர்.
இலங்கையில் கொக்கட்டிச் சோலையில் ஒரு தான்தோன்றியீச்சரம் உள்ளது. அடுத்தது ஒட்டுசுட்டானில் இன்னுமொரு தான்தோன்றியீச்சரம் அமைந்துள்ளது. இங்கு மூல மூர்த்தியாக விளங்குவது சிவலிங்கமாகும்.

(iii) குளக்கோட்டன் திருக்கோணேச்சர ஆலய திருப்பணிகள் செய்தான். அவன் சோதிடன் கூறிய வாசகங்களையும் ஓர் கல்வெட்டிலே பதித்தான். இக் கல்வெட்டுப் பதிக்கப்பட்ட கற்கள் தற்போது கோட்டை வாசல் மதிலில் பதிக்கப்பட்டுள்ளன. மேலும் கொக்கட்டிச்சோலை

தான்தோன்றியீச்சரம், கதிர்காமம் உள்ளிட்ட ஏழு கோயில்களில் குளக்கோட்டன் திருப்பணிகள் செய்துள்ளான். இதனை விடக் கோயில்கள் அமைக்கும் செயலிலும் ஈடுபட்டான். கோயில்களில் பூசை, திருவிழாக்கள் செய்ய மானியம் கொடுத்தும் உதவி செய்துள்ளான்.

(iv) தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானம் சமய, சமூகப் பணிகளை ஆற்றி வருகிறது. ஒழுங்கான முறையில் பூசைகள், விழாக்கள் செய்து வருகிறது. பூசை நேரங்களில் மக்கள் அமைதியாக அமர்ந்திருந்து வணங்கும் முறை பேணப்பட்டு வருகிறது. செவ்வாய் நோன்பும் தேசிக்காய் விளக்கெரிப்பதும், பௌர்ணமியில் திருவிளக்குப் பூசை செய்வதிலும் பெருந்தொகை பக்தர் இங்கு ஈடுபடுகின்றனர். மேலும் ஆதரவற்ற சிறுவர்களையும், மகளிரையும் பராமரிக்கும் இல்லம் ஒன்றையும், சமய பாட வகுப்புக்கள், தேவரப் பண்ணிசை வகுப்புகள் என்பனவற்றையும் தேவஸ்தானம் செய்கிறது. நூல் நிலையம், பலருக்கு நன்மை தருவதுடன் சமூக சேவையையும், கல்விப் பணியையும் தேவஸ்தானம் செய்து வருகிறது.

03. (i) சைவத் திருமுறைகளைத் தொகுக்கும் பணியில் முதலில் நம்பியாண்டார் நம்பியே ஈடுபட்டார். அவரை இப் பணி செய்யும்படி தூண்டியவர் இராசராஜசோழன் ஆவார். (திருமுறை கண்ட சோழன் என்றும் சிவபாதசேகரன் என்றும் இராசராசசோழன் அழைக்கப்பட்டான்.)

(ii) முதல் ஏழு திருமுறைகளிலும் அடங்கும் திருப்பதிகங்கள் - தேவாரங்கள் எனப்படும். அவற்றை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் அருளினர். மதங்கசூளாமணி பண்ண மைத்துள்ளனர்.

(iii) தேவார திருவாசகப் பாடல்களை ஓதுபவர் அடையும் பயன்கள் :- மன அமைதி, மன மகிழ்ச்சி, கருணை, இரக்கம் முதலிய நற்பண்புகள் வளர்ச்சியடையும். ஆன்மீகத் துறை மேம்பாடு, கடவுள் பக்தி, நல்லொழுக்கம், நன்னடத்தை என்பன உருவாகும்.

(iv) நாயன்மாருடைய குருபூசைகள், கூட்டுப் பிரார்த்தனைகள், திருமுறை மகாநாடுகள், பஜனைகள், கோயில்களில் தேர் ஊர்வலத்தில் கூட்டுப் பிரார்த்தனைகள், நாடகம், விழாக்கள், பண்ணிசை வகுப்புகள் என்பன நடைபெறுகின்றன.

இவை சைவ மக்கள் விழிப்புணர்வுடன் வாழ வழிசமைக்கும்.

04. (i) சிவபெருமான்.

சிவபெருமான் வழங்கிய ஆணை :-

பிரமா முதலிய தேவர்களை நோக்கி, "நீவிர் சென்று ஒருமை உள்ளமுடைய நம் ஆரூரை வெள்ளை யானை மீது ஏற்றிக் கொண்டு உடனே வருவீராக" - என்பதாகும்.

(ii) சுந்தரர் திருவஞ்சைக்களம் என்னும் திருத்தலத்திற்குச் சென்று, வழிபட்டு, சிவபெருமான் மீது "தலைக்குத் தலை மாலை" என்ற திருப்பதிகத்தைப் பாடினார். அவ்வேளை தம்மை மீட்டருளு மாறு வேண்டியதுடன், மீண்டும் திருக்கைலாயம் வரவும் இறைஞ்சினார். சிவபெருமான் அவ்வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தார்.

(iii) சகமார்க்கம் / தோழமை / யோக மார்க்கம்

தம்பிரான் தோழர்.

(iv) சுந்தரர் சேரமான் பெருமாள் இருவருக்குமிடையிலான நட்பு - ஆன்மீக அடிப்படையிலானது ஆகும்.

05. (i) விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்.

ஆணவம், கன்மம், மாயை.

(ii) ஆன்மாக்களை பிணிப்பது, கட்டுவது மும்மலங்கள். இறைவனை ஆன்மாக்கள் அடைவதற்கு தடையாக நிற்பவையும் இந்த மும்மலங்களே. இவை ஆன்மாவை மட்டுமே பற்றக் கூடிய அறிவற்ற நித்தியமான பொருள். இந்த மலங்களைப் பாசம், தளை, பந்தம், அசத்து என்றெல்லாம் கூறுவர். இவற்றின் பிணிப்பு நீங்கினால் ஆன்மாக்கள் முத்திப்பேறு அடையலாம்.

(iii) ஆன்மா சதசத்து என அழைக்கப்படும். சத்து ஆகிய சிவத்தைச் சாரும் போது சத்தின் தன்மையும், அசத்து ஆகிய மலங்களைச் சாரும் போது அசத்தின் தன்மையையும் பெறும். நிலை மாறும் இயல்புடையதால் இரண்டு பண்பும் சேர்ந்து சதசத்து எனப்பட்டது. பசுவின் (ஆன்மா) இயல்பு "சார்ந்ததன் வண்ணமாதல்" ஆகும். இது சிறப்ப வழக்காகும்.

(iv) சந்தான குரவர்கள் :- மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம்.

மெய்கண்டார் :- தான் அறிந்த மெய்ஞானத்தைப் புலப்படுத்த சிவஞானபோதம் என்ற தத்துவ நூலை இயற்றினார். அவற்றை நாற்பத்தொன்பது மாணவர்

களுக்குப் போதித்தார். ஞானக் கல்விப் பணியே தமது வாழ்க்கைப் பணியாக ஏற்று தமிழ் நாடெங்கும் மெய்ஞானக் கருத்துக்களைப் பரப்பிய பெருமைக்குரியவர்.

அருணந்தி சிவாச்சாரியார் :- மெய்கண்டாரின் மெய்ப்பொருள் விளக்கத்தின் பின்னர் இருபா இருப·்து, சிவஞான சித்தியார் என்னும் சைவ சிந்தாந்த நூல்களை இயற்றினார்.

மறைஞான சம்பந்தர் :- திருக்காளஞ்சேரி பிரமபுரேசர் சந்நிதியின் சீடர்களுக்கு ஞான விளக்கத்தைப் போதித்தார். 'சதமணித் திரட்டு' என்ற நூலை இயற்றினார்.

உமாபதி சிவம் :- உமாபதி சிவாச்சாரியார் தனது குருவான மறைஞானசம்பந்தர் நெசவாளர் இல்லத்தில் வைத்திருந்த கூழை வாங்கிக் குடிக்கும் போது அவரது முழங்கை வழியாக ஒழுகிய கூழை ஏந்திக் குடித்தார். இதனை அறிந்த ஏனைய தில்லைவாழ் அந்தணர் ஏளனம் செய்ததுடன், பூசை செய்யவும் விடவில்லை. அவ்வேளை சிதம்பரத்தில் கொடியேற்ற விழா நடைபெற்றது. எனினும் கொடி ஏறாமல் தடைப்பட்டு விட்டது. இது இறைவனின் செயல் என உணர்ந்த அந்தணர் உமாபதியை வணங்கி அழைத்து வந்தனர். அவர் கொடிக்கவி பாடியதும் ஏறாது நின்ற கொடி ஏறிவிட்டது. மேலும் இறைவனின் சீட்டுத் தகவலுக்கு ஏற்ப விறகுத் தொழிலாளியான பெற்றான் சாம்பானுக்கு முத்தி அளித்தார். நயன தீட்சை மூலம் முள்ளிச் செடிக்கு முத்தி அளித்து உலகுக்கு தன் ஆன்மீக நிலையை வெளிப்படுத்தினார்.

கோயிற்புராணம் என்ற தலபுராணத்தை இயற்றினார். சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினா வெண்பா, போற்றிப்ப·றொடை வெண்பா, கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய எட்டு நூல்களை எழுதினார். இவை சிந்தாந்த அட்டகம் எனப் பெயர் பெற்றன. மேலும் சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருமுறை கண்ட புராணம், திருப்பதிகக் கோவை முதலான நூல்களையும் பாடினார்.

06. (i) மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்பு மிக்க முருகன் ஆலயங்கள் :-

1. கதிர்காமம்
2. மண்டூர் முருகன் ஆலயம்
3. வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயில்
4. செல்வச் சந்நிதி
5. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்
6. நல்லூர்க் கந்தசுவாமி கோயில்
7. தாந்தாமலை
8. உகந்தை
9. திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம்
10. குறிஞ்சிக் குமரன் ஆலயம்

(ii) கதிர்காமத்தில் வேடர் வழி வந்த கப்புறாளை வாயை ஈரத் துணியாற் கட்டி மந்திரம் எதுவும் சொல்லாது மௌனமாகப் பூசை செய்வார். கப்புறாளை மடப்பள்ளியிலிருந்து காஷதடியில் திருவமுதைக் கொண்டு வந்து திரைக்கப்பால் மூலத்தானத்தில் படைத்துப் பூசை செய்வார். பின் திரைக்கு முன்னால் வந்து இரு கைகளையும் சிரசின் மேற் குவித்து வணக்கம் செலுத்துவார்.

திருவிழா :- ஆடி மாதத்தில் திருவிழா நடைபெறும். திருக்கார்த்திகை, சித்திரை வருடப் பிறப்பு முதலிய நாட்களிலும் சிறப்பான விழாக்கள் நடைபெறுகின்றன.

(iii) திருக்கோணேச்சரம் :- இத் தலத்தில் இறைவன் திருக்கோணேச்சரநாதர், இறைவி மாதுமை அம்பாள், தல விருட்சம் கல் ஆல மரம். தீர்த்தம் - பாவநாசம். நீர் நிலை கோயிலிலிருந்து சற்றுத் துறத்தே அமைந்துள்ளது. புராதனமான தீர்த்தக் கேணியைப் போர்த்துக்கேயர் அழித்த பின், இக்கேணியின் ஒரு பகுதி தீர்த்தக் கிணறாய் இருக்கிறது.

அந்நியன் அழித்த பின் சுவாமிமலையில் சமுத்திர ஓரமாக ஆகாய வெளியில் மலைப் பூசை நடைபெறும். இன்றும் இப் பூசை நடந்த பின்பே கோயில் பூசை ஆரம்பமாகும். ஆறு காலப் பூசை நடைபெறும். பங்குனி உத்தரத்தன்று கொடி ஏறி, பதினெட்டு நாள் மகோற்சவம்

நடைபெறும். பூங்காவனத் திருவிழாவும் தெப்ப உற்சவமும் மிக்க சிறப்புடையவை. தெப்பத்திலே கோணநாதர் ஆரோகணித்து சமுத்திர வழியாக கோயிலைச் சுற்றி வந்து சமுத்திரத்திலே இரவு பூராவும் தங்கியிருந்து அருள் பாலிப்பார்.

சிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படும். சிவராத்திரிக்கு அடுத்த நாள் மாதுமை அம்பாள் சமேதரராய் கோணேசப் பெருமான் நகர்வலம் வந்து முதலாம் நாள் சிவன் கோயிலிலும் இரண்டாம் நாள் பத்திரகாளி கோயிலிலும் தங்கிப் பின் மூன்றாம் நாள் மூலக்கோயிலுக்கு எழுந்தருளுவார். நகரமே பந்தல்கள், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுப் புதுப் பொலிவுடன் திகழும்.

(iv) கந்தர்சஷ்டி, கார்த்திகை, வெள்ளிக்கிழமை (சுக்கிர வாரம்), சட்டி விரதம்.

07. (i) இலங்கையில் பூர்வீகக் குடிகள் - இயக்கரும் நாகரும் ஆவர்.
திருக்கேதீச்சரம் நாகர்களின் வழிபாட்டுத் தலமாக விளங்கி வந்துள்ளமையும், இராவணண் இயக்க வம்சத்தைச் சார்ந்தவனாய் சிவ வழிபாட்டில் மேலோங்கி விளங்கியமையையும் அறிய முடிகிறது. மிகத் தொன்மையான காலத்தில் இலங்கையின் நான்கு திசைகளிலும் ஈச்சரங்கள் இருந்ததாக கல்வெட்டுக்கள், நூல்கள், பாடல்கள் மூலம் அறியலாம். இலங்கையின் வடக்கே நகுலேச்சரம், மேற்கே திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகிய இரண்டு ஆலயங்களும் வட மத்தியில் தான்தோன்றியீச்சரமும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. தெற்கே தெய்வந்துறையில் சந்திரசேகரம் என்ற சிவஸ்தலம் இருந்தமை பற்றியும் குறிப்புகள் உள்ளன. இவற்றினைப் புராதன கால இயக்கரும் நாகரும் வழிபட்டனர். இவை பற்றிய செய்திகளை மகாவம்சமும், புராதன பிராமிக் கல்வெட்டுகளும் உறுதிப்படுத்துகின்றன.

(ii) பொலனறுவைக் காலத்தில் சிங்கள அரசரும் தமிழ் அரசரும் சைவ சமயத்தை வளர்த்தமையை வரலாற்று நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. முதலாம் இரண்டாம் சிவ தேவாலயங்கள் இன்றும் காணப்படுகின்றமை அதனை உறுதிப்படுத்தும். பதவிய என்னுமிடத்தில இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் அமைக்கப்பட்டிருந்தமையும், அநுராதபுர மாவட்டம் சோழேஸ்வரம் எனப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்தியாவிலிருந்து இந் நாட்டு மன்னர் பிராமணர் பலரை வரவழைத்து, ஆலயப் பூசைகளைச் செய்வித்ததாகவும், அந்தணர் வாழ்வதற்கென ஒரு பகுதியையே அமைத்துக் கொடுத்து இருந்ததாகவும் அவ்விடம் சதுர்வேதி மங்களம் என அதாவது வேதங்களை ஓதுபவர் வாழுமிடம் எனப்பட்டதாகவும் வரலாற்று நூல்கள் மூலம் அறியலாம்.

தேவாரப் பாடல்களில் இடம்பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேச்சரம் ஆகிய ஆலயங்கள் குளக்கோட்ட மன்னனாலும், கஜபாகு போன்ற மன்னராலும் பேணிப் பாதுகாக்கப்பட்டமையையும் அறியலாம்.

(iii) வைச சமய வீழ்ச்சிக்கு ஐரோப்பியரின் கிறிஸ்தவ மதப் பிரசாரமும், கட்டாய மதமாற்றமும், மூடக் கொள்கையினர் என பழித்துரைக்கப்பட்டைமையும் காரணங்களாக அமைந்தன. ஆங்கிலமொழிக் கல்வி கற்று உத்தியோகம் பெறுவதில் உள்ள நாட்டம் சைவர் மதம் மாறக் காரணமாயின.

சைவமக்கள் புனிதமாகப் போற்றி வரும் பசுக்களை ஒல்லாந்தர் வதை (கொலை) செய்து குவித்தமை சைவமக்களுக்கு எதிரான செயலே. பொங்கல் பண்டிகையில் முக்கியம் பெறும் பசு, எருதுகள் ஈனப்படுத்தப்பட்டமை, சைவ உணவும், வாழை இலையில் உண்ணும் பழக்கமும் ஏளனமாக எண்ணப்பட்டமை, திருநீறு பூசுவதும் ஏளனமாக எண்ணப்பட்டமை இவை யாவும் சைவசமய வளர்ச்சிக்கு பெரும் பாதகமாகின.

(iv) சைவசமய மறுமலர்ச்சிப் பணிகளில் ஈடுபட்ட பெரியோர்கள் :- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
சுவாமி விபுலானந்தர்
சேர்.பொன். இராமநாதன்
க.சிவபாதசுந்தரனார்.
சு.இராசரத்தினம்

நாவலர் :- கிறிஸ்தவ மதத்திற்கு எதிரான கண்டனப் பிரசங்கம் செய்தார். துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டார். புராண படனம் செய்து மக்களை சமயத்தில் நாட்டம் கொள்ளச் செய்தார். சைவ வினாவிடைகள் எழுதினார். கஞ்சித் தொட்டித் தருமம் செய்தார். சமயம் பற்றிய உண்மையான விளக்கத்தை மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

விபுலானந்தர் :- நூல்களை வெளியிட்டார். ஏழைகளுக்கு உதவிகள் செய்ததுடன் இராம கிருஷ்ண மிஷன் பாடசாலையில் கல்விப் பணிகள் செய்தார். அநாதை இல்லம் அமைத்துப் பராமரித்தார்.

க.சிவபாதசுந்தரனார் :- மடித்துக் கட்டிய எட்டு முழ வேட்டி, சால்வையுடன் வீபூதிப் பூச்சுடன் இருப்பார். மேனாட்டினரால் சைவப் பண்பாடு அழிவதை அடியோடு வெறுத்தார். மதமாற்றத்தை தீவிரமாகக் கண்டித்தார். சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர். சைவபோதம் 1,2 ஆம் பாகம், திருவருட் பயன், சைவக் கிரியை விளக்கம், கிறிஸ்தவ விமர்சகருக்குப் பதில் எனப் பல நூல்கள் எழுதினார். அவரது வாழ்க்கை சமய வாழ்க்கை. ஒவ்வொரு மூச்சும் சைவமூச்சாகும்.

சேர். பொன். இராமநாதன் :- பெண்களின் கல்விக்காக இராமநாதன் மகளிர் கல்லூரியைத் தாபித்தவர். ஆன்மீகப் போதனைகள் செய்தார். ஆத்திசூடி, திரு மந்திர விளக்கம் ஆகிய நூல்களை எழுதினார்.

சு.இராசரத்தினம் :- சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை 1923 இல் உருவாக்கினார். இவர் இந்துபோட் இராசரத்தினம் என்றே மக்கள் மத்தியில் நடமாடினார். சைவ ஆசிரியர் கல்லூரி நியமிப்பது பற்றிய ஆலோசனை வழங்கியவர். அநா தரவான பிள்ளைகளின் கல்வியில் அதிக நாட்டம் காட்டினார். வடபகுதி மாணவர்க்கு சமயப் பாடசாலைகள் அமைத்து சைவசமயப் பண்பாட்டை வளர்க்க வேண்டும் எனப் பாடுபட்டார். பிற்பட்ட சமூகத்தவரின் பொரு ளாதார வளர்ச்சியில் அக்கறை காட்டினார். திருமுறைகளைப் பண்ணோடு பாட வேண்டும் என வலியுறுத்தினார்.

08. (அ) தலம் - மேலைக்கடம்பூர்

திருச்சிற்றம்பலம்

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடனடியே னையும் தாங்குதல்
என் கடன்பணி செய்து கிடப்பதே.

திருச்சிற்றம்பலம்

பாடியவர் :- திருநாவுக்கரசு நாயனார்

பாடிய சந்தர்ப்பம் :- அப்பர் சோழ நாட்டு ஆலயங்களைத் தரிசிக்கச் சென்ற வேளையில் காவிரியின் இரு கரைகளிலும் அமைந்த கீழைக்கடம்பூர், மேலைக் கட ம்பூர் என்னும் இரு தலங்களிலும் அமைந்துள்ள இளங்கோயில், கரக் கோயில் என்னும் இரு கோயில்களையும் சிறப்பித்து பாடியவற்றில் இது மேலைக் கடம்பூர் ஆலயம் பற்றியதாகும்.

பொழிப்பு :- உமைபாகரும் மேலைக் கடம்பூர்க்கரக் கோயில் இறைவனுமாகிய அமர் தகடேசுவரரின் அருட் கடமைகளில் ஒன்று என்னைத் தாங்கிக் கொள்ளல். எனது கடமை, பலன் எதிர்பாராத தொண்டுக்கு என்னை அர்ப்பணித்தல் ஆகும்.

(ஆ) பண் :- நட்டபாடை தலம் - திருக்கேதீச்சரம்

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன் பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம் மத யானையுரி போர்த்த மண வாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான் திருக்கேதீச்சரத்தானே.

திருச்சிற்றம்பலம்

பாடியவர் :- சுந்தரர்

பாடிய சந்தர்ப்பம் :- சுந்தரரும் சேர நாட்டு மன்னன் சேரமான் பெருமாளும் பாண்டி நாட்டு தலயாத்திரையை முடித்துவிட்டு தென்பாண்டி நாட்டின் சேது தீர்த்தக் கரையில் உள்ள இராமேச்சரத்தை அடைந்தனர். இராமேச்சரத்தை வண ங்கிப் பாடி யாத்திரையைப் பூர்த்தி செய்து திருவாரூருக்குப் போக முன் னர் ஈழநாட்டுத் திருக்கேதீச்சரத்தை மானசீகமாகத் துதித்துப் பாடிய பாடலாகும்.

பொழிப்பு :- விட்டுணுவை இடப வாகனமாக்கிக் கொண்டவர், யானைத் தோல் போர்த்த மங்கல நாயகர், கபாலதாரி ஆகிய சிவபிரான் மெய்யன்பர்கள் புண்ணியத் தைப் பெறும் வண்ணம் பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளார்.

(இ) பண் - பஞ்சமம் தலம் - கோயில் (சிதம்பரம்)

திருச்சிற்றம்பலம்

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்பு :- புகழ்ந்து கூறும் சொல்லாட்சி பெற்ற நான், மறைப் பொருளை நுணுகி ஆய்ந்த தூய மனமுடைய திருத்தொண்டர் திருக்கூட்டத்துள்ளவர்களே! சில ஆண்டுகளில் அழிவுறுஞ் சில தெய்வங்களின் புன்மைநெறி கைப்பற்றாமல் ஒளி திகழும் பொற் குவியல் போன்ற மகா மேருமலையை வில்லாகக் கையாண்ட அழகிய வீரனும் இடப ஊர்தியானும் காலாதீதனுமாகிய தில்லைப் பெருமானுக்கே பல்லாண்டு கூறி வாழ்த்துவோமாக.

(ஈ) **பெரிய புராணம்**

திருச்சிற்றம்பலம்

தண்ணளி வெண் குடை வேந்தன்
செயல் கண்டு தரியாது
மண்ணவர் கண் மழை பொழிந்தார்
வானவர் பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே
அணி வீதி மழவிடை மேல்
விண்ணவர்கள் தொழ நின்றான்
வீதிவிடங்கப் பெருமான்.

திருச்சிற்றம்பலம்.

பாடியவர் :- சேக்கிழார்

சந்தர்ப்பம் :- அடியார் வரலாற்றைப் பாடும் நோக்கமாக திருவாரூர் திருநகரச் சிறப்புப் பாடும் போது பாடியது.

பொழிப்பு :- மனுநீதி கண்ட சோழனின் அபூர்வ நீதிச் செயலைக் கண்டு மக்கள் மனம் பொறாது கண்ணீர் பெருக்கினார்கள். தேவர்கள் மலர் மழை பொழிந்தார்கள். அப்போது, சிவபிரான் இடபாரூடராகத் தேவர்கள் வணங்க, மநு நீதிகண்ட சோழனுக்கு வீதியிற் காட்சி வழங்கியருளினார்.

(உ) **திருப்புகழ்**

பத்தியால் யானுன்னைப் பலகாலும் பற்றியே மாதிருப்புகழ் பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில் முத்தியே சேர்வதற்கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா ஒப்பிலா மாமணிக்கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா வெற்றிவே லாயுதப் பெருமாளே.

பாடியவர் :- அருணகிரிநாதர்
விநாயகர் மீது பாடப்பட்ட திருப்புகழ்.

பொழிப்பு :- அடியவனான நான் உன் பாதங்களையே பற்றுக்கோடாக விடாது பற்றி நின்று பல முறையும் மாண்புள்ள திருப்புகழையே பாடுபவனாக, உலக பந்தங்களில் விடுபட்டவனாகி மேலான பேரின்ப நிலையாகிய சீவன் முத்தனாகும் பேற்றை அருளுவாயாக. உயர்ந்த ஞானத்தைப் பக்குவருக்குத் தானமாகத் தருகின்ற சற்குணரென்றும் சாதுக்களுக்கு அருள்பாலிப்பவரே, நிகரில்லாத பெருமை மிக்க மணிக்கிரியில் வீற்றிருப்பவரே, மேலான கவி எனப்படும் வித்தகரே; பக்தர்களுக்கு மெய்யுணர்வையும் திருவருட்சக்தி பதிதலையும தரவல்லவனே, அவற்றை அருளுவதற்குச் சான்றாக வெற்றி வேலாயுதத்தை ஏந்தியுள்ள குமரப் பெருமானே! (இவ்வாறு அன்பு கூற அழைத்து வேண்டுகிறார்.)

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2002 டிசெம்பர்

# சைவசமயம் I

ஒரு மணித்தியாலம்

1. "திருவருட்பயன் காப்புச் செய்யுளில் நற்குஞ்சரக்கன்று" எனக் குறிப்பிடப்படுபவர்
(1) விநாயகர் (2) முருகன் (3) விஷ்ணு (4) உருத்திரன்

2. சைவசமயத்தின் தொன்மைக்குச் சான்றானவற்றுள் மிகப் பழைமை வாய்ந்தவை
(1) வேதகால இலக்கியங்கள் (2) சிந்துவெளி இலச்சினைகள்
(3) பன்னிரு திருமுறைகள் (4) உபநிடதங்கள்

3. திருஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்தருளிய இடம்,
(1) பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூர் (2) திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூர்
(3) சோழ நாட்டிலுள்ள சீர்காழி (4) திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருவாமூர்

4. ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவம் குறித்து நிற்பது,
(1) இறைவனின் திருவிளையாடல்களை (2) இறைவனின் ஐந்தொழில்களை
(3) இறைவனின் திருவருட்சக்தியை (4) ஆலயங்களின் பொருளாதார மேம்பாட்டை

5. நால்வேதங்களுள் காலத்தால் முற்பட்டது
(1) இருக்கு (2) யசுர் (3) சாமம் (4) அதர்வணம்

6. சைவசமயத்தின் பிரமாண நூலாகவும், சைவசித்தாந்தக் கொள்கைகளை விளக்கும் நூலாகவும் விளங்குவது ,
(1) வேதம் (2) திருக்குறள் (3) இதிகாசம் (4) சிவாகமம்

7. திருக்கேதீச்சரநாதர் மீது தேவாரப்பதிகங்கள் பாடிய நாயன்மார்கள்
(1) திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் (2) திருநாவுக்கரசர், சுந்தரர்
(3) சுந்தரர், மாணிக்கவாசகர் (4) திருஞானசம்பந்தர், சுந்தரர்

8. விரதத்தை அனுட்டித்தலின் பிரதான நோக்கம்
(1) அறுசுவை கலந்த உணவை உண்ணல். (2) பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்.
(3) மன அடக்கம், புலனடக்கம் என்பவற்றை மேம்படுத்தல்.
(4) இறந்த தாய் தந்தையர்கு ஆத்மசாந்தி கிடைக்கச் செய்தல்.

9. சைவமக்களின் பிரதான பண்பு
(1) முன்னோரை வழிபடுதல் (2) கோயில்களில் பலியிடுதல்
(3) துறவு மேற்கொள்ளல் (4) பசித்து வருவோர்க்கு உணவு அளித்தல்

10. வல்லிபுர ஆழ்வார் ஆலயம்
(1) விஷ்ணு ஆலயம் (2) சிவாலயம் (3) ஆஞ்சநேயர் ஆலயம் (4) முருகன் ஆலயம்

11. உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம் எனும் ஆறு காண்டங்களை உள்ளடக்கிய புராண நூல்
(1) பெரிய புராணம் (2) கந்த புராணம் (3) விநாயக புராணம் (4) திருவிளையாடற் புராணம்

12. மெய்கண்ட தேவர்
(1) சமயகுரவர்களுள் ஒருவர் (2) சித்தர்களுள் ஒருவர்
(3) சந்தான குரவர்களுள் ஒருவர் (4) இந்திராதி தேவர்களுள் ஒருவர்

13. சிவ மூர்த்தங்கள் அடங்கிய தொகுதி,
(1) சந்திரசேகரர், இலிங்கோற்பவர், பிரமா (2) விநாயகர், சூரியமூர்த்தி, சந்திரமூர்த்தி
(3) அம்மையப்பர், நடராசர், ஐயனார் (4) தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், நடராசர்

14. தமிழ் வேதம் எனப் போற்றப்படுபவை
(1) திருமந்திரம், பெரியபுராணம் (2) திருக்குறள், திருமந்திரம்
(3) தேவாரம், திருவாசகம் (4) இருக்கு, யசுர்

15. சரியைத் தொண்டுகள் அடங்கிய தொகுதி
(1) பிராணாயாமம் செய்தல்; மனத்தை ஒரு வழிப்படுத்தல்; ஐம்புலன்களையும் அடக்குதல்.
(2) திருக்கோயிலை மெழுகுதல், கழுவுதல்; பூ எடுத்துக் கொடுத்தல்; சிவனடியாருக்குப் பணிவிடை செய்தல்.
(3) குருவைக் காணலும் பூசித்தலும்; குருவின் திருவடிகளை சிரசிற் சூடுதல்; பூமாலை கட்டிக் கொடுத்தல.
(4) சிவலிங்க பூசை செய்தல்; திருவைந்தெழுத்து மந்திரத்தைச் செபித்தல்; அக்கினி வளர்த்து ஓமம் செய்தல்.

16. விஜயதசமியன்று புதிதாகத் தொடங்கும் கருமங்கள்
(1) காது குத்துதல், உபநயனம்
(2) கைவிசேஷம், விருந்து வைத்தல்
(3) ஏடு தொடங்கல், புதிதாக கலைப்பயிற்சியை தொடங்கல்.
(4) அன்னப் பிராசனம், புதிதுண்ணல்

17. ஆடி அமாவாசைத் தினத்தில் பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கு இலங்கையில் புகழ்பெற்ற இரண்டு தலங்கள்
(1) முன்னேச்சரம், திருக்கோணேச்சரம் (2) பொன்னம்பலவாணேச்சரம், கதிர்காமம்
(3) நகுலேச்சரம், இராமேஸ்வரம் (4) நகுலேச்சரம், மாமங்கேஸ்வரம்

18. சார்ந்ததன் வண்ணமாதல்
(1) பதியின் இயல்பு (2) ஆணவத்தின் இயல்பு (3) மாயையின் இயல்பு (4) பசுவின் இயல்பு

19. "ஒழுக்கம் விழுப்பம் தரும்", "எல்லோர்க்கும் நன்றாம் பணிதல்" என்னும் கூற்றுக்கள்
(1) சைவநெறிக்கு உடன்பாடானவை (2) சைவநெறிக்கு எதிர்மறையானவை
(3) மனிதரை அடிமைநிலைக்கு இட்டுச் செல்பவை (4) பிற்போக்குச் சிந்தனைகள் சார்ந்தவை

20. சைவசமயிகள் உணவு உண்ணும்போது, அவ்வுணவை
(1) இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்து, நன்றி சொல்லி அதன்பின் உண்ண வேண்டும்.
(2) பிறரின் கண்கள் காணாதவாறு தனித்திருந்து உண்ண வேண்டும்.
(3) நாலுபேருடன் உரையாடியவண்ணம் உண்ண வேண்டும்.
(4) வாழையிலையிற் படைத்து உண்ண வேண்டும்.

21. இருள் மலம் எனப்படுவது
(1) மாயை (2) கன்மம் (3) ஆணவம் (4) திரோதான சக்தி

22. யாழ்ப்பாணம் கடையிற் சுவாமியின் நேரடிச் சீடர்,
(1) யோகர் சுவாமிகள் (2) நவநாதசித்தர்
(3) செல்லப்பா சுவாமிகள் (4) சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார்

23. பின்வருவனவற்றுள் பண்டிகைகள் அடங்கும் தொகுதி,
(1) ஆவணிச் சதுர்த்தி, ஓணம் பண்டிகை, திருவெம்பாவை
(2) காமன் பண்டிகை, நவராத்திரி, மகாசிவராத்திரி
(3) தைப்பொங்கல், தீபாவளி, சித்திரைப்புதுவருடப்பிறப்பு
(4) ஆடிஅமாவாசை, சித்திராபூரணை, மாசிமகம்

24. சங்கரன், சக்திபின்னமிலான் என்பவற்றால் குறிப்பிடப்படுபவர்
(1) மகாவிஷ்ணு (2) விநாயகர் (3) முருகன் (4) சிவன்

25. சைவசிந்தாந்த தத்துவத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறும் நூல் என்பதுடன் சித்தாந்த அட்டங்கங்களுள் ஒன்றாகவும் விளங்கும் நூல்
(1) கம்பராமாயணம் (2) திருமந்திரம் (3) திருவருட்பயன் (4) பெரியபுராணம்

26. திருநீறு அணிதல், திருவைந்தெழுத்து ஓதல், சமயதீட்சை பெறுதல் என்பன
(1) சாக்த மரபு (2) சைவ மரபு (3) அவைதிக மரபு (4) வைணவ மரபு

27. பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளிலும் அடங்குபவை
(1) தேவாரப்பதிகங்கள்
(2) தேவாரப்பதிகங்களும் திருவாசகப் பாடல்களும்
(3) திருமந்திரப் பாடல்களும் பெரியபுராணமும்
(4) திருப்பல்லாண்டுப் பாடல்கள்

28. சுந்தரருக்குத் திருமணம் நிகழவிருந்த வேளை, சிவபெருமான் அவரைத் தடுத்தாட் கொண்டது
(1) குரு வடிவில் வந்து (2) கிழப்பிராமணர் வடிவில் வந்து
(3) உமாதேவியாருடன் விடையேறி வந்து (4) வேடனாக வந்து

29. ஆலயத்தில் மேற்கொள்ளப்படும் கிரியைகள்
(1) விரதங்கள், பண்டிகைகள்
(2) உத்தரக் கிரியைகள், பூர்வ கிரியைகள்
(3) திருமணக் கிரியைகள், பூர்வ கிரியைகள்
(4) நித்திய கிரியைகள், நைமித்தியக் கிரியைகள்

30. புராணபடன முறை என்பது
(1) பஞ்சபுராணம் ஓதும் முறை
(2) பாடல்களை ஒருவர் பாட இன்னொருவர் பயன் சொல்லும் முறை
(3) கதாப்பிரசங்கம் செய்யும் முறை
(4) பஜனை, கூட்டுப் பிரார்த்தனை செய்யும் முறை

31. திருநீற்றை எத்திசை நோக்கி நின்று தரித்தல் வேண்டும்?
(1) வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும்
(2) வடக்கு முகமாகவேனும் மேற்கு முகமாகவேனும்
(3) கிழக்கு முகமாகவேனும் மேற்கு முகமாகவேனும்
(4) தெற்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும்

32. மக்கள் அடைய வேண்டிய உறுதிப்பொருள்கள் நான்கு ஆகும். அவையாவன :
(1) சரியை, கிரியை, யோகம், ஞானம்
(2) மடம், அச்சம், நாணம், பயிர்ப்பு
(3) சமயதீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசாரிய அபிடேகம்
(4) அறம், பொருள், இன்பம், வீடு

33. சைவச் சார்புடையதாய் விளங்கும் உபநிடதம்
(1) தைத்தீரிய உபநிடதம் (2) சாந்தோக்கிய உபநிடதம்
(3) சுவேதாஸ்வர உபநிடதம் (4) மாண்டுக்கிய உபநிடதம்

34. குருகுலக்கல்வி அல்லது குருகுல வாசம் என்பது
(1) மாணாக்கர் தினமும் ஆசிரியரின் இல்லத்துக்குச் சென்று கல்வி கற்றுப் பின் வீடு திரும்புதல்.
(2) மாணாக்கர் தாம் கல்வி கற்கும் காலத்தில் ஆசிரியருடன் உறைந்து பணிவிடைகள் செய்து கற்றல்.
(3) மாணாக்கரின் இல்லங்களுக்கு ஆசிரியர் வந்து கல்வி கற்பித்தல்.
(4) பாடசாலை அமைத்துப் பல மாணவர்களைச் சேர்த்துப் பகல் நேரத்தில் முறைசார்ந்த கல்வி கற்பித்தல்.

35. நலிந்தோர், ஊனமுற்றோர், வயோதிபர், ஆதரவற்றோர் ஆகியோரை அவர்களின் குறைகளை குறிப்பிட்டு கிண்டல் கேலி செய்தல்
(1) நல்ல பொழுதுபோக்கு (2) மனிதாபிமானமற்ற செயல்கள்
(3) இன்பம் தரும் செயல்கள் (4) கன்ம வினையை நீக்குவதற்கு உதவும் செயல்கள்

36. திரிமலத்தார் என்போர்
(1) ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையுமுடைய சகலர்.
(2) ஆணவம், கன்மம் ஆகிய இரண்டு மலங்களையுடைய பிரளயாகலர்.
(3) ஆணவ மலம் ஒன்று மட்டுமுள்ள விஞ்ஞானகலர்.
(4) எந்த மலத்தாலும் பீடிக்கப்படாதவர்.

37. முத்தியடைந்த ஆன்மாக்கள்
(1) மீண்டும் பிறவி எடுப்பதில்லை.
(2) இவ்வுலகில் பிறந்து இன்பங்களை மட்டுமே அனுபவிப்பர்.
(3) ஞானிகள், முனிவர்களாகப் பிறப்பர்.
(4) பேரின்பம் பெறுவதில்லை.

38. "பெற்றோர், பெரியோர், ஆசிரியர் ஆகியோரை மதித்து மரியாதை செய்வதாலும், அவர்களின சொற்கேட்டு நடப்பதாலும் நன்மைகள் ஏற்படும் என்பது உறுதி" - இக்கூற்று
(1) இந் நவீன காலத்திற்குப் பொருந்தாது.
(2) மூட நம்பிக்கையாகும்.
(3) சைவநெறிக்கு உடன்பாடானது.
(4) இளைஞர்களின் சிந்தனை வளர்ச்சிக்கு இடையூறாக அமையும்.

39. சைவநெறியானது,
(1) வாழ்க்கை வேறு, சமயம் வேறு என்கிறது.
(2) வாழ்க்கையோடு இணைந்தது தான் சமயம் என்கிறது.
(3) சமய, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமளிக்கிறது.
(4) பிற்போக்குச் சக்திகளை வளர்க்கிறது.

40. மனிதப் பிறவி எடுத்ததன் இறுதி இலக்கு
(1) நன்றாக உண்டு, உடுத்துப் புகழோடு வாழ்தல்.
(2) நிறையப் பொருளீட்டிச் செல்வந்தராதல்.
(3) கல்வி கற்று உயர் பதவி வகித்தல்.
(4) கடவுளை வணங்கி ஆன்மஈடேற்றம் பெறுதல்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2002 டிசெம்பர்

# சைவசமயம் II

இரண்டு மணித்தியாலங்கள்

## பகுதி I

(எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.)

1. "சிந்துவெளி நாகரிகத்தின் முடிவோடு வேதகாலம் தொடங்குகின்றது".

(i) "வேதம்" என்னும் சொல்லுக்குரிய பொருள் யாது? வேதங்களை நான்கு தொகுதிகளாக வகுத்தவர் யார்? அந் நான்கு தொகுதிகளையும் குறிப்பிடுக.
(ii) உபநிடதங்கள் கூறும் நல்ல அறிவுரைகள் நான்கு எழுதுக.
(iii) சங்ககாலத் தமிழர்கள் சிவநெறி பேணியவர்கள் என்பதற்கான சான்றுகள் தருக.
(iv) "இறைவன் ஒருவனே" என்பதைத் தகுந்த ஆதாரங்கள் காட்டி விளக்குக.

2. "என் கடன் பணிசெய்து கிடப்பதே" - அப்பர் வாக்கு

(i) திருநாவுக்கரசர் சமண சமயத்திலிருந்தும் மீண்டு சைவசமயத்தில் சேர்ந்து ஈடேற வழி செய்தவர் யார்? அந்த வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுக.
(ii) திருநாவுக்கரசரின் சமுதாயப்பணிகளை விவரிக்குக.
(iii) திருநாவுக்கரசருக்கும் அப்பூதியடிகளுக்குமிடையே ஏற்பட்டிருந்த ஆன்மநேய தொடர்பு எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டது என்பது பற்றிச் சுருக்கமாக விளக்குக.
(iv) திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டும் செய்திகள் இரண்டு கூறுக.

3. "இறையுணர்வை வளர்த்துக் கொள்ளவும் அவ்வுணர்வு காரணமாக சிந்தனை, சொல், செயல் என்பவை பரிசுத்தப்படவும் விரதங்களும் பண்டிகைகளும் எமக்கு வழிகாட்டுகின்றன."

(i) விரதங்கள், பண்டிகைகள் ஆகியவற்றிற்கிடையேயுள்ள அடிப்படை வேறுபாடுகளை எடுத்துக் காட்டுக.
(ii) பண்டிகைகள் மூன்று, விரதங்கள் மூன்று எழுதுக.
(iii) பண்டிகைகளுள் ஒன்றைத் தெரிந்து, அதைக் கொண்டாடுகின்ற முறையை விவரிக்குக.
(iv) பின்வருவனவற்றை விளக்குக.
உத்தராயணம், தட்சிணாயணம், கைவிசேஷம்

4. "குருவை வழிபடுதல், இலிங்கத்தை வழிபடுதல், சிவனடியார்களை வழிபடுதல் என்னும் மூன்று வழிபாடுகளும் சிவ வழிபாடாகவே அமையும்."

(i) குரு என்பதன் பொருளை எழுதுக. குரு என அழைக்கப்படுபவர்கள் யாவர்?
(ii) இலிங்க வழிபாடு குறிப்பது யாது? சுயம்புலிங்கம் என்பதை விளக்குக.
(iii) சங்கமம் என்பதால் நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன? சிவனடியார்களின் அகப் புறத்தோற்றம் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை விளக்குக.
(iv) சிவ சின்னங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றின் மகத்துவத்தை எழுதுக.

5. "ஊன் அறியா தென்றும் உயிர் அறியா தொன்றும் இவை
தான் அறியாதார் அறிவார் தான்" - திருவருட்பயன்

(i) ஊன் என்று குறிப்பிடப்படுவது எது? அதன் இயல்பு என்ன? உயிரின் இயல்பு என்ன?
(ii) உயிர் இறைவனை அடைவதற்குத் தடையாக இருப்பது எது? உறுதுணையாக விளங்குவது எது?
(iii) மேலே தரப்பட்டுள்ள திருவருட்பயன் செய்யுளின் பொழிப்பை எழுதுக.
(iv) திருவருளின் இயல்பு என்ன என்பதைச் சுருக்கமாக எழுதுக.

## பகுதி II

(ஆறாம் வினாவுக்கும் வேறு ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.)

6. (i) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
(ii) அவற்றைப் பாடியோர் யார் என்பதையும் அவை எச்சந்தர்ப்பங்களில் பாடப்பட்டன என்பதையும் கூறுக.

(iii) அவற்றின் பொழிப்புரையினை எழுதுக.

(அ) "அங்கமும் வேதமும் ஓதும் ........................"

(ஆ) "இல்லக விளக்கது ........................"

(இ) "கடையவனேனைக் கருணை ................"

(ஈ) "ஏக நாயகனை ........................"

(உ) "ஆத்தாளை எங்கள் ................"

7. "போற்றிடு தருமனைப் புராரி நோக்கியே
சாற்றிடு கின்றனன் தயங்கு கண்டிகை
நீற்றொடு புனைந்தெமை நினையும் நீர்பால்
கூற்றுவன் யானெனக் குறுகு வாயலை" - கந்தபுராணம்

(i) சிவபிரான் யமனுக்கு இட்ட பணிப்புரை யாது? அதிலிருந்து நாம் என்ன அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது?

(ii) பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றும் யார் யாரைக் குறிக்கின்றது?
தருமன், புராரி, கூற்றுவன், அமலநாயகன்

(iii) சிவபூசை செய்து கொண்டிருந்த மார்க்கண்டேயர் மீது பாசக் கயிற்றை வீசிய இயமன், சிவ பெருமானால் உதைபட்டு மாண்டு, மீண்டும் சிவனருளால் உயிர் பெற்றான். - இந் நிகழ்விலிருந்து பெறப்படும் சமய உண்மையை விளக்குக.

(iv) நீங்கள் கற்ற மார்க்கண்டேய படலப் பாடல்கள் உணர்த்தும் மனித விழுமியங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு, அவை பற்றிச் சிறுகுறிப்புரைகள் எழுதுக.

8. "இங்குற் றேனென்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே" - தேவாரம்

(i) சிவ மூர்த்தங்கள் எத்தனை? அவற்றுள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) பண்டு நால்வருக்கறமுரைத் தருளி ......... என்று தொடங்கும் தேவாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிவமூர்த்தம் யாது? இம் மூர்த்தத்தில் சிவபிரான் எத்தகைய வடிவினராய், எத்திசையை நோக்கி, எம் மர நிழலிலே அமர்ந்திருந்து முனிவர்களுக்கு ஆகமப் பொருளை உணர்த்தினார்?

(iii) இலிங்கோற்பவம் நிகழ்வதற்கு ஏதுவாக விளங்கிய பின்புலச் சூழலைச் சுருக்கமாகக் கூறுக. இலிங்கோற்பவ மூர்த்தம் உணர்த்தும் உண்மை யாது?

(iv) சிவபெருமான் மூர்த்தங்களை எடுப்பதன் காரணம் என்ன? அடியார்கள் அடையும் பேறுகள் யாவை?

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2002 டிசெம்பர்

# சைவசமயம் I

| வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 11. | 2 | 21. | 3 | 31. | 1 |
| 2. | 2 | 12. | 3 | 22. | 3 | 32. | 4 |
| 3. | 3 | 13. | 4 | 23. | 3 | 33. | 3 |
| 4. | 2 | 14. | 3 | 24. | 4 | 34. | 2 |
| 5. | 1 | 15. | 2 | 25. | 3 | 35. | 2 |
| 6. | 4 | 16. | 3 | 26. | 2 | 36. | 1 |
| 7. | 4 | 17. | 4 | 27. | 1 | 37. | 1 |
| 8. | 3 | 18. | 4 | 28. | 2 | 38. | 3 |
| 9. | 4 | 19. | 1 | 29. | 4 | 39. | 2 |
| 10. | 1 | 20. | 1 | 30. | 2 | 40. | 4 |

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2002 டிசெம்பர்

# சைவசமயம் II

## விடைகள்

1. (i) அறிவு, ஞானம்
வேதங்களை நான்கு தொகுதிகளாக வகுத்தவர் வேதவியாசர்.
அவையாவன :- இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்.

(ii) உபநிடதங்கள் கூறும் நல்ல அறிவுரைகளாவன :-
1. உண்மை பேசுதல். 2. அறம் செய்தல்.
3. ஓதுவது ஒழியேல். 4. அன்னையைத் தெய்வமாகப் போற்றுதல்.
5. தந்தையை தெய்வமாகப் போற்றுதல். 6. ஆசிரியரை தெய்வமாகப் போற்றுதல்.

(iii) சான்றுகள் :-
நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்.
கறைமிடற்று அண்ணல்.
நுதல் விழி நாட்டத்து இறையோன்.
நீலம் பிடித்த சுடர்ப்படை காலக் கடவுள்
பிறங்கு நீர் சடைக்கரதான்
ஏற்று ஊர்தியான்
பிறவா யாக்கைப் பெரியோன் என வரும் தொடர்கள் மூலம் சிவநெறி பேணியவர் என்பதை உணரலாம்.

(iv) திருமந்திரம் :- "தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன் என்று இறைவன் ஒருவனே" என்பதை வலியுறுத்துகின்றது.
மேலும் ஒருவனே தேவன், "ஒன்றவன் தானே" என்றும் கூறும்.
மேலும் வேத வாக்கியம் "ஏகம் சத் விப்ரா வஹுதா வதந்தி" என உண்மைப் பொருள் ஒன்றே. அது பலவாறாகப் பேசப்படுகிறது எனக் கூறுகிறது.

2. (i) திருநாவுக்கரசர் சமண சமயத்திலிருந்து மீள வழி அமைத்தவர் திலகவதியார் ஆவார்.

திருநாவுக்கரசரின் தமக்கையாரான திலகவதியார் தனது தம்பி திருநாவுக்கரசரை சமணத்திலிருந்து மீட்டுத் தரும்படி இறைவனிடம் கேட்டு முறையிட்டார். இறைவன் திருநாவுக்கரசரை சூலை நோய் பிடிக்கச் செய்தார். இறைவன் அவரை ஆட்கொள்ளத் திருவுளங் கொண்டார். சிவபெருமானின் மறக்கருணை காரணமாக சூலைநோய் திருநாவுக்கரசரை வருத்தியது. சமணர்களால் குணமாக்க முடியாமல் விட, திருநாவுக்கரசர் தமக்கையாரிடம் சென்றார். திலகவதியார் திருவைந்தெழுத்தை ஓதி, திருநீற்றைத் தம்பியாரிடம் கொடுத்து ஆறுதலளித்தார். தம்பியை திருவீரட்டானேசுவரர் சந்நிதிக்கு அழைத்துச் சென்றார். அங்கு இறையருளால் திருநாவுக்கரசர் "கூற்றாயினவாறு" என்னும் திருப்பதிகம் பாட சூலைநோய் நீங்கியது.

(ii) திருநாவுக்கரசரின் சமுதாயப்பணிகள் :-
(அ) கோயில் வெளிவீதியை உழவாரத்தால் புல்லைச் செதுக்கித் துப்புரவாக்கினார்.
(ஆ) நடந்து திரியும் பாதையில் கல், முள் என்பவற்றை துப்புரவாக்கி மக்கள் வழிபட வழி செய்தார்.
(இ) கூட்டு வழிபாடு செய்வித்தார்.
(ஈ) திருவீழிமிழலையில் படிக்காசு பெற்று பஞ்சத்தைப் போக்கி அடியார்களுக்கு உணவளித்தமை.
(உ) திருப்பாழையாறை வடதளி என்ற ஆலயத்தில் சமணர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்த சிவலிங்கத்தை மீண்டும் மக்கள் வணங்க வழி அமைத்தமை.
(ஊ) திருமறைக்காட்டில் பதிகம் பாடி, அடியார்கள் நேர் வாயிலால் சென்று இறைவனை வணங்க வழியமைத்தமை.

(iii) திருநாவுக்கரசருக்கும் அப்பூதியடிகளுக்குமிடையே ஏற்பட்டிருந்த ஆன்மநேயத் தொடர்பு :-

அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்தவர். இதன் காரணமாகத் தனது இரு பிள்ளைகளுக்கும் மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு எனப் பெயர் இட்டார். திருநாவுக்கரசரின் பெயரால் பல அறப்பணிகள் செய்தார்.

(iv) திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டும் செய்திகள் :-

மதமாற்றத்தால் நன்மை எதுவுமில்லை. கேடு ஏற்படும் என்பதும், இறைபணி செய்தல் அவசியம் என்பதும், சிவனடியாரை மதிக்கும் பண்பு தேவை என்பனவும், இறைவழிபாடு மூலம்

துன்பங்களிலிருந்து நீங்கப் பெறலாம் என்பதையும் உணரலாம். தல யாத்திரை செய்தல். இறைவனே தலைவன் என்ற எண்ணம் என்பன உணரப்பட்டது.

3. (i) விரதங்கள், பண்டிகைகள் ஆகியவற்றிற்கிடையேயுள்ள அடிப்படை வேறுபாடுகள் :-

| விரதங்கள் | பண்டிகைகள் |
|---|---|
| 1. சமய முக்கியத்துவம் வாய்ந்தவை. | 1. சமூக முக்கியத்துவம் வாய்ந்தவை. |
| 2. உணவைச் சுருக்குதல், முற்றாக விடுதல், சைவ உணவை மட்டும் உண்ணல் இடம் பெறும். | 2. பல வகைச் சிற்றுண்டிகள் (சைவ) செய்து குடும்பத்தார் அயலவர், சிறுவர், பெரியவர் எல்லோருடனும் பரிமாறி உண்டு மகிழுதல் இடம்பெறும். |
| 3. ஐம்பொறிகளை அடக்கி இறை தியானம் செய்வர். | 3. காளை மாடுகளை அடக்கல். விளையாட்டுகள், போட்டிகள் இடம்பெறும். வெடி கொழுத்தல். வாண வேடிக்கைகள், நிறப் பொடிகள் தூவி விளையாடுதல். நிறத் தண்ணீர் அடித்து விளையாடுதல். கும்மி, கோலாட்டம் என்பன செய்து மகிழ்சியாக மக்கள் இருப்பர். |
| 4. ஆலயங்களில் விசேட பூசைகள், ஆராதனைகள், உலாக்கள், அன்னதானங்கள் இடம் பெறும். | 4. வாழ்த்து மடல்கள் அனுப்புவர். புத்தாடை அணிதல், கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். |

(ii) பண்டிகைகளும் விரதங்களும்

| பண்டிகைகள் | விரதங்கள் |
|---|---|
| தைப்பொங்கல் | மகாசிவராத்திரி |
| சித்திரைப்புத்தாண்டு | தைப்பூசம் |
| தீபாவளி | மார்கழித் திருவாதிரை |
| ஓணம் பண்டிகை | கந்தசஷ்டி |
| காமன் பண்டிகை | கேதார கௌரி விரதம் |
| ஆடிப்பிறப்பு | திருக்கார்த்திகை விரதம் |
| நவராத்திரி | விநாயகசஷ்டி விரதம் |
| | விநாயக சதுர்த்தி |
| | நவராத்திரி |
| | பிரதோஷ விரதம் |
| | வரலஷ்மி விரதம் |

(iii) தீபாவளி :-

இப்பண்டிகை ஐப்பசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும், இன்று இந்துப்பண்பாடு நிலவும் நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. நரகாசுரனை மகாவிஷ்ணு அழித்த தினத்தை பூமாதேவியின் வேண்டுகோளுக் கிணங்க கொண்டாடும் தினமே ஆகும். தீபங்கள் ஏற்றி, புத்தாடை அணிந்து, விஷ்ணுவை வணங்கி சிற்றுண்டிகள் பரிமாறிக் கொண்டாடுவர். வடபாரதத்தில் பழைய பொருட்களை நீக்கிப் புதுப்பொருள் வாங்கியும், மா விளக்கேற்றியும், சாணத்தால் செய்த மனித உருவத்தின் தலையில் விளக்கேற்றியும், கோவர்த்தனகிரி உருவம் செய்து அதனைச் சுற்றி ஆடிப்பாடியும் கொண்டாடுவர்.

தீபாவளித் தினத்தில் எண்ணெய் தேய்த்துக் குளித்துப் புத்தாடை அணிந்து, கங்கா ஸ்நானப் பலன் பெறவும் வழிபடும் வழக்கமும் உண்டு.

உத்தராயணம் :-

சூரியன் பூகோளத்தின் தெற்குத் திசையிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் காலப்பகுதி. தை மாதம் முதலாந் திகதி தொடக்கம் ஆனி மாதம் இறுதி வரையான காலம் உத்தராயணம். உத்தராயணம் தேவர்களுக்கு பகற்பொழுது ஆகும். தை முதலாந் திகதி தைப்பொங்கல்.

தட்சிணாயனம் :-

சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் காலம். ஆடி முதலாம் திகதியில் இருந்து மார்கழி இறுதி வரையான காலம். ஆடி முதலாம் திகதி ஆடிப்பிறப்பு. தட்சிணாயனம் தேவர்களுக்கு இராப்பொழுது ஆகும்.

கைவிசேஷம் :-

வெற்றிலையில் பச்சரிசி இட்டு, பாக்கு, பணம் என்பன வைத்துப் பெரியவர் ஒருவர் ஆசீர்வதித்து சித்திரைப்புத்தாண்டு பிறந்த பின் நல்ல நேரம் பார்த்துக் கொடுத்தல் ஆகும்.

4. (i) குரு என்பதன் பொருள் :- அஞ்ஞானத்தை நீக்குபவர் / பாசத்தை நீக்குபவர் / அறிவுத்தானம் தருபவர்.

குரு எனப்படுவோர் :- சமயகுரவர், சந்தானகுரவர், தீட்சையளித்த ஆசான், ஆசிரியர் - குரு என அழைக்கப்படுபவராவர்.

(ii) இலிங்க வழிபாடு :- சிவலிங்கத்தை சிவமாக வழிபடுதல் ஆகும்.

சுயம்புலிங்கம் என்பதன் பொருள் :- எவரின் முயற்சியுமின்றித் தானாகத் தோன்றியலிங்கம் சுயம்புலிங்கம்.

(iii) சங்கமம் என்பது சிவனடியார் கூட்டத்தைக் குறிக்கும்.

சிவனடியார்களின் அகத்தோற்றம் :-

உள்ளத்தில் எந்நேரமும் இறைவனின் சிந்தனை இருத்தல் வேண்டும். ஒளி, தூய்மை இருக்க வேண்டும். நல்ல எண்ணங்கள் இருத்தல் அவசியம்.

புறத்தோற்றம் :-

விபூதி, உருத்திராக்கம் அணிந்து காவியுடை அணிந்த எளிய தோற்றம் அவசியம். வீண்பேச்சுப் பேசாது, திருவைந்தெழுத்தை ஓதுபவராய் இருத்தல் அவசியம்.

(iv) சிவசின்னங்களாவன :- வீபூதி, உருத்திராக்கம், சந்தனம், குங்குமம்.

சிவ சின்னங்களின் மகத்துவம் :-

வீபூதி :-

நோய் நீக்குவது. தூய்மையானது. திருநாவுக்கரசரின் சூலை நோயைக் குணப்படுத்திய பெருமையைக் கொண்டது. மெய்ஞானத்தை தருவது. சைவசமயி என்பதற்கு சான்றாக அமைந்து, அணியும் எம்மிடத்தே இறைவன் குடிகொண்டிருப்பதை நினைவுபடுத்துகிறது. சம்பந்தர் பாண்டியரது வெப்புநோயைத் தீர்க்கப் பயன்படுத்தினார். வீபூதி அழகு, செல்வம், நித்தியவாழ்வு, பக்தி, மனத்தூய்மை, இருவினைப்பயன் நீக்கம் என்பவற்றைத் தரும் சிறப்புடையதாகும்.

உருத்திராக்கம் :-

உருத்திராக்கம் சிவபெருமானின் கண். சிவன் திரிபுர தகனம் செய்யும் போது அவரது மூன்று கண்களிலிருந்தும் பொழிந்த கருணை நீரினின்றும் தோன்றிய மணியே உருத்திராக்கம் என்பர். இறைவனின் பெருங்கருணையின் அடையாளம் என்பர். பஞ்சாட்சர செபம் செய்யும் பொழுது நூற்றெட்டு முறை ஓத, உருத்திராக்கங்களை எண்ணி எண்ணி ஓதுவதற்கு உதவும் சிவசின்னமாகும்.

சந்தனம் :- குளிர்மை தருவது. மங்கலமானது. கிருமிநாசினியாகவும் பயன்படுவது. மனதிற்கு உகந்தது.

குங்குமம் :- மங்கலமானது. திருமணமான பெண்கள் குங்குமத் திலகமிடல் அவசியம். மண மகனால் அணிவிக்கப்படும் சிறப்புடையது. செந்நிறக் குங்குமம், மஞ்சள குங்குமம் என்பன பெண்கள் அணிய வேண்டியவை. குங்குமம் நெற்றியில் இரு புருவங் களுக்குமிடையே அணியப்படுவது, பாதுகாப்பை தருவது.

5. (i) ஊன் :- உடம்பு, காயம், மெய், தனு.

உயிர் :- தானாக எதனையும் அறியமாட்டாதது. ஐம்பொறிகளின் உதவியுடன் அறியும். திருவருள் உணர்த்தாமல் எப்பொருளின் உண்மையினையும் அறியமாட்டாதது.

உடல் :- எக்காலத்திலும் உண்மை எதனையும் அறியமாட்டாதது.

(ii) தடையாக இருப்பது :- ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் உயிர் இறைவனை அடையத் தடையாக இருப்பன.

உறுதுணை :- திருவருள் / சக்தி / அருள் / திருவருட்சக்தி இறைவனை அடைய உறுதுணை யாகும்.

(iii) பொழிப்பு :-

உடல் ஒருபோதும் உண்மையை அறியமாட்டாதது. உடலை ஏற்கும் உயிர் ஒரு பொரு ளையும் தானாக அறியமாட்டாதது. ஞானி சூரியனின் பேரொலியான இத் திருவருள் உணர்த் தாமல் எப்பொருளின் உண்மையையும் தானாகவே அறிந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவர் யாருமில்லை.

(iv) திருவருளின் சிறப்பியல்பு :-

திருவருள் மெய்யுணர்வைப் பெருக்கி, வினைப்பயனை அனுபவிக்கச் செய்து, ஆன்மாக்களை இறைவனுடன் சேர்ப்பிக்கும் மேலான ஒளியாகும்.

6. (அ) "அங்கமும் வேதமும் ஓதும் .........."

சம்பந்தர் — தலம் : திருமருகலும்

பண் - நட்டபாடை — திருச்செங்காட்டங்குடியும்

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதும் நாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் மைந்த, சொல்லாய்
செங்கயல் ஆர்புனல் செல்வம் மல்குசீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்
கங்குல் விளங்கு எரியேந்தி ஆடும் கணபதியீச்சரம் காமுறவே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்பு :-0

வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் அத்தியாயம் செய்யும் பிராமணர்கள் திருவடிகள் எப்போதும் துதிக்க, மாடமாளிகைகள் நிறைந்த வீதியுள்ள திருமருகலில் உறையும் வல்லாளரே, நீர் வளமும் செல்வச் செழிப்பும் மிகுந்த செங்காட்டங் குடியிலே, அனல் தாங்கிக் கூத்தாடும் ஈஸ்வரன் அமைந்துள்ள கணபதீச்சரம் மீது மையல் கொள்ளலாமா? விடை கூறுவீராக.

(ஆ) "இல்லக விளக்கது .........."

அப்பர் தலம் : பொது

காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்பு :-

ஒரு மனையின் உள்ளே ஏற்றப்படும் தீபம் இருளை நீக்கும் தன்மை உடையது. மொழியின் உள்ளே காணப்படும் சிந்தனைத் தீபம் கருத்தொழியைப் பரப்ப, பல வீடுகளிலும் ஏற்றப்படும் தூல தீபங்கள் சூழலில் பரவலாக செறிந்துள்ள இருளை நீக்கி, பலருக்கும் ஒளி விளக்கம் தரும் சிறப்பினையுடையன ஆயின் நல்லோரின் உள்ளத்தில் ஒளி வீசும் ஞான தீபமாய் விளக்குவது நமசிவாய என்னும் ஐந்து எழுத்து மந்திரமாகும்.

(இ) மாணிக்கவாசகர். தலம் : உத்தரகோசமங்கை

திருச்சிற்றம்பலம்

கடையவனேனைக் கருணையி
னாற் கலந் தாண்டு கொண்ட
விடையனே விட்டிடுதிகண்
டாய் விறல் வேங்கையின்றோல்
உடைவனே னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி
ரானென்னைத் தாங்கிக் கொள்ளே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்பு :-

முன்பு கருவாய் வந்து என்னை ஆட்கொண்ட ஈசனே இப்போது என்னைப் புறக்கணிப்பீரா? இல்லை அல்லவா! ஆடையழகும் வாய்ந்த உத்தர கோசமங்கை வேந்தே உலக வாழ்வில் விரக்தியுற்ற என்னை வீழ்ச்சியில் இருந்து காக்க ஊன்று கோல் போலத் தாங்குவீராக.

(ஈ) சேந்தனார்.

பண் - பஞ்சமம் திருவீழிமிழலை

திருச்சிற்றம்பலம்

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வண்ணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண் ணிழி செழுங்கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே

திருச்சிற்றம்பலம்

பொழிப்பு :-

ஒரு பெருந்தெய்வமும், தேவர்களை ஆளும் மகாதேவரும், என்னுயிர் காக்கும் அமுதும், நிகரில்லாத இன்பத் தலைவரும் திருமாலுக்கு அருள் புரிந்து ஊர்தியாகக் கொண்ட அந்தி மேக வண்ணனும் வளம் மிக்க திருவீழிமிழலை என்னும் தலத்தில் உள்ள விண்ணழி விமானம் என்னும் செழுங் கோயிலில் உரையும் யோக நிலைத் தலைவனும் ஆகிய சிவநாயகரைத் தவிர, வேறொரு உயர் தெய்வம் உள்ளதென நான் ஒருபோதும் உணரவில்லை.

(உ) அபிராமிபட்டர்

திருச்சிற்றம்பலம்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்தாளைப் புவி அடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்பு :-

அகிலமும் ஆருயிரும் படைத்தும் காத்தும் நிற்கும் அபிராமி என்னும் திருநாமமுள்ள அம்பிகை கையைத் தொழும் தொண்டருக்கு ஒரு தீங்கும் என்றும் எவ்விடத்தும் நேருவதில்லையாம்.

7. "போற்றிடு .........." - கந்தபுராணம்.

(i) அக்கமாலை, உருத்திராக்கமாலை, திருநீறு என்னும் சிவசின்னங்களை அணிந்து என்னை மன மார சிந்திக்கும் மெய்யன்பு உள்ளவர்பால் நீ அகந்தையோடு நெருங்க உரிமை இல்லை" இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது, சிவபெருமான் மீது மெய்யன்பு உள்ளவர்களை இயமன் அணுகமாட்டான் என்பதாகும்.

(ii)

| | | |
|---|---|---|
| தருமன் | - | அறக்கடவுள், தருமன், யமன். |
| புராரி | - | திரிபுரங்களை எரித்த சிவன், சிவபெருமான். |
| கூற்றுவன் | - | யமன் |
| அமலநாயகன் | - | சிவபெருமான், மலமற்ற இறைவன். |

(iii) உலகில் பிறந்தவர் யாவர்க்கும் இறப்பு நிச்சயம். நேரம் வந்ததும் யமன் தனது பணியைச் செய்து முடிக்க வேண்டும். அதாவது ஓர் உடலை விட்டு உயிர் பிரிய வேண்டிய காலத்தில் காலன் தனது வேலையைச் செய்ய வேண்டும். இறப்பில்லையேல் பூமியில் பாரம் கூடிவிடும். பூமி சமநிலையில் இருக்க இறப்பும் பிறப்பும் நிகழ வேண்டும் என்பது புலனாகிறது.

(iv) மனித விழுமியங்கள் :-

1. இறையன்பு 2. நல்லொழுக்கம்
3. கருணை 4. பணிதல் (அகந்தையின்மை) முதலியன.

இறையன்பு :-

இறையன்புடன் சிவபூசை செய்த மார்க்கண்டேயருக்கு சிவனே வெளிப்பட்டு அருள் புரிந்துள்ளார். யமன் பாசக் கயிற்றை வீசிய போதும் கூட, சிவனே அவனை உதைத்து மார்க்கண்டேயர் உயிரைக் காப்பாற்றினார். மிருகண்டுவும் விருத்தையும் இறை அன்புடன் தவமாற்றியதால் சிவன் கருணை கிட்டியது. பிள்ளைப் பாக்கியமும் கிட்டியது.

கருணை :-

யமன் மடிய, பூமாதேவி உயிர்களின் நிலைபேற்றால் பாரந் தாங்கமுடியாது திருமாலிடம் முறையிட்டாள். அவளின் குறையைக் கேட்டு, திருமாலுடன் இந்திரன், பிரமன், தேவர்கள யாவரும் கருணை கொண்டு சிவபெருமானை அடைந்து விண்ணப்பித்தனர். சிவபெருமான் மெய்யன்போடு வழிபடுவோருக்கு கருணை புரிவான். யமனைக் காலால் உதைத்தும், பின் அவனை உயிர் பெற்றெழச் செய்த கருணைக் கடல் தான் அந்த சிவபெருமான்.

பணிதல் :-

பூமாதேவியின் துயர் துடைக்க கைலாயங்கிரி சென்ற நான்முகனும், நாரணனும், தேவர்களும் மிக்க அன்போடும் பணிவோடும் நீலகண்டனைத் துதித்து நின்றதை உணரலாம்.

8. "இங்குற்றேனென்று ........" - தேவாரம்.

(i) அறுபத்து நான்கு.
நடராசர், லிங்கோற்பவர், தட்சனாமூர்த்தி, சோமாஸ்கந்தர், அர்த்தநாரீஸ்வரர், சந்திரசேகரர், உமாமகேசுவரர்.

(ii) தட்சிணாமூர்த்தம்.
குருவடிவாகத் தெற்குத் திசை நோக்கிக் கல்லால மரநிழலில் அமர்ந்து முனிவர்க்கு ஆகமப் பொருளை உணர்த்தினார்.

(iii) அடிமுடி தேடிய கதை எழுதப்பட்டிருக்க வேண்டும்.
இறைவனே உலகிற்கு முதல்வன் என்ற உண்மை.

(iv) உயிர்களை உய்விக்கும் பொருட்டு மூர்த்தங்கள் எடுக்கின்றார்.
முத்தி அல்லது சிவப்பேறு.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2001 டிசெம்பர்

# சைவ சமயம் I

ஒரு மணித்தியாலம்

01. பூரண கும்பம் வைக்கும் போது முதற்காரியமாகச் செய்ய வேண்டியது,
(1) மஞ்சளிலோ, சாணத்திலோ பிள்ளையார் பிடித்து வைத்தல்.
(2) பழம், பாக்கு, வெற்றிலை என்பவற்றை வைத்தல்.
(3) மணியடித்தல், சங்கு ஒலித்தல்.
(4) தேங்காய் உடைத்தல்.

02. "சிவபூமி" என அழைக்கப்படும் நாடு,
(1) இந்தியா (2) இலங்கை (3) நேபாளம் (4) பாலித்தீவு

03. முருகப் பெருமானின் தோற்றத்தையும், அருட்தன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் விரித்துக் கூறும் பெருநூல்
(1) பெரியபுராணம் (2) திருவிளையாடற் புராணம் (3) கந்தபுராணம் (4) திருப்புகழ்

04. பின்வருவனவற்றுள் இறைவன் ஒருவனே என்பதை உறுதியாக உணர்த்தும் பாடலடி,
(1) "சக்தி பின்னமிலான் எங்கள் பெருமான்" (2) "ஏறுமயிலேறி விளையாடு முகம் ஒன்றே"
(3) "கங்கை வார்சடைக் கயிலை நாயகர்" (4) "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

05. சைவ இல்லங்களிலே நிறைவேற்றப்படுகின்ற ஒரு முக்கிய கடமை,
(1) ஆலய வழிபாடு (2) பசு வளர்த்தல் (3) வேதம் ஓதுதல் (4) விருந்தோம்பல்

06. சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டு, உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்றவர்,
(1) சுந்தரமூர்த்தி (2) திருநாவுக்கரசர் (3) திருஞானசம்பந்தர் (4) மாணிக்கவாசகர்

07. சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் விளங்கும் திருமுறை,
(1) திருமந்திரம் (2) திருவாசகம் (3) பெரியபுராணம் (4) திருவருட்பயன்

08. உபநிடதங்கள்
(1) கிரியைகள், வழிபாட்டு முறை பற்றி கூறுகின்றன.
(2) தத்துவக் கருத்துக்களை எடுத்துரைக்கின்றன.
(3) இசைப்பாடல்களைக் கொண்டுள்ளன.
(4) பன்னிரு திருமுறைகளுள் இடம்பெற்றுள்ளன.

09. அறுபத்து நான்கு சக்திபீடங்களில் ஒன்றாகவுள்ளதும் இலங்கையில் அமைந்துள்ளதுமான ஈச்சரம்
(1) நகுலேச்சரம் (2) திருக்கேதீச்சரம் (3) முன்னேச்சரம் (4) இராமேஸ்வரம்

10. "அதிகாலை நித்திரை விட்டெழு"
"எழும்பும் போதே ஆண்டவனை நினை"
"பசித்து வந்தோர் முகம் பார்"
"நெற்றிக்கழகு வீபூதி பூசுதல்" - இக் கூற்றுக்கள்
(1) இக் காலத்துக்குப் பொருந்தாதவை. (2) விஞ்ஞானத்திற்கு முரணானவை.
(3) சைநெறிக்கு உடன்பாடானவை. (4) விரயத்திற்கு துணையானவை.

11. பின்வருவனவற்றுள் வீட்டில் நடத்தப்படும் கிரியைகள்
(1) அபிடேகம், ஆராதனை (2) வித்தியாரம்பம், கொடியேற்றம்
(3) திருமணம், பூப்புநீராட்டு (4) நித்திய, நைமித்திய கிரியைகள்

12. பிரமாவும் விட்டுணுவும் அகந்தை நீங்கப் பெற்றுச் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதை ஏற்றுக் கொண்டமையைக் குறிப்பதாக அமைவது
(1) மகா சிவராத்திரி (2) திருவாதிரை ஆருத்திரா தரிசனம்
(3) தீபாவளி (4) கேதார கௌரி விரதம்

13. மனம் அமைதி பெறவும், ஆன்மிக மேம்பாடடையவும் சைவம் காட்டும் சிறந்த வழி
(1) தினமும் தேகப் பயிற்சி செய்தல் (2) ஒரு நேர உணவை உட்கொள்ளல்
(3) தினமும் தேவார திருவாசகத் திருமுறைகளைப் பாராயணம் செய்தல்,
(4) உளவியல் மருத்துவரிடம் ஆலோசனை பெறுதல்.

14. இறைவனால் "அம்மையே" எனச் சிறப்பாக அழைக்கப்பட்டவர்
(1) திலகவதியார் (2) மங்கையக்கரசியார் (3) பரவையார் (4) காரைக்காலம்மையார்

15. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன
(1) நாற்பாதங்கள் (2) நால்வேதங்கள்
(3) நான்கு வகை முத்திகள் (4) நான்கு புருடார்த்தங்கள்

16. நாம் இவ்வுலகில் நல்லவண்ணம் வாழ்வதற்கு விலக்க வேண்டியவை
(1) ஆணவம், கன்மம், மாயை, ஆன்மா
(2) அறம், பொருள், இன்பம், வீடு
(3) பொறாமை, கோபம், பொய், கடுஞ்சொல்
(4) பொய்யாமை, கொல்லாமை, கள்ளாமை, பழைமை

17. பாடசாலையில் சைவசமயச்சூழலை ஏற்படுத்த வேண்டியதன் பிரதான நோக்கம்
(1) கல்வித் திணைக்களத்தின் அறிவுறுத்தலை நிறைவு செய்தல்.
(2) சைவப் பிள்ளைகள் சைவச் சூழலில் வாழ்ந்து கற்க வாய்ப்பளித்தல்.
(3) பெற்றோர் நலன் விரும்பிகளிடமிருந்து கூடுதலான நன்கொடைகளைப் பெறுதல்.
(4) பாடசாலையின் நற்பெயரைப் பாதுகாத்தல்.

18. "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்பதை உணர்த்தும் நூல்
(1) சேக்கிழார் பெரியபுராணம் (2) திருமூலர் திருமந்திரம்
(3) கம்பராமாயணம் (4) கச்சியப்பர் கந்தபுராணம்

19. பஞ்சதோத்திரங்கள் (பஞ்ச புராணம்) பாடப்பட வேண்டிய ஒழுங்கு முறை
(1) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்புராணம், திருப்புகழ்.
(2) தேவாரம், திருவாசகம், திருப்பல்லாண்டு, திருவிசைப்பா, திருப்புராணம்
(3) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்.
(4) திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ்.

20. நவராத்திரியின் முதன் மூன்று நாள்கள்
(1) துர்க்கை வழிபாட்டிற்குரியவை. (2) இலக்குமி வழிபாட்டிற்குரியவை.
(3) சரஸ்வதி வழிபாட்டிற்குரியவை. (4) சிவன் வழிபாட்டிற்குரியவை.

21. சிவஞானபோதம் என்னும் நூல்
(1) வேதாந்த நூல் (2) புராண நூல் (3) இதிகாச நூல் (4) சைவசித்தாந்த நூல்

22. பிரதோஷ விரதம்
(1) சக்தி விரதங்களுள் ஒன்று (2) சிவ விரதங்களுள் ஒன்று
(3) கந்த விரதங்களுள் ஒன்று (4) விஷ்ணு விரதங்களுள் ஒன்று

23. குருலிங்க சங்கம வழிபாடு
(1) வைணவ சமயத்தாருக்குரியது (2) சாக்தர்களுக்குரியது
(3) ஞானிகளுக்குரியது (4) சைவர்களுக்குரியது

24. பூமாதேவி, ஸ்ரீதேவி சமேதராக விளங்குபவர்
(1) முருகப் பெருமான் (2) மகாவிஷ்ணு (3) விநாயகப்பெருமான் (4) ஸ்ரீராமன்

25. உருத்திராக்கம் என்பது
(1) சிவபெருமானின் கண் எனப் பொருள்படும் (2) ஒரு வகை அபிடேகத்தின் பெயர்
(3) ஒரு வகை மலரின் பெயர் (3) ஆழ்கடலிலிருந்து எடுக்கப்படும் பொருள்

26. மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய இரு பிரதான பண்புகள்
(1) பொருளீட்டல், புகழீட்டல் (2) பணிவு, இன்சொல்
(3) ஆசை, துணிவு (4) அச்சம், நாணம்

27. கொலை, களவு, மது அருந்துதல், காமம், கோபம் என்பவற்றை விலக்கி விட்டவர்களுக்கு
(1) சமூகத்தில் நண்பர்களே இல்லாமல் போய்விடும்.
(2) வாழ்க்கையில் சுகம் போய்விடும்.
(3) இறைவனின் திருவருள் தப்பாமல் சித்திக்கும்.
(4) எந்த ஒரு காரியத்தையும் செய்விக்க இயலாது போய்விடும்.

28. திருவருட்பயன் நூலை இயற்றியவர்
(1) மெய்கண்ட தேவர் (2) அருணந்தி சிவாச்சாரியார்
(3) மறைஞானசம்பந்தர் (4) உமாபதி சிவாச்சாரியார்

29. சைவத்திற்கு நாயன்மார்கள் போன்று வைணவத்திற்கு
(1) ஆச்சாரியார்கள் (2) ஆழ்வார்கள் (3) மகா சந்நிதானங்கள் (4) நாதமுனிகள்

30. சமகாலத்தில் வாழ்ந்த சைவசமயகுரவர்
(1) திருஞானசம்பந்தரும் சுந்தரரும் (2) சுந்தரரும் சேரமான் பெருமானும்
(3) திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் (4) திருநாவுக்கரசரும் அப்பூதியடிகளும்

31. பழந்தமிழ் மக்களால் சேயோன், மாயோன் எனப் போற்றப்படும் தெய்வங்கள் முறையே
(1) சிவனும் விஷ்ணுவும் (2) முருகனும் திருமாலும்
(3) முருகனும் இந்திரனும் (4) சிவனும் முருகனும்

32. மனிதப் பிறவியெடுத்த நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய உயர்மானுடப்பண்பு
(1) பிறரின் செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்ளுதல்.
(2) எல்லோருடனும் செந்தண்மை பூண்டொழுகல்.
(3) தானும் தனது குடும்பத்தினரும் முன்னேற வேண்டுமென்பதில் ஆர்வமாயிருத்தல்.
(4) உலகமே மாயம் எனக் கொண்டு யாவற்றையும் ஒதுக்குதல்.

33. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்னும் அப்பர் வாக்கு
(1) அப்பரின் அகந்தையை வெளிப்படுத்துகின்றது.
(2) அப்பரின் பயவுணர்வை வெளிப்படுத்துகின்றது.
(3) அப்பரின் ஆன்மிக வலிமையை வெளிப்படுத்துகின்றது.
(4) அப்பரின் அரசியல் தந்திரத்தை வெளிப்படுத்துகின்றது.

34. மகரசங்கராந்தி என அழைக்கப்படுவது,
(1) தைப்பொங்கல் திருநாள் (2) சித்திரைப் புத்தாண்டுப் பெருநாள்
(3) ஆடிப்பிறப்புத் திருநாள் (4) தைப்பூச நன்னாள்

35. நரகாசுரன் வரலாற்றுடன் தொடர்புடைய பண்டிகை
(1) மகாசிவராத்திரி (2) நவராத்திரி (3) தீபாவளி (4) போகிப்பண்டிகை

36. சைவ உணவை உண்பதால், உண்போரிடத்தில்
(1) புரத்ச்சத்து குறையும் (2) அசுர குணங்கள் வளரும்
(3) தாமத குணங்கள் மேலெழும் (4) சாத்வீகப் பண்புகள் வளரும்

37. "இருளில் இருளாகி எல்லிடத்தில் எல்லாம்
பொருள்கள் இலதோ புவி" - திருவருட்பயன்
இதன் மூலம் குறிப்புப் பொருளாக உணர்த்தப்படுவது
(1) பதி சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் இயல்புள்ளது.
(2) பசு சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் இயல்புள்ளது.
(3) பாசம் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் இயல்புள்ளது.
(4) பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் ஒரே பொருள்.

38. இறைவனின் ஐந்தொழில்களை முழுமையாகக் குறிப்பது,
(1) கொடியேற்றம் (2) தேர்த்திருவிழா (3) தீர்த்தம் (4) மகோற்சவம்

39. சிவபெருமானின் பேரருட் பெருங்கருணைத்திறனைச் சிறப்பாக எமக்குக் காட்டுவதாக அமைவது
(1) சிவபெருமான் ஆலகால விஷத்தை உண்டு தேவர்களைக் காத்தமை.
(2) இலிங்கோற்பவ மூர்த்தம் எடுத்தமை.
(3) காலனைக் காலால் உதைத்தமை.
(4) பண்டு நால்வருக்கு அறம் உரைத்தமை.

40. சைநெறியில் மேலானதாக மதிக்கப்படுவது
(1) அறிவு (2) கலை (3) துறவு (4) அன்பு

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2001 டிசெம்பர்

# சைவசமயம் II

இரண்டு மணித்தியாலம்

## பகுதி I

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

01 "சைவத்தின் தொன்மைக்குச் சான்றாக விளங்குவது சிந்துவெளி நாகரீகம்" ஆய்வாளர்

(i) சிந்து வெளியில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளினால் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு பெரிய நகரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. இவ்வாராய்ச்சிகளினால் நிறுவப்பட்டுள்ள இரண்டு விடயங்களைக் கூறுக.

(ii) சிந்து வெளியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருள்களுள் சைவசமயச்சார்புடையன எனக் கருதப்படும் மூன்று பொருள்களை அல்லது இலச்சினைகளைக் குறிப்பிடுக.

(iii) சைவாகமங்கள் எத்தனை? அவை விளக்கிக் கூறும் விடயங்கள் இரண்டினை விளக்கி எழுதுக.

(iv) "அன்பே சிவம்" என்பதால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?

02 "பூமியர்கோன் வெப்பொழித்த புகழியர்கோன் கழல் போற்றி" - சைவசமயாசாரியர் துதி

(i) கூன்பாண்டியனுக்கு வெப்பு நோய் வரக் காரணம் என்ன? அந் நோய் யாரால், எவ்வாறு தீர்க்கப்பட்டது?

(ii) சைவசமயகுரவர் நால்வரில் தேவார முதலிகள் என அழைக்கப்படுவோர் யாவர்? திருவாசகம் பாடியவர் யார்?

(iii) திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இணைந்து ஆற்றிய சமய, சமூகப் பணிகளைச் சுருக்கமாகக் கூறுக.

(iv) இன்றைய சூழ்நிலையில் சைவத்தை விளங்கச் செய்வதற்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள் யாவை?

03. "கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே" - தேவாரப்பாடலடி

(i) "தட்சிணகைலாயம்" எனப் போற்றப்படும் தலம் யாது? அத் தலத்தின் பண்டைய வரலாற்றுச் சிறப்பைக் கூறுக.

(ii) இலங்கையிலே தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள் யாவை? அத் தலங்களின் மீது தேவாரத் திருப்பதிகங்கள் பாடிய நாயன்மாரின் பெயர்களை எழுதுக.

(iii) திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் நகுலேச்சரம் ஆகிய தலங்கள் ஒவ்வொன்றினதும் தீர்த்தத்தின் பெயரை குறிப்பிடுக. அவற்றுள் ஒன்றின் தீர்த்தச் சிறப்பினைச் சுருக்கித் தருக.

(iv) தான்தோன்றியீச்சரம் என்பதால் நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன? இலங்கையிலுள்ள இரண்டு தான்தோன்றீயீச்சரங்களின் பெயர்களை எழுதுக.

04. "ஞாலமதில் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லை" - சிவஞானசித்தியார்

(i) தமிழ்நாட்டில் வாழ்ந்த ஞானியர் (சித்தர்) இருவரினதும், இலங்கை ஞானியர் இருவரினதும் பெயர்களை எழுதுக.

(ii) ஞானியரின் (சித்தர்களின்) இயல்புகள் மூன்று கூறுக.

(iii) செல்லப்பா சுவாமிகளிடமிருந்து வெளிப்பட்ட மகாவாக்கியங்கள் மூன்று எழுதுக.

(iv) யோகர் சுவாமிகள் அல்லது நவநாதசித்தர் பற்றிச் சிறு குறிப்புரை எழுதுக.

05. "பல்லார் உயிருணரும் பான்மையென மேலொருவன் இல்லாதான் எங்கள் இறை" - திருவருட்பயன்

(i) இப் பாடலின்படி இறை எப்படிப்பட்டது?

(ii) பதிக்கும் ஆன்மாக்களுக்குமிடையேயுள்ள பொதுத்தன்மை ஒன்றும் வேறுபட்ட தன்மைகள் இரண்டும் தருக.

(iii) பதி என்பதைக் குறிக்கும் வேறு இரண்டு சொற்கள் எழுதுக.

(iv) பதியின் சிறப்பியல்புகளைத் தொகுத்து எழுதுக.

## பகுதி II

06ஆம் வினாவுக்கும் வேறு ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

06. (i) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(ii) அவற்றைப் பாடியோர் யார் என்றும் அவை எச்சந்தர்ப்பங்களில் பாடப்பட்டன என்றும் கூறுக.

(iii) அவற்றின் பொழிப்புரையினை எழுதுக.

(அ) "மண்ணில் நல்ல வண்ணம் ........................"
(ஆ) "அங்கத்துறு நோய்கள் ..................."
(இ) "மெய்தான் அரும்பி ...................."
(ஈ) "அடியோ மோடும் நின்னோடும் ............"
(உ) "ஆறிரு தடந்தோள் வாழ்க .........."

07. "செய்வதொன்றும் அறியாது
சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்தென்
ஐயன் அணைந்தான் எனை ஆளும்
அண்ணல் அணைந்தான் ஆரூரின்
சைவன் அணைந்தான் என்துணையாம்
தலைவன் அணைந்தான் தரணி எல்லாம்
உய்ய அணைந்தான் அணைந்தானென் (று)
ஓகை முரசஞ் சாற்றுவித்தார்". - பெரியபுராணம்

(i) ஐயன், அண்ணல், சைவன், தலைவன் ஆகிய சொற்களால் குறிப்பிடப்படுபவர் யார்? அவ்வாறு குறிப்பிட்டவர் யார்? இருவருக்குமிடையிலான தொடர்பு எப்படிப்பட்டது?
(ii) சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் - "தம்பிரான் தோழர்" "சேரமான் தோழர்" ஆகிய சிறப்புப் பெயர்கள் வரக் காரணமென்ன?
(iii) மேற்படி பாடலில் சுந்தரரின் சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?
(iv) சுந்தரருடன் சேரமான் பெருமாள், நட்புப் பூணுவதற்குக் காரணமாக அமைந்த சம்பவம் யாது?

08. "சைவ நெறியில் சைவ ஒழுக்கத்திற்கு அதி முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது".
(i) சைவ ஒழுக்கத்தைப் பின்பற்றுவோர் கடைப்பிடிக்க வேண்டியவைகளில் மூன்றைக் கூறுக.
(ii) சைவமக்கள் நாள்தோறும் செய்ய வேண்டிய கடமைகள் (நித்திய கருமங்கள்) யாவை?
(iii) நல்வினைகள், தீவினைகள் என்பவற்றை உதாரணங்கள் தந்து விளக்குக.
(iv) "விழுமியங்கள்" என்பதால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது? சமய, சமூக விழுமியங்களுக்கு உதாரணங்கள் தருக.

## கல்விப் பொதுத்தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2001 டிசெம்பர்

# சைவசமயம் I

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 11. 3 | 21. 4 | 31. 2 |
| 02. 2 | 12. 1 | 22. 2 | 32. 2 |
| 03. 3 | 13. 3 | 23. 4 | 33. 3 |
| 04. 4 | 14. 4 | 24. 2 | 34. 1 |
| 05. 4 | 15. 1 | 25. 1 | 35. 3 |
| 06. 3 | 16. 3 | 26. 2 | 36. 4 |
| 07. 1 | 17. 2 | 27. 3 | 37. 2 |
| 08. 2 | 18. 1 | 28. 4 | 38. 4 |
| 09. 3 | 19. 3 | 29. 2 | 39. 1 |
| 10. 3 | 20. 1 | 30. 3 | 40. 4 |

## கல்விப் பொதுத்தராதரப்பத்திர(சாதாரண தரப்)பரீட்சை, 2001 டிசெம்பர்

# சைவசமயம்

## விடைகள்

01. (i) மொகஞ்சதாரோ, ஹரப்பா.
சைவசமயத்தின் தொன்மை புலனாகின்றது. சிவன், சக்தி வழிபாடு மேலோங்கியிருந்தது. சிந்து வெளி நாகரீகத்தைத் திராவிட இனத்தவர் தோற்றுவித்தனர். சைவம் தமிழர் சமயமாகும்.

(ii) சைவசமயச் சார்புடைய பொருள்கள் அல்லது இலச்சினைகள் காணப்பட்டன. யோகி போல் அமர்ந்திருக்கும் கொம்புடைய கடவுள். (மும்முகமூர்த்தி) முந்துசிவன், சிவலிங்கங்களின் வடிவங்கள், சக்தி, நந்தி, மர வழிபாடுகள் இருந்தமைக்கான ஆதாரங்கள், பெண் தெய்வத்தின் கருப்பையிலிருந்து வளர்வதைக் குறிக்கும் இலச்சினைகள் காணப்பட்டன.

(iii) சைவாகமங்கள் 28 வகைப்படும். சிவாகமம் ஆன்மாக்களின் இறுதி இலட்சியமாகிய வீடுபேற்றை அடையச் செய்யும் குறிக்கோளை உடையது. கிரியைகளின் வகைகள் அவற்றைச் செய்யும் முறை, வழிபடுவோருக்குரிய இயல்புகள், சைவசாதனங்கள், கடவுள் வழிபாட்டினால் ஆன்மாக்கள் அடையும் பேறுகள் என்பவற்றை விரிவாக விளக்குகின்றன. இவை தவிர ஆலய வழிபாட்டுடன் தொடர்புடைய ஆலயம் அமைவதற்கான இடம், ஆலய அமைப்பு முறை, படிம இலக்கணம், படிமங்களை வார்க்கும் முறை, வாகனங்கள் அமைக்கும் முறை, தேர் அமைக்கும் முறை, அருச்சகர் சிற்பாசிரியர் ஒழுக்கம், அடியார் இயல்பு போன்ற விடயங்களை சிவாகமங்கள் கூறுகின்றன.

(iv) அன்பு வேறு. சிவம் வேறு அல்ல. இரண்டும் ஒன்றே. அன்பு தான் சிவமாகவும், சிவம் தான் அன்பாகவும் விளங்குகின்றது. அன்பு தான் சிவம் அன்பை உள்ளத்தில் இருத்தி அதை எப்பொழுதும் நினைக்க வேண்டும். பிற உயிர்களுக்கு அன்பு செய்தல், பேணுதல் என்பன அன்பே வடிவான கடவுளுக்குப் பிரியமான தொண்டாக அமையும்.

02. (i) திருஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்துக்குச் சமணர்கள் தீ வைத்தனர். பாண்டியன் சமணத்தைச் சார்ந்து சைவத்தை இழிவுபடுத்தினான். அதனால் வெப்பு நோய் ஏற்பட்டது. வெப்பு நோய் சம்பந்தரால் திருநீற்றுப் பதிகம் பாடியும், திருநீற்றினாலும் தீர்க்கப்பட்டது.

(ii) தேவாரமுதலிகள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் ஆவர். திருவாசகம் மாணிக்கவாசகரால் பாடப்பட்டது.

(iii) சம்பந்தரும் நாவுக்கரசரும் திருவீழிமிழலையில் படிக்காசு பெற்று பஞ்சம் தீர அடியார்க்கு அமுது செய்வித்தனர். திருமறைக்காட்டில் வேதங்களாற் பூட்டப்பட்டிருந்த திருக்கதவு திறக்கவும், பூட்டவும் தேவாரம் பாடினர்.

(iv) சிவசின்னங்களான திருநீறு, உருத்திராக்கம் அணிய வேண்டும். பஞ்சாட்சர செபம் செய்ய வேண்டும். விரதங்களை தகுந்த முறையில் அனுட்டிக்க வேண்டும்.

03. (i) தட்சிணகைலாயம் எனப்படுவது திருக்கோணேச்சரமாகும். இராவணன் கோணேச்சரத்தை பூசித்தான். தேவாரப்பாடல் பெற்ற தலமாகும். குளக்கோட்ட மன்னனால் திருப்பணிகள் புரியப்பட்டது.

(ii) திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம்.
சம்பந்தர் கேதீச்சரம், கோணேச்சரம் மீது இராமேச்சரத்திலிருந்து தேவாரம் பாடினார். சுந்தரர் கேதீச்சரம் மீது தேவாரம் பாடினார்.

(iii) திருக்கேதீச்சரம் - பாலாவி, திருக்கோணேச்சரம் - பாவநாசம், நகுலேச்சரம் - கீரிமலை, நகுல கிரி. கேதீச்சரத்தில் சிவராத்திரி காலத்தில் அடியார்கள் வெள்ளிக்குடங்களில் பாலாவித்தீர்த்தத்தை தாமே கொண்டு வந்து மகாலிங்கப் பெருமானுக்கு அபிடேகம் செய்வர். இங்கு பிதிர்க்கடன் செய்வோர் காயாவிற் செய்த பலனைப் பெறுவர் என்பது சைவமரபு.

(iv) தானாக தோன்றிய இலிங்கம் (சுயம்புலிங்கம்) வீற்றிருக்கும் சிவாலயமாகும். ஓட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீச்சரம்.

04. (i) தமிழ்நாட்டு ஞானியர் - திருமூலர், சிவவாக்கியர், பட்டினத்தார், பாம்பாட்டிச்சித்தர், அகப்பேய்ச்சித்தர்.
இலங்கைச்சித்தர் - கடையிற் சுவாமிகள், செல்லப்பாச்சுவாமிகள், யோகர் சுவாமிகள், நவநாதசித்தர், சித்தானைக்குட்டிச்சுவாமி, முத்துலிங்கச்சுவாமி.

(ii) சமயங்கடந்த சமரசநிலையில் நிற்பர், அட்டமாசித்திகளும் கைவரப்பெற்றவர்கள், பாலரையும், பைத்தியக்காரரையும் போல் இருப்பர், ஆடல், பாடல் செய்வர், விருப்பு வெறுப்பு, இன்பம் துன்பம், புகழ்ச்சி இகழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவர்.

(iii) எல்லாம் செப்படிவித்தை, அப்படியே உள்ளது, ஒரு பொல்லாப்பும் இல்லை, முழுதும் உண்மை, ஒருவருக்கும் தெரியாது, ஆர் அறிவார்.

(iv) யோகர் சுவாமி - இயற்பெயர் சதாசிவம் ஆகும். செல்லப்பாச்சுவாமியை குருநாதராக ஏற்றுக் கொண்டார். இவரது உபதேசங்கள் நற்சிந்தனை எனப்படும். சிவதொண்டன் என்ற மாத இதழைத் தொடக்கினார். யாழ்ப்பாணத்திலும் செங்கலடியிலும் சிவதொண்டன் நிலையங்களை நிறுவினார்.

நவநாதசித்தர் - ஒரே நேரத்தில் ஒன்பது இடங்களில் காணப்படுவார். பெருமாள் அம்மையாரின் குயின்ஸ்பரித்தோட்டத்துக்கு விஜயம் செய்தார். இலங்கையில் கட்டும் முருகன் கோயிலுக்கும்

விஜயம் செய்தார். பெருமாள் அம்மையார் ஞானப்பிரகாசம் என்னும் குளத்தில் தீர்த்தமாடிய பின்னர் செபம் செய்ய நவநாதச்சித்தர் அருளால் மாலை கிடைத்தது. சித்தரின் சமாதி குயின்ஸ்பரித் தேயிலைத்தோட்டத்திலுள்ள முருகன் கோயிலுக்கு அயலில் உள்ளது.

05. (i) மேலொருவன், தனக்கு மேலே தலைவன் இல்லாதவன் இறை.

(ii) பொதுத்தன்மை - இரண்டும் அறிவுப்பொருள் அல்லது சித்துப்பொருள். வேறுபட்ட தன்மைகள்- பதிமுற்றறிவினர், தாமாகவே அறிபவர் தம்மின் மேலான தலைவர் இல்லாதவர். ஆன்மாக்கள் சிற்றறிவுள்ளன. அறிவிக்க அறிவன. பதியைத் தலைவராக உடையன.

(iii) சிவம், இறை, கடவுள், பரம்பொருள், மெய்ப்பொருள், பிரான், ஈசன்.

(iv) ஒப்பின்மை, முதன்மை கலந்திருத்தல், இயக்குதல், ஞான வடிவு, பூரணத்துவம், சத்துப் பொருளாதல் என்னும் சிறப்பியல்புகள் உள்ளவர் பதி. பதி உயிர்கள் சிவத்தன்மை சார உதவும் சக்தியின் பிரிக்கமுடியாத முழுமை உள்ளவர். அளவுப்பெருமை, அளவு நுண்மை, பெருங் கருணை, பெறுதற்கு அருமை என்னும் அமிசங்களில் பதி ஒப்பில்லாதவர்.

06. (அ) மண்ணின் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல..துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகையிருந்ததே.

சந்தர்ப்பம் - திருஞானசம்பந்தர் சீர்க்காழியில் குடிகொண்டிருக்கும் இறைவன் மீது பாடினார்.

பொழிப்புரை - அர்த்தநாரிஸ்வரர் ஆகிய உமைநாயகர் நம்பிக்கையூட்டும் பெருந்தகையாக திருக்கழுமலத்தில் குடிகொண்டிருப்பதால் நாம் இம்மையில் நல்வாழ்வும் மறுமையில் நற்கதியும் அடைய அவரைத் தினமும் மனப்பூர்வமாக வழிபடல் நலம்.

(ஆ) அங்கத்துறு நோய்கள்ளடியார் மேலொழித்தருளி
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்
பக்கஞ் செய்த மடவாளோடு பாலாவியின் கரை மேல்
தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே.

சந்தர்ப்பம் - சுந்தரர் கேதீச்சரப் பெருமானை இராமேச்சரத்திலிருந்து அகக்கண்ணாற் நினைந்து பாடினார்.

பொழிப்புரை - அடியார்களின் நோய்ப்பீடைகளை நீக்கி, அருள் பாலிக்கும் அரன் கடல் சூழ் மாதோட்ட நன்நகரிலுள்ள பாலாவி என்னும் நதி தீர்த்தத்தில் தென்னஞ் சோலைகளின் நடுவில் அமைந்துள்ள திருக்கேதீச்சரத்தில் கௌரி அம்பாளோடு உடனுறையும் சிவநாயகராக எழுந்தருளியுள்ளார்.

(இ) மெய்தான் அரும்பி விதிர் விதித்து
உன் விரையார் கழற்கென்
கை தான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய் தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கை தான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டு கொள்ளே.

சந்தர்ப்பம் - மாணிக்கவாசகர் திருப்பெருந்துறைப் பெருமான் மீது பாடிய திருவாசகப்பாடலாகும்.

பொழிப்புரை - உடையவனே, உடல், உள்ளம் உரை என்னும் மூன்றும் நீர்த்துளி அரும்பல் கைகூப்பல், கண்ணீர், மல்கல், உள்ளம் குமுறல், போற்றி சயசய போற்றி என்று துதித்தல் ஆகிய பக்தித்தலங்களை வெளிப்படுத்த நான் உன்னைப் பற்றிக் கொண்டேன். என்னை இனங் கண்டு அருள்புரிக.

(ஈ) அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுட
ராழியும் பல்லாண்டு
படையோர் புக்கு முழங்கும் அப்பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டு

சந்தர்ப்பம் - பெரியாழ்வார் திருமொழி - திருப்பல்லாண்டு.

பொழிப்புரை - நாமும் உலகும் வாழ வேண்டும். இறைவன் அருள் ஓங்க வேண்டும். அவன் அருளாலே எல்லாம் வாழ்கின்றது. எனவே இறைவனை வாழ்த்துவதும் தொழுவதும் நம்முயர்ந்து நன்மையெல்லாம் வேண்டியே என்பர்.

(உ) ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறு செய்தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேல்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானை தன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியார் எல்லாம்.

சந்தார்ப்பம் - கச்சியப்பர் பாடிய கந்தபுராணம்.

பொழிப்புரை - செவ்வேளும், ஆறுமுகம், பன்னிரு தோள்கள், வேல், மயில், சேவல், தேவயானையார், வள்ளி நாயகியார், குகதாசர் வாழ்க. வாழ்க.

07. (i) ஐயன் எனக் குறிப்பிடப்படுபவர் சுந்தரர். (நம்பியாரூரர்) அவ்வாறு குறிப்பிட்டவர் - சேரமான் பெருமாள். தொடர்பு - ஆழ்ந்த நட்பு.

(ii) தம்பிரான் தோழர் - சிவபெருமானுடன் தோழமை பூண்டவர். சேரமான் தோழர் - சேரமான் பெருமாள் என்ற அரசருடன் நட்புறவு பூண்டவர்.

(iii) சுந்தரரைத் தந்தையாகவும், தெய்வமாகவும், சிவசம்பந்தமுடையவராகவும், தலைவனாகவும், உலகிற்கே குருவாகவும் போற்றுகின்றார்.

(iv) சேரமான் தினமும் நடராசமூர்த்தியை பூசிப்பவர். பூசை முடிவில் பாதச்சிலம்பொலி கேட்கும். ஒரு நாள் சிலம்பொலி கேட்கவில்லை. தவறு நிகழ்ந்து விட்டதென எண்ணித் தன் உடைவாளால் மார்பைக் குத்த எத்தனித்தார். உடனே சிலம்பொலி கேட்டது. தில்லையில் எம் கூத்தை சுந்தரன் தரிசித்துத் தமிழாற் பாடினான். அதைக் கேட்டிருந்தோம். உன் பூசைக்கு அருள் புரிய வரத் தாமதம் நேர்ந்தது என்றார். இதுவே அந்தச் சம்பவம்.

08. (i) நித்திய கருமங்கள் திருமுறை ஓதுதல், சிவசின்னங்கள் அணிதல், மாலை கட்டுதல், கோலம் போடுதல், சிவ புண்ணியம், பசு புண்ணியங்களைச் செய்தல், சைவ உணவு உட்கொள்ளுதல்.

(ii) காலை, மாலை கடவுளை வணங்குதல், அனுட்டானம் பார்த்தல், அதிகாலையில் நித்திரை விட்டு எழுதல், குளித்தல், போசனம் செய்யும் முன் அதனை இறைவனுக்கு அர்ப்பணித்தல், சூரியன் அஸ்தமித்ததும், கை கால் முகம் கழுவி விளக்கேற்றி விபூதி தரித்துச் சிவபெருமானை வணங்கித் தோத்திரம் செய்தல், இறைவனைத் தியானித்துச் சிவ சிந்தனையுடன் நித்திரை செய்தல்.

(iii) நல்வினைகள் - நற்செயல்கள், புண்ணிய கைங்காரியங்களைச் செய்தல், அன்பு, இரக்கம், உண்மை, நேர்மை, நீதி, பொறுமை ஆகியவற்றின் அடிப்படையில் செய்யப்படும் நற்செயல்களும், இறைவனுக்கும், மெய்யடியார்களுக்கும், செய்யப்படும், வழிபாடுகள், தொண்டுகள், தானதர்மங்கள் மற்றும் அறச்செயல்கள் யாவும் நல்வினைகள் ஆகும். சிவ புண்ணியங்கள், பசு புண்ணியங்கள் என்பன இவற்றுள் அடங்கும்.

தீவினைகள் - எல்லாவித பாவச்செயல்களும், கொலை, களவு, மது அருந்துதல், காமம், பொய்யுரைத்தல், குருநிந்தை, சிவநிந்தை முதலியன தீவினைகள். ஆசை, கோபம், பொறாமை, செருக்கு, அநீதி, அகந்தை முதலியவற்றினால் உந்தப்பட்டுச் செய்யப்படுபவை தீவினைகள்.

(iv) நல்ல மனித தெய்வீகப்பண்புகள் விழுமியங்கள் ஆகும். அன்பு, நனடத்தை, உண்மை, இன்னாசெய்யாமை, அடக்கம், நீதி, அறம், நடுநிலைமை, பிறரில் கரிசனை, பிறர் நலம் பேணல் என்பன விழுமியங்களுக்கு உதாரணமாகும்.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2000 டிசெம்பர்

# சைவசமயம் I

ஒரு மணித்தியாலம்

1. ஓங்கார வடிவினனாக விளங்கும் கடவுள்,
(1) விநாயகப் பெருமான் (2) முருகப் பெருமான்
(3) மகாவிஷ்ணு (4) வைரவப் பெருமான்

2. மனத்தைப் புலன் வழிச் செல்லவிடாது தடுத்து, அதனைப் பக்குவப்படுத்தி, ஆன்மீகப் பாதையிற் செல்ல உதவுவது,
(1) சமயம் (2) சமூகவியல் (3) அறிவியல் (4) உளவியல்

3. "தூலலிங்கம்" என்னும் பெயரையுடையது,
(1) விமானம் (2) இராஜகோபுரம் (3) பலிபீடம் (4) கருவறை

4. சிவசின்னங்களாகக் குறிப்பிடப்படுபவை,
(1) சங்கும் சக்கரமும் (2) வேலும் மயிலும்
(3) விபூதியும் உருத்திராக்கமும் (4) பஞ்சாட்சரமும் சடாட்சரமும்

5. கடவுளைக் குறிக்கும் சொல்,
(1) பசு (2) பாசம் (3) பதி (4) ஆன்மா

6. திருநீற்றை உடம்பில் தரித்துக் கொள்வதற்கான இருமுறைகள்,
(1) பஞ்சாங்கம், அட்டாங்கம் (2) தீட்சை, அனுட்டானம்
(3) வட கலை, தென் கலை (4) உத்தூளனம், திரிபுண்டரம்

7. அகிம்சை என்பதன் பொருள்,
(1) உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமை
(2) போகவிட்டுப் புறங்கூறாமை (3) ஒருவர் செய்த நன்றியை மறவாமை
(4) எவ்வுயிர்க்குத் இன்னா செய்யாமை

8. தினமும் பொழுது சாயுங்காலத்தில், சைவமக்களின் இல்லங்களில் நிகழவேண்டியது,
(1) குடும்பத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்து கதைத்தல்.
(2) எல்லோரும் கூடியிருந்து தொலைக்காட்சி பார்த்தல்.
(3) விளக்கேற்றி இறைவழிபாடு செய்தல்.
(4) நண்பர்களுடன் தேநீர் அருந்துதல்.

9. சைவசமய வழிபாட்டு முறைகளில் இடம்பெறும் புனித நீராடல்(தீர்த்தமாடுதல்), அரசு முதலிய மரங்களை வழிபடுதல், நந்தியை வழிபடுதல், நாகபாம்பினை வழிபாடு செய்தல் என்பன,
(1) வேதகால மக்களின் சமய வழிபாடுகளில் இடம்பெற்றிருந்தன.
(2) சிந்துவெளி நாகரிக கால மக்களின் சமய வழிபாடுகளில் இடம்பெற்றிருந்தன.
(3) சங்ககாலத் தமிழ் மக்களின் சமய வழிபாடுகளில் இடம்பெற்றிருந்தன.
(4) பிற சமயங்களின் செல்வாக்கினால், சைவசமயத்தினுள் புகுந்துகொண்டன.

10. சமண சமயத்தை மேற்கொண்டிருந்த கூன்பாண்டியனை, மீண்டும் சைவசமயத்திற்குக் கொண ரும் பொருட்டுத் திருஞானசம்பந்தப் பெருமானைப் பாண்டிநாட்டிற்கு வரவழைத்த அம்மையார்,
(1) மங்கையர்க்கரசியார் (2) திலகவதியார்
(3) புனிதவதியார் (4) தட்சிணா மூர்த்தி

11. "வாதவூரான் விளம்பிட அம்பலவன் எழுதிய" புனித நூல்கள்,
(1) தேவாரமும் திருவாசகமும் (2) திருவாசகமும் திருக்கோவையாரும்
(3) திருக்குறளும் திருப்புகழும் (4) திருமந்திரமும் திருவிசைப்பாவும்

12. கல்லால மரத்தின் கீழமர்ந்து சனகர் முதலிய நால்வருக்கும் ஆகமப் பொருளை உணர்த்தியவர்,
(1) சதாசிவ மூர்த்தி (2) நடராஜ மூர்த்தி
(3) சோமாஸ்கந்த மூர்த்தி (4) தட்சிணா மூர்த்தி

13. ஓம குண்டத்திலே அக்கினி வளர்த்து, அதில் அவி சொரிந்து, மந்திரங்களாலே தெய்வங்களை அழைத்து, வேண்டும் வரங்களைக் கேட்கின்ற வழிபாட்டு முறை,
(1) பண்டிகைகள் கொண்டாடும் போது இடம்பெறுகின்றது.
(2) பூசை முறை எனப்படுகின்றது. (3) சரியை மார்க்கத்தில் இடம்பெறுகிறது.
(4) ஓமம் எனப்படும் வேள்வி முறையாகும்.

14. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கு "நாவலர்" பட்டம் வழங்கிக் கௌரவித்த ஆதீனம்,
(1) தருமபுர ஆதீனம் (2) மெய்கண்டார் ஆதீனம்
(3) திருவாவடுதுறை ஆதீனம் (4) நல்லை ஆதீனம்

15. திரிமூர்த்திகள்,
(1) பிள்ளையார், முருகன், சிவன் (2) சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர்
(3) அருவம், அருவுருவம், உருவம் (4) பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்

16. சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம்,
(1) காணபத்தியம் (2) சாக்தம் (3) கௌமாரம் (4) சௌரம்

17. சூலத்தைப் பிரதிஷ்டை செய்து நடத்தப்படும் வழிபாடு,
(1) முருக வழிபாடு (2) விஷ்ணு வழிபாடு
(2) ஆஞ்சநேயர் வழிபாடு (4) வைரவர் வழிபாடு

18. இறைவனைத் தோழனாகப்பாவித்து வழிபடும் சகமார்க்கத்தில் நின்று முத்தி பெற்றவர்,
(1) திருஞான சம்பந்தர். (2) திருநாவுக்கரசர்.
(3) சுந்தரமூர்த்தி நாயனார். (4) மாணிக்க வாசக சுவாமிகள்.

19. தமிழில் சிவாகமப் பொருளைக் கூறும் நூல்,
(1) திருக்குறள் (2) திருமுருகாற்றுப்படை
(3) பகவத்கீதை (4) திருமந்திரம்

20. "தனித்திரு", "பசித்திரு", "விழித்திரு" என்னும் திருவாக்குகளைப் பிரதானமாகக் கடைப்பிடிக்க வேண்டியவர்கள்,
(1) விரதம் அனுட்டிப்போர் (2) கல்வி கற்போர்
(3) நோயாளிகள் (3) வயோதிபர்

21. முருகன் சூரபத்மனைச் சங்காரஞ் செய்த நிகழ்வினைக் குறிப்பதாக அமைவது,
(1) மகாசிவராத்திரி (2) கந்தசஷ்டி விழா
(3) நவராத்திரி விழா (4) தீபாவளி

22. சிவநெறியாம் சைவநெறியில் நின்று வாழ்பவர்,
(1) தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பர்.
(2) சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ்வர்.
(3) சமயம் வேறு, சமூகம் வேறு எனக் கொள்வர்.
(4) தாம் இன்புறுவது போலப் பிறரும் இன்புறுவதை விரும்புவர்.

23. மனித உய்விற்குச் சைவநெறி காட்டும் இரண்டு பிரதான வழிமுறைகள்,
(1) மந்திரமும் தந்திரமும் (2) வேள்வி செய்தலும் பலியிடலும்
(3) உயிர்கள்மீது அன்பும் கடவுள் மீது பக்தியும் (4) துறவும் ஒதுங்கி வாழ்தலும்

24. சிவபெருமான் அகந்தையும் தன்னலமும் உடையவர்களினால் அறியப்படுவதற்கு அரியராய் உள்ளார் என்பதை விளக்கும் சம்பவம்,
(1) சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட்கொண்டமை.
(2) பிரமாவும் விட்டுணுவும் அடிமுடி தேடியமை.
(3) காலனைக் காலால் உதைத்தமை.
(4) திருநாவுக்கரசரை எண்பத்தொரு வயதுவரை வாழச் செய்தமை.

25. ஆன்மாவானது,

(1) முற்றறிவுடையது. (2) சிற்றறிவுடையது.

(3) தானாக எதையும் அறியவல்லது. (4) அறிவித்தாலும் அறியமாட்டாதது.

26. திருவருட்பயன் நூலின் முதலாம் அதிகாரம் - பதிமுதுநிலை கூறுவது,

(1) இறைவனின் மேலான இயல்பு (2) உயிர்களின் இயல்பு

(3) ஆணவ மலத்தின் இயல்பு (4) முப்பொருள்களின் இயல்பு

27. சிருட்டி, திதி, சங்காரம் என்பன முறையே,

(1) பிரமா, விஷ்ணு, உருத்திரன் எனப்பொருள்படும்.

(2) பதி, பசு, பாசம் எனப் பொருள்படும்.

(3) படைத்தல், காத்தல், அழித்தல் எனப்பொருள்படும்.

(4) படைத்தல், அருளல், மறைத்தல் எனப்பொருள்படும்.

28. இறைவன்வேறு; திருவருட் சக்தி வேறு; என்னும் கூற்று,

(1) ஏற்கக் கூடியது. (2) பிழையானது.

(3) அர்த்தமுள்ளது. (4) சந்தேகத்திற்குரியது.

29. மாயா காரியங்கள் எனப்படுபவை,

(1) பதி, உயிர், உலகம் (2) சத்து, அசத்து, சதசத்து

(3) சரியை, கிரியை, யோகம், ஞானம் (4) தனு, கரண, புவன போகங்கள்

30. கந்தபுராணம் வலியுறுத்தும் பிரதான அறக் கருத்துக்களில் ஒன்று,

(1) பல நூல்களைக் கற்பதால் அறிவு வளரும்.

(2) அறங்களுள் சிறந்தது துறவறம்.

(3) ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

(4) நன்றிமறத்தலால் வரும்பெருங்கேடு எல்லாவற்றையும் அழிக்கும்.

31. சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தின் காவிய நாயகன்,

(1) திருஞானசம்பந்தர் (2) திருநாவுக்கரசர்

(3) சுந்தரர் (4) சிவபெருமான்

32. கண்ணுக்குப் புலனாகாது மறைந்து நின்று உயிருக்கு உதவி செய்து வந்த திருவருள், உயிர் பக்குவநிலையை அடையும்போது, அதனை ஆட்கொள்ளும் பொருட்டு எடுக்கும் கண்ணாற் காணக்கூடிய வடிவம்,

(1) தெய்வ வடிவம் (2) குருவடிவம்

(3) சக்தி வடிவம் (4) இறைவடிவம்

33. "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்று" என்னும் குறளின் பிரதான கருத்து,

(1) மெய்யறிவு பெற்றவர்களுக்கு ஆணவத்திலுள்ள பற்று நீங்கி விடும்.

(2) பிறப்புக்குக் காரணமான அறியாமையை அகற்றுவதற்கு அறிவில் பற்று வைக்கவேண்டும்.

(3) பொருள்கள் மீது பற்றுவைத்தலே சகலவிதமான துன்பங்களுக்கும் காரணம்.

(4) நிலையற்ற உலகப் பொருள்களில் பற்றொழிவதற்கு நிலையான இறைவனைப் பற்றி நிற்றல் வேண்டும்.

34. அன்புநெறியாக எங்கள் சைவநெறி மலர்வதற்கு ஆதாரமாக விளங்கியவர்கள்,

(1) சங்கப் புலவர்கள் (2) சேர, சோழ, பாண்டிய மன்னர்கள்

(3) நாயன்மார்கள். (4) களப்பிரர்

35. "உள்ளம்பெருங்கோயில் ஊனுடம்பாலயம்" எனத்தொடங்கும் திருப்பாடல்,

(1) திருமந்திரப்பாடல் (2) தேவாரப் பாடல்

(3) திருவாசகப் பாடல் (4) பெரியபுராணப் பாடல்

36. பயன்கருதி இறைவனுக்குச் செய்யும் பூசை,

(1) நிட்காமிக பூசை எனப்படும். (2) காமிய பூசை எனப்படும்.

(3) நைமித்திய பூசை எனப்படும். (4) திருவனந்தல் எனப்படும்.

37. சைவசமயிகள் விலக்க வேண்டியவற்றுள் ஒன்று,
(1) சங்கம வழிபாடு (2) சமூக சேவை
(3) மாமிச போசனம் (4) விரதமனுட்டித்தல்

38. சூரியன் மேட இராசியில் பிரவேசிக்கும் தினத்தன்று கொண்டாடப்படுவது,
(1) தீபாவளிப் பண்டிகை (2) தைப்பொங்கல்
(3) நவராத்திரி விழா (4) சித்திரைப் புத்தாண்டு

39. "கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகலகலாவல்லியே" - இங்கே குறிப்பிடப்படும் தெய்வம்,
(1) சரஸ்வதி (2) துர்க்கை (3) இலக்குமி (4) அபிராமி

40. "இறைவன் உலகு, உயிர்கள் என்பனவற்றோடு கலப்பினால் ஒன்றாகியும், பொருட்டன்மையால் அவற்றின் வேறாயும், செலுத்தும் தன்மையால் அவற்றோடு உடனாயும் இருக்கின்றான்." என்று கொள்வது,
(1) வேதாந்தம் (2) அத்துவிதம் (3) உபநிடதம் (4) சைவசித்தாந்தம்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2000 டிசெம்பர்

# சைவசமயம் II

இரண்டு மணித்தியாலங்கள்

1. "சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே." - சிவானந்தமாலை

(i) மேலே தரப்பட்டுள்ள பாடலில் இடம்பெறும் நான்கு மெய்யடியார்களின் பெயர்களை எழுதுக.
(ii) திருமுறைகளை மெய்யன்போடு ஓதி வருவதால் கிட்டும் நன்மைகள் நான்கு கூறுக.
(iii) திருமுறை கண்ட வரலாற்றைச் சுருக்கமாக எழுதுக.
(iv) திருமுறைகள் எத்தனையாக வகுக்கப்பட்டுள்ளன? திருவாசகம் எத்தனையாந் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது? திருமுறைகளில் பேசப்படுகின்ற சமய தத்துவக் கோட்பாடு யாது?

2. "கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே." - தேவாரம்

(i) திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள இறைவனினதும் அம்பாளினதும் பெயர்கள், அங்குள்ள தீர்த்தத்தின் பெயர், அத்தலத்தின் மீது தேவாரப் பதிகங்கள் பாடிய நாயன்மார்களின் பெயர்கள் என்பவற்றைக் குறிப்பிடுக.
(ii) "மன்னாருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்திலே திருக்கேதீச்சரம் என்னும் தேன்பொந்து ஒன்று உளது." - இவ்வாறு கூறியவர் யார்? அவர் அவ்வாறு கூறியதன் நோக்கம் என்ன? நோக்கம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது?
(iii) திருக்கேதீச்சர ஆலயத்தின் தொன்மைச் சிறப்பினை, ஆதாரங்களைக் காட்டி எழுதுக.
(iv) இலங்கையில் காணப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஈச்சரங்கள் நான்கின் பெயர்களைத் தருக.

3. "தீஷா என்னும் சொல், 'ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது என்னும் பொருளுடையது' என ஆகமங்கள் விளக்கந்தருகின்றன." - சைவநெறி பாடநூல்

(i) மும்மலங்கள் எவை? மும்மலங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கும் உயிர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
(ii) சமய தீட்சை பெற்றவர்கள் திருநீற்றைத் தரிக்கும் முறை பற்றியும், பெறாதவர்கள் திருநீற்றை எவ்வாறு தரித்துக்கொள்ளவேண்டும் என்பது பற்றியும் விபரிக்குக.
(iii) திருநீற்றின் மகிமை பற்றி, நாயன்மார்கள் வரலாற்றிலிருந்து சான்றாதாரம் காட்டி விளக்குக.

(iv) "சமய தீட்சை ஏன் பெறவேண்டும்" என உங்களிடம் கேட்ட ஒருவருக்கு, நீங்கள் கூறும் பதிலைச் சுருக்கமாக எழுதுக.

4. "ஒத்த சமயங்க ளோராறு வைத்திடும்
அத்த னொருவனா மென்ப தறிந்திலர்." - திருமந்திரம்

(i) மேலே தரப்பட்டுள்ள திருமந்திரப் பாடலடிகள் வலியுறுத்திக் கூறுவது என்ன?
(ii) ஆறு வைதிக சமயங்களும் எவை? அவை ஒவ்வொன்றினதும் முழுமுதற்கடவுள் யார் என்பதனைக் குறிப்பிடுக.
(iii) வைதிக சமயம் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது? "சண்மதப் பிரதித்தாபகர்" என அழைக்கப்படுபவர் யார்?
(iv) காணபத்திய சமயத்தின் முழுமுதற் கடவுளின் பெயர், அவரின் சிறப்புக்கள், அவரை வழிபடும் முறை, அவருடன் தொடர்புபட்ட புராண வரலாற்றுக் கதை என்பன பற்றி எழுதுக.

5. "மாசிலா மரபில் வந்த வள்ளல்வே தியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியாற் சிரிப்பு நீக்கி
ஆசிலந் தணர்கள் வேறோ ரந்தணர்க் கடிமை யாதல்
பேசவின் றுன்னைக் கேட்டோம் பித்தனோ மறையோ னென்றார்." - பெரிய புராணம்

(i) "மாசிலா மரபில் வந்த வள்ளல்" எனக் குறிப்பிடப்படுபவர் யார்? குற்றமற்ற சிவ வேதியர்கள் எதைச் செய்யமாட்டார்கள்?
(ii) முதிய வேதியராக வந்த சிவபெருமானைப் பார்த்து, நம்பியாரூரர், "மறையோனே, நீ பித்தனோ?" என்று வினாவெழுப்பிதற்கான காரணம் என்ன?
(iii) பெரிய புராணம் என்னும் நூலை இயற்றியவர் யார்? அந்நூலின் சிறப்புப் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.
(iv) சைவம் வளர்த்த நாயன்மார்களை எவ்வாறு நாம் நினைவு கூரலாம்?

6. "ஒரு பொருளுங் காட்டா திருள் உருவங் காட்டும்
இரு பொருளுங் காட்டாதிது." - திருவருட்பயன்

(i) ஆணவ இருளுக்கும் பூத இருளுக்குமிடையேயுள்ள ஒத்த தன்மை என்ன? வேறுபட்ட தன்மை என்ன?
(ii) உயிர்களுக்கு ஆணவம் இழைக்கும் தீமைகள் மூன்று தருக.
(iii) ஒருவர் ஆணவ வயப்பட்டிருத்தலை எவ்வாறு அறிந்துகொள்ளலாம்?
(iv) ஆணவம் முதலிய மலங்களின் பிடியிலிருந்து உயிர் தன்னை விடுவிப்பதற்குப் பின்பற்றக்கூடிய நான்கு மார்க்கங்கள் எவை? அவற்றுள் ஒன்றைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

7. "கோயில் இல்லா ஊரில் குடியிருக் வேண்டாம்."- ஆன்றோர் வாக்கு

(i) கோயில் என்பதன் பொருள் என்ன? கோயிலுக்கும் சிவாகமங்களுக்கும் இடையிலான தொடர்பைச் சுருக்கமாகக் கூறுக.
(ii) நித்திய பூசை, நைமித்தியக் கிரியைகள் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை எடுத்துக் காட்டுக.
(iii) மகோற்சவத்தில் கொடியேற்றம், வாகனத்திருவிழாக்கள், தேர்த்திருவிழா, மௌனோற் சவம், தீர்த்தம் என்பன ஒவ்வொன்றும் இறைவனின் எந்த எந்தத் தொழில்களைக் குறிக்கின்றன?
(iv) மகோற்சவ காலங்களில் சைவ மக்கள் மேற்கொள்ள வேண்டிய சைவ ஒழுக்க சீலங்கள் பற்றி எழுதுக.

8. (i) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதவும்.
(ii) அவற்றைப் பாடியோர் யார் என்றும் அவை எச்சந்தர்ப்பங்களிற் பாடப்பட்டன என்றும் கூறுக.
(iii) அவற்றின் பொழிப்புரையினை எழுதுக.

(அ) "மாதர்ப் பிறைக்கண்ணி யானை..............."
(ஆ) "என்ன புண்ணியஞ் செய்தனை................"
(இ) "அண்ணலார் தமக் களித்த......................"
(ஈ) "விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் ......."
(உ) "பண்ணும் பரதமும் கல்வியுந்..........."

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2000 டிசெம்பர்

# சைவசமயம் I

## விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 2 | 21. | 2 | 31. | 3 |
| 02. | 1 | 12. | 4 | 22. | 4 | 32. | 2 |
| 03. | 2 | 13. | 4 | 23. | 3 | 33. | 4 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 2 | 34. | 3 |
| 05. | 3 | 15. | 4 | 25. | 2 | 35. | 1 |
| 06. | 4 | 16. | 4 | 26. | 1 | 36. | 2 |
| 07. | 4 | 17. | 4 | 27. | 3 | 37. | 3 |
| 08. | 3 | 18. | 3 | 28. | 2 | 38. | 4 |
| 09. | 2 | 19. | 4 | 29. | 4 | 39. | 1 |
| 10. | 1 | 20. | 1 | 30. | 4 | 40. | 4 |

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2000 டிசெம்பர்

# சைவசமயம் II

## விடைகள்

1. (i) திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர்.

(ii) ஓதுவார் உள்ளங்களைத் தூய்மையாக்கும். நோய் தீர்க்கும். மரணபயம் நீக்கும். துன்பங்கள், இடர்கள் நீங்கும். வறுமை, யுத்தம், அமைதியின்மை நீங்கப்பெறும். மழை பெய்யும். நாடு செழிக்கும். சமாதானம் ஏற்படும். இம்மையில் இன்பமும் மறு மையில் மோட்சமும் பெறலாம்.

(iii) இராஜராஜசோழன் தேவாரப் பதிகங்கள் சிலவற்றுக்கு அன்பர்கள் உரை கூறக் கேட்டு மகிழ்ந்தான். தேவாரப் பதிகங்களைச் சேகரிக்க விரும்பினான். பல காலம் நிறை வேறாமையால் மனம் வருந்தினான். திருநாரையூரிலே நம்பியாண்டார் நம்பியின் அற்புதங்களைக் கேள்வியுற்றான். மன்னன் நம்பியிடம் நேரில் சென்று மூவர் தேவாரங்கள் இருக்குமிடத்தைப் பொல்லாப் பிள்ளையாரிடம் அறிந்து சொல்லும்படி வேண்டினான். அவ்வாறே அறிந்து மூவர் தேவாரங்கள் சிதம்பரத்தில் இருக்கும் செய்தியை நம்பி மன்னரிடம் சொன்னான். தில்லை வாழ் அந்தணர்கள் மூவரும் நேரில் வந்தாலே தேவாரங்களை எடுக்க முடியும் என்றனர். மூவர் சிலைகளை எழுந்தருள்வித்துத் தேவாரங்களை மன்னன் மீட்டான். நம்பி தேவாரத் திருமுறைகளை ஏழாக் வகுத்தார்.

(iv) திருமுறைகள் 12 ஆக வகுக்கப்பட்டுள்ளன. திருவாசகம் எட்டாம் திருமுறையிலடங்கும். திருமுறைகளில் பேசப்படுகின்ற சமய தத்துவக் கோட்பாடு சைவசித்தாந்தம் ஆகும்.

2. (i) திருக்கேதீச்சர இறைவனின் பெயர் கேதீச்சரநாதன் ஆகும். அம்பாளின் பெயர் கௌரி அம்பாள் ஆகும். தீர்த்தத்தின் பெயர் பாலாவி ஆகும். தேவாரப் பதிகங்கள் பாடிய நாயன்மார்கள் திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகும்.

(ii) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கேதீச்சரத்தைத் தேன்பொந்து எனக் கூறியதன் நோக்கம் - சைவர்கள் மத்தியில் விழிப்பை ஏற்படுத்தவும், ஆலயத்தை மீண்டும் புனரமைக்கவும், தேவாரம் பாடப்பெற்ற திருத்தலத்தைப் புதுப்பொலிவு பெறச்செய்து சைவமக்கள் சென்று வழிபாடு செய்வதற்கு வழி வகுத்தது.

(iii) கேதீச்சரம் கேதுவால் வழிபட்டதாகப் புராண வரலாறுகள் கூறும். தட்சணகைலாய மான்மியம் என்ற நூலும், ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் பாடிய தேவாரப் பதிகங்களும் கேதீச்சர ஆலயத் தொன்மைச் சிறப்பு பற்றிக் கூறும். மகாவம்சம், தடா வம்சம், யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய நூல்களிலும், கேதீச்சர ஆலயத்தொன்மை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சோழர்களின் ஆட்சிக்காலத்தில் ராஜராஜேஸ்வரமகாதேவன் கோயில் எனக் கேதீச்சரம் சிறப்பிக்கப்பட்டது.

(iv) இலங்கையில் காணப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஈச்சரங்கள் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், முன்னேச்சரம், நகுலேஸ்வரம், ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீச்சரம் என்பனவாகும்.

3. (i) மும்மலங்கள் ஆணவம், கன்மம், மாயை என்பனவாகும். மூவகை ஆன்மாக்கள் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்பனவாகும்.

(ii) சமயதீட்சை பெற்றவர்கள் திரிபுண்டரமாகத் திருநீற்றைத் தரிக்க வேண்டும். திரிபுண்டரம் தரிக்கத் தக்க தானங்கள் சிரம், நெற்றி, மார்பு, தொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுக்கள் இரண்டு, விலாப்புறங்கள் இரண்டு, முதுகு, கழுத்து எனும் பதினாறுமாம். திரிபுண்டரம் என்பது மூன்று குறிகளாகத் திருநீறு தரிக்கும் முறை ஆகும். சமய தீட்சை பெறாதவர்கள் திருநீற்றைத் தரிக்கும் முறை உத்தூளனம் ஆகும். பட்டுப் பையிலேனும், சமபுடத்திலேனும், திருநீற்றை எடுத்து வைத்துக் கொண்டு வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு நிலத்திலே திருநீறு சிந்தா வண்ணம் அண்ணாந்து சிவ சிவ என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும், நெற்றியிலும், மார்பிலும் புயங்கைகளிலும் பரக்கப் பூசுதல் உத்தூளனம் எனப்படும்.

(iii) திருஞான சம்பந்தர் திருநீற்றின் பெருமை பற்றித் திருநீற்றுப் பதிகம் பாடினார். சம்பந்தர் திருநீற்றினால் பாண்டிய மன்னனின் கூனை நிமிர்த்தினார். கடுஞ் சுரத்தை நீக்கினார். திருநீற்றினால் திருநாவுக்கரசரின் சூலை நோய் நீங்கியது.

(iv) சமய தீட்சை பெறுவதற்குப் பல காரணங்கள் உண்டு. சமய தீட்சை பெற்ற பின்னரே சைவசமயி என ஒருவன் அழைக்கப்படுவான். சமய தீட்சை பெற்றவர்கள் ஒழுக்க சீலராய், பண்பும் ஆசாரமும், இறைபக்தியும் கொண்டவராய் வாழ வழியேற்படும். இயமம், நியமங்களைப் பேணலாம். வாழ்க்கையில் ஓர் ஒழுங்கு, கட்டுப்பாடு, நல்ல சிந்தனை, நல்ல பேச்சு, நற்செயல்கள், நல்லோருடன் சேர்க்கை என்பன இடம்பெற ஏதுவாகும். பஞ்சாட்சர செபம், தியானம், அனுட்டானம், சந்தியா வந்தனம், இறைவழிபாடு என்பவற்றை விதிப்படி செய்ய இயலுவதற்காகவும், சமயதீட்சை பெறவேண்டும்.

4. (i) சமயங்கள் ஆறு, இறைவன் ஒருவனே. இந்த ஆறு சமயங்களும் ஒத்தன எனத் திரு மந்திரப் பாடலடிகள் வலியுறுத்திக் கூறும்.

(ii)

| வைதிகசமயங்கள் | முழுமுதற்கடவுள |
|---|---|
| சைவம் | சிவபெருமான் |
| வைணவம் | விஷ்ணு |
| சாக்தம் | சக்தி |
| கௌமாரம் | முருகன் |
| காணபத்தியம் | கணபதி |
| சௌரம் | சூரியன் |

(iii) வைதிகசமயம் என்பது வேதங்களைப் பிரமாணங்களாக ஏற்றுக் கொள்ளும் சமயம் ஆகும். சண்மதப் பிரதித்தாபகர் எனப்படுபவர் ஆதிசங்கரர் ஆவார்.

(iv) காணபத்திய சமயத்தின் முழுமுதற் கடவுளின் பெயர் கணபதி (விநாயகர்) ஆகும். விநாயகரின் சிறப்புக்கள் இடையூறுகளை நீக்குபவர், முதல் வணக்கத்துக்குரியவர், எளிவந்த தன்மையர், ஓங்கார வடிவினர், சித்தியையும் புத்தியையும் தருபவர், பிள்ளையார் சுழி முதலில் இடப்பட்டு எக்காரியத்தையும் தொடங்குவர், ஞானமுதல்வன், தனக்குமேலே வேறொரு தலைவர் இல்லாதவர் விநாயகர் ஆவார்.

விநாயகரை வழிபடும் முறை :- சிரசில் குட்டிக் கும்பிடுவர். தோப்புக் கரணம் போடு வர். மூன்று முறை வலம் வருவர். விநாயகருடன் தொடர்புடைய புராண வரலாற்றுக் கதை கயமுகன் சங்காரம் ஆகும். விகடசக்கர விநாயகர் என்ற பெயர் ஏற்பட்ட கதை ஆகும். தக்கனது யாகத்தை அழித்த வீரபத்திரர் மீது திருமால் எறிந்த சக்கரப்படையை வீரபத்திரரின் தலை மாலையிலுள்ள வெண்டலை ஒன்று கௌவிக் கொண்டது. அதைப் பெறுவதற்குத் திருமால் விநாயகரை வேண்ட, அவர் திருமாலை விகடக் கூத்து ஆட்டுவித்தார். இதைக் கண்ட வெண்டலை சிரிக்கச் சக்கரம் கீழே விழுந்தது. திருமால் சக்கரத்தைப் பெற்றுக் கொண்டார். திருமாலை விகடக் கூத்து ஆடவைத்துச் சக்கரத்தைப் பெற்றுக் கொடுத்தமையால் விகட சக்கர விநாயகன் என்னும் பெயர் உண்டானது என்பது புராணக் கதை.

5. (i) மாசிலா மரபில் வந்த வள்ளல் நம்பியாரூரர் எனப்படும் சுந்தரமூர்த்தி நாயனார். குற்றமற்ற சிவவேதியர்கள் வேறோர் வேதியருக்கு அடிமையாவதில்லை. அடிமையாக்கப் படுவதுமில்லை.

(ii) வேறோர் அந்தணர்க்கு அடிமையாதல் என்ற வார்த்தையை முதிய வேதியர் கூறியதைக் கேட்டு நம்பியாரூரர் இவ்வாறு வினாவினார்.

(iii) பெரிய புராணம் என்ற நூலை இயற்றியவர் சேக்கிழார். பெரியபுராணம் அன்பால் நிறைந்த அமுதசுரபி ஆகும். சைவநாயன்மார்களின் வரலாற்றுச் சிறப்புக்களைக் கூறும் நூலாகும். வரலாற்று அடித்தளம் உள்ள நூலாகும். சோழர் காலத்துச் சமய நிலைமை, சமூக நிலைமை, மொழி நிலைமை பற்றிக் கூறும் நூலாகும். சாதி, குலம், பிறப்பு, செய்தொழில், செல்வம், ஆண், பெண் வேறுபாடுகளைப் பாராட்டாத நூலாகும். தொண்டர் குலமே தொழுதகுகுலம் என வலியுறுத்தும் நூலாகும். சைவ சித்தாந்தத்தைத் தழுவியது. பக்திச் சுவை நிறைந்தது. பஞ்சபுராண வரிசையில் இறுதியாக ஓதப்படும்.

(iv) சைவநாயன்மார்களை குருபூசை செய்து நினைவு கூரலாம். மேலும் பெரிய புராண படனம் நிகழ்த்தலாம். சைவநெறிப் பாடநூல்களில் அவர்களின் வரலாறுகளை இடம்பெறச் செய்தல் வேண்டும். நாயன்மார்கள் காட்டிய வழியில் வாழலாம்.

6. (i) ஆணவ இருளுக்கும் பூதஇருளுக்கும் இடையேயுள்ள ஒத்த தன்மை மற்றைய பொருள் களைக் காட்டாமை ஆகும். வேறுபாடு பூத இருள் கண்ணுக்குத் தோன்றும், ஆனால் ஆணவ இருள் தன்னைப் பிறருக்குக்காட்டாது.

(ii) உயிர்களுக்கு ஆணவம் இழைக்கும் தீமைகள் பல ஆகும். உயிரின் அறிவை மறைப்பது ஆணவம், அறியாமையை ஏற்படுத்துவது ஆணவம். உயிரை மறைத்திருப்பதோடு தன்னை உயிர் காணவொட்டாமலும், மறைத்துக்கொள்ளும். "நான்", "எனது" என்ற அகந்தை, மமதை என்பவற்றை உண்டாக்கும். செருக்கு கர்வம் என்பவற்றை உண்டாக் கும். உயிர்களின் பிறவித் துன்பத்திற்குக் காரணமாக அமைவதும் ஆணவமே.

(iii) ஒருவர் ஆணவ வயப்பட்டிருத்தலை அவரின் செயல்கள் பேச்சுக்கள் என்பவற்றிலிருந்து செருக்கு, கர்வம் உடையவராயும், கோபம், பகைமை உணர்ச்சி உடையோராயும் இருத்தல் வேண்டும். வன்முறைகள், வன்செயல்களில் ஈடுபடுதல், அடங்காமை, பிறந்து துன்பங்களை அனுபவித்தல், அறியாமையில் மூழ்கியிருத்தல், ஆசை கொள்ளுதல், பிறப்பு உடையோராதல் என்பவற்றிலிருந்து ஒருவர் ஆணவ வயப்பட்டிருத்தலை அறிந்து கொள்ள்லாம்.

(iv) ஆணவம் முதலிய மலங்களின் பிடியில் இருந்து உயிர் தன்னை விடுவிப்பதற்குப் பின்பற்றக்கூடிய நான்கு மார்க்கங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை ஆகும்.

சரியை நெறியைத் தாச மார்க்கம் எனவும் அழைப்பர். சரியைத் தொண்டுகள் கோயில் தொண்டுகளாகும். கோயிலைக் கூட்டிச் சுத்தம் செய்தல், மெழுகுதல், பூ எடுத்தல், பூ மாலை தொடுத்தல், சிவபெருமானைப் புகழ்ந்து பாடுதல், கோயிலில் விளக்கு ஏற்றுதல், நந்தவனம் உண்டு பண்ணுதல், சிவனடியாரைக் கண்டால்

அவர்களுக்கு வேண்டிய பணிவிடை செய்தல் என்பன சரியைத் தொண்டுகள் ஆகும். இத்தொண்டு செய்வோர் சிவனுடைய உலகத்தில் இருத்தலாகிய சாலோக முத்தியைப் பெறுவர். அப்பர் சுவாமிகள் சரியைத் தொண்டுகளைப் புரிந்து உழவாரப்படையாளி எனச் சிறப்பிக்கப்பட்டார்.

7. (i) கோயில் என்பதன் பொருள் இறைவன் உறையும் இடமாகும். கோயிலுக்கும் சிவாகமங்களுக்கும் இடையிலான தொடர்பு - ஆலயங்களை அமைத்தல், நித்திய நைமித்தியப் பூசைகள், கிரியைகள் என்பன நிகழ்த்துதல், கும்பாபிடேகம் என்பன சிவாகமங்கள் கூறும் விதிப்படி செய்யப்படும்.

(ii) நித்திய பூசை ஆலயங்களில் நடைபெறும் ஆறுகாலப் பூசைகளைக் குறிக்கும். நைமித்திய கிரியைகள் - வெள்ளிக் கிழமை, விசேட பூசை, திருக்கார்த்திகை, மகா சிவராத்திரி, மகோற்சவம், கும்பாபிடேகம் என்பவற்றைக் குறிக்கும்.

(iii)

| திருவிழா | ஐந்தொழில் |
|---|---|
| கொடியேற்றம் | படைத்தல். |
| வாகனத் திருவிழா | காத்தல். |
| தேர்த்திருவிழா | அழித்தல். |
| மௌனோற்சவம் | மறைத்தல். |
| தீர்த்தம் | அருளல். |

(iv) மகோற்சவ காலங்களில் சைவமக்கள் மேற்கொள்ளவேண்டிய சைவ ஒழுக்க சீலங்கள் அகத்தூய்மை பேணல், உண்மை பேசுதல், நல்ல எண்ணங்களை எண்ணுதல், இறை சிந்தனை, இரக்கம், கருணை, அன்பு என்பவற்றை உடையராயிருத்தல் வேண்டும். திருமுறை பாராயணம், இறைவன் புகழ் பேசுதல், பாடுதல் ஆகும். புறத்தூய்மை பேணல், நீராடிச் சுத்தமாயிருத்தல், தூய்மையான உடையணிதல், வீடு, வளவுகள், சுற்றுப்புறம் என்பவற்றைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். சேவை செய்தல் - அன்னதானம், சிரமதானம், கோயிற் தொண்டுகள் நலிந்தோர்க்கு உதவுதல், இறை பணி நிற்றல், தான தருமங்கள் செய்தல் என்பவை ஆகும். புலால் உண்ணாமை, விலக்கப்பட்ட செயல்களில் ஈடுபடாமை என்பன சைவ ஒழுக்க சீலங்கள் ஆகும்.

8. தேவாரம், பொழிப்புரை விடைகள் பாடப்புத்தகத்தில் நேரடியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.
சந்தர்ப்பம் :-

| | |
|---|---|
| (அ) மாதர்ப் பிறை :- | அப்பர் திருவையாற்றில் திருக் கைலாயக்காட்சியைக் கண்டபோது பாடியது. |
| (ஆ) என்ன புண்ணியம் :- | சம்பந்தர் திருவலஞ்சுழித் தலத்தில் பாடியது. |
| (இ) அண்ணலார் தமக் களித்த :- | சேக்கிழார் சம்பந்தர் கண்ட தில்லைக் காட்சியைப் பெரிய புராணத்தில் பாடினார். |
| (ஈ) விழிக்குத் துணை :- | அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில் பாடியது ஆகும். |
| (உ) பண்ணும் பரதமும் :- | குமரகுருபரர் சகலகலாவல்லி மாலையில் பாடியது. |

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1999 டிசம்பர்

# சைவ சமயம் I

1. சித்தியையும், புத்தியையும் சக்திகளாகக் கொண்ட கடவுள்
   (1) விநாயகர் (2) பிரம்மா (3) விஷ்ணு (4) முருகன்

2. இந்துமதத்திற்கு ஆதியில் வழங்கப்பெற்றிருந்த பெயர்,
   (1) இந்து தர்மம் (2) சனாதான தர்மம்
   (3) வைதிக தர்மம் (4) வேதாந்தம்

3. சைவநெறியின் பிரதான குறிக்கோள்களுள் ஒன்று.
   (1) பிறசமயங்களை எதிர்த்தல் (2) சாதி, வருண வேறுபாடுகளை வளர்த்தல்
   (3) எவ்வுயிர்க்கும் அன்பு செய்தல் (4) துறவு பூணும் படி வற்புறுத்தல்

4. சைவசித்தாந்தம் கூறும் மூன்று மெய்ப்பொருள்கள்
   (1) ஆணவம், கன்மம், மாயை (2) மனம், புத்தி, சித்தம்
   (3) விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் (4) பதி, பசு, பாசம்

5. திருப்புகழ் பாடியவர்
   (1) திருநாவுக்கரசர் (2) அபிராமிப்பட்டர்
   (3) குமரகுருபரர் (4) அருணகிரிநாதர்

6. திருப்புன்கூர்த் தலத்தில் நிகழ்ந்த அற்புதம்,
   (1) சம்பந்தரும் நாவுக்கரசரும் சிவபெருமானிடம் படிக்காசு பெற்றமை.
   (2) பாம்புதீண்டி இறந்த மூத்த திருநாவுக்கரசு என்ற பிராமணப்பிள்ளையை உயிர்ப்பித்தமை.
   (3) மூலத்தானத்துக்குச் சிவலிங்கப் பெருமானை நந்தனார் தரிசனம் செய்வதற்காக நந்தி விலகியிருந்தமை.
   (4) நம்பியாண்டார் நம்பி படைத்த அமுதம் முழுவதையும் பிள்ளையார் உண்டமை.

7. "வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி" இங்கு வன்றொண்டர் என்று குறிப்பிடப்படுபவர்
   (1) திருஞானசம்பந்தர் (2) சுந்தரமூர்த்தி
   (3) திருநாவுக்கரசர் (4) கண்ணப்பர்

8. சைவசமயத்தவர் யாவரும் கட்டாயமாகப் பெற்றுக்கொள்ள வேண்டியது
   (1) சமயதீட்சை (2) விஷேட தீட்சை
   (3) நிர்வாண தீட்சை (4) ஆசாரிய அபிடேகம்

9. நான்கு வகை முத்தி நிலைகள்
   (1) அறம், பொருள், இன்பம், வீடு
   (2) தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம்
   (3) சரியை, கிரியை, யோகம், ஞானம்
   (4) சாலோபம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்

10. சைவசமய வழிபாட்டு முறைகள், திருக்கோயிலமைப்பு, ஆலயக்கிரியைகள் என்பவற்றை விளக்கும் பிரமாண நூல்
    (1) வேதம் (2) ஆகமம் (3) இதிகாசம் (4) புராணம்

11. துர்க்கை, இலக்குமி, சரசுவதி ஆகிய தெய்வங்களைப் போற்றி வழிபடுதற்பொருட்டு எடுக்கப்படும் விழா
    (1) சிவராத்திரி (2) ஆடிப்பூரம்
    (3) நவராத்திரி (4) பங்குனி உத்தரம்

12. குரு இலிங்க சங்கம வழிபாடு என்பதில் சங்கமம் என்பதால் குறிப்பிடப்படுபவர்கள்
    (1) சிவனடியார்கள் (2) புலவர்கள்
    (3) பிராமணர்கள் (4) தேவர்கள்

13. இறைவனின் ஐந்தொழில்களைக் குறிப்பதாக அமைவது
(1) நித்திய பூசை (2) மகோற்சவம்
(3) கும்பாபிஷேகம் (4) இரதோற்சவம்

14. ஒரு சைவசமயியிடம் இருக்கவேண்டிய அதிசிறந்த பண்பு,
(1) தனது நலனுக்காக மாத்திரம் இறைவனைப் பிரார்த்தித்தல்
(2) தனது நலனுக்கும் தனது குடும்பத்தவர் நலனுக்கும் மாத்திரம் இறைவனைப் பிரார்த்தித்தல்
(3) தனது பகைவர்கள் நலனுடன் இருக்கக்கூடாது என இறைவனைப் பிரார்த்தித்தல்
(4) உலகில் வாழும் எல்லோரினதும் நலனுக்காக இறைவனைப் பிரார்த்தித்தல்

15. கிராமியத் தெய்வ வழிபாட்டு முறைகளில் மிகுதியாகக் காணப்படுவது
(1) பூசை மற்றும் கிரியைகளை அந்தணர்கள் நடத்துதல்
(2) அந்தணரல்லாதோர் வாயைத் துணியால் கட்டிக் கொண்டு பூசை மற்றும் கிரியைகளை நடத்துதல்
(3) பொதுமக்கள் நேரடியாகப் பொங்கல்,மடை, படையல் என்பவற்றைச் செய்து வழிபடுதல்
(4) மகோற்சவம், கும்பாபிஷேகம் என்பவற்றை நியமம் தவறாது நடத்துதல்

16. இலங்கையைச் “சிவ பூமி” எனப் போற்றியவர்,
(1) திருஞானசம்பந்தர் (2) திருமூலர்
(3) சுந்தரர் (4) நாவலர் பெருமான்

17. தீபாவளி தினத்தன்று நடத்தப்பெற்றது
(1) நரகாசுர சங்காரம் (2) யமசங்காரம்
(3) சூரசங்காரம் (4) சுயமுகாசுரசங்காரம்

18. ஆடி அமாவாசைத் தினத்தன்று பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கு இலங்கையில் சிறப்புப்பெற்ற இரண்டு தலங்கள்,
(1) முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம்
(2) திருக்கோணேஸ்வரம், பொன்னம்பலவாணேஸ்வரம்
(3) கொக்கட்டிச் சோலை தான்தோன்றியீஸ்வரம், ஒட்டுசுட்டான் தான்தோன்றியீஸ்வரம்
(4) கீரிமலை, நகுலேஸ்வரம், அமிர்தகழி மாமாங்கேஸ்வரம்

19. முருகன் ஆலயங்களின் மூலத்தானத்தில் வேல் விளங்குவது போன்று, விஷ்ணு ஆலயங்களில் விளங்குவது,
(1) சூலம் (2) சிவலிங்கம் (3) மழு (4) சக்கரம்

20. இராமாயணம், மகாபாரதம் என்பன,
(1) புராணங்கள் (2) வேதங்கள் (3) இதிகாசங்கள் (4) உபநிடதங்கள்

21. யோகர் சுவாமியின் குருவாக அமைந்தவர்
(1) யாழ்ப்பாணம் கடையிற்சுவாமிகள் (2) முத்துலிங்க சுவாமி
(3) நவநாதச் சித்தர் (4) செல்லப்பா சுவாமி

22. சிவ நிந்தை புரிந்த தக்கனின் வேள்வியைச் சிதைத்தவர்
(1) வைரவர் (2) முருகன் (3) வீரபத்திரர் (4) விநாயகர்

23. பின்வருவனவற்றுள் சிவபெருமானைக் குறிக்கும் தொடர்
(1) “விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்”
(2) “திகட சக்கரச் செம்முகமைந்துளான்”
(3) “சகட சக்கரத் தாமரை நாயகன்”
(4) சுடர்நெடுந் தனிவேலண்ணல்

24. அடியார் ஒருவர் தன்னை மகனாகவும் இறைவனைத் தந்தையாகவும் பாவித்து அன்பு செய்யும் முறை இடம் பெறுவது
(1) சரியை நெறியில் (2) கிரியை நெறியில்
(3) யோக நெறியில் (4) ஞான நெறியில்

25. சைவநெறியில் நின்ற சிவனடியார்கள்
(1) தாமுண்டு தம்வேலையுண்டு என்று வாழ்ந்தவர்கள்.
(2) தமது ஈடேற்றம் ஒன்றையே குறியாகக் கொண்டிருந்தனர்.
(3) மக்கள் சேவையையே இறைவன் சேவையாகக் கருதி வாழ்ந்தனர்.
(4) இரந்துண்டு வாழ்ந்தனர்.

26. சுந்தரருக்குப் பெற்றோர் இட்ட பெயர்,
(1) ஆலாலசுந்தரர் (2) சடையனார் (3) மருணீக்கியர் (4) நம்பியாரூரர்

27. சைவத்திற்கு இருகண்களாகத் திகழ்பவை,
(1) பெரியபுராணமும், கந்தபுராணமும் (2) கம்பராமாயணமும்,சிலப்பதிகாரமும்
(3) புறநானூறும், கலித்தொகையும் (4) திருக்குறளும். திருப்பாவையும்

28. சைவசமயிகள், இறைவனை அடைவதற்கு சைவசித்தாந்தத்தின்படி,
(1) காட்டிற்குச் சென்று தவஞ்செய்ய வேண்டும்.
(2) சாத்திர தோத்திர நூல்களைக் கற்க வேண்டும்.
(3) மும்மலங்களினின்றும் நீக்கம் பெற வேண்டும்.
(4) துறவறத்தை மேற்கொள்ளவேண்டும்.

29. ஆன்மாவின் அறிவை மறைத்து நிற்பது,
(1) ஆணவம் (2) கன்மம் (3) மாயை (4) பாசம்

30. மாணவர் மிக முக்கியமாகத் தியாகம் பண்ண வேண்டியது,
(1) பணத்தை (2) உயிரை (3) தீயபழக்கத்தை (4) உணவை

31. மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோரைப் போற்றுதல், மதித்தல், மரியாதை செய்தல் என்பன,
(1) பயனற்ற செயல்கள் (2) சிறந்த சைவ சமயப் பண்பாடுகள்
(3) நவீனகாலத்திற்கு ஒவ்வாதன (4) பிற்போக்கானவை

32. கன்னிப்பெண்கள் நல்ல கணவனை அடையவும், நாட்டில் மழை பொழிந்து வளம் பெருகவும் சிவனை நினைந்து அனுட்டிக்கும் விரதம்
(1) திருக்கார்த்திகை (2) திருவெம்பாவை
(3) சிவராத்திரி (4) நவராத்திரி

33. சைவசித்தாந்தம் கடவுளுக்கு இரண்டு நிலைகள் உண்டு என்று கூறும், அவையாவன,
(1) அருவம், அருவுருவம் (2) பரமசிவம், பரப்பிரம்மம்
(3) சிவம் , சக்தி (4) சொரூபலக்கணம், தடத்தலக்கணம்

34. இறைவழிபாடு செய்து அருளைப் பெறுவதற்கு மிக உகந்த காலம்
(1) நோயுற்ற காலம் (2) இளமை தொட்டு மரணபரியந்தம்
(3) வயோதிபப் பருவம் (4) பிரச்சினைகள் ஏற்படும் காலம்

35. கந்தபுராணம் உணர்த்தும் முக்கிய கருத்து,
(1) சூரபத்மன் நற்குணவியல்புகளைக் கொண்டவன்.
(2) அசுரர்களும் தேவர்களும் கடவுளில் நம்பிக்கையற்றவர்கள்.
(3) தர்மம் வெல்லும் அதர்மம் தோற்கும்.
(4) முருகன் வேறு சிவன் வேறு.

36. சைவ சமய நெறிப்படி நோக்கினால், இன்றைய பல்வேறு பிரச்சினைகளுக்கும் மூலகாரணம்,
(1) விஞ்ஞான தொழினுட்பங்களின் அதிதீவிர விருத்தி
(2) மக்கட் தொகைப் பெருக்கம்
(3) மனிதர்களிடையே வளர்ந்துவரும் நாத்திகப் பண்பு
(4) "நான்" எனும் அகந்தையும் "எனது" என்னும் "மமதை" யும் மனிதரில் பெருவளர்ச்சி கண்டுள்ளமை

37. சிவஞானபோதம் என்னும் நூலை இயற்றியவர்
(1) மெய்கண்டார் (2) மறைஞானசம்பந்தர்
(3) அருணந்தி சிவாசாரியார் (4) உமாபதி சிவாசாரியார்

38. ஆஞ்சநேயர் வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புடைய மதம்
(1) வைணவம் (2) சாக்தம் (3) காணபத்தியம் (4) கௌமாரம்

39. "மண்ணினிற்பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்" இதிற் கூறப்படும் சைவப்பண்பு,
(1) அன்பு (2) அஹிம்சை (3) உண்மை (4) விருந்தோம்பல்

40. சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய இரு பெரியார்களுக்கு இவ்வாண்டில் நூற்றாண்டு விழா எடுக்கப்படுகிறது. அவ்விரு பெரியார்களின் பெயர்கள்
(1) நாவலர், விபுலானந்தர்
(2) சி.வை. தாமோதரம்பிள்ளை, சிவபாதசுந்தரம்
(3) ஞானப்பிரகாசசுவாமிகள், யோகர் சுவாமிகள்
(4) பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1999 டிசம்பர்

# சைவ சமயம் II

1. "உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்" (பெரிய புராணம்)

(i) இறைவனின் மூவகைத் திருமேனிகளும் யாவை?
(ii) "அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்" எனும் தொடர் குறிக்கும் திருவுருவம் எது? தில்லைம்பலத்திற்கு வழங்கும் இன்னுமொரு பெயர் தருக.
(iii) ஊன நடனம், ஞான நடனம் ஆகியவற்றிற்கிடையேயுள்ள வேறுபாட்டினை எடுத்துக் கூறுக.
(iv) "சைவசமயமே சாலவும் தொன்மையானது" மூன்று ஆதாரங்கள் தருக.

2. "ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி" (சைவசமயாசாரியார் துதி)

(i) திருவாதவூரர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்? அவர் அப்பெயர் பெறக் காரணம் யாது?
(ii) "ஆவணி மூலம், ஆனி மகம் ஆகிய நாள்களில் இடம் பெற்ற சமய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் எவை எனக் கூறுக.
(iii) பஞ்ச தோத்திரங்களின் (பஞ்ச புராணங்களின்) பெயர்களை அவை ஓதப்படும் ஒழுங்குமுறையில் எழுதுக.
(iv) திருவாசகத்தின் சிறப்புப்பற்றிச் சுருக்கமாக எழுதுக.

3. "தனந்தரும் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே" (அபிராமியந்தாதி)

(i) அபிராமியந்தாதி யாரால் இயற்றப் பெற்றது?
இலங்கையின் புராதன அம்மன் ஆலயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(ii) அபிராமி அம்பாளை மெய்யன்போடு வழிபாடு செய்து வரும் அடியார்கள் அடையும் இம்மை மறுமை இன்பங்கள் எவை என மேலே தரப்பட்டுள்ள பாடல் கூறுகிறது?

(iii) நவராத்திரி விழாவில் சிறப்பாகப் போற்றி வழிபாடு செய்யப்படும் மூன்று தெய்வங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. அவை ஒவ்வொன்றும் எவ்வெவற்றிற்கு அதிபதி என்பதையும் கூறுக.
(iv) உங்கள் ஊரிலுள்ள அல்லது நீங்கள் தரிசித்த அம்மன் ஆலயத்தின் தலச்சிறப்பு; அங்கு நடைபெறும் மகோற்சவம் அல்லது அலங்கார உற்சவம் மற்றும் பொங்கல்,மடை என்பவற்றை உள்ளடக்கியதாக ஒரு சிறுகுறிப்புரை எழுதுக.

4. "போயின வகந்தை போதம் புகுந்தன வலத்த தான
துாயதோர் தோளும் கண்ணும் துடித்தன புவனமெங்கும்
மேவின பொருள்கண் முற்றும் வெளிப்படுகின்ற விண்ணோர்
நாயக வடிவங் கண்டேனற்றவப் பயனீ தன்றோ" (கந்தபுராணம்)

(i) கந்தபுராணத்தை இயற்றியவர் யார்? கந்தபுராணம் உணர்த்தும் அறக்கருத்துக்கள் இரண்டு எழுதுக.
(ii) சூரபன்மன் முருகப் பெருமானின் திருப்பெருவடிவத்தைத் தரிசித்ததும் அவனிடம் புகுந்து கொண்டது யாது? அவனை விட்டு நீங்கியது எது?

(iii) சூரபன்மன் சேவலும் மயிலுமாக உருப்பெற்ற நிகழ்வின் பின்னணியைச் சுருக்கி எழுதுக.
(iv) மேலே தரப்பட்டுள்ள பாடலின் சாராம்சத்தை எழுதுக.

5. "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினால் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்." (பெரிய புராணம்)

(i) சிவனடியாரின் இலட்சணங்கள் இரண்டு கூறுக. வீடு என்பதன் பொருள் யாது?
(ii) அடியார்கள் இறைவனைக் கும்பிடுவதும் உலகின் நலனுக்காகவே என்பதைத் திருஞானசம்பந்தர் வரலாற்றிலிருந்து ஒரு சம்பவத்தை எடுத்துக் காட்டி விளக்குக.
(iii) "ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்" என்பதற்கு நாவுக்கரசர் வரலாற்றில் நிகழ்ந்த சம்பவம் ஒன்றை எடுத்துக்காட்டி விளக்குக.
(iv) மாகேசுர பூசை என்பதால் நீர் விளங்கிக் கொள்வது என்ன?

6. "விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து" (திருவருட்பயன்)

(i) திருவருட்பயன் ஆசிரியர் யார்?
(ii) மேற்படி பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு மலங்களின் பெயர்களை எழுதுக.
(iii) கடவுள் மாயையினின்றும் எவற்றை ஆன்மாக்களுக்குப் படைத்து அருளுகின்றார்? அவற்றைப் படைத்து ஆன்மாக்களுக்குக் கொடுப்பதன் நோக்கம் யாது?
(iv) பசுநல்வினைகள் மூன்றும் பசுத்தீவினைகள் மூன்றும் எழுதுக.

7 "வாழ்க்கையோடு இணைந்ததுதான் சமயம் என்பதைப் புலப்படுத்துவது போன்று அமைந்துள்ளன எங்கள் விரதங்களும் விழாக்களும்"

(i) விரதமாவது யாது? உபவாசம் என்பதன் பொருள் என்ன?
(ii) விரதநாளில் நாம் செய்யத் தகுந்த இரண்டு நற்காரியங்களைக் குறிப்பிடுக.
(iii) சிவ விரதம் ஒன்றைக் குறிப்பிட்டு, அதனை எவ்வாறு அனுட்டிக்கவேண்டுமென்பதைச் சுருக்கமாக எழுதுக.
(iv) சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களின் போது இடம்பெறும் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு அவை எவ்வாறு சமூக உறவைப் பலப்படுத்துகின்றன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

8. (அ) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதவும்.
(ஆ) அவற்றைப் பாடியோர் யார் என்றும் அவை எச்சந்தர்ப்பங்களிற் பாடப்பட்டன என்றும் கூறுக.
(இ) அவற்றின் பொழிப்புரையினை எழுதுக.

(i) "பண்ணும்பத மேழும்........................"
(ii) "தாயினும் நல்ல தலைவரென்..........."
(iii) "சீருந் திருவும் பொலியச் ..............."
(iv) "ஐந்துபே ரறிவும்..............................."
(v) "மூவிரு முகங்கள் ........................."

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1999 டிசெம்பர்

# சைவசமயம் I விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 3 | 21. | 4 | 31. | 2 |
| 02. | 2 | 12. | 1 | 22. | 3 | 32. | 2 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 2 | 33. | 4 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 2 | 34. | 2 |
| 05. | 4 | 15. | 3 | 25. | 3 | 35. | 3 |
| 06. | 3 | 16. | 2 | 26. | 4 | 36. | 4 |
| 07. | 2 | 17 | 1 | 27. | 1 | 37. | 1 |
| 08. | 1 | 18 | 4 | 28. | 3 | 38. | 1 |
| 09. | 4 | 19. | 4 | 29. | 1 | 39. | 4 |
| 10. | 2 | 20 | 3 | 30. | 3 | 40. | 4 |

# சைவசமயம் II 1999 விடைகள்

1. (i) அருவம், உருவம், அருவுருவம்

(ii) திருவுருவம் - நடராசப் பெருமான், இன்னுமொரு பெயர் - சிதம்பரம் அல்லது கோயில்

(iii) ஊன நடனம் - தில்லையம்பல ில் நமது ஊனக் கண்களுக்குப் புலப்பட ஆடுவது. ஈன நடனம் - எம் ுய வெளியில் ஞானக் கண்ணுக்குப் புலப்பட ஆடுவது.

(iv) உலகின் மிகத் தொன்மையான நாகரிகம் எனக் கொள்ளப்படும் சிந்துவெளி நாகரிக மக்கள் சிவவழிபாடு செய்தமைக்குச் சான்றாக அகழ்வாராய்ச்சிகள் வெளிப்படுத்திய இலச்சினைகளும் உருவச்சிலைகளும் அமைந்துள்ளன. யோகி போல அமர்ந்திருக்கும் கொம்புடைய கடவுள் உருவம், சிவலிங்க வடிவங்கள், தாய்த் தெய்வவழிபாடு அதாவது பெண் தெய்வத்தின் கருப்பையிலிருந்து செடி ஒன்று வளருவதாகக் காட்டப்பட்ட இலச்சினை, புனித நீராடல், மரங்களை வழிபடல், காளை மாட்டை வழிபடல், பாம்பு வழிபாடு,போன்ற சைவசமயத்தில் காணப்படும் அம்சங்கள் இருந்தன.

2. (i) மாணிக்கவாசகர் - திருவாதவூரில் பிறந்தமையால் ஏற்பட்டது.

(ii) ஆவணி மூலம் - சிவபெருமான் நரிகளைப் பரிகளாக்கி மதுரைக்குக் கொண்டு வந்தமை.

ஆனி மகம் - மாணிக்கவாசகர் குருபூசைத் தினம்

(iii) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம்

(iv) திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார். திருவாசகம் ஒரு தேன் ஆகும். மணிவாசகம், அன்பு வாசகம், பக்திப் பனுவல் எனப்படும். வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியதாகும்.

3. (i) அபிராமிப்பட்டர்

அம்மன் ஆலயங்கள் - நயினாதீவு நாகபூஷணி, திருகோணமலை பத்திரகாளி, மாத்தளை முத்துமாரி, வற்றாப்பளை கண்ணகி, உடப்பு திரௌபதை, நல்லூர் வீரமாகாளி.

(ii) செல்வம், கல்வி, சோர்வடையா உறுதியான மனம், தெய்வீகப் பொலிவு, கபடமனமில்லாத மனைவி, மக்கள் சுற்றம் நல்லனவெல்லாம் இம்மை மறுமை இன்பங்களாகும்.

(iii) 3 தெய்வங்கள் - துர்க்கை, இலக்குமி, சரசுவதி

| | | | |
|---|---|---|---|
| அதிபதிகள் - | துர்க்கை | - | வீரம் |
| | இலக்குமி | - | செல்வம் |
| | சரசுவதி | - | கல்வி |

(iv) நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் - ஆனி மாதப் பௌர்ணமியில் தீர்த்தோற்சவம் நடைபெறும். 15 நாட்கள் திருவிழா நடைபெறும். தேர்த்திருவிழா அற்புதமானது. தீர்த்தோற்சவத்தின் மறு நாள் இரவு நடைபெறும் தெப்பத்திருவிழாவும் அற்புதமானது. குழந்தை வரம் வேண்டி அன்னையின் சந்நிதியில் நேர்த்திக் கடன் வைத்துத் தம் எண்ணம் நிறைவேற்றுவர்.

4. (i) கச்சியப்ப சிவாச்சாரியார்.

அறக்கருத்துக்கள் - நன்றி மறத்தலால் வரும் கேடு, தெய்வநிந்தை புரிவோருடன் கூடிக் குலவுவதால் வரும் தீமை.

(ii) புகுந்தது - ஞானம் அல்லது தெளிந்த அறிவு நீங்கியது - அகந்தை அல்லது அகங்காரம்

(iii) சூரசங்காரத்தில் சூரபன்மன் அழிக்கப்படவில்லை.வேலாயுதம் - ஞானசக்தி - புகுந்து சேவலும் மயிலுமாகச் சூரபன்மனை மாற்றியது.

(iv) எனது அகங்காரம் அடங்கி விட்டது. எனக்கு ஞானம் பிறந்துள்ளது. வலப்புயமும் வலக்கண்ணும் துடித்தன. எல்லா அண்டங்களும் அவற்றிலுள்ள பொருள்கள் முழுதும் வெளிப்படுதற்கிடமாகிய இத் தேவ நாயகருடைய திருப்பெருவடிவத்தைக் காணப் பெற்றேன். இது நான் முன்பு செய்த தவத்தின் பயனன்றோ.

5. (i) நன்மையையும் தீமையையும் சமமாக நோக்குவர். விருப்பு வெறுப்பற்றவர். ஓட்டையும் செம்பொன்னையும் ஒப்பாக நோக்குவர். உலக மாந்தர் அனைவரதும் சேம நலனுக்காகவே இறைவனைப் பிரார்த்திப்பர். எல்லா உயிர்கள் மீதும் அன்பு பூண்டவர்கள். வீடு என்பதன் பொருள் முத்தி அல்லது பேரின்பம் அல்லது மோட்சம்.

(ii) திருவீழிமிழலையில் பஞ்சகாலத்தில் சிவனடியாருக்குத் திருவமுது ஊட்டுவதற்காகச் சிவபெருமானிடம் படிக்காசு பெற்றது, ஓடத்தைக் கரைசேர்த்தது, செங்குன்றூரில் அடியார்களின் குளிர்ச்சுரம் நீக்கியது போன்ற அற்புதங்களைப் புரிந்தார்.

(iii) நாவுக்கரசர் பூம்புகலூர்க் கோயிலில் உழவாரத் திருப்பணி புரிந்த போது, உழவாரம் நுழையும் இடமெல்லாம் பொன்னும் மணியும் பொலிய இறைவன் அருள் செய்தான். அப்போது நாவுக்கரசர் பருக்கைக் கற்களைத் தூக்கி வீசுவது போன்று பொன்னையும் மணியையும் உழவாரத்தினால் எடுத்துக் குளத்தில் எறிந்தார்.

(iv) அன்னதானம்

6. (i) உமாபதி சிவாசாரியார்

(ii) கன்மம், மாயை

(iii) படைக்கப்படுபவை - தனு, கரண, புவன, போகம்
நோக்கம் - ஆன்மாக்களை மலங்களிலிருந்து விடுவித்து முத்தியின்பம் பெறச் செய்தல்.

(iv) பசு நல்வினைகள் - ஏழைகள், ஊனமுற்றோருக்கு உதவுதல்,பெற்றோர் பெரியோர்,ஆசிரியர்களை மதித்தல், பேணுதல். பிற உயிர்கள் மீது அன்பாயிருத்தல், பசிப்பிணி தீர்த்தல், பணிவுடையன், இன்சொலனாதல், உண்மைபேசுதல்.
பசுத் தீவினைகள் - கொலை, களவு, பொய்யுரைத்தல், மது அருந்துதல், பிற உயிர்களை இம்சித்தல், சூதாடுதல், பிறர் மனை நோக்குதல், ஏமாற்றுதல், புறங்கூறல்.

7. (i) விரதம் - மனம் பொறிவழிப் போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விதிப்படி விசேடமாக வழிபடலாகும்.
உபவாசம் - உடனிருத்தல், இறைவனுடன் நெருங்கியிருத்தல், சிந்தித்தல்

(ii) வாயால் இறைவன் திருநாமங்களை உச்சரித்தல், மனத்தால் இறைவனைச் சிந்தித்தல், உடம்பால் இறைபணி செய்தல், தானதருமங்கள் செய்தல், உண்மை, அகிம்சை என்பவற்றைக் கடைப்பிடித்தல், திருக்கோயில் வழிபாடு, திருத்தொண்டுகள் செய்தல், பிறர் நலன் ஓம்புதல், விருந்தோம்புதல்.

(iii) (சிவராத்திரி, பிரதோசம், மார்கழித்திருவாதிரை)
மகா சிவராத்திரி மாசி மாதத்தில் தேய்பிறை பதினான்காம் நாள் வரும். நாள் முழுவதும் உணவை விடுத்து இரவு முழுவதும் கண் விழித்து முழு நேரத்தையுஞ் சிவ சிந்தனையிலும், சிவனடியார் கூட்டத்திலும், சிவகதை கேட்பதிலுங் கழிப்பது புண்ணியம் தரும். நள்ளிரவு காலம் இலிங்கோற்பவ காலமாகும். இக் காலத்தில் சிவதரிசனம் செய்ய வேண்டும்.

(iv) பெற்றோர், பெரியோர், மூத்தோர், ஆகியோரை வணங்குதல், மரியாதை செய்தல், கைவிசேடம் பெறல், விருந்தினர் வருகை, உறவினர் சுற்றத்தார் நண்பர்கள் ஆகியோர் வீட்டிற்குச் சென்று உறவாடல், சுதேச விளையாட்டுக்கள், நல்ல நாள் பார்த்துப் புதுக் கருமங்களில் ஈடுபடல் இதிலடங்கும்.
பகைமை, வெறுப்புணர்வு, கோபதாபங்களைப் போக்கி மனிதரிடையே நல்லுறவைப் புதுப்பிக்கின்றன. சமூகத்தில் அமைதி, சாந்தி, சமாதானம், ஐக்கியம், புரிந்துணர்வு என்பவற்றை வளர்க்கின்றன.

8. பாடல்கள், பொழிப்புரைகளுக்கான விடைகள் பாடப்புத்தகத்திற் கொடுக்கப்பட்டுள்ளன.

| | சந்தர்ப்பம் | (பாடல்) பாடியவர் | தலம் |
|---|---|---|---|
| 1. | பண்ணும் பதமேழும் | - சம்பந்தர் | திருவீழிமிழலை |
| 2. | தாயினும் நல்ல | - சம்பந்தர் | திருக்கோணமலை |
| 3. | சீருந்திருவும் | - சேந்தனார் | தில்லை அல்லது சிதம்பரம் |
| 4. | ஐந்து பேரறிவும் | - சேக்கிழார் | சுந்தரர் தில்லைக்காட்சி |
| 5. | மூவிரு முகங்கள் | - கச்சியப்பர் | நூல் - கந்தபுராணம் |

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1998 டிசெம்பர்

# சைவ சமயம் I

நேரம் : ஒரு மணித்தியாலம்

1. "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" எனப் போற்றப்படும் கடவுள்,
(1) பிள்ளையார். (2) முருகன். (3) சிவன். (4) பிரமா.

2. "மாதொரு பாகனார்" எனக் குறிப்பிடப்படுபவர்,
(1) கந்தன், (2) விஷ்ணு, (3) சிவபெருமான், (4) விநாயகர்,

3. மனிதன் மனிதத்தன்மைகள் பெற்று உலகில் வாழ்வாங்கு வாழ, வழி அமைத்துத்தருவது,
(1) விஞ்ஞானம். (2) பொருளியல். (3) தொழினுட்பவியல். (4) சமயம்.

4. சிவபெருமானின் ஐந்தொழில்களைக் குறிக்கும் திருவடிவம்,
(1) நடராஜ வடிவம். (2) சோமாஸ்கந்த வடிவம்.
(3) தட்சிணாமூர்த்தி வடிவம். (4) அர்த்தநாரீஸ்வர வடிவம்.

5. ஆணவம், கன்மம், மாயை என்பன,
(1) முப்பொருள்கள். (2) மும்மலங்கள்.
(3) மூவகை உயிர்கள். (4) மூவகைத் திருமேனிகள்.

6. காயத்திரி மந்திரம் செபித்துச் செய்யப்படும் வழிபாடு
(1) சூரிய வழிபாடு. (2) விநாயகர் வழிபாடு.
(3) முருக வழிபாடு. (4) வைரவர் வழிபாடு.

7. அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றில் 'வீடு' குறித்து நிற்பது,
(1) இல்லம். (2) முத்தி. (3) நரகம். (4) கன்மம்.

8. ஒருவனின் அகந்தை மமதை அற்ற தன்மையால் ஏற்படுவது,
(1) உத்தம குணம். (2) அதம குணம்.
(3) மிருக குணம். (4) தாமத குணம்.

9. திருநாவுக்கரசருக்கு மருணீக்கியார் என்னும் பெயர் சூட்டப்பட்டது
(1) சமணரால். (2) பெற்றோரால். (3) இறைவனால். (4) ஞானசம்பந்தரால்.

10 கடவுளுக்கும் அடியவர்களுக்கும் மற்றெல்லா உயிர்களுக்கும் தொண்டுகள் புரிந்து வாழும் நெறி,
(1) சரியை. (2) கிரியை. (3) யோகம். (4) ஞானம்.

11. இலங்கையில் பாலாவியின் கரைமேல் அமைந்துள்ள சிவத்தலம்,
(1) திருக்கேதீச்சரம். (2) திருக்கோணேச்சரம்.
(3) முன்னேச்சரம். (4) நகுலேச்சரம்.

12. கந்தபுராணத்தில் மறைபொருளாக அமைந்துள்ள சமயக்கொள்கை,
(1) வேதாந்தம். (2) சைவசித்தாந்தம்.
(3) சமரசசன்மார்க்கம். (4) ஏகான்ம வாதம்.

13. 'நைவேத்தியம்' என்பது இறைவனுக்கு
(1) மலர்தூவி அர்ச்சித்தல். (2) தீபங்கள் காட்டுதல்.
(3) அமுதுபடைத்தல். (4) நீரினால் அபிடேகஞ் செய்தல்.

14. சிவபெருமானிடமிருந்து பொற்றாளமும், முத்துப்பல்லக்கும், முத்துச்சின்னமும், முத்துக்குடையும், முத்துப் பந்தரும் "உலவாக்கிழியும்" படிக்காசும் பெற்றவர்,
(1) திருஞானசம்பந்தர். (2) திருநாவுக்கரசர்.
(3) சுந்தரர். (4) மாணிக்கவாசகர்.

15. கோயிற் திருவிழாக்களில் கொடியேற்றம் குறிப்பது, இறைவனின்,
(1) படைத்தல் தொழிலை. (2) காத்தல் தொழிலை.
(3) அழித்தல் தொழிலை. (4) அருளல் தொழிலை.

16. இறை வழிபாட்டினை,
(1) மகோற்சவ காலங்களில் செய்தலே அதிசிறப்புடையது.
(2) நேர்த்திக்கடன்களைத் தீர்ப்பதற்காகச் செய்தலே அதிசிறப்புடையது.
(3) காமியமாகச் செய்தலே அதிசிறப்புடையது.
(4) நிட்காமியமாகச் செய்தலே அதிசிறப்புடையது.

17. பிரமாவும் விஷ்ணுவும் சிவபிரானது அடிமுடிதேடிய கதை உணர்த்துவது,
(1) விஷ்ணுவே முழுமுதற் கடவுள் என்பதை.
(2) பிரமாவே முழுமுதற் கடவுள் என்பதை.
(3) இறைவன் எவருக்குமே காட்சியளிக்கமாட்டான் என்பதை.
(4) செருக்கும், கர்வமும் உள்ளவர்களால் இறைவனை அறியமுடியாது என்பதை.

18. மனிதரில் சாத்வீகம் (சத்துவகுணம்) மேலோங்கி இருக்க வேண்டும் எனப்படுகிறது. சாத்வீககுணம் என்பது
(1) சோம்பலும் சோர்வும் நிறைந்தது.
(2) கோபமும் வேகமும் நிரம்பியது.
(3) சாந்தமும் அமைதியும் கொண்டது.
(4) காமமும் மோகமும் உடையது.

19. மனிதராகிய எம்மிடம் இருக்கவேண்டிய நற்பண்பு,
(1) எந்தவழியிலாவது நாம் முன்னேறி விடவேண்டும் என்பது,
(2) பிறர் நலம் பேணுதலில் நாம் கண்ணுங்கருத்துமாய் இருக்க வேண்டும் என்பது,
(3) தேடிய செல்வத்தை எமக்கு மாத்திரம் அளவாகப் பயன்படுத்துதல் என்பது,
(4) எக்காலத்தும் எமது இலாபத்தையே கருதிச் செயற்பட வேண்டும் என்பது,

20. புராணங்களிலே கூறப்படுகின்ற தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையிலான போர்களின் முடிவு உணர்த்தும் உண்மை,
(1) தர்மம் வெல்லும் அதர்மம் அழியும்.
(2) அசுரர்கள் பராக்கிரமசாலிகள்.
(3) தேவர்கள் பலம்குன்றியவர்கள்.
(4) அதர்மத்தை வெல்லமுடியாது.

21. நாம் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்குச் சைவம் காட்டும் இலகுவான, மிகச் சிறந்த வழி,
(1) அறிவு வழி (2) யோக வழி (3) அன்பு வழி (4) போக வழி

22. திருப்படைக் கோயில்கள் அல்லது தேசத்துக் கோயில்கள் எனச் சிறப்புப் பெறும் ஆலயங்களுள் ஒன்றாய் விளங்குவது
(1) கதிர்காமம்.
(2) முன்னேஸ்வரம்.
(3) ஒட்டிசுட்டான் தான்தோன்றியீஸ்வரம்.
(4) கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றியீஸ்வரம்.

23. ஆலயத்தில் வீண்வார்த்தைபேசுதல், ஓடி விளையாடுதல், விக்கிரகங்களைத் தொடுதல் என்பன
(1) சமூக உறவை வளர்க்கின்றன.
(2) ஆலயத்திற்கு வருவோர் தொகையை அதிகரிக்கச் செய்கின்றன.
(3) விலக்கப்பட வேண்டியன.
(4) தவிர்க்கப்பட முடியாதன.

24. 'வேத சிரசு' என்று சிறப்பித்துக் கூறப்படுவது,
(1) உபநிடதம் (2) வேதம் (3) ஆகமம் (4) திருவாசகம்

25. மூவகை ஆன்மாக்களிலும் பொதுவாக உள்ள மலம்,
(1) பாசம் (2) ஆணவம் (3) கன்மம் (4) மாயை

26. மாணிக்கவாசக சுவாமிகள் திருவவதாரஞ் செய்த ஊர்,
(1) திருவாதவூர் (2) திருவாமூர் (3) திருநாவலூர் (4) திருவாரூர்

27. "பங்கயன் முதலோர் காணாப் பரமனேயாகுமென்றார்" இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பங்கயன் பரமன் என்போர் முறையே,
(1) பிரமனும் விஷ்ணுவும். (2) விஷ்ணுவும் முருகனும்.
(2) முருகனும் சிவனும். (4) பிரமனும் சிவனும்.

28. கந்தபுராணப் பாடலின்படி, முருகனின் திருப்பெருவடிவத்தைச் சூரன் கண்டபோது, முருகனை வணங்கித் துதிக்க வேண்டுமென சூரனின் மனம் விரும்பியபோதும், அவ்வாறு செய்யவிடாது அவனைத் தடுத்தது, அவனின்,
(1) செருக்கு (2) கோபம் (3) மானம் (4) விதி

29. சேக்கிழாரின் பெரியபுராணம்,
(1) சிவனுக்குத் தொண்டு செய்த அடியார்களின் அடிமைத்திறத்தை விரித்துக் கூறும்நூல்.
(2) விஷ்ணுவுக்குத் தொண்டு செய்த ஆழ்வார்களின் வரலாற்றைக் கூறும் நூல்.
(3) கந்தனின் கருணைத் திறத்தை விளம்பும் புராண நூல்.
(4) முடியுடைவேந்தரின் சமயப்பணிகளை எடுத்துக் கூறும் நூல்.

30. உயிரானது முற்பிறப்புக்களில் செய்த வினைத்தொகுதியின் ஒரு பகுதியை மட்டும் இப்பிறப்பில் அனுபவிக்கின்றது. அவ்வாறு அனுபவிக்கப்படும் வினைப்பகுதிக்குரிய பெயர்,
(1) சஞ்சிதம் (2) பிராரத்தம் (3) ஆகாமியம் (4) ஆகந்துகமலம்

31. "நல்லாரைக் காக்கவும் பொல்லாரை அழிக்கவும் அறத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் தோன்றுகின்றேன்" இவ்வாறு மொழிந்தவர்
(1) முருகப் பெருமான். (2) ஸ்ரீ இராமபிரான்.
(3) ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, (4) பிரமதேவன்.

32. "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது"
(1) நன்றாக உண்ணவும் உடுக்கவும் உல்லாசமாக வாழவும்.
(2) பொருள் தேடி இன்பமாக வாழ்வதற்கு.
(3) நல்வினை தீவினைகளைச் செய்து மற்றொரு பிறப்பிற்கு வித்திடுவதற்கு.
(4) கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டு,

33. "எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவனென்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" எனப் போதிக்கும் சமயம்,
(1) சைவம் (2) சௌரம் (3) கௌமாரம் (4) சமணம்.

34. திருக்கைலாச பரம்பரைச் சந்தான குரவருள் ஒருவர்
(1) மாணிக்க வாசக சுவாமிகள். (2) மறை ஞானசம்பந்தர்.
(3) திருஞானசம்பந்த நாயனார். (4) சுந்தரர்.

35. திருமுறைகள் முதல் ஏழிலும் தொகுக்கப் பெற்றிருப்பவை
(1) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா என்பவை.
(2) மூவர் தேவாரங்கள் மாத்திரம்.
(3) திருமந்திரமும் பெரியபுராணமும்.
(4) பெரியபுராணம் மாத்திரம்.

36.. வருண வேறுபாட்டை ஏற்றுக் கொள்ளாமல், எவ்வித பேதமுமின்றி எல்லோருமே சிவனை வழிபட்டு முத்தி பெறலாம் என்னும் தாராளக் கொள்கையை எடுத்துரைப்பது,
(1) வேதம், (2) உபநிடதம், (3) ஆகமம், (4) இதிகாசம்,

37. உத்தராயண காலம் தொடங்கும் நாளிலும், தட்சிணாயனகாலம் தொடங்கும் நாளிலும் கொண்டாடப்படும் பண்டிகைகள் முறையே,
(1) சித்திரை வருடப்பிறப்பும் தீபாவளியும்,
(2) தைப்பொங்கலும் ஆடிப்பிறப்பும்,
(3) ஆடிப்பிறப்பும் தீபாவளியும்,
(4) தைப்பொங்கலும் சித்திரை வருடப்பிறப்பும்,

38. மாத்தளை முத்துமாரியம்மன் கோயில் தேர்த்திருவிழா நடைபெறும் புனிதநாள்,
(1) பங்குனி உத்திரம். (2) ஆடிப்பூரம்.
(3) மாசிமகம். (4) மார்கழித் திருவாதிரை.

39. வேதநூல்களுள் மிகவும் பழமை வாய்ந்தது,
(1) இருக்கு வேதம். (2) சாம வேதம்.
(3) யசுர் வேதம். (4) அதர்வ வேதம்.

40. நன்றிமறத்தலும் தெய்வநிந்தை புரிவோருடன் சேர்தலும் தீமை பயக்கும் என்பதை விசேடமாக உணர்த்தும் நூல்,
(1) திருவிளையாடற் புராணம். (2) பெரிய புராணம்.
(3) அரிச்சந்திர புராணம். (4) கந்த புராணம்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 1998 டிசெம்பர்

# சைவ சமயம் II

நேரம் : இரண்டு மணித்தியாலங்கள்

1. "பிறவா யாக்கைப் பெரியோன் கோவிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோவிலும் ......"
(சிலப்பதிகாரம்)

(i) "பிறவா யாக்கைப் பெரியோன்" எனக் குறிப்பிடப்படும் கடவுள் யார்?
"அறுமுகச் செவ்வேள்" என்னும் தொடர் எத் தெய்வத்தைக் குறிப்பிடுகிறது?
(ii) பண்டைத் தமிழ்நாட்டின் நிலப்பிரிவுகளையும் ஒவ்வொரு நிலப்பிரிவுக்கும் அமைந்த தெய்வங்களின் பெயர்களையும் எழுதுக.
(iii) சங்ககாலத்தமிழர்கள் சிவநெறி பேணியவர்கள் என்பதற்கு ஆதாரமாக உள்ள சான்றுகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.
(iv) "கந்து" என்பது எதனைக் குறிப்பதாகத் தற்கால ஆய்வாளர் கருதுகின்றனர்?

2. "ஆழிமிசை கன்மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி"
(சைவசமயாசாரியர் துதி)

(i) "ஆழிமிசை கன்மிதப்பில் அணைந்த பிரான்" எனப் போற்றப்படுபவர் யார்?
அதற்குரிய வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக எழுதுக.
(ii) அப்பூதியடிகள் ஆற்றிய தொண்டின் சிறப்பினை சுருக்கமாக விளக்குக.
(iii) திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் காலத்தில் வாழ்ந்து, சைவத் தொண்டுகள் புரிந்து, சமயகுரவருள் ஒருவராகிவிட்ட நாயனார் யார்?
(iv) அப்பரடிகளின் பற்றற்றநிலையை உலகத்தாருக்குக் காட்ட இறைவன் திருவுளங்கொண்டு யாது செய்தான்? அப்போது அப்பரடிகள் எவ்வாறு நடந்துகொண்டார்?

3. "வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன ..." (திரு மந்திரம்)
(i) சைவாகமங்கள் எத்தனை? ஆகமப் பொருளைத் தமிழிலே கூறும் முதல் நூல் எது? அந்நூலை இயற்றியவர் யார்?
(ii) வேதமும் ஆகமமும் யாரால் அருளிச் செய்யப்பட்டவை? சைவ நாற்பாதங்கள் எவை?
(iii) சைவ ஆகமங்களின் தோற்றம், பரம்பல், அவை கூறுகின்ற ஆலயவழிபாட்டோடு தொடர்புடைய விடயங்கள் என்பன பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.
(iv) ஆகம வழக்கு, வேதவழக்கிலிருந்து வேறுபடுமாற்றை மூன்று உதாரணங்கள் தந்து விளக்குக.

4. "தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடா உள்ளென்றான் சிரித்து"

(நற்சிந்தனை)

(i) "தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்" என்னும் பாடலடியில் குறிப்பிடப்படும் "தேரடி" எங்குள்ளது? "தேசிகன்" யார்? தேசிகனைக் கண்டு தரிசித்தவர் யார்?
(ii) சித்தர்களின் இயல்புகள் மூன்று கூறுக.
(iii) யோகர் சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு, பணிகள் பற்றிச் சுருக்கக் குறிப்பு எழுதுக.
(iv) இலங்கையில் வாழ்ந்த நான்கு ஞானியர்களின் பெயர்களையும் அவர்கள் எங்கெங்கு வாழ்ந்தார்கள் என்பதையும் குறிப்பிடுக.

5. "ஆலுமறை சூழ்கயிலை யின் கணருள் செய்த
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற வெழுந்துமிகு கீழுற வகழ்ந்து
மாலுமிரு வர்க்குமரி யாரொருவர் வந்தார்"

(பெரியபுராணம்)

(i) "பெரியபுராணம் யாரால் இயற்றப்பெற்றது? எத்தனையாந் திருமுறையில் இடம்பெறுகின்றது?
(ii) சுந்தரரின் புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியாரின் மகளுடனான திருமணத்தை இறைவன் தடுத்து நிறுத்தியது ஏன்?
(iii) சிவபெருமான் யார்யாருக்கு அறிதற்கு அரியராய் இருந்தார் என இப்பாடல் கூறுகின்றது? அதற்குரிய காரணம் என்ன? சிவபெருமான் எவர் அறிதற்கு எளியராய் உள்ளார்?
(iv) பெரியபுராணச் சிறப்புப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

6. "நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்" (திருவருட்பயன்)

(i) "சங்கரன்" யார்? "சங்கரன்" என்று ஏன் அழைக்கப்படுகிறான்? "சலமிலன்" என்பதால் கருதப்படுவது யாது?
(ii) சித்தாந்த சாத்திரங்களில் முறையே முதனூலாகவும், வழிநூலாகவும், சார்பு நூலாகவும் கொள்ளப்படும் மூன்று முக்கிய நூல்களின் பெயர்களைத் தருக. அவை ஒவ்வொன்றினதும் ஆசிரியரையும் குறிப்பிடுக.
(iii) ஆன்மாக்களுக்கும் கடவுளுக்கும் இடையிலான ஒத்த தன்மை ஒன்றும், வேறுபட்ட தன்மை ஒன்றும் எழுதுக.
(iv) "நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்" இத் தொடரை விளக்குக.

7. "அன்பும் சிவமுமிரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமா தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்த பின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே"

(திருமந்திரம்)

(i) இப்பாடல் கூறும் பிரதான கருத்தென்ன?
(ii) அன்பினை நாம் எவ்வாறு வெளிப்படுத்தலாம்? அன்பு செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் சிலவற்றைக் கூறுக.
(iii) சைவநெறியில் ஒழுகுபவர்கள் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள், பண்புகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
(iv) கண்ணப்ப நாயனாரின் அன்பின் திறத்தை எடுத்துக்காட்டுக.

8. (அ) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதவும்.
(ஆ) அவற்றைப் பாடியோர் யார் என்றும், அவை எச்சந்தர்ப்பங்களிற் பாடப்பட்டன என்றும் கூறுக.
(இ) அவற்றின் பொழிப்புரையினை எழுதுக.

(1) "என்ன புண்ணியஞ் செய்தனை ......."
(2) "ஓசை யொலியெலா .........."
(3) "கோல மால்வரை ........."
(4) "தோலுந் துகிலும் ........."
(5) "தனந்தருங் கல்வி ......."

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1998 டிசெம்பர்

# சைவசமயம் I

## விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 1 | 21. | 3 | 31. | 3 |
| 02. | 3 | 12. | 2 | 22 | 4 | 32. | 4 |
| 03. | 4 | 13. | 3 | 23. | 3 | 33. | 1 |
| 04. | 1 | 14. | 1 | 24. | 1 | 34. | 2 |
| 05. | 2 | 15. | 1 | 25. | 2 | 35. | 2 |
| 06. | 1 | 16. | 4 | 26. | 1 | 36. | 3 |
| 07. | 2 | 17. | 4 | 27. | 4 | 37. | 2 |
| 08. | 1 | 18. | 3 | 28. | 3 | 38. | 3 |
| 09. | 2 | 19. | 2 | 29. | 1 | 39. | 1 |
| 10. | 1 | 20. | 1 | 30. | 2 | 40. | 4 |

# சைவசமயம் II 1998 டிசெம்பர்

## விடைகள்

(i) பிறவாயாக்கைப் பெரியோன் – சிவன் அல்லது உருத்திரன்.
அறுமுகச் செவ்வேள் – முருகன் அல்லது ஆறுமுகன்.

(ii) குறிஞ்சி – முருகன் (சேயோன்)
முல்லை – கண்ணன் (திருமால், மாயோன், விஷ்ணு)
மருதம் – இந்திரன்
நெய்தல் – வருணன்
பாலை – கொற்றவை

(iii)
1. சங்கத் தமிழ் நூல்களில் முக்கட் செல்வன், கறைமிடற்று அண்ணல், ஆலமர் செல்வன், நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன், முப்புரங்களை எரித்தவன், வேதத்தை வாயில் உடையவன், அதை அந்தணர்க்குச் சொன்னவன் போன்ற சிவனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.
2. சிலப்பதிகாரம் "பிறவாயாக்கைப் பெரியோன் கோயில்" பற்றிக் கூறப்படுகின்றது.
3. மணிமேகலையில் சமயக் கணக்கர் திறங்கூறுமிடத்துச் "சைவவாதி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
4. கந்து எனக் குறிப்பிடப்பட்டது சிவலிங்கமே என்பது மறைமலை அடிகள் போன்ற ஆய்வாளர்களின் கருத்தாகும்.
5. தமிழகத்தில் கி.மு இரண்டாம் நூற்றாண்டுக்குரிய சிவலிங்கங்கள் காணப்பட்டுள்ளன.

(iv) கந்து என்பது சிவலிங்கத்தைக் குறிக்கும்.

2. (i) திருநாவுக்கரசர் (அப்பர்)
சமணர்கள் நாவுக்கரசரைக் கல்லோடு கட்டிக் கடலில் போட்டனர். யானையை ஏவியும், நீற்றறையில் இட்டும் இறையருளால் உயிர் தப்பிய நாவுக்கரசர் "சொற்றுணை வேதியன்" என்று தொடங்கும் நமச்சிவாயப் பதிகம் பாடிக் கரைசேர்ந்தார்.

(ii) அப்பூதியடிகள் நாவுக்கரசரிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவர். தனது பிள்ளைகளுக்கு மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு எனப் பெயரிட்டனர். தான் அமைத்த அறப்பணி நிலையங்களுக்கு நாவுக்கரசரின் பெயரையே சூட்டினார். தண்ணீர்ப்பந்தல், கிணறு, குளம் என்பவற்றை அமைத்துத் தொண்டாற்றினார். அடியார்களுக்கு அமுது செய்வித்தார்.

(iii) திருநாவுக்கரசர் அல்லது அப்பர் பெருமான்.

(iv) அப்பரடிகளின் பற்றற்ற நிலையை உலகத்தாருக்கு உழவாரம் நுழையுமிடம் எல்லாம் "பொன்னும் மணியும்" பொலிய இறைவனருள் செய்தான். அப்பரடிகள் பொன்னையும், மணியையும் கற்களோடு சேர்த்துக் கையினாலும் தொடாது உழவாரத்தினால் எடுத்துக் குளத்தில் எறிந்தனர். பொன்னையும் கல்லையும் சமமாக மதித்தார். வானுலக அரம்பையர் அப்பரின் மனதைக் கலைக்க முயன்ற போதும் அவர் தம் நிலையிலிருந்து பெயரவில்லை.

3. (i) சைவாகமங்கள் 28 ஆகும். ஆகமப் பொருளைத் தமிழில் கூறும் முதல் நூல் திருமந்திரம் ஆகும். இயற்றியவர் திருமூலர் ஆவார்.

(ii) வேதமும் ஆகமமும் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை.
நாற்பாதங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை ஆகும்.

(iii) சைவமரபில் ஆகமங்களைச் சிவபெருமான் உமாதேவிக்குச் சொல்லியருளினார். பின்னர் அவை சதாசிவ மூர்த்தியின் ஐந்து திருமுகங்களினின்றும் தோன்றிச், சுத்த வித்தியா தத்துவத்திலிருந்து சதாசிவனால் அநந்தருக்கும், அவரால் தேவர்களுக்கும், அவர்களால் முனிவர்களுக்கும், முனிவர்களால் மனிதருக்கும், மனிதர்களால் மனிதருக்குமாக உபதேசக் கிரமத்தில் உலகில் பரம்பலாயின. ஆலய வழிபாட்டுடன் தொடர்புடைய விடயங்கள் ஆவன ஆலயம் அமைவதற்கான இடம், ஆலயவமைப்புமுறை, தெய்வச் சிலைகளை வடிக்கும் இலக்கணம், பிரதிட்டை செய்யும் விதி, வாகனங்கள், தேர் அமைக்கும் முறை, அர்ச்சகர் ஒழுக்கம், ஆலய தரிசனவிதி, பூசை விழாக்கள் செய்யும்முறை, அவற்றின் பலன்கள் என்பவை ஆகும்.

(iv)
* வேதம் ஆரிய மக்களின் சமய நம்பிக்கைகளையும், வழிபாட்டு முறைகளையும் கொண்டது. ஆகமம் திராவிட மக்களின் கடவுட் கொள்கையையும், வழிபாட்டு முறைகளையும் கொண்டது.
* வேதவழக்கு வருணவேறுபாட்டை ஏற்றுக் கொள்ளும். ஆகமம் வர்ண வேறுபாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை.
* ஆகமத்தை எல்லோரும் கற்கலாம். வேதத்தைக் குறிப்பிட்ட வருணத்தாரே கற்று ஓதலாம்.
* வேதம் வேள்விகளில் விலங்குகளைப் பலியிடுதலை ஏற்றுக் கொள்கின்றது. ஆகமம் இதனைக் கண்டிக்கிறது.

4. (i) தேரடி நல்லூரில் உள்ளது.
தேசிகன் – செல்லப்பா சுவாமி
தரிசித்தவர் – யோகர் சுவாமி

(ii)
1. நன்மை தீமைகளாகிய இருவினைகளும் இல்லை. வினைகளைச் செய்தால் அவற்றின் பயனை அவர்கள் நாடுவதில்லை.
2. சமயாசாரங்களை அனுட்டிப்பதில்லை. தியானம், விரதம் முதலியன தேவையில்லை. சமயத்துக்கு ஏற்ற வேடங்கள் இல்லை.
3. பாலரையும், பைத்தியக்காரரையும் போல ஆடல்பாடல் செய்வர்.

(iii) 1872 இல் மாவிட்டபுரத்தில் பிறந்தார். இளமைப்பெயர் சதாசிவன். சிறுவயதில் பெற்றோரை இழந்தார். மாமியாருடன் வாழ்ந்தார். தமது ஊரிலுள்ள தமிழ்ப் பாடசாலையிலும், சம்பத்திரிசியார் கல்லூரியிலும் கல்விகற்றார். திருமுறைகள், புராணங்கள் கற்றுத் தேர்ந்தார். நீர்ப்பாசன இலாகாவில் பணிபுரிந்தார். செல்லப்பா சுவாமிகளைக் குருவாகக் கொண்டு தீட்சை பெற்றார். 1964 ஆம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்து மூன்றாம் தேதி ஆயிலிய நட்சத்திரத்தில் சிவனடி சேர்ந்தார்.

பணிகள் :
மகாவாக்கியங்களை அருளிச் செய்தார். நற்சிந்தனைப் பாடல்களை அருளினார். அடியார்களின் நன்மை கருதிச் சிவதொண்டன் மாத இதழை வெளியிட்டார். சிவதொண்டன் நிலையங்களை நிறுவினார். போதனைகள் பல செய்தார்.

(iv) கடையிற் சுவாமி – யாழ்ப்பாணம் – பெரிய கடை
செல்லப்பாசுவாமி – யாழ்ப்பாணம் – நல்லூர்
யோகர் சுவாமி – யாழ்ப்பாணம் – கொழும்புத்துறை
குழந்தைவேல்சுவாமி – யாழ்ப்பாணம்
நவநாதசித்தர் – நாவலப்பிட்டி
முத்துலிங்க சுவாமிகள் – கதிர்காமம்
சித்தானைக் குட்டிச்சுவாமிகள் – மட்டக்களப்பு – காரைதீவு

5. (i) சேக்கிழார், 12 ஆம் திருமுறை

(ii) சுந்தரர் முன்னர் சிவபெருமானைக் கேட்டுக் கொண்டபடி அத் திருமணத்தைத் தடுத்து அவரை ஆட்கொண்டார். குறித்த இப்பெண் சேடியர் இருவரிலும் வேறானவர்.

(iii) பிரமாவுக்கும், விட்டுணுவுக்கும் அறிதற்கரியர்.
காரணம் - அவர்களிடமிருந்த அகந்தை, ஆணவம். சிவபெருமான் அடியார்க்கு எளியர்.

(iv) இறைவனால் "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுக்கப்பட்டு சேக்கிழரால் பாடப்பட்டது. சிவனடியார் வரலாறு கூறும் நூலாகும். 12ஆம் திருமுறையாகப் போற்றப்படும். பஞ்சபுராண வரிசையில் இறுதியாக ஓதப்படும். சுந்தரரின் திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி என்பவற்றை அடியொற்றி எழுந்த நூலாகும். காப்பிய வரிசையில் பக்திப் பேரிலக்கியமாகப் போற்றப்படும். சிவ சின்னங்கள் முதலான முத்திக்குரிய வழிகளைக் கொண்டிருக்கும்.

6. (i) சங்கரன் இறைவன் ஆவான்.
சங்கரன் என அழைக்கப்படுவதன் காரணம் சகலருக்கும் சுகத்தைச் செய்பவன் ஆகும். சலமிலன் என்றால் விருப்புவெறுப்பற்றவன்.

(ii) முதனூல் - சிவஞானபோதம் ஆசிரியர் - மெய்கண்ட தேவர்.
வழிநூல் - சிவஞானசித்தியார் ஆசிரியர் - அருணந்தி சிவாச்சாரியார்.
சார்புநூல் - திருவருட்பயன் ஆசிரியர் - உமாபதி சிவாச்சாரியார்.

(iii) ஒத்த தன்மை : அநாதியானவை, என்றுமுள்ள பொருள்கள், நித்தியப் பொருள்கள்.

வேறுபட்ட தன்மை : கடவுள் ஒன்று; உயிர்கள் பல, கடவுள் மலபந்தமற்றது; உயிர்கள் மலபந்தமுடையவை; கடவுள் அறிவிக்காமலே அறியும் பொருள்; உயிர் அறிவித்தால் அறிந்து அறிவிக்காவிட்டால் அறிய மாட்டாத பொருள்.

(iv) இறைவன் தன்னை அடைந்தவர்களுக்குப் பேரின்பத்தைக் கொடுப்பான், அடையாதவர்களுக்கு அவ்வின்பத்தைக் கொடான்.

7. (i) அன்பே சிவம்.

(ii) பிறர்நலம் பேணல், சேவை, அன்பு காட்டல், இரங்குதல், உதவி செய்தல், கரிசனை என்பவற்றின் மூலம் அன்பினை வெளிப்படுத்தலாம்.

சந்தர்ப்பங்கள் :- ஆதரவற்றோர், நலிந்தோர், ஊனமுற்றோர், ஏழைகளுக்கு உதவுதல்.

(iii) விபூதி அணிதல், பஞ்சாட்சர செபம், கொலை, களவு, மது, காமம், பொய்பேசுதல் என்பவற்றை விலக்குதல், பெற்றோர், பெரியோர், ஆசிரியர், மூத்தோர் ஆகியோரை வணங்குதல், மதித்தல், பிற உயிர்களுக்கு அன்பு செய்தல்.

(iv) உயிருக்கு ஒளியூட்டக்கூடிய பிரதான உறுப்பான கண்ணையே தனது உடலில் இருந்து பிரித்து இறைவனுக்குத் தானம் செய்யத் துணிந்தபடியால் அவனது அன்பு உயர்வாகக் கருதப்படும்.

8. தேவாரப் பாடல்கள், பொழிப்பு என்பவற்றுக்கான விடைகள் பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | "என்ன புண்ணியஞ் ---- " | பாடியவர் - சம்பந்தர்<br>தலம் - திருவலஞ்சுழி |
| 2. | "ஓசை ஒலி...." | பாடியவர் - நாவுக்கரசர்<br>தலம் - திருவையாறு |
| 3. | "கோலமால்வரை ......" | பாடியவர் - சுந்தரர்<br>தலம் - திருப்புன்கூர் |
| 4. | "தோலுந்துகிலும் ....." | பாடியவர் - மணிவாசகர்<br>திருக்கோத்தும்பி பாடல் |
| 5. | "தனந்தருங்கல்வி......" | பாடியவர் - அபிராமிப்பட்டர்<br>அபிராமி அந்தாதி பாடல் |

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 1997 டிசெம்பர்

# சைவ சமயம் I ஒரு மணி

1. வைதீக சமயங்களுள் ஒன்றான காணபத்தியத்தின் முழுமுதற் கடவுள்,
(1) முருகன் (2) சூரியன் (3) விஷ்னு (4) கணபதி

2. சிவலிங்கம், இறைவனின்,
(1) அருவத் திருமேனி (2) உருவத் திருமேனி
(3) அருவுருவத் திருமேனி (4) தூலத் திருமேனி

3. சைவத்தின் பொது நூலாகவும் சிறப்பு நூலாகவும் கொள்ளப்படுவன,
(1) சிலப்பதிகாரமும் மணிமேகலையும் (2) திருக்குறளும் பகவத்கீதையும்
(3) வேதமும் ஆகமமும் (4) பெரிய புராணமும் கந்த புராணமும்

4. கி. பி. பத்தாம் நூற்றாண்டில் தில்லையிலிருந்து தேவாரப் பதிகங்களை மீட்டுப் பெருமைபெற்ற மன்னன்
(1) குலோத்துங்கன் (2) இராஜராஜன் (3) குளக்கோட்டன் (4) இராஜேந்திரன்

5. தேவாரத் திருமுறைகளைத் ஓதுவதற்கு முன்னரும் ஓதிய பின்னரும் சொல்லப்படவேண்டிய மந்திரம்,
(1) திருச்சிற்றம்பலம் (2) பஞ்சாட்சரம் (3) சடாட்சரம் (4) ஓம் சாந்தி

6. சிவ சின்னங்களில் ஒன்று,
(1) உருத்திராக்க மணிமாலை (2) துளசி மாலை (3) முத்துமாலை (4) பலிபீடம்

7. "வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" இவ்வாறு இறைவனின் விருப்பத்தை உறுதியாக உரைத்தவர்.
(1) பாரதியார் (2) விபுலாநந்த அடிகள் (3) தாயுமானவர் (4) நாவலர் பெருமான்

8. இறைபணி நிற்றல் என்பதால் நாம் பிரதானமாகக் கருத்தில் கொள்ளவேண்டியது.
(1) புண்ணியம் சம்பாதிக்கும் நோக்குடன் தொண்டுசெய்தல்.
(2) பாவங்களைப் போக்கும் எண்ணத்துடன் பணி செய்தல்.
(3) எல்லா உயிர்களுக்கும் கைம்மாறுகருதாது சேவைசெய்தல்.
(4) எம்முடைய நன்மைக்காகப் பிறருக்கு உதவுதல்.

9. இந்தியாவிலிருந்து வந்து இலங்கையிலே கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் வாழ்ந்து சமாதியான ஞானி.
(1) நவநாதசித்தர் (2) கடையிற்சுவாமிகள்
(3) பெரியானைக்குட்டி சுவாமிகள் (4) சித்தானைக்குட்டி சுவாமிகள்.

10. "தம்பிரான் தோழர்" என அழைக்கப்பட்டவர்.
(1) அப்பர் (2) சம்பந்தர் (3) சுந்தரர் (4) மாணிக்கவாசகர்

11. சைவாகமநெறிப்படி, ஆலயம் ஒரு வணக்கத் தலம் என்பதுடன்,
(1) சமூக கலாசார வாழ்வின் கேந்திரநிலையமாகவும் இயங்க வேண்டும்.
(2) பொழுது போக்கு உல்லாசப்பயண மையங்களாகவும் விளங்க வேண்டும்.
(3) பொருளாதார விருத்திக்கு உதவும் மத்திய நிலையமாகவும் அமைய வேண்டும்.
(4) பூசை, வழிபாடு நடைபெறும் புனித நிலையமாகவும் திகழ வேண்டும்.

12. மாணிக்க வாசகர் பொருட்டுச் சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படிபட்டபோது, அவரின் முதுகில் விழுந்த அடி எல்லோர் மீதும் பட்டது என்பதிலிருந்து அறியப்படும் உண்மை.
(1) சிவபெருமான் என்றும் உள்ளவர் (2) சிவபெருமான எங்கும் நிறைந்தவர்.
(3) சிவபெருமான் எல்லாம் அறிபவர் (4) சிவபெருமான் எல்லாம் வல்லவர்.

13. சைவத்தையும் வைணவத்தையும் இணைக்கும் அம்சமாக அமையும் இறைவடிவம்.
(1) சோமாஸ்கந்த வடிவம் (2) அரிகர வடிவம்
(3) அர்த்தநாரீஸ்வர வடிவம் (4) நடராஜ வடிவம்.

14. சைவசித்தாந்தத்தின் படி, குடத்தைப் பார்த்தவுடன், குடத்தை வனைந்த ஒருவன் இருக்க வேண்டும் என்பது உறுதி ஆகிவிடுகிறது போல, இந்த உலகைப் பார்க்கும் போது உலகைப் படைத்த இறைவன் உண்டு என்ற தீர்மானத்திற்கு வருவது,
(1) அறிவுடைமை (2) பேதமை (3) அஞ்ஞானம் (4) மாயாவாதம்.

15. திருமந்திரம் இடம் பெற்றுள்ள திருமுறை,
(1) எட்டாந் திருமுறை (2) ஒன்பதாந் திருமுறை
(3) பத்தாந் திருமுறை (4) பதினொராந் திருமுறை

16. விஜயதசமியன்று சைவ வித்தியாலயங்களில் நிகழ்த்தப்படும் முக்கியமான நிகழ்வு,
(1) கைவிசேஷம் (2) ஆண்டுப்பரிசோதனை (3) அன்னப்பிராசனம் (4) வித்தியாரம்பம்

17. தாசமார்க்கம் என்பது,
(1) சரியை நெறி (2) கிரியை நெறி (3) யோக நெறி (4) ஞான நெறி

18. சிவஞான போதத்தின் வழிநூலாயமைந்ததும், சுபக்கம், பரபக்கம் என்னும் இரு பகுதிகளைக் கொண்டதுமான சித்தாந்த சாத்திர நூல்,
(1) திருவருட்பயன் (2) சிவப்பிரகாசம்
(3) சங்கற்ப நிராகரணம் (4) சிவஞானசித்தியார்.

19. ஞானமார்க்கத்தினின்று ஒழுகிப் பரமுத்தி பெற்றவர்,
(1) சுந்தரமூர்த்தி நாயனார் (2) பூசலார் நாயனார்
(3) மாணிக்க வாசகர் (4) கண்ணப்பர்.

20. முத்தி என்பதன் பொருள்,
(1) அறிவு (2) தூய்மை (3) இறப்பு (4) விடுதலை

21. ஐம்பொறிகளோடு கூடுதலின்றித் தாமாக ஒன்றையும் அறியமாட்டாதது.
(1) பதி (2) ஆன்மா (3) ஆணவம் (4) சத்தி

22. குருலிங்க சங்கமம் என்பதில் சங்கமம் குறிப்பது,
(1) நீராடல் (2) சங்காரம் (3) சிவனடியார் கூட்டம் (4) திருமஞ்சனம்.

23. பிறர் துன்பங்களைத் துடைப்பதற்குத் தாம் தேடிய செல்வங்களை உபகரித்தல், சைநெறிப்படி
(1) அநாவசியம் (2) பசுபுண்ணியம் (3) பசுத்துரோகம் (4) சிவபுண்ணியம்.

24. பணிந்து நடத்தல், இன்சொல் பேசுதல் என்பன.
(1) ஒருவரின் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றன.
(2) ஒருவரின் பலவீனத்தின் அறிகுறிகளாகின்றன.
(3) ஒருவர் வாழ்க்கையில் உயர்நிலையை எய்த ஏதுவாகின்றன.
(4) ஒருவர் வாழ்க்கையில் ஏமாளியாகத் துணையாகின்றன.

25. திருக்கோயிலிலுள்ள கொடிமரம், அதனைச் சுற்றியுள்ள சீலை, கயிறு என்பன முறையே,
(1) பதி,பசு,பாசம் என்பவற்றைக் குறிக்கின்றன.
(2) படைத்தல், காத்தல், அழித்தலைக் குறிக்கின்றன.
(3) சூரியன், சந்திரன், அக்கினியைக் குறிக்கின்றன.
(4) ஆணவம், கன்மம் மாயையைக் குறிக்கின்றன.

26. பின்வருவனவற்றுள் சிவ விரதம்,
(1) பிரதோஷம் (2) நவராத்திரி (3) அமாவாசை (4) சஷ்டி

27. சைவசித்தாந்தத்தின்படி இவ்வுலகம் உண்டாவதற்கு முதற் காரணம்,
(1) சத்தி (2) இறைவன் (3) மாயை (4) கன்மம்

28. நடராஜ வடிவமானது,
(1) சிற்பத்திறனை வெளிப்படுத்துகின்றது (2) ஐந்தொழில்களை உணர்த்துகின்றது.
(3) ஞானத்தின் திருவுருவாக விளங்குகின்றது (4) பரமரகசியமாக உள்ளது.

29. இயமம் என்பது,
(1) மனத்தை ஒருவழிப்படுத்துதல் (2) மூச்சை அடக்குதல்
(3) சூரிய நமஸ்காரம் செய்தல் (4) தீயவற்றை விலக்குதல்.

30. தேவர்களை மகிழ்விப்பதற்காக வேள்விகளில் விலங்குகளைப் பலியிடுதலைக் கண்டிப்பது
(1) ஆகமம் (2) வேதம் (3) புராணம் (4) இதிகாசம்

31. சைவசமயத்தில் பிரவேசித்துச் சைவசமயி ஆவதற்கு முதலில் வழங்கப்படும் தீட்சை,
(1) திருவடி தீட்சை (2) சமயதீட்சை (3) விசேடதீட்சை (4) நயனதீட்சை

32. நேர்த்திக் கடனுக்காக விசேட பூசையையோ, அபிடேகத்தையோ, அர்ச்சனையையோ திருக்கோயிலில் செய்விக்கிறார்கள் - இவ்வாறு ஒரு பயனை அவாவிச் செய்யப்படுகின்ற பூசை,
(1) நித்திய பூசை (2) நிட்காமிய பூசை (3) காமிய பூசை (4) மாகேசுர பூசை

33. அபிராமிப்பட்டரின் இட்ட தெய்வம்,
(1) பிள்ளையார் (2) முருகன் (3) விஷ்ணு (4) தேவி

34. இலிங்கோற்பவம் நிகழ்ந்த காலம்,
(1) மகாசிவராத்திரி (2) திருக்கார்த்திகை (3) திருவாதிரை (4) தீபாவளி

35. "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" - இது
(1) செல்லப்பா சுவாமிகள் கூற்று (2) யோகர் சுவாமிகள் கூற்று
(3) நாவலர் கூற்று (4) விவேகாநந்தர் கூற்று

36. மருத்து நீர் தலையில் வைத்து மங்கல நீராடி, புத்தாடை அணிந்து திருக்கோயிலுக்குச் சென்று, வழிபாடுசெய்து கொண்டாடும் பண்டிகை,
(1) தைப் பொங்கல் (2) தீபாவளி
(3) சித்திரைப் புதுவருடப்பிறப்பு (4) ஆடிப்பிறப்பு

37. சைவசமயத்தில் பிறந்து சமணத்திற்கு மதம் மாறினமையினால் திருநாவுக்கரசருக்கு ஏற்பட்ட கொடிய நோய்,
(1) தொழு நோய் (2) வெப்பு நோய் (3) ஈளை நோய் (4) சூலைநோய்

38. "உள்ளது இல்லதாகாது, இல்லது உள்ளதாகாது, உள்ளதில் இருந்தே உள்ளது தோன்றும். இல்லதில் இருந்து உள்ளது தோன்றமாட்டாது." - இக் கொள்கையே,
(1) சற்காரிய வாதம் (2) ஏகான்ம வாதம் (3) இருப்பு வாதம் (4) இயற்கை வாதம்

39. சைவநெறிக்கும் அதன் மலர்ச்சிக்கும் நாயன்மார்கள் ஆதாரமாக விளங்கியமை போல, வைஷ்ணவநெறி மலர்ச்சிக்கு உறுதுணையாகத் திகழ்ந்தவர்கள்,
(1) வேதியர்கள் (2) வேதாந்திகள் (3) சாக்தர்கள் (4) ஆழ்வார்கள்

40 இந்துமதத்தின் சிறப்பினை உலகறியச்செய்து விட்டு இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன், 1897 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆந் திகதி இலங்கைக்கு வருகை தந்த பாரதநாட்டு இந்து சமயத் துறவி,
(1) ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் (2) சுவாமி சிவானந்தர்
(3) சுவாமி தயானந்தா (4) சுவாமி விவேகாநந்தர்.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 1997 டிசெம்பர்

# சைவ சமயம் II இரண்டு மணி

1. "சிந்து வெளியிற் கிடைத்த புதுமைகளுள் முதல் இடம் பெறத்தக்கது சைவத்தின் பழமையேயாகும்"- ஆராய்ச்சியாளர் சேர். ஜோன் மார்ஷல்
   - (i) சிந்து வெளியில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளினால் கண்டுபிடிக்கப்பட்ட பழமை வாய்ந்த நகரங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.
   - (ii) சிவ வழிபாடு சிந்து வெளியில் தோன்றி நிலவியது என்பதற்கு ஆதாரமாகக் காணப்படும் தொல்பொருள் சான்றுகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.
   - (iii) பெண்தெய்வ வணக்கம் சிந்து வெளி மக்களின் சமய வாழ்வில் இடம் பெற்றிருந்தமைக்குரிய சான்றுகள் யாவை?
   - (iv) சிந்து வெளி மக்களிடையே காணப்பட்ட ஏனைய வழிவாட்டு முறைகள் மூன்றினைப் பற்றிச் சிறு குறிப்புரைகள் எழுதுக.

2. "வாழிதிரு நாவலூர் வனறொண்டர் பதம் போற்றி"- சைவசமயாசாரியர் துதி
   - (i) "வன்றொண்டர்" என இங்கு குறிப்பிடப்பட்ட அடியார் யார்? ஏன் அவர் அவ்வாறு குறிப்பிடப்படுகின்றார்?
   - (ii) "தேவார முதலிகள்" யாவர்? தேவாரம் என்ற சொல்லின் பொருள் என்ன?
   - (iii) நாவலூர் வன்றொண்டர் நிகழ்த்திய அற்புதங்கள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.
   - (iv) சமய குரவர் நால்வரையும் குறிப்பிட்டு அவர்கள் ஒவ்வொருவரும் இறைவனை அடைவதற்குக் கடைப்பிடித்த நெறிகளையும், முத்தியடைந்த தினங்களையும் எழுதுக.

3. "குரைகடலோத நித்திலங்கொழக்குங்
   கோணமா மலையமர்ந் தாரே"- - தேவாரம்.
   - (i) திருக்கோணேஸ்வரம் மீது தேவாரப் பதிகம் பாடியவர் யார்? அவர் எங்கிருந்து பாடினார்?
   - (ii) திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்று மகிமையை எடுத்துக் காட்டுக. வரலாற்றுச் சிறப்பைக் கூறும் இரண்டு நூல்களின் பெயர்களைத் தருக.
   - (iii) இலங்கையில் புகழ் பெற்ற இரண்டு தான்தோன்றியீஸ்வரர் ஆலயங்கள் யாவை? சுயம்புலிங்கம் என்பதால் நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன?
   - (iv) இலங்கையில் மிகப் பழைய காலத்திலிருந்து சிவ வழிபாடு நிலவி வருகின்றது என்பதற்கு மூன்று ஆதாரங்கள் தருக.

4. "தீயவை புரிந்தா ரேனுங்குமரவே டிருமுன் னுற்றால்
   தூயவராகி மேலைத் தொல்கதி யடைவர்........."- - கந்தபுராணம்.
   - (i) தீயவைபுரிந்த சூரபன்மன், முருகனுடைய அருட்பார்வையைப் பெற்றதனால், அவனுக்குக் கிடைக்கப்பெற்ற மேலான கதி யாது?
   - (ii) கந்தபுராணம் வற்புறுத்துகின்ற விழுமியக் கருத்துக்கள் இரண்டினைக் கூறுக.
   - (iii) முருகப் பெருமானின் திருப்பெரு வடிவத்தினுள் அடங்கிக் காணப்பட்டவை யாவை? திருப்பெருவடிவம் எடுத்தமை எதனை உணர்த்துகின்றது?
   - (iv) கந்தபுராணத்தில் சைவசித்தாந்த உண்மைகள் உருவகப் படுத்தப்பட்டுள்ளமைக்கு உதாரணங்கள் காட்டுக.

5. "சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கண் இவை
   உய்த்தல் சத சத்தாம் உயிர்"- - திருவருட்பயன்.
   - (i) சத்து எது? அசத்து எது? சதசத்து எது?
   - (ii) உயிரின் இயல்புகள் இரண்டு எழுதுக.
   - (iii) நல்வினைகள், தீவினைகள் என்பவற்றிற்கு மும்மூன்று உதாரணங்கள் தருக. வினைகள் எதற்குக் காரணமாகின்றன?
   - (iv) சந்தானாசாரியர் நால்வரின் பெயர்களை ஒழுங்குமுறையில் எழுதுக. மெய்கண்ட சாத்திரங்கள் எத்தனை?

6. "விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விதிப்படி விசேடமாக வழிபடல்"- - நாவலர் பெருமான்.

(i) "உபவாசம்" என்பதன் பொருள் என்ன?

(ii) ஆடி அமாவாசை, சித்திரைப் பூரணை விரதங்களின் சிறப்புக்கள் என்ன? அவற்றை அனுட்டிப்பவர்களின் நோக்கங்கள் யாவை?

(iii) விரத காலங்களில் நாம் செய்ய வேண்டியன யாவை? செய்யத் தகாதன எவை?

(iv) கடவுளரை நோக்கி நீங்கள் அனுட்டிக்கும் மூன்று விரதங்களைக் குறிப்பிடுக. அவற்றுள் ஒன்றினை எவ்வாறு அனுட்டிக்கிறீர்கள் என்பதைச் சுருக்கமாகக் கூறுக.

7. "உண்மைபேசுக' அறம் செய்க' ஓதுவது ஒழியேல்.
அன்னையைத் தெய்வமாய்ப் போற்றுக.
தந்தையைத் தெய்வமாய்ப் போற்றுக.
ஆசிரியனைத் தெய்வமாய்ப் போற்றுக"

தைத்திரீய உபநிடதம்.

(i) இந்துக்களின் சிந்தனை வளர்ச்சியின் சிகரமாக உபநிடதங்கள் விளங்குவதாகக் கூறப்படுவதேன்?

(ii) "உண்மை பேசுக' அறம் செய்க, ஓதுவது ஒழியேல்' - இவை ஒவ்வொன்றினதும் இன்றியமையாமையைச் சுருக்கமாக விளக்குக.

(iii) அன்னை தந்தையரைத் தெய்வமாய்போற்றிப் பேணிவர வேண்டியதன் அவசியத்தை விளக்கிக் கூறுக.

(iv) குருகுல வாசம் என்பதால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?

8. (அ) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதவும்.

(ஆ) அவற்றைப் பாடியோர் யார் என்றும், அவை எச் சந்தர்ப்பங்களிற் பாடப்பட்டன என்றும் கூறுக.

(இ) அவற்றின் பொழிப்புரையினை எழுதுக.

(i) "தாயினும் நல்ல தலைவர் ........."
(ii) "மாதர்ப் பிறைக்கண்ணியானை ........"
(iii) "முன்னிக் கடலைச் சுருக்கி ........"
(iv) "ஐந்துபே றறிவும் கண்களே கொள்ள ........"
(v) "விழிக்குத் துணை ........."

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1997 டிசெம்பர்

# சைவசமயம் I விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 4 | 11. | 1 | 21. | 2 | 31. | 2 |
| 2. | 3 | 12. | 2 | 22. | 3 | 32. | 3 |
| 3. | 3 | 13. | 2 | 23. | 2 | 33. | 4 |
| 4. | 2 | 14. | 1 | 24. | 3 | 34. | 1 |
| 5. | 1 | 15. | 3 | 25. | 1 | 35. | 3 |
| 6. | 1 | 16. | 4 | 26. | 1 | 36. | 3 |
| 7. | 2 | 17. | 1 | 27. | 3 | 37. | 4 |
| 8. | 3 | 18. | 4 | 28. | 2 | 38. | 1 |
| 9. | 4 | 19. | 3 | 29. | 4 | 39. | 4 |
| 10. | 3 | 20. | 4 | 30. | 1 | 40. | 4 |

# சைவசமயம் II 1997 டிசெம்பர்

## விடைகள்

1. (i) மொகஞ்சதாரோ, கரப்பா

(ii) (அ) யோகி போல் அமர்ந்திருக்கும் கொம்புடைய கடவுளின் இலச்சினை கண்டுபிடிக்கப்பட்டது. கொம்புகளுக்கு இடையே செடிபோல வளர்ந்துள்ள ஒரு பொருள் காணப்படுகின்றது. தலையின் வலப்புறத்தும் இடப்புறத்தும் இரு புடைப்புகள் காணப்படுகின்றன. இவற்றை இரு வேறு முகங்களாகக் கொண்டு திரிமுக மூர்த்தியை முந்துசிவன் என்பர்.

(ஆ) இலச்சினை ஒன்றில் கடவுள் பதுமாசனநிலையில் கண்களை மூடியவாறு இருப்பது "யோகீசுவரன்" என்பதை நிவூட்டும்.

(இ) இலச்சினை ஒன்றில் கடவுள் உருவத்தைச் சூழ யானை, புலி, காண்டாமிருகம், எருமை காணப்படுகின்றன. இது உயிர்களுக்குத் தலைவனான பசுபதியை நினைவூட்டும்.

iii. ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட ஓர் இலச்சினையில் பெண் தெய்வத்தின் கருப்பையிலிருந்து செடி ஒன்று வளர்வதாகப் பொறிக்கப்பட்டுள்ளது. சக்தியாகிய பெண் தெய்வம் தாய்த்தெய்வமாகவோ, நிலத் தெய்வமாகவோ, இயற்கைத் தெய்வமாகவோ சிந்து வெளி மக்களால் வழிபடப்பட்டிருக்கலாம்.

iv. அரசுபோன்ற மரங்களை வழிபடல், காளை மாட்டை வழிபடல், பாம்பு வழிபாடு, சிவலிங்க வழிபாடு என்பனவும் காணப்பட்டன. ஹரப்பா நகரில் சிவலிங்க வடிவில் காணப்பட்ட கூம்புருவான பொருள்கள் சிவலிங்க வழிபாட்டை உணர்த்தும்.

2. i. சுந்தரர், சிவபிரான் கிழப்பிராமண வேடத்தில் தடுத்தாட் கொண்ட போது சுந்தரர் அவரை வன்மையான சொற்களால் ஏசியதால் வன்றொண்டர் என்ற பெயர் ஏற்பட்டது.

ii. சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்போர் தேவார முதலிகள் ஆவர். தேவாரம் என்றால் தெய்வத்துக்குச் சூட்டப்படும் பாமாலை ஆகும்.

iii. (அ) செங்கற்களைப் பொன்னாக மாற்றினார்.

(ஆ) சிவபொருமானிடமிருந்து பெற்ற பன்னீராயிரம் பொன்னை மணிமுத்து ஆற்றிற் போட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்தார்.

(இ) காவேரி ஆறு பிரிந்து வழிவிடச் செய்தார்.

(ஈ) முதலை விழுங்கிய பிராமணப் பிள்ளையை அம் முதலைவாயினின்றும் மீட்டுக் கொடுத்தார்.

(உ) தேவர்கள் வெள்ளை யானையில் ஏற்றி அவரைக் கயிலைக்குக் கொண்டு சென்றனர்.

(iv)

| சமயகுரவர் | நெறி | முத்தியடைந்ததினம் |
|---|---|---|
| சம்பந்தர் | கிரியை (சற்புத்திர மார்க்கம்) | வைகாசி மூலம் |
| அப்பர் | சரியை (தாச மார்க்கம்) | சித்திரைச் சதயம் |
| சுந்தரர் | யோகம் (சக மார்க்கம்) | ஆடிச்சோதி |
| மணிக்கவாசகர் | ஞானம் (சன் மார்க்கம்) | ஆனி மகம் |

3. i. திருஞானசம்பந்தர், இராமேச்சரத்திலிருந்து கோணேச்சரநாதரை அகக் கண்ணாற் கண்டு பாடினார்.

ii. தேவாரங்கள், தட்சிண கைலாய புராணம், திருக்கோணாசல புராணம், சோழர், பாண்டியர், பல்லவர், யாழ்பாண ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆதரவைப் பெற்றது.

iii. கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீச்சரம், ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம். சிற்பியால் பொள்ளப்படாது தாமாவே தோன்றியது.

iv. (அ) கேதீச்சரம், கோணேச்சரம், முன்னேச்சரம், நகுலேச்சரம் போன்ற ஈச்சரங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே காணப்பட்டது.

(ஆ) மூத்தசிவ, மகாசிவ என்ற மன்னர்களின் பெயர்கள்

(இ) கேதீச்சரம், கோணேச்சரம் பாடல் பெற்ற தலங்களாக விளங்கியமை.

4. i. மேலானகதி, திருவருளைப் பெற்று உய்ந்தான். சூரன் முருகனுடைய அருட் பார்வையைப் பெற்றதால் கிடைக்கப் பெற்ற மேலான கதி வீடுபேறு.

ii. (அ) செய்ந்நன்றி மறவாமை

(ஆ) சிவநிந்தனை புரிவாரோடு சேராமை.

iii. முருகப் பெருமானின் திருப்பெருவடிவத்தினுள் முழுவுலகமும், சகல அண்டங்களும் தேவர்களும், ஏனைய உயிர்களும் அடங்கும் முழுமுதற் பரம்பொருள் தாமே என்பதை முருகப் பெருமான் திருப் பெருவடிவத்தின் மூலம் காட்டினார். சிவனும், முருகனும் ஒன்றே என்பதைக் காட்டுகின்றது.

iv. பதி - முருகன், ஆணவம் - சூரபன்மன், கன்மம் - சிங்கமுகாசுரன், மாயை - தாரகன்.

5. i. சத்து - பதி, அசத்து - மலங்கள் (பாசங்கள்) சதசத்து - ஆன்மா (பசு)
ii. (அ) ஐம்பொறிகளின் உதவியின்றி எதனையும் அறிய மாட்டாது
(ஆ) சிவத்தையும் மலங்களையும் சார்ந்து நிற்கும். (சதசத்து)
(இ) தானாக ஒன்றையும் அறியாது
(ஈ) ஆன்மாவுக்குத் தம் செயல் என்பதில்லை.
(iii) நல்வினைகள் எனப்படுபவை பிறருக்கு உதவுதல், கொல்லாமை, பொய்யாமை, விருந்தினரை உபசரித்தல், ஆலயவழிபாடு, சரியைத் தொண்டுகள் புரிதல், உயிரிடத்தில் அன்பாகவிருத்தல், பெரியோரைக் கனம் பண்ணுதல் தாய் தந்தையரைப் பேணுதல் என்பவை ஆகும்.
தீவினைகள்: கொலை, களவு, பொய், மது, பிறர்மனை நயத்தல், சினம் வினைகள் பிறவிக்குக் காரணமாகும்.
(iv) மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியார். மெய்கண்ட சாத்திரங்களின் தொகை 14 ஆகும்.

6. (i) இறைவனுடன் நெருங்கியிருத்தல், உடனுறைதல்.
(ii) ஆடி அமாவாசை இறந்த தந்தைக்காகவும், சித்திரைப் பூரணை இறந்த தாய்க்காகவும் அனுட்டிக்கப்படும்.
தாய் தநதையரின் ஆத்மசாந்திக்காக அனுட்டிக்கப்படும்.
(iii) செய்ய வேண்டியது :- உணவைக் குறைத்தல், அறவே நீக்குதல், வாயால் இறைவன் திரு நாமத்தை உச்சரிதல், தோத்திரங்களை இசைத்தல், மனதால் இறைவனைச் சிந்தித்தல், உடம்பால் இறைபணி செய்தல்.
செய்யத்தகாதன :- மாமிசம் புசித்தல், அகங்காரம் கொள்ளுதல், கோபம் கொள்ளல், ஆலயம் செல்லாதிருத்தல், வீண் வார்த்தை பேசுதல், சண்டையிடல், பலதடவை உணவு உண்ணுதல்.
(iv) சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை, பிரதோசம், விநாயக சதுர்த்தி, விநாயக சஷ்டி, கேதார கௌரி விரதம், வரலட்சுமி விரதம்.

7. (i) சிறந்த அற ஒழுக்கவியற் கருத்துக்களைக் கொண்டுள்ளதால் உபநிடதங்கள் சிகரமாக விளங்கும்.
(ii) உண்மைபேசுதல் : உண்மைக்கு அழிவில்லை, உண்மை உயர்வைத் தரும், உண்மையே வெல்லும்.
அறம் செய்தல் : தருமம் செய்தல், இரப்போர்க்கு ஈதல், இன்சொல் பேசுதல், எவ்வுயிரிலும் அன்பாயிருத்தல் நலிந்தோர்க்கு உணவளித்தல்.
ஓதுவது ஒழியேல் : கற்றவை மறவேல், கற்றபடி ஒழுகுதல் இதனால் சமுதாயத்தில் மேம்பாட்டை அடையலாம்,
(iii) அன்னை தந்தையர் எம்மைக் கற்பித்து ஆளாக்கியவரை முதுமைக் காலத்தில் நாம் பேணுதல் வேண்டும். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,
எமது வாழ்வு, வளம், கல்வி, செல்வம் யாவும் அவர்களாலேயே கிடைக்கப் பெற்றன.
(iv) ஆசிரியருடன் உறைந்து கல்வி கற்பது அல்லது ஆசிரியருடன் வீட்டுக்குச் சென்று பணிவிடைகள் செய்து கல்வி கற்றல் குருகுலவாசம் எனப்படும்.

8. 1. "தாயினும் நல்ல தலைவர்"
பாடியவர் - சம்பந்தர்
இராமேச்சரத்திலிருந்து கோணேச்சரப் பெருமானை நினைத்து பாடப்பட்டது.
2. "மாதர்ப்பிறைக் கண்ணியானை"
பாடியவர் - அப்பர்
திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டபோது பாடினார்.
3. "முன்னிக் கடலைச் சுருக்கி"
பாடியவர் - மாணிக்கவாசகர்
திருவண்ணாமலையில் திருவெம்பாவை பாடினார்.
4. "ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள"
பாடியவர் - சேக்கிழார்
சுந்தரரின் தில்லைக் காட்சியாகும்.
5. "விழிக்குத் துணை"
பாடியவர் - அருணகிரிநாதர்
கந்தரலங்காரப் பாடலாகும்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 1996 டிசம்பர்

# சைவசமயம் I ஒரு மணி

1. தமக்குமேலே வேறொரு தலைவன் இல்லாத பரம்பொருள் என்ற காரணத்தினால் பிள்ளையாருக்கு வழங்கப்படும் பெயர்:
(1) கணேசன் (2) விநாயகர் (3) இலம்போதரர் (4) கணபதி

2. சாதகன் இறைவனை ஆண்டானாகப் பாவித்து அன்பு செய்து வழிபடும் மார்க்கம்:
(1) தாச மார்க்கம் (2) சற்புத்திரமார்க்கம் (3) சக மார்க்கம் (4) சன்மார்க்கம்

3. விதிப்படி செய்யப்படும் சிவபூசை அடங்கும் நெறி
(1) சரியை (2) கிரியை (3) யோகம் (4) ஞானம்

4. திருநாவுக்கரசுநாயனாரின் சரியைத் தொண்டைச்சிறப்பித்து அவருக்கு வழங்கப்பட்ட பெயர்:
(1) அப்பர் (2) வாகீசர் (3) தாண்டகவேந்தர் (4) உழவாரப்படையாளி

5. ஆடிமாதச் சுவாதித் திருநாள் யாருடைய குருபூசைத்தினமாகும்?
(1) அப்பர் (2) சம்பந்தர் (3) சுந்தரர் (4) மாணிக்கவாசகர்

6. வாதவூரரின் கலைத்திறன், கல்வியறிவு, ஒழுக்கம் ஆகியவற்றைப் பாராட்டி அவருக்குப் பாண்டிய மன்னனால் சூட்டப்பட்ட பட்டம்:
(1) மாணிக்கவாசகர் (2) ஆளுடைய அடிகள்
(3) பெருந்துறைப்பிள்ளை (4) தென்னவன் பிரமராயன்

7. திருத் தொண்டர்தொகை அடங்கியுள்ள திருமுறை:
(1) ஐந்தாம் திருமுறை (2) ஆறாந் திருமுறை
(3) ஏழாந் திருமுறை (4) எட்டாந் திருமுறை

8. ஒன்பதாந் திருமுறையில் அடங்குவன;
(1) தேவாரம், பெரியபுராணம் (2) திருவாசகம், திருக்கோவையார்
(3) திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (4) தேவாரம், திருமந்திரம்

9. முதலை விழுங்கிய பிராமணப் பிள்ளையை அம்முதலை வாயினின்றும் மீட்டுக்கொடுப்பதற்காக சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடிய பதிகம்:
(1) "ஏற்றான் மறக்கேன்" (2) "தம்மானை அறியாத சாதியர் உளரே"
(3) "தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்" (4) "பிழையுளன பொறுத்திடுவர்"

10. திருமுறை ஓது முன்னும் ஓதிய பின்னும் சொல்ல வேண்டியது:
(1) சிவசிவ (2) திருச்சிற்றம்பலம் (3) அரிஓம் (4) நமசிவாய

11. "அபிஷேகக் கந்தன்" என்று போற்றப்படும் கந்தப் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயம்:
(1) மாவிட்டபுரம் (2) செல்வச்சந்நிதி (3) குமாரபுரம் (4) நல்லூர்

12. கோணேச்சரநாதருடன் வீற்றிருக்கும் அம்பிகையின் பெயர்:
(1) மாதுமையாள் (2) கௌரிஅம்பாள் (3) வடிவாம்பிகை (4) ஸ்ரீசிவகாமசௌந்தரி

13. மாத்தளை முத்துமாரி அம்மன் கோவிலில் பஞ்சரதங்கள் பவனிவரும் நாள்:
(1) ஆடி மாத பூர நட்சத்திரம் (2) ஆனிமாத உத்தர நட்சத்திரம்
(3) வைகாசி மாத விசாக நட்சத்திரம் (4) மாசி மாத மக நட்சத்திரம்

14. பிதிரருக்கு எள்ளும் தண்ணீரும் இறைத்து அவர்களின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்தித்து விரதமிருப்பதற்கு சாலச்சிறந்த நாள்:
(1) ஆடிப்பிறப்பு (2) ஆடிச் செவ்வாய் (3) ஆடி அமாவாசை (4) ஆடிப்பூரம்

15. பழந் தமிழரால் மாயோன் எனப் போற்றப்பட்ட தெய்வம்
(1) விஷ்னு (2) முருகன் (3) ஐயனார் (4) பிரமன்

16. குருகுலவாசம் முடிந்தவுடன் ஆசிரியர் மாணவர்களுக்கு கூறும் அறிவுரைகளாகிய உண்மை பேசு, அறம் செய், ஓதுவதொழியேல் என்பவை அடங்கிய உபநிடதம்:
(1) கட உபநிடதம் (2) சாந்தோக்கிய உபநிடதம்
(3) பிருகதாரண்யக உபநிடதம் (4) தைத்திரிய உபநிடதம்

17. சைவசமயத்தவர்ளுக்கு முக்கியமான சதுருத்திரியம் அடங்கியுள்ள வேதம்:
(1) இருக்கு (2) யசுர் (3) சாமம் (4) அதர்வம்

18. விறன்மிண்ட நாயனார் மிக உயர்ந்த நிலையை அடைவதற்குதவியது:
(1) சங்கம வழியாடு (2) குரு வழியாடு (3) இலிங்க வழிபாடு (4) ஆலய வழிபாடு

19. மழைக்கு அதிதேவதையாகிய இந்திரனை வழிபட்டவர்கள் என்று தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டவர்கள்:
(1) குறிஞ்சிநில மக்கள் (2) முல்லைநில மக்கள்
(3) மருதநில மக்கள் (4) நெய்தல்நில மக்கள்

20. நவராத்திரி விரத காலத்தில் மகாநவமியன்று பூசிக்கப்படும் கடவுள்
(1) துர்க்கை (2) இலக்குமி (3) சரஸ்வதி (4) முத்துமாரி

21. பிரதோச விரதம் அனுட்டிக்கப்படும் நாள் வளர்பிறை தேய்பிறையின்,
(1) பதினோராம் நாளாகிய ஏகாதசி (2) பதின்மூன்றாம் நாளாகிய திரயோதசி
(3) பதின்நான்காம் நாளாகிய சதுர்த்தசி (4) நாலாம் நாளாகிய சதுர்த்தி

22. உத்தராயன காலத் தொடக்கத்தில் கொண்டாடப்படுவது:
(1) தைப்பொங்கல் (2) சித்திரை வருடப்பிறப்பு (3) விநாயகசதுர்த்தி (4) ஆடிப்பிறப்பு

23. கோயில் [illegible] த்தின்போது கொடிமரத்தின் சீலையைச் சுற்றியுள்ள கயிறு குறித்து
(1) திருவருள் (2) பதி (3) பசு (4) பாசம்

24. திருக்கோயிலில் செய்யத்தகாத குற்றம்:
(1) திருவிளக்கு அவியக்கண்ட விடத்து அதனைத் தூண்டுதல்
(2) இறைவனின் சிந்தனையுடன் வீதிவலம் வருதல்
(3) சுவாமிக்கும் பலி பீடத்துக்கும் குறுக்கே போதல்
(4) திரை போட்டிருக்கும் காலத்தில் இறைவனை வணங்காதிருத்தல்

25. பிற்பிறப்புகளில் அனுபவிப்பதன் பொருட்டு எஞ்சியிருக்கும் பழவினையின் பெயர்
(1) பிராரத்தம் (2) சஞ்சிதம் (3) ஆகாமியம் (4) பற்றற்ற வினை

26. சகலாகம பண்டிதர் எனும் சிறப்புப் பெயர் பெற்றவர்:
(1) மெய்கண்ட தேவர் (2) அருணந்தி சிவாச்சாரியார்
(3) மறைஞான சம்பந்தர் (4) உமாவதி சிவாச்சாரியார்

27. சைவத்திருமுறைகள் பன்னிரண்டுக்கும் இலக்கணம்போன்று பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டு விளங்கும் சாத்திர நூல்:
(1) திருமந்திரம் (2) சிவஞானபோதம் (3) சிவஞானசித்தியார் (4) திருவருட்பயன்

28. ஆறுகாலப்பூசைகள் நடைபெறும் கோயில்களில் விடியற்காலத்தில் நடைபெறும் முதற் பூசை
(1) காலைப்பூசை (2) உச்சிக்காலப்பூசை (3) அர்த்தசாமப்பூசை (4) திருவணந்தல்பூசை

29. சிவன்கோவிற் கருவறையின் தெற்குச் சுவரிலுள்ள சிவமூர்த்தம்:
(1) இலிங்கோற்பவமூர்த்தி (2) தட்சனாமூர்த்தி
(3) சோமஸ்கந்தமூர்த்தி (4) பிக்ஷாடன மூர்த்தி

30. சைவர்களுக்கு வாழ்க்கையின் வழிகாட்டியாக விளங்குவன:
(1) நாலாயிரத்திவ்விய பிரபந்தங்கள் (2) பஞ்சராத்திர ஆகமங்கள்
(3) வைகாசன ஆகமங்கள் (4) பன்னிரு திருமுறைகள்

31. கன்மப் பயன்களை விருப்பு வெறுப்பின் [illegible] மதுத்தல் என்னும் கருத்தினை உணர்த்தும் பதம்:
(1) இருவினை ஒப்பு (2) மலபரிபாகம் (3) சத்திநிபாதம் (4) பரமுத்தி

32. கொழும்புத்துறை சிவயோக சுவாமிகள் அடியாரின் நன்மை கருதி ஆரம்பித்த இதழ்
(1) ஆத்மயோதி (2) சிவதொண்டன் (3) இந்துசாதனம் (4) ஞானபூமி

33. "பயில்தொறும் பயில்தொறும் ஆறுமுகக்கடவுள் திருவடிப்பந்தி ஞானம் விளைப்பது" என்று புலவர்களால் பாராட்டப்படுவது:
(1) திருமுருகாற்றுப்படை (2) மயல் விருத்தம் (3) கந்த புராணம் (4) வேல்விருத்தம்

34. சரசுவதியின் பெயரில் சகலகலாவல்லிமாலை என்னும் தோத்திரம் பாடிய பெரியார்:
(1) அபிராமிப்பட்டர் (2) குமரகுருபரர் (3) தாயுமானவர் (4) அருணகிரிநாதர்

35. திருவருட்பயன் என்னும் சாத்திர நூலில் திருவருளே உருவெடுத்துவரும் ஞானகுரவரது இயல்பு கூறுவது:
(1) பதிமுதுநிலை (2) உயிரவைநிலை (3) அருளது நிலை (4) அருளுரு நிலை

36. திருவாலங் காட்டில் தனது திருக்கூத்தைக் கண்டு கொண்டு தன் திருவடி நிழலிலே இருக்குமாறு இறைவனால் பணிக்கப்பட்டவர்:
(1) திலகவதியார் (2) மங்கையர்கரசியார் (3) குலச்சிறையார் (4) காரைக்காலம்மையார்

37. கோவில்களில் நடைபெறும் மகோற்சவத்தில் வாகனத் திருவிழா குறித்து நிற்பது:
(1) படைத்தல் (2) காத்தல் (3) அழித்தல் (4) அருளல்

38. தமிழ் மூவாயிரம் என்னும் சிறப்புப்பெயரினால் அழைக்கப்படுவது:
(1) திருமந்திரம் (2) திருவாசகம் (3) கந்தபுராணம் (4) திருக்குறள்

39. மூவகை உயிர்களிலும் ஆணவம் செம்பிற் களிம்பு போல் அநாதியாய்க் கலந்திருப்பதனால் அதற்கு வழங்கும் பெயர்:
(1) மூலமலம் (2) இருள் மலம் (3) ஆகந்துகமலம் (4) கேவல மலம்

40. "தொண்டர் குலமே தொழுதகு குலம்" என்பதை வலியுறுத்தி நிற்கும் நூல்:
(1) கந்தபுராணம் (2) பெரியபுராணம்
(3) திருவிளையாடற் புராணம் (4) மார்கண்டேய புராணம்.

## கலவிப் பொதுத் தராரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 1996 டிசம்பர்

## சைவ சமயம் II இரண்டு மணி

(1) "ஆழிமிசை கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி" - சைவசமயாசாரியர் துதி
(i) மேற்போந்த அடியில் துதிக்கப்படும் அடியார் யார்? அவர் இறைவனை அடைவதற்குக் கடைப்பிடித்த நெறி யாது?
(ii) அந்நெறி பற்றிச் சுருக்கமாக எழுதவும்.
(iii) மேற்போந்த அடியிற் குறிப்பிடப்பட்டுள்ள அற்புதத்தை எழுதவும்.
(iv) சமயகுரவர்கள் செய்த அற்புதங்களின் முக்கியத்துவம் யாது?

(2) "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" ஔவையார்
(i) ஆலய அமைப்பு முறை, ஆலயக் கிரியைகள் முதலியன பற்றிக் கூறும் சைவசமய முதநூல்கள் எப்பெயரால் அழைக்கப்படுகின்றன?
(ii) ஆலய வழிபாட்டினால் மக்கள் அடையும் பயன்கள் மூன்றினை எழுதவும்.
(iii) முன்னேஸ்வர ஆலயத்தில் திருவிழாக் காலத்தில் பக்தோற்சவம் நடைபெறும் முறையினை எழுதவும்.
(iv) கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் நடைபெறும் பூசைமுறை பற்றி எழுதவும்.

3. "நீளநினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்" - சுந்தரர் தேவாரம்.
(i) "நீளநினைத்தல்" என்னும் தொடர் உணர்த்தும் சமய உண்மை யாது?
(ii) விநாயக விரதங்கள் இரண்டின் பெயர்களைத் தரவும். விநாயக வழிபாட்டினால் கிடைக்கும் பயன்கள் இரண்டினைக் கூறுக.
(iii) மகா சிவராத்திரி விரதம் ஆண்டில் எப்பொழுது அனுட்டிக்கப்படுகின்றது? அவ்விரதம் எவ்வாறு அனுட்டிக்கப்படல் வேண்டும்?
(iv) விரத காலம், பண்டிகைக்காலம் என்பவற்றில் நாம் கைக் கொள்ளும் எவ்வழக்கங்கள் உள்ளத்தூய்மையை வளர்ப்பதற்கு வழிவகுக்கின்றன?

4. "நலமலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்" - திருவருட்பயன்.
(i) திருவருட் பயன் என்னும் நூலின் ஆசிரியர் யார்? அந்நூல் பற்றிச் சுருக்கமாக எழுதவும்.
(ii) "சலமிலன்", "சங்கரன்" என்னும் சொற்களால் குறிக்கப்படுபவர் யார்? ஏன் அவர் அவ்வாறு குறிக்கப்படுகின்றார்?
(iii) சைவசித்தாந்தம் கூறும் கடவுளின் இரு நிலைகளுள் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.
(iv) முத்தியில் நாட்டமுடையோர் பற்றில்லாத வினைகளைச் செய்யும் பொழுது எத்தகைய உணர்வோடு செய்ய வேண்டும்?

5. "தீக்ஷா (தீட்சை) என்பது ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது" - ஆகம நூல் விளக்கம்.
(i) ஆன்மாவைப் பீடித்திருக்கும் மும்மலங்கள் யாவை? இவை ஏன் "அசத்து" என்றும்

"அசித்து" என்றும் அழைக்கப்படுகின்றன?

(ii) நயனதீட்சை, பரிசதீட்சை என்பவற்றை விளக்குக.

(iii) திருநாவுக்கரசர் பெற்றுக் கொண்ட தீட்சை யாது? அவர் அத்தீட்சையினைப் பெற்றுக் கொண்ட வரலாற்றினை எழுதுக.

(iv) சமயதீட்சை பெற்றவர்கள் கடைப்பிடித்தொழுக வேண்டிய ஒழுக்கங்கள் பற்றிச் சுருக்கமாக எழுதவும்.

6. "மேலுற வெழுந்துமிகு கீழுற வகழ்ந்து
மாலுமிரு வர்க்குமரி யாரொருவர் வந்தார்" - பெரியபுராணம்.

(i) பெரியபுராணம் எத்தனையாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது? திருமுறைகள் ஓதுவதனால் ஏற்படும் பயன்கள் மூன்றினைக் கூறுக.

(ii) பெரியபுராணம் பாடுவதற்கு அடியெடுத்துக் கொடுத்தவர் யார்? எவ்வாறு அடியெடுத்துக் கொடுத்தார்?

(iii) "மாலும் இருவர்க்கும் அரியார்" யார்? அச்சொற்றொடர் நினைவூட்டும் கதை யாது?

(iv) அக்கதை விளக்கும் தத்துவம் யாது?

7. "இயங்கும் இந்த உலகிலே இயங்கும் பொருள் ஒவ்வொன்றிலும் இறைவன் நிறைந்துள்ளான்" - உபநிடதச் சிந்தனை

(i) "உபநிடதம்" என்ற சொல்லின் பொருள் யாது?

(ii) பரமான்மாவிற்கும் சீவான்மாவிற்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றி உபநிடதம் கொண்டுள்ள கருத்து யாது?

(iii) உபநிடதம் மக்களின் ஈடேற்றத்திற்குக் கூறும் ஒழுக்கவியற் கருத்துக்கள் நான்கினைக்கூறுக.

(iv) சைவசமயத்தவர்க்குத் தனிச்சிறப்பு வாய்ந்த உபநிடதமாகக் கருதப்படுவது யாது? அவ்வுபநிடதம் எவ்வகையில் சைவசமயத்தவர்களுக்குச் சிறப்பு வாய்ந்தது?

8. (அ) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதவும்.

(ஆ) அவற்றைப் பாடியோர் யார் என்றும், அவை எச்சந்தர்ப்பங்களிற் பாடப்பட்டன என்றும்கூறுக.

(இ) அவற்றின் பொழிப்புரையினை எழுதுக.

(1) "பண்ணும்பத மேழும் ........"
(2) "கோல மால்வரை மத்தென நாட்டிக் ........"
(3) "சுருதிவா னவனாந் திருநெடு மாலாஞ் ........"
(4) "அண்ண லார்தமக் களித்த ........"
(5) "தனந்தருங் கல்வி தரும் ........"

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 1996 டிசம்பர்

## சைவசமயம் I விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2 | 11. | 4 | 21. | 2 | 31. | 1 |
| 2. | 1 | 12. | 1 | 22. | 1 | 32. | 2 |
| 3. | 2 | 13. | 4 | 23. | 4 | 33. | 3 |
| 4. | 4 | 14. | 3 | 24. | 3 | 34. | 2 |
| 5. | 3 | 15. | 1 | 25. | 2 | 35. | 4 |
| 6. | 4 | 16. | 4 | 26. | 2 | 36. | 4 |
| 7. | 3 | 17. | 2 | 27. | 2 | 37. | 2 |
| 8. | 3 | 18. | 1 | 28. | 4 | 38. | 1 |
| 9. | 1 | 19. | 3 | 29. | 2 | 39. | 1 |
| 10. | 2 | 20. | 3 | 30. | 4 | 40. | 2 |

## சைவசமயம் II 1997 டிசெம்பர்

## விடைகள்

1. (i) திருநாவுக்கரசர் அல்லது அப்பர்.

(ii) சரியை என்பது பெரும்பாலும் உடம்பு சார்ந்த புறத்தொழிலாற் சிவனுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாகும். சாதகன் தன்னை அடிமையாகவும் சிவனை ஆண்டானாகவும் பாவனை செய்தல் தாச மார்க்கத்தில் அடங்கும். சரியை நெறி நிற்போர் சாலோக முக்தியைப் பெறுவர். கோயிலைக் கூட்டிச்சுத்தம்செய்தல், மெழுகுதல், பூ எடுத்தல், பூமாலை தொடுத்தல், இறைவன் புகழ் பாடுதல், சரியைத் தொண்டில் அடங்கும்.

(iii) நாவுக்கரசர் சைவத்தில் சேர்ந்ததை அறிந்த சமணர்கள் பல்லவ அரசனின் முயற்சியால் அவரைக் கல்லுடன் கட்டிக்கடலில் போட்டனர். நாவுக்கரசர் திருவைந்தெழுத்தைத் துதித்துச் "சொற்றுனைவேதியன்" பாடினார். அவரைப்பிணித்திருந்த பாசங்கள் அறுந்தன. அவருடன் கட்டியிருந்த கல் தெப்பமாக மிதந்தது. அவரைத் திருப்பாதிப்புலியூர்க் கரைக்கு சேர்ப்பித்தது.

(iv) சமய குரவர்கள் எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டு ஒழுகினர். பிறர் துன்பங்களைத் தம் துன்பங்களைப் போன்று எண்ணித் துடைக்க முற்பட்டனர். சமூக நோக்குடன் தம் செயல் என்று எண்ணாது இறைவன் செயல் என எண்ணினர்.

2. (i) ஆகமங்கள்.

(ii) முத்திக்கு சிறந்த வழியாகிய பக்தி நெறிக்கு வழிவகுக்கின்ற சரியை கிரியை நெறிக்குப் பயிற்சியாகவமையும். ஆலய வழிபாட்டால் முத்தி இன்பம் கிடைக்கும். மனவமைதியைப் பெறலாம். ஆன்மாக்களை இறைவனோடு லயிக்கச்செய்யும் இடம் ஆலயமாகும். உள்ளம் தூய்மை பெறும், தவநெறி கைகூடும்.

(iii) முன்னேச்சரம் 63 நாயன்மார்களுக்கு எழுந்தருளிய விக்கிரகங்களைக் கொண்ட சிறப்பையுடையது. இவர்களுக்கு எடுக்கப்படும் விழாவே பக்தோற்சவம் எனப்படும் சிவனடியார் திருவிழாவாகும். மாலையில் 63 நாயன்மார்களின் திருவுருவங்களை அழகிய இரதத்தில் எழுந்தருளப்பண்ணி இரதமானது சுவாமியை எதிர்நோக்கியவாறே பின்னோக்கிப் பவனி வரும். இது கண்கொள்ளாக் காட்சியாகும்.

(iv) இங்கு ஆகமம் சாரா வழிபாட்டு முறை காணப்படும். வேடர் வழிவந்த கப்புறாளை பூசை செய்வர். வாயைத் துணியாற் கட்டி மந்திரம் சொல்லாது மௌன பூசை செய்வர். திருவிழாக்காலத்தில் மூலஸ்தானத்திலிருக்கும் புனிதப் பெட்டி அலங்கரிக்கப்பட்ட யானை மீது பவனி வரும்.

3. (i) இறைவனோடு மிக நெருங்கியிருந்து வழிபடுதலும், இறைவனின் சிந்தனையோடும் இருப்பதனையே நீள நினைத்தல் எனும் தொடர் விளக்குகின்றது.

(ii) விநாயக சதுர்த்தி விரதம், விநாயகர் சஷ்டி விரதம், விநாயகர் சுக்கிரவார விரதம் முத்தி சித்திக்கும். கொடிய வினைகள் வேரோடு அறுக்கப்படும். மாயாமலம் துண்டிக்கப்படும். தெய்வத்தன்மை பொருந்திய செல்வம் கிடைக்கும்.

(iii) மாசி மாதம் தேய்பிறை பதினான்காம் நாள் இவ்விரதம் அனுட்டிக்கப்படும். சிவராத்திரி அன்று நாள் முழுதும் கண் விழித்து நித்திரை செய்யாது இரவு முழு நேரத்தையும் சிவ சிந்தனையிலும், சிவகதை கேட்பதிலும் கழித்து இரவு நான்கு யாமமும் சிவாலய தரிசனம் செய்ய வேண்டும். இரவு முழுவதும் நித்திரை முழிக்க இயலாதவர் இலிங்கோற்பவ காலம் வரை விழித்தல் வேண்டும். இக்காலத்தில் சிவதரிசனம் செய்வது மிகவும் விசேடமானது.

(iv) வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத்திருத்தல். வீட்டை மெழுகியும், கோலமிட்டும் அழகு படுத்தல். நீராடி புதிய ஆடை தரித்தல், புதிய பாத்திரங்களில் உணவைச் சமைத்தல்.

4. (i) உமாபதி சிவாச்சாரியார்.

மெய்கண்ட சாத்திரங்களில் திருவருட் பயனும் ஒன்றாகும். சிவஞானபோதத்தின் சார்பு நூலாகும். 10 அதிகாரங்களையுடையது. ஒவ்வொரு அதிகாரமும் 10 குறள்கள் வீதம் 100 வெண்பாக்களை உடையது. பதிமுது நிலை, உயிரவை நிலை, இருள் மல நிலை, அருளது நிலை, அருளுரு நிலை முதலிய 10 அதிகாரங்களையுடையது.

(ii) இறைவன் அல்லது சிவபெருமான். சலமிலன் என்பதன் பொருள் விருப்பு வெறுப்பு அற்றவன் ஆகும். சங்கரன் என்பதன் பொருள் சுகத்தைச் செய்பவன் என்பதாகும்.

(iii) சொரூப நிலை கடவுளின் உண்மைத் தன்மையைக் குறிக்கும். இந்நிலையில் கடவுளுக்குப் பெயர், குணம், குறி இல்லை. உருவம், அருவம், அருவுருவம் என்பன இல்லை. மனம் வாக்கு, காயத்தால் அறியப்படாது. தடத்த நிலையில் சிவன் உயிர்களுக்கு அருள் செய்து அவற்றின் துன்பங்களைப் போக்கி அருள் செய்ய இரக்கங் கொண்டு பல படிகள் இறங்கி வருகிறான். பல நிலைகளிலுள்ள கடவுள்களை அதிட்டித்து நின்று அவர்கள் மூலமாக ஆணை செலுத்தி ஐந்தொழில்களைச் செய்கிறான்.

(iv) முத்தியில் நாட்டமுடையோர் நல்வினைகளைச் செய்யும் போது "நான் செய்கின்றேன்" என்று எண்ணாமல் இறைவனுடைய திருவருளே என்னைக் கருவியாகக் கொண்டு இவற்றைச் செய்விக்கின்றது எனும் உணர்வோடு செய்ய வேண்டும்.

5. (i) ஆணவம், கன்மம், மாயை, மலங்கள் அறிவித்தாலும் அறிய மாட்டாத சடப் பொருள்கள். ஆகையால் அவை அசத்து எனவும் அசித்து எனவும் அழைக்கப்படும்.

(ii) நயனம் என்றால் கண். சகலருள் பக்குவ நிலை அடைந்தவர்களுக்குச் சிவன் மானைக்

காட்டி மானைப் பிடிப்பது போல மானிடச் சட்டை சாத்தி ஊரும், பேரும், உறவுங் கொண்டு அருள் நோக்கம் செய்தலாகும். சம்பந்தருக்கு வழங்கப்பட்ட தீட்சை நயன தீட்சையாகும். பரிசம் என்றால் தொடுதலாகும். குரு தனது கரத்தைச் சிவபெருமான் திருக்கரமாகப் பாவனை செய்து சீடனின் தலையின் மேல் வைத்தலாகும். அப்பர், சுந்தரர் மணிவாசகர் பெற்ற தீட்சை பரிச தீட்சையாகும்.

(iii) திருவடித் தீட்சை
அப்பர் திருச்சத்தி முற்றம் எனும் தலத்துக்கு வந்தார். அங்குள்ள இறைவனை வழிபட்டார். தனக்குத் திருவடித்தீட்சை செய்து வைக்குமாறு விண்ணப்பித்தார். "கோவாய் முடுகி" என்னும் பதிகம் பாடினார். இறைவன் அப்பரை நல்லூருக்கு வருமாறு பணித்தார். அங்கு அப்பர் திருமுடி மீது திருவடி சூட்டி அருளினார்.

(iv) நீராடல் சந்தியாவந்தனம், செபம், தியானம், குருசேவை, சிவனடியார் சேவை, சரியைத் தொண்டு, பஞ்சாட்சர செபம்.

6 (i) பன்னிரண்டாம் திருமுறை
ஓதுவார் உள்ளங்களைத் தூய்மைப்படுத்தும். நோய் தீர்க்கும். நல் வினைகளைப் பெருக்கும். இம்மை நலன்களைப் பெறலாம். மோட்சத்தைப் பெற வழிவகுக்கும்.

(ii) சிவபெருமான் அடியெடுத்துக் கொடுத்தார். "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்தார்.

(iii) சிவபெருமான். திருமால் - பிரம்மா அடி முடி தேடிய கதை.

(iv) இறைவன் கல்விச் செருக்குக்கும் செல்வச் செருக்குக்கும் எட்டாத பரம்பொருளாகும். தேவர்களாயினும் அகந்தையுடைவர்களாயின் அவர்களாலும் அறியப்படாதவர் சிவபெருமான்.

7. (i) மறைபொருட் கோட்பாடுகளை அறிவுறுத்தும் ஓர் ஆசிரியரின் அடியிலிருந்த கேட்டல் உபநிடதம் என்பதன் பொருள் ஆகும்.

(ii) சீவான்மாவும், பரமான்மாவும் ஒன்றே என்பது. "அது நீ ஆகின்றாய்" (தத்துவம் அசி) என்பதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

(iii) அறம் செய்க. உண்மை பேசுக. ஓதுவது ஒழியேல், அன்னையைத் தெய்வமாய்ப் போற்றுக, தந்தையைத் தெய்வமாய்ப் போற்றுக, ஆசிரியனைத் தெய்வமாய்ப் போற்றுக, பொய்யின் நீக்கி என்னை மெய்யில் நடத்துக. இருளின் நீக்கி என்னை ஒளியில் நடத்துக, இறப்பின் நீக்கி இறவா நிலைக்கு இட்டுச் செல்க.

(iv) சுவேதாஸ்வதர உபநிடதம்
"உருத்திரனே பிரமம், உருத்திரனே முழுமுதற் கடவுள். அவனுக்கு இணையாக தெய்வம் வேறில்லை. அவன் தன் ஆற்றலால் எல்லா உலகங்களையும் ஆள்கிறான். எல்லாப் பொருள்களையும் படைக்கிறான், காக்கிறான். காலமுடிவில் அவற்றையெல்லாம் ஒடுக்கிக் கொள்கிறான்" என்று கூறுகின்றது.

8. தேவராம் பொழிப்பு என்பவற்றுக்கான விடைகள் யாவும் பாடப்புத்தகத்தில் (ஆண்டு 10) நேரடியாகவே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) "பண்ணும் பதமேழும்"
பாடியவர் - சம்பந்தர்
தலம் - திருவீழிமிழலை

(ஆ) "கோல மால் வரை"
பாடியவர் - சுந்தரர்
தலம் - திருப்புன் கூர்

(இ) "சுருதி வானவனாம்"
பாடியவர் - கருவூர்த் தேவர் (திருவிசைப்பா)
தலம் - கங்கை கொண்ட சோளேச்சரம்

(ஈ) "அண்ணலார் தமக்களித்த"
பாடியவர் - சேக்கிழார் (பெரியபுராணம்)
சம்பந்தர் கண்ட தில்லைக் காட்சி

(உ) "தனந்தரும்"
பாடியவர் - அபிராமிப்பட்டர்
நூல் - அபிராமியந்தாதி

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 1995 டிசெம்பர்

### சைவ சமயம் I ஒரு மணி

1. பிரணவம் என்னும் ஓங்கார வடிவினராக விளங்குபவர்:
   1. சிவன் 2. விநாயகர் 3. முருகன் 4. திருமால்

2. முருகனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சமயம்:
   1. காணபத்தியம் 2. சாக்தம் 3. கௌமாரம் 4. சௌரம்

3. சைவசித்தாந்தம் உண்மையெனக் கொள்ளும் முப்பொருள்கள்:
   1. பதி, பசு, பாசம் 2. சூரியன், சந்திரன், அக்கினி
   3. குரு, இலிங்கம், சங்கமம் 4. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்

4. உயிரானது முற்பிறப்புக்களில் செய்த வினைகளில், இப்பிறப்பில் அனுபவிக்கின்ற பகுதிக்கு வழங்கும் பெயர்:
   1. தொகைவினை 2. ஆகாமியம் 3. சஞ்சிதம் 4. பிரார்த்தம்

5. மூவகை உயிர்களிலும் அநாதியாய்க் கலந்திருக்கும் மலம்:
   1. ஆணவம் 2. கன்மம் 3. சுத்தமாயை 4. பிரகிருதிமாயை

6. சதசத்து என்று கூறப்படுவது:
   1. ஆணவம் 2. கன்மம் 3. பதி 4. பசு

7. திருநாவுக்கரசு நாயனார் பாடிய திருத்தாண்டகம் அடங்கும் திருமுறை:
   1. பத்தாவது 2. எட்டாவது 3. ஏழாவது 4. ஆறாவது

8. இறைவற்கு ஒரு பச்சிலை, பசுவிற்கு ஒருவாயுறை, உண்ணும் பொழுது ஒரு கைப்பிடி, இனியவை பேசுதல் என்பவற்றை யாவர்க்குமுரிய அறமாகக் கூறும் நூல்:
   1. திருவாசகம் 2. திருமந்திரம் 3. திருவருட்பயன் 4. திருக்களிற்றுப்படியார்

9. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் என்னும் வரிசைக் கிரமத்திற் பாடப்படுவது:
   1. திருமறைப்பாராயணம் எனப்படும் 2. பஞ்சதோத்திரம் எனப்படும்
   3. புராணபடனம் எனப்படும் 4. வேதபாராயணம் எனப்படும்

10. மாணிக்கவாசகரின் குருபூசைத் தினம்:
    1. சித்திரைச் சதயம் 2. ஆனி மகம் 3. ஆடிச் சோதி 4. மார்கழித் திருவாதிரை

11. திருஞானசம்பந்தர் பாடிய 'சடையாயெனுமால்' என்று தொடங்கும் பதிகத்தோடு தொடர்புடைய அற்புதம்:
    1. கொல்லிமழவனது மகளின் முயலகன் என்னும் நோயை நீக்கியமை.
    2. அடியார்களுக்கு ஏற்பட்ட குளிர்ச்சுரத்தை நீக்கியமை
    3. அரவு தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்தமை
    4. தந்தையாரின் யாகத்திற்காகப் பொன் பெற்றமை

12. சிவபெருமானைத் தோழனாகக் கருதிப் பாடல் பாடியவர்:
    1. மாணிக்கவாசகர் 2. திருநாவுக்கரசர் 3. திருஞானசம்பந்தர் 4. சுந்தரர்

13. எம்பெருமான் காட்சியளித்துத் திருஞானசம்பந்தருக்குக் கொடுத்தருளிய தீட்சை:
    1. நயன தீட்சை 2. வாசக தீட்சை 3. திருவடி தீட்சை 4. மானச தீட்சை

14. கோயில்களிலே திருவிழாக்கள் நடப்பதன் பிரதான நோக்கம்:
    1. உபயகாரர்களைத் திருப்திப்படுத்தல் 2. அடியார்களைத் திருப்திப்படுத்தல்
    3. நித்திய பூசையில் ஏற்படும் குறைபாடுகளைத் தீர்த்தல்
    4. கோயிலின் புகழை ஏனையோருக்கு எடுத்துக் காட்டுதல்

15. சூல, இடப இலச்சினைகளைத் தனது தோளிலே பொறித்துக் கொள்ளப்பெற்றவர்:
    1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

16. சைவாலயங்களில் நிகழும் பூசையில் நைவேத்தியம் என்பது:
    1. இறைவனுக்கு அமுதுபடைத்தல் 3. அடியார்க்கு உணவூட்டுதல்
    3. அடியார் அமுதுண்ணுமுன் தூபம் காட்டுதல்
    4. மாகேசுர பூசைக்கு முன் அடியார் பாதங்களை விளக்குதல்

17. உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் விரதம் அனுட்டிப்பதன் உண்மை நோக்கம்:
    1. ஆகமங்கள் கூறுதற்கிணங்க ஒழுகுதல் 2. உடல் நோய் தீர்த்தல்
    3. திரிகரணங்களாலும் மெய்யன்போடு வழிபடுதல் 4. உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல்

18. மாசிமாதத் தேய்பிறை பதினான்காம் நாளில் அனுட்டிக்கப்படும் விரதம்:
    1. மாத சிவராத்திரி எனப்படும் 2. விநாயக சதுர்த்தி எனப்படும்
    3. மகா சிவராத்திரி எனப்படும் 4. மாசி மகம் எனப்படும்

19. ஏடு தொடக்க உகந்த நாள்:
    1. மகாநவமி 2. இராமநவமி 3. சித்திரை அட்டமி 4. விஜயதசமி

20. இறந்த பெற்றோரின் ஆத்ம சாந்திக்காக விரதம் அனுட்டிக்கப்படும் நாட்கள்:
    1. அமாவாசை, பௌர்ணமி 2. செவ்வாய், வெள்ளி
    3. வருடப்பிறப்பு, தைப்பொங்கல் 4. பிரதோஷம், ஏகாதசி
21. திருக்கேதீஸ்வரத்தின் தீர்த்தமாக விளங்குவது:
    1. மாணிக்ககங்கை 2. பாலாவி 3. பாவநாசம் 4. மாயவனாறு
22. அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் பக்தோற்சவம் நடைபெறும் திருத்தலம்:
    1. திருக்கோணேஸ்வரம் 2. நகுலேஸ்வரம் 3. பொன்னம்பலவாணேஸ்வரம் 4. முன்னேஸ்வரம்
23. பண்சுமந்த பாடல்களினால் இறைவனை வழிபடுவதற்கு வழிகாட்டிய வேதம்:
    1. இருக்கு 2. சாமம் 3. யசுர் 4. அதர்வம்
24. உபநிடதங்கள் மக்களின் ஈடேற்றத்திற்கு கூறும் முக்கிய உபதேசம்:
    1. பிரமத்தின் உண்மையை அறிவதுமட்டும் போதும்
    2. பிரமம் வேறு, மக்களின் உயிர் வேறு
    3. பிரமத்தின் உண்மையை அறிதலும் உணர்தலும் வேண்டும்
    4. பிரமத்தோடு கலத்தல் வேறு, முத்தி வேறு
25. குறிஞ்சி நிலத்துக்குரிய கடவுள்:
    1. மாயோன் 2. முருகன் 3. வருணன் 4. இந்திரன்
26. தொண்டர்தம் பெருமையை வலியுறுத்தும் நூல்:
    1. பெரிய புராணம் 2. சிவபுராணம் 3. திருவிளையாடற் புராணம் 4. விநாயக புராணம்
27. சைவத்தின் தொன்மையை எடுத்துக் காட்டுவனவாக அமைந்தவை:
    1. அதர்வ ஆங்கிர வேதங்கள் 2. சங்க நூல்கள்
    3. திருமுறைப் பாடல்கள் 4. சிந்துவெளி அகழ்வாராச்சிகள்
28. தில்லையம்பலத் திருக்கூத்து உணர்த்துவது:
    1. இறைவனின் ஐந்தொழில்கள் 2. முப்பொருளுண்மை
    3. ஞானத்தின் சிறப்பு 4. கூத்தின் மகத்துவம்
29. உடம்பு சார்ந்த புறத்தொழிலால் சிவனுடைய உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு:
    1. சரியை 2. கிரியை 3. யோகம் 4. ஞானம்
30. கந்தபுராணக் காப்புச் செய்யுளிற் 'சகடசக்கரத் தாமரை நாயகன்' என்று குறிப்பிடுபவர்:
    1. சிவன் 2. விநாயகர் 3. முருகன் 4. சூரியன்
31. விடிவாம் அளவும் விளக்குப் போல முத்திநிலைவரை ஆணவ இருளை ஒருவாறு நீக்குவதற்கு உயிருக்குப் பயன்படுபவை:
    1. ஞானநூல்கள் 2. நல்வினை தீவினைகள் 3. மாயா காரியங்கள் 4. நற்சிந்தனைகள்
32. 'அன்பே சிவம்' என்பதை வலியுறுத்தியவர்:
    1. சேக்கிழார் 2. சுந்தரர் 3. திருமூலர் 4. மாணிக்கவாசகர்
33. சித்தாந்தக் கோட்பாட்டைப் பன்னிரு சூத்திரங்களிற் தமிழிலே விளக்கியவர்:
    1. உமாபதி சிவாச்சாரியார் 2. மெய்கண்டதேவர்
    3. மறைஞானசம்பந்தசிவாச்சாரியார் 4. திருக்களிற்றுப்படியார்
34. சிவஞானபோதத்திற்கு வழிநூலாக அமைந்தது:
    1. திருவருட்பயன் 2. உண்மைவிளக்கம் 3. சிவஞானசித்தியார் 4. திருக்களிற்றுப்படியார்
35. "பச்சைமா மலைபோல் மேனி
    பவளவாய் கமலச் செங்கண்
    அச்சுதா அமரரேறே"
    எனப் போற்றப்படுகின்றவர்:
36. கோவில்களிலே கொடி மரம் குறிப்பது:
    1. பதி 2. பசு 3. பாசம் 4. திருவருள்
37. இறைவனால் 'அம்மையே' என்று சிறப்பாக அழைக்கப்பட்டவர்:
    1. திலகவதியார் 2. மங்கையற்கரசியார் 3. காரைக்காலம்மையார் 4. பரவையார்
38. மார்கழி மாதத்திலே சிறப்பாக ஓதப்படுவது:
    1. சிவபுராணம் 3. கோளறு பதிகம் 3. அபிராமி அந்தாதி 4. திருவெம்பாவை
39. சமயதீட்சை பெற்றவர்கள் விசேடமாகக் கைக்கொள்ளவேண்டியது:
    1. ஆலயவழிபாடு 2. பஞ்சாட்சர செபம் 3. சிவனடியார் சேவை 4. திருமுறைகளைப் படித்தல்
40. "பொய் இருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்
    மெய் இரண்டும் காணார்மிக" என்னும் திருவருட்பயன் குறட்பாவில், 'போதமாம் மெய்' என்னும் தொடரால் குறிக்கப்படுவது:
    1. நாதவடிவம் 2. அருள் வடிவம் 3. குரு வடிவம் 4. ஒளி வடிவம்

# சைவ சமயம் II 1995 டிசெம்பர் - இரண்டு மணி

1. **"என்புக்குயிர் கொடுத்தல் ஈங்கிவைதாம் ஓங்குபுகழ்த்**
**தென்புகலி வேந்தன் செயல்** - **திருக்களிற்றுப்படியார்**
   i. தென்புகலி வேந்தன் என்னும் பெயராற் குறிக்கப்படுபவர் யார்?
   ii. 'என்புக்குயிர் கொடுத்தல்' என்னும் அற்புதத்தை விபரித்து எழுதுக.
   iii. உயிர்கள், இறைவனை அடைவதற்கு சைவசித்தாந்தம் கூறும் **நான்கு** நெறிகளின் பெயர்களைத் தருக.
   iv. தென்புகலி வேந்தன் இறைவனை அடைவதற்குக் கடைப்பிடித்த நெறி யாது? அந்நெறியில் இடம்பெறும் வழிபாட்டு முறைகள் யாவை?

2. **"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா**
**மொழிக்குத் துணை முருகாவெனு நாமங்கள்"** - **கந்தரலங்காரம்**
   i. கந்தரலங்காரத்தின் ஆசிரியர் பெயரைத் தருக. அவ்வாசிரியர் பாடிய சந்தக் கவியின்பம் நிறைந்த இன்னொரு நூலின் பெயரைத் தருக.
   ii. கந்தபுராணம் புகட்டும் அறக் கருத்துக்கள் **இரட்டினைத்** தருக.
   iii. கந்தசஷ்டி விரதம் எப்பொழுது அனுட்டிக்கப்படுகின்றது? எவ்வாறு அனுட்டிக்கப்படுகின்றது?
   iv. எமது நாட்டில் முருகனுக்கு மௌனமாகப் பூசை நிகழும் தலம் ஒன்று பற்றிச் சுருக்கமாகக் கூறுக.

3. **"அன்பர்பணி செய்யவென ஆளாக்கி விட்டுவிட்டால்**
**இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"** - **தாயுமானவர்**
   i. மேற்போந்த பாடற்பகுதியின் பொருளைத் தருக.
   ii. சங்கம பத்தியில் சிறந்து விளங்கிய நாயனாருள் **ஒருவர்** பெயரைத் தருக.
   iii. சிவனடியார்கள் கொண்டிருக்கும் சிறப்பான பண்புகள் **நான்கினை** எழுதுக.
   iv. சிவனடியார்கள் வரலாற்றைக் கூறுகின்ற சைவக் காப்பியத்தின் பெயரைத் தருக. அதன் ஆசிரியர் யார்? அக்காப்பியத்தை இயற்றுவதற்கு உதவிய இரண்டு நூல்களின் பெயர்களைத் தருக.

4. **"மூன்றுதிறத் துள்ளாரும் மூலமலத் துள்ளார்கள்**
**தோன்றலர்தொத் துள்ளார் துணை"** - **திருவருட்பயன்**
   i. மூலமலம் என்னும் பெயரால் அழைக்கப்படுவது யாது?
   ii. சைவசித்தாந்தம் கூறும் அதன் பண்புகள் **மூன்றினை** எழுதுக.
   iii. மூவகை ஆன்மாக்களின் பெயர்களைத் தருக. அவற்றிடையேயுள்ள வேறுபாட்டை எழுதுக.
   iv. 'இறைபணிநிற்றல்' என்பதில் இடம் பெறவேண்டிய நான்கு ஒழுங்குகளைக் குறிப்பிடுக.

5. **"ஞாலமதில் ஞானநிட்டை யுடையோ ருக்கு**
**நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லை"** - **சிவஞானசித்தியார்**
   i. சிவஞானசித்தியார் என்னும் நூலின் ஆசிரியர் யார்?
   ii. சிவஞானசித்தியார் கூறும் ஞானியர்க்குரிய **மூன்று** பண்புகளைக் கூறுக.
   iii. யோகர் சுவாமியின் குரு யார்? அவர் யோகர் சுவாமிக்கு உபதேசஞ்செய்த மகா வாக்கியங்கள் எவை?
   iv. யோகர் சுவாமியின் பணிகளை. எடுத்துக் கூறுக.

6. **"திருக்கோயிலில்லாத திருவிலூரும்**
**திருவெண்ணி றணியாத திருவிலூரும்**
**.......................................**
**அவையெல்லா மூரல்ல வடவி காடே"** - **அப்பர்**
   i. இலங்கையிலுள்ள பாடல் பெற்ற சிவாலயங்கள் **இரண்டின்** பெயர்களைத் தருக.
   ii. திருக்கோயிலில் நடைபெறும் மகோற்சவத்தில் தேர்த்திருவிழா எதனைக் குறித்து நிற்கிறது? கோயில்களில் இறைவனுக்கு வழங்கப்படும் கண்ணாற் காணக்கூடிய உபசாரங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   iii. திருவிழாக்கள் நடைபெறுவதால் ஏற்படும் நன்மைகள் **மூன்றினைத்** தருக.
   iv. திருவெண்ணீற்றின் மகிமை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

7. **"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்**
**பதியினைப் போற்பசு பாசம் அனாதி** - **திருமந்திரம்**
   i. மேற்போந்த அடிகளில் முப்பொருள்கள் பற்றி உணர்த்தப்படும் கருத்து யாது?
   ii. பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களில் எவையேனும் **இரண்டிற்கு** இடையிலுள்ள தொடர்பினை விளக்குக.
   iii. இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம் என்னும் படிநிலைகளை விளக்குக.
   iv. "தாடலை போற் கூடல்" என்பதனால் உணர்த்தப்படுவது யாது?

8. அ. பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
   ஆ. அவற்றைப் பாடியோர் யார் என்றும், அவை எச்சந்தர்ப்பங்களிற் பாடப்பட்டன என்றும் கூறுக.
   இ. அவற்றின் பொழிப்புரையினை எழுதுக.
   1. "என்ன புண்ணியஞ்செய்தனை ..................."
   2. "ஓசை யொலியெலா மானாய் நீயே .............."
   3. "பண்சுமந்த பாடற் பரிசு ............................"
   4. "ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள ............"
   5. "பண்ணும் பரதமுங் கல்வியுந் ...................."

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 1995 டிசெம்பர்

## சைவ சமயம் I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 11. 3 | 21. 2 | 31. 3 |
| 02. 3 | 12. 4 | 22. 4 | 32. 3 |
| 03. 1 | 13. 1 | 23. 2 | 33. 2 |
| 04. 4 | 14. 3 | 24. 3 | 34. 3 |
| 05. 1 | 15. 2 | 25. 2 | 35. 4 |
| 06. 4 | 16. 1 | 26. 1 | 36. 1 |
| 07. 4 | 17. 3 | 27. 4 | 37. 3 |
| 08. 2 | 18. 3 | 28. 1 | 38. 4 |
| 09. 2 | 19. 4 | 29. 1 | 39. 2 |
| 10. 2 | 20. 1 | 30. 4 | 40. 3 |

## சைவ சமயம் II 1995 டிசெம்பர் விடைகள்

1. i. திருஞானசம்பந்தர். (பாலறாவாயர், கவுனியர்கோன்)

ii. திருமயிலாப்பூரில் சிவநேசர் என்ற அடியாரின் மகள் பூம்பாவை என்பவள் பாம்பு தீண்டி இறந்தாள். அவளுடைய எலும்பைத் தந்தையார் ஒரு குடத்திலிட்டு வைத்திருந்தார். சம்பந்தர் திருவொற்றியூருக்கு வந்த போது சிவநேசர் அவரைத் திருமயிலாப்பூருக்கு அழைத்து வந்தார். எலும்புக்குடத்தைக் கபாலீசுவரர் திருமன் வைத்து "மட்டிட்டபுன்னை" என்ற பதிகத்தைச் சம்பந்தர் பாடிய பொழுது பூம்பாவை குடத்தை உடைத்துக் கொண்டு உருப்பெற்று எழுந்தாள்.

iii. சரியை, கிரியை, யோகம், ஞானம். அல்லது,
தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம். அல்லது,
அடிமைநெறி, மகன்மைநெறி, தோழமைநெறி, ஞானநெறி.

iv. கிரியை அல்லது சற்புத்திரமார்க்கம் அல்லது மகன்மைநெறி.
முறைப்படி செய்யும் சிவபூசை (சிவலிங்கபூசை), திருமுறை ஓதுதல், துதித்தல், திருவைந்தெழுத்து மந்திரத்தைச் செபித்தல், குற்றமற்றவிரதங்களை அனுட்டித்தல், உண்மைபேசுதல், மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களைத் தூய்மையாக வைத்திருத்தல், பிறவுயிர்களிடம் அன்பும் பரிவும் காட்டல், அன்னதானம் செய்தல், ஆத்மசுத்தி செய்தல்.

2. i. அருணகிரிநாதர்.
திருப்புகழ்.

ii. நன்றி மறத்தலால் வரும் கேடு யாவற்றையும் அழிக்கும் அல்லது செய்ந்நன்றி மறவாமை, தெய்வநிந்தை புரியாமை, தெய்வநிந்தை புரிவாரோடு சேர்தல் தீமை பயக்கும்.

iii. ஐப்பசி மாதம் சுக்கிலபட்சம் வளர்பிறை பூர்வபக்கம் பிரதமை முதல் ஆறு நாட்கள்.
ஆறுதினங்களும் உபவாசம் இருத்தல் வேண்டும். அவ்வாறு செய்ய இயலாதவர்கள் முதல் ஐந்து நாட்களும், ஒவ்வொரு பொழுது உணவருந்தி சட்டியன்று உபவாசம் செய்வர்.

iv. கதிர்காமம் அல்லது மண்டூர்க்கந்தசுவாமி கோயில் அல்லது தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில்.
கதிர்காமத் தீர்த்தம் மாணிக்க கங்கையாகும். அருணகிரிநாதர் இத்தலம் மீது திருப்புகழ் பாடினார். சித்திரைப்புத்தாண்டு, திருக்கார்த்திகை விளக்கீடு, கன்னிக்கால் நாட்டும் விழா, ஆடியில் நடைபெறும் மகோற்சவம் என முக்கியமான நான்கு திருவிழாக்கள் நடைபெறும். வேடர்வழிவந்த கப்புறாளைமார் வாய்கட்டிப் பூசை செய்வர். திருவிழாக் காலத்தில் யானை மீது புனிதப்பெட்டி பவனிவரும். மூலத்தானத்தில் விக்கிரகமில்லை.

மண்டூர்க் கந்தசுவாமி கோயில் சின்னக் கதிர்காமம் என அழைக்கப்படும். கப்பூகர் வாய்கட்டிப் பூசை செய்வர். மூலத்தானத்தில் உள்ள தங்கவேல் பரமரகசியம். கதிர்காமத் திருவிழாவையடுத்து திருவிழா ஆரம்பிக்கப்படும். ஆவணிப் பூரணையில் தீர்த்தம் நடைபெறும்.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி சின்னக்கதிர்காமம் எனவழைக்கப்படும். மருதர் கதிர்காமர் மரபில் வந்தவர்கள் வாய்கட்டிப் பூசை செய்து வருகிறார்கள். மூலத்தானத்தில் வேல்வைத்து வணங்கப்படும். 65 ஆலம் இலைகளில் உணவு படைக்கும் வழக்கம் உண்டு. பூசை முடிந்ததும் தீர்த்தம், திருநீறு, மருந்து என மூவகைப் பிரசாதங்கள் வழங்கப்படும். இவை நோய்தீர்க்கும் அருமருந்துகள் ஆகும். அன்னதானக் கந்தன் எனவழைக்கப்படுவான்.

3. i. பரம்பொருளே! உன்னடியார்களுக்குத் தொண்டு செய்வதற்கு என்னை உரியவனாக்கிவிட்டால், முத்தியாகிய இன்பநிலை தானாகவே வந்தடையும்.

ii. விறன்மிண்டநாயனார் அல்லது அப்பூதியடிகள் அல்லது இளையான்குடிமாறநாயனார், அல்லது குலச்சிறைநாயனார் அல்லது திருநீலகண்டர்.

iii. அ. தூய்மையான உள்ளத்தை உடையவர்கள்.
ஆ. சிவனின் திருப்பாதம் மறக்காதவர்கள்.
இ. என்றும் சிவசிந்தனையில் ஆழ்ந்துநிற்பவர்.
ஈ. தங்களின் செயல்கள் எல்லாம் தம் செயலன்றி இறைவனின் செயலென நினைப்பவர்கள்.
உ. பலனை எதிர்பாராது பணி செய்பவர்கள்.
ஊ. ஓடும் செம்பொன்னும் ஒப்ப நோக்குபவர்கள்.

iv. பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர்புராணம்.
சேக்கிழார்.
திருத்தொண்டர் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி.

4. i. ஆணவம்.

ii. அ. ஆணவமலம் செம்பிற் களிம்பு போல ஆன்மாவில் அநாதியாகச் சேர்ந்துள்ளது.
ஆ. ஆன்மாவை அணுத்தன்மைப்படுத்தி அறியாமையை ஏற்படுத்துகிறது.
இ. ஆணவம் இருளிலும் கொடியது. பிறபொருளையும் மறைத்துத் தன்னையும் மறைக்கும் இயல்புடையது.
ஈ. நான், எனது என்ற அகங்காரத்தையும், மமகாரத்தையும் உண்டாக்கவல்லது.
உ. பிறவித்துன்பத்தைத் தரவல்லது.
ஊ. எண்ணற்ற ஆன்மாக்களோடு கலந்து நின்றும் ஆணவம் தன்னைக் காட்டாது நிற்கும்.

iii. சகலர். பிரளயாகலர், விஞ்ஞானகலர்.

**சகலர்:-** ஆணவம், கன்மம், மாயை என மும்மலங்களை உடையவர். (திரிமலத்தார்)
**பிரளயாகலர்:-** ஆணவம், கன்மம் எனும் இரு மலங்களை உடையவர். (இருமலத்தார்)
**விஞ்ஞானகலர்:-** ஆணவமலம் மட்டும் உடையவர். (ஒருமலத்தார்)

iv. அகப்பூசை, புறப்பூசை, மந்திரசெபம், திருக்கோயில் வழிபாடு, அடியார் வழிபாடு, சமூகத்தொண்டு, ஏழை, நோயாளிகள், அங்கவீனர்கள் என்போருக்கு உதவிசெய்தல், வெள்ள நிவாரணம், பஞ்சநிவாரணம், ஆதுலர்சாலை அமைத்தல், கன்னிகாதானம் முதலானவை.

5. i. அருணந்தி சிவாச்சாரியார்.

ii. அ. நன்மை, தீமைகளாகிய இருவினைகளும் இல்லை.
ஆ. வினைகளைச் செய்தால் அவற்றின் பயனை நாடுவதில்லை.
இ. சமயாசாரங்கள் செய்யவேண்டியதில்லை.
ஈ. தியானம், விரதம், புலன், கரணம், குணம், குறி, குலம் இல்லை.
உ. விருப்பு, வெறுப்பு, இன்பதுன்பம், புகழ்ச்சி, இகழ்ச்சி என்ற நிலைமையற்றவர்கள்.

iii. செல்லப்பாசுவாமிகள்.
முழுவதும் உண்மை, எப்பொழுதோமுடிந்த காரியம், ஒருபொல்லாப்புமில்லை, நாமறியோம்.

iv. சிவத்தொண்டன் என்னும் மாதஇதழை ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்திலும், செங்கலடியிலும் சிவத்தொண்டன் நிலையங்களை ஆரம்பித்தார். திருமுறைச் சிறப்பை உலகறியச் செய்தார், பல உபதேசங்களை வழங்கினார்.

6. i. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்.

ii. அழித்தல்.
அ. சந்தனச்சாந்தும் அரிசியும் மரியாதைக் கையுறைகளாக வழங்குதல். (அர்க்கியம்)
ஆ. சுவாமிக்குப் பூநூல் தரித்தல். (உபவீதம்)
இ. சந்தனச்சாந்து பூசுதல். (சந்தனம்)
ஈ. மலர்கள் இடுதல். (புஸ்பம்)
உ. தூபங் காட்டுதல். (தூபம்)
ஊ. பலவகைப்பட்ட தீபங்களைக் காட்டுதல். (தீபம்)
எ. அமுது நிவேதித்தல் (நைவேத்தியம்)
ஏ. தாம்பூலம் வழங்குதல். (தாபூலம்)
ஐ. கண்ணாடி, குடை, சாமரம், விசிறி, கொடி, ஆலவட்டம் கட்டுதல். (சோடசஉபசபரம்)
ஒ. கர்ப்பூர நீராஞ்சனஞ்செய்தல். (கர்ப்பூர நீராஞ்சனம்)
ஓ. தங்கம் கையுறையாக வழங்குதல். (சுவர்ண புஸ்பம்)

iii. அ. ஊர்மக்களை ஒன்று சேர்க்கின்றன.
ஆ. மக்கள் மனதில் நற்பண்புகளை வளர்க்கின்றன.
இ. ஐம்புலன்களுக்கு விருந்தளிக்கின்றன.
ஈ. சொந்தக் கவலைகளை மறந்து அமைதியை ஏற்படுத்துகின்றது.
உ. நித்திய பூசையின் குறைபாடுகளை நீக்குகின்றது.
ஊ. கலைகளை வளர்க்கின்றன.

எ. விருந்துபசாரம், விரதம், சுத்தம் போன்ற சைவ ஒழுக்கங்கள் பேணப்படுகின்றன.

ஏ. பல்வேறு காரணங்களினால் கோயிலின் உள்ளே சென்று வணங்க முடியாதவர்கள், தீட்சை பெறாதவர்கள், உற்சவ மூர்த்தியைத் தரிசிப்பதால் சாம்பவ தீட்சையைப் பெறுவர்.

iv. மேலான செல்வத்தை அளிக்கும். பாவங்களை எரித்து நீறாக்கும். பழிபாவங்கள் வராமல் காக்கும். ஆன்மாக்களைக் காக்கும். உயிர்களின் மலத்தை நீக்கும். பிணியை நீக்கும். சம்பந்தர் திருநீற்றுப் பதிகம் பாடி பாண்டியனின் வெப்பு நோய் தீர்த்தார். அகத்தையும், புறத்தையும் தூய்மையாக்கும். ஞானத்தைக் கொடுத்து முத்தியை அளிக்கும். ஆன்மாக்களுக்குப் பழி, பாவம் வராமல் காக்கும்.

7. i. பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களில் பதியினைப் போன்று பசு, பாசம் ஆகிய பொருள்களும் அநாதியானவை, தொடக்கமோ, முடிவோ கூறமுடியாது.

ii. **பசு - பதி:-**

பசு பதியையடைந்து முத்தி பெறுவதையே நோக்கமாகக் கொண்டது. பாசம் வலிகெடுக்கும் போது பசு பதியையடைந்து முத்தி பெறுகிறது. பதி, பசுவை மலங்களினின்றும் நீக்கி ஈடேற்றுவதற்காகத் தனு, கரண, புவன போகங்களை நல்குகிறார். பதி பசுவிடத்து ஒன்றாயும், வேறாயும் நிற்கும். முத்தி நிலையில் பதி தலைவனாகவும், பசு அடிமையாகவும் இருக்கும்.

**பசு - பாசம்:-**

பாசம் உயிரைச் சிற்றறிவும், சிறு தொழிலும் உடையதாக்கும். பசுவுடன் பாசம் அநாதியாகவே செம்பில் களிம்பு போல் கூடியிருக்கும் பசுவின் பிறவிப் பிணிக்குப் பாசம் காரணமாகவுள்ளது. பாசம் பசுவைப் பதியோடு சேரவிடாமல் தடுக்கும். பசுவில் அகங்காரத்தையும், மமகாரத்தையும் ஏற்படுத்துவது பாசமாகும்.

**பதி - பாசம்:-**

பசுவுக்கு அறியாமையைப் பாசம் ஏற்படுத்த, அந்த அறியாமையை நீக்கி அறிவை ஏற்படுத்துவது பதியாகும். பாசத்தின் பிடியிலிருக்கும் பசுவைப் பதியின் திருவருள் ஒன்றே விடுவிக்கும். பதி பசுவின் துன்பத்துக்குக் காரணமான பாசத்தின் வலியைக் கெடுத்துப் பேரின்ப முத்தியை நல்கும்.

iii. **இருவினையொப்பு:-**

இருவினையொப்பு என்பது நல்வினை, தீவினைஇரண்டிலும் அவற்றின் பயன்களிலும், விருப்பு வெறுப்பின்றி, இரண்டினையும் ஒரே தன்மையாகச் சமநிலையில் காணும் பரிபக்குவ நிலையாகும்.

**மலபரிபாகம்:-**

மலபரிபாகம் என்பது மலம் தனது சக்தி, தேய்வதற்கு உரிய நிலையை எய்துதலாகும். ஆன்மா தன்னை, மலம் பீடித்துள்ளது என்ற உணர்வினைப் பெறும். ஆணவம் வலிகெடுதல் மலபரிபாகம் எனப்படும்.

**சத்திநிபாதம்:-**

சத்திநிபாதம் என்பது உயிரின் கண் இறைவனது திருவருட்சக்தி படிந்து உயிரைத் தன்வயப்படுத்தி நிற்றல் ஆகும். மலம் வலிகெடச் சிவசக்தி ஆன்மாவில் பதிந்து சிவத்தோடு சேர்தற்காக அதைச் செலுத்துகிறது. இவ்வாறு சிவசக்தி ஆன்மாவில் பதிதல் சத்திநிபாதம் எனப்படும்.

iv. தாள் + தலை எனப்படுவது தாடலை என்றவாறு முத்திநிலையில் இறைவனும், உயிரும் இரண்டறக் கலந்து ஒன்றாகாமலும், வேறாகாமலும், நிற்கும் நிலையாகும். அத்துவிதமாகக் கலந்து நிற்கும் நிலையாகும்.

8. பாடல்கள், பொழிப்புரைகளுக்கான விடைகள் பாடப்புத்தகத்தில் நேரடியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**சந்தர்ப்பம்:-**

i. “என்ன புண்ணியஞ் ..........................”
பாடியவர்: சம்பந்தர். தலம்: திருவலஞ்சுழி.

ii. “ஓசை யொலியெலாம் .....................”
பாடியவர்: திருநாவுக்கரசர் தலம்: திருவையாறு.

iii. “பண்சுமந்த பாடற் ..........................”
பாடியவர்: மாணிக்கவாசகர். திருவம்மானை - எட்டாந்திருமுறை.

iv. “ஐந்து பேறறிவும் .............................”
பாடியவர்: சேக்கிழார். பெரியபுராணம் - சுந்தரர் தில்லைக்காட்சி.

v. “பண்ணும் பரதமும் .........................”
பாடியவர்: குமரகுருபரர். நூல் - சகலகலாவல்லிமாலை.

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1994 டிசெம்பர்

## சைவசமயம் I

ஒரு மணி

1. கந்தபுராணத்தின் காப்புச் செய்யுளில் விகடசக்கரன் எனக் குறிப்பிடப்படுபவர்.
   (1) சுப்பிரமணியர் (2) விஷ்ணு (3) சூரியமூர்த்தி (4) விநாயகர்

2. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களை ஆதாரமாகக் கொண்டு, உலகின் மிகத்தொன்மை வாய்ந்த சமயமாகக் கொள்ளப்படுவது.
   (1) சமணம் (2) சாக்தம் (3) சைவம் (4) கௌமாரம்

3. இந்துசமய நூல்களுள் காலத்தால் மிகப் பழமை வாய்ந்தது.
   (1) ஆகமம் (2) வேதம் (3) புராணம் (4) மகாபாரதம்

4. சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய திருப்பதிகங்கள்
   (1) தேவாரம் எனப்படும் (2) திருவாசகம் எனப்படும்
   (3) திருவிசைப்பா எனப்படும் (4) பத்தாந்திருமுறை எனப்படும்

5. சுந்தரரின் குருபூசைத்தினம்.
   (1) சித்திரைச் சதயம் (2) வைகாசி மூலம் (3) ஆனி மகம் (4) ஆடிச் சோதி

6. திவசம் அல்லது சிராத்தம் செய்வது.
   (1) நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக (2) தலயாத்திரை மேற்கொள்வதற்காக
   (3) இறந்தவரின் ஆத்மசாந்திக்காக (4) தேவர்களை மகிழ்விப்பதற்காக

7. நவராத்திரியை அடுத்துவரும் விஜயதசமியன்று நடைபெறும் நிகழ்ச்சி.
   (1) சூரசங்காரம் (2) கைவிசேஷம் (3) ஓணம் பண்டிகை (4) ஏடு துவக்குதல்

8. "ஏகான்ம வாதம்" எனும் அத்துவித வேதாந்தத்தை நிறுவியவர்.
   (1) திருமூலர் (2) மெய்கண்டார் (3) சங்கரர் (4) பாஞ்சோதிமுனிவர்

9. சிவபெருமான் திரிபுரங்களை எரித்தபோது ஆடியகூத்து.
   (1) பாண்டரங்கம் (2) கொடுகொட்டி (3) காபாலம் (4) குரவை

10. சிவபெருமானை அர்ச்சிக்க மிக உவந்த பத்திரம்
    (1) வில்வம் (2) தாமரை (3) முல்லை (4) விளாத்தி

11. "சங்கமம்" என்பதால் குறிக்கப்படுவது.
    (1) நீர்நிலைகள் (2) விஷ்ணு (3) சிவனடியார் கூட்டம் (4) புலவர்கள் கூட்டம்

12. சூரிய பகவானை வழிபட்டு நன்றிதெரிவிப்பதற்காக எடுக்கப்படும் விழா.
    (1) தீபாவளி (2) தைப்பொங்கல் (3) தைப்பூசம் (4) ஆடிப்பிறப்பு

13. சாந்தமும் அமைதியும் நிறைந்த குணம்.
    (1) தாமத குணம் (2) சத்துவகுணம் (3) இராசதகுணம் (4) நிர்க்குணம்

14. பாலாவியின் கரையிலே அமைந்துள்ள சிவத்தலம்.
    (1) நகுலேஸ்வ்ரம் (2) திருக்கோணேஸ்வரம்
    (3) இராமேஸ்வாம் (4) திருக்கேதீஸ்வாம்

15. வேள்விகளில் விலங்குகள் பலியிடப்படுதலை ஏற்றுக்கொள்ளாதது.
    (1) ஆகமம் (2) வேதம் (3) சாக்தம் (4) மகாபாரதம்

16. "யாதொரு தெய்வங் கொணடீர் அத்தெய்வமாகியாங்கே மாதொருபாகனார் தாம் வருவார்" இதில் மாதொருபாகனார் என்பவர்.
    (1) முருகப்பெருமான் (2) சிவபெருமான் (3) மகாவிஷ்ணு (4) பிரம்மா

17. கூடாதவர்களுடன் சேரக்கூடாது; செய்ந்நன்றி மறத்தல் மாபெருங்குற்றம் எனும் விழுமிய கருத்துக்களை நிலைநிறுத்தும் சமய இலக்கியநூல்.

(1) கந்தபுராணம் (2) திருமுருகாற்றுப்படை
(3) பெரியபுராணம் (4) சிவஞானசித்தியார்

18. "நல்லாரைக் காக்கவும், பொல்லாரை அழிக்கவும், அறத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும். தோன்றுகின்றேன்"– இவ்வாறு கூறியவர்,
(1) இராமபிரான் (2) கண்ணபிரான் (3) சிவபிரான் (4) சுப்பிரமணியர்

19. சைவத்தின் முதனூல்கள்,
(1) கந்தபுராணம், பெரியபுராணம் (2) திருக்குறள், திருமந்திரம்
(2) புராணங்கள், இதிகாசங்கள் (4) வேதம், ஆகமம்

20. ஐந்தொழில்களை உணர்த்தும் இறைவடிவம்
(1) தெட்சணாமூர்த்தி (2) அர்த்தநாரீஸ்வரர்
(3) நடராஜர் (4) சோமாஸ்கந்தர்

21. "மூலப்பிரகிருதி" எனப்படுவது,
(1) ஆணவம் (2) கன்மம் (3) மாயை (4) மலம்

22. "உழவாரப் படையாளி" எனும் சிறப்புப்பெயர் பெற்ற நாயனார்.
(1) சம்பந்தர் (2) அப்பர் (3) கண்ணப்பர் (4) சிறுத்தொண்டர்

23. சைவசமயி பெற்றுக்கொள்ளும் முதலாவது தீட்சை
(1) மானதீட்சை (2) நயனதீட்சை (3) சமயதீட்சை (3) விசேடதீட்சை

24. மகோற்சவத்தில் தேர்த்திருவிழா குறிப்பது இறைவனின்
(1) படைத்தல் தொழிலை (2) அருளல் தொழிலை
(3) காத்தல் தொழிலை (4) அழித்தல் தொழிலை

25. சரஸ்வதி தேவியின் பேரில் பாடல்களை இயற்றியவர்,
(1) அபிராமிப்பட்டர் (2) குமாரகுருபரர் (3) கபிலதேவர் (4) தாயுமானவர்

26. சிவவிரதங்களுள் ஒன்று.
(1) பிரதோஷம் (2) அமாவாசை (3) ஏகாதசி (4) பூரணை

27. மனித வாழ்வில் "பிரமச்சரியம்" எனும் பருவம்,
(1) துறவு வாழ்க்கைப் பருவம் (2) மாணவப் பருவம்
(3) கணவன், மனைவியாக வாழ்கின்ற பருவம் (4) மூப்புப் பருவம்

28. சைவமக்கள், சுபகருமங்கள் ஆற்றுவதற்கு ஆகாதன என்று விலக்கிவைத்துள்ள காலங்கள்,
(1) வளர்பிறை நாட்கள் (2) உத்தராயண காலம்
(3) ஐப்பசிமாதம் (4) அட்டமி, நவமி திதிகள்

29. முருகனுக்குச் சுவாமிநாதன் எனும் பெயர் வரக் காரணமாக அமைந்தது.
(1) சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றியமை
(2) தேவர்களின் சேனாதிபதியாக விளங்கியமை
(3) சூரபன்மனைப் போரில் வென்றமை
(4) சிவனுக்குப் பிரணவத்தின் பொருளை உணர்த்தியமை

30. சைவத்திருமுறைகள் பன்னிரண்டினுள் திருமந்திரம் இடம் பெறுவது,
(1) பத்தாம் திருமுறையில் (2) முதலாந் திருமுறையில்
(3) பன்னிரண்டாம் திருமுறையில் (4) ஏழாந் திருமுறையில்

31. சமயகுரவர் நால்வரின் பக்திநெறி இயக்கத்திற்கு அடிப்படையாக அமைவது,
(1) சமரச சன்மார்க்கம் (2) துறவுபூணல்
(3) திருக்கோயில் வழிபாடு (4) தத்துவ ஆராய்ச்சி

32. மாகேசுர பூசை என்பது,
(1) கொல்லப்படவுள்ள ஆடு, மாடு முதலிய பிராணிகளைப் பணம் கொடுத்து உயிர் மீட்கும் அறச்செயல்
(2) அநாதைகளைப் பராமரிக்கும் அறச்செயல்

(3) திருக்கோயில்களை அமைக்கம் அறச்செயல்
(4) பசித்தோர்க்கு உணவளிக்கும் அன்னதானம் எனும் அறச்செயல்

33. மேல்வருவனவற்றுள் உபநிடதமாயுள்ளது,
(1) நைத்திரீயம் (2) பிராம்மணம் (3) பாகவதம் (4) காமிகம்

34. இந்துசமயத்தைக் குறிக்கும் வழமையான பெயர்,
(1) சைவம் (2) சனாதன தர்மம் (3) பாகவத தர்மம் (4) பாரத தர்மம்

35. "திருவருட்பயன்" நூலின் முதலாம் அதிகாரம் – பதிமுதுநிலை – கூறுவது,
(1) பலவாகிய உயிர்களின் இயல்பு
(2) உயிர்களைப் பற்றி நிற்கும் ஆணவ மலத்தின் இயல்பு
(3) இறைவனின் மேலான இயல்பு
(4) இறைவனின் திருவருளின் இயல்பு

36. "பொறியின்றி ஒன்றும் புணராத புந்தி" எனத் திருவருட்பயனில் குறிப்பிடப்படுகின்ற பொருள்,
(1) ஆணவம் (2) கன்மம் (3) மாயை (4) உயிர்

37. இறைவனின் சத்தி என்று சொல்லப்படுவது,
(1) பதி (2) குருவருள் (3) சித்து (4) திருவருள்

38. "முப்பொருள்களும் வெவ்வேறு பிரிவைச் சேர்ந்தனவாய் இருப்பினும், ஒன்றோடொன்று தொடர்புள்ளனவாகவே இருக்கின்றன" – இத்தொடர்பைச் சைவசித்தாந்தம்
(1) வியாபகம், வியாப்பியம், வியாத்தி என்கிறது.
(2) இருவினையொப்பு, மலபரிபாகம். சத்திநிபாதம் என்கிறது.
(3) பிராரத்தம், ஆகாமியம், சஞ்சிதம் என்கின்றது.
(4) பாசம், தளை, கட்டு என்கின்றது.

39. "ஓம்" என்பது,
(1) சடாட்சர மந்திரம் (2) பிரணவ மந்திரம்
(3) பஞ்சாட்சர மந்திரம் (4) சத்திமூல மந்திரம்

40. "தொண்டர்குலமே தொழுதகு குலம்" – என்பதை வலியுறுத்தும் சைவசமய இலக்கிய நூல்,
(1) கந்தபுராணம் (2) திருவிளையாடல் புராணம்
(3) பெரியபுராணம் (4) சிவராத்திரி புராணம்

## கலவிப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1994 டிசெம்பர்
## சைவசமயம் I
## விடைகள்

| வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 4 | 09 | 1 | 17 | 1 | 25 | 2 | 33 | 1 |
| 02 | 3 | 10 | 1 | 18 | 2 | 26 | 1 | 34 | ** |
| 03 | 2 | 11 | 3 | 19 | 4 | 27 | 2 | 35 | 3 |
| 04 | 1 | 12 | 2 | 20 | 3 | 28 | 4 | 36 | 4 |
| 05 | 4 | 13 | 2 | 21 | 3 | 29 | 4 | 37 | 4 |
| 06 | 3 | 14 | 4 | 22 | 2 | 30 | 1 | 38 | 1 |
| 07 | 4 | 15 | 1 | 23 | 3 | 31 | 3 | 39 | 2 |
| 08 | 3 | 16 | 2 | 24 | 4 | 32 | 4 | 40 | 3 |

**வினா பிழை

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1994 டிசெம்பர்

## சைவ சமயம் II

இரண்டு மணி

1. **"திருவாசகத்துக்கு உருகாதார், ஒரு வாசகத்துக்கும் உருகார்" (பழமொழி)**
   - (i) மாணிக்கவாசகர் அருளிச் செய்த இரண்டு நூல்களின் பெயர்களை எழுதுக.
   - (ii) 'தென்னவன் பிரமராயன்' எனும் சிறப்புப் பட்டம் யாரால் யாருக்கு வழங்கப்பட்டது? வழங்கப்பட்டமைக்குரிய காரணத்தை விளக்குக.
   - (iii) சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படிபட்ட சந்தர்ப்பத்தைச் சுருக்கமாக விளக்குக. இதிலிருந்து நீர் விளங்கிக் கொள்ளுகின்ற உண்மை யாது?
   - (iv) மாணிக்கவாசகர் அவதரித்த ஊர், இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட இடம், நின்ற நெறி, முத்தி பெற்ற தலம் என்பவற்றைக் குறிப்பிடுக.

2. **"விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்<br>அரும்பு மலர் காய் கனிபோல் அன்றோ பராபரமே" (தாயுமானவர்)**
   - (i) சைவநாற்பாதங்கள் யாவை? அரும்பு, மலர், காய், கனி என்பன முறையே நாற்பாதங்களில் எவ்வெவற்றைக் குறித்து நிற்கின்றன?
   - (ii) சரியை நெறியின் மறுபெயர் என்ன? சரியைத் தொண்டுகள் நான்கு கூறுக.
   - (iii) சற்புத்திர மார்க்கத்துக்குரிய ஒழுக்கங்கள் நான்கு தருக. *சாமீபமுத்தி* என்பதற்குப் பொருள் விளக்கம் கூறுக.
   - (iv) சகமார்க்கம் என்பதைச் சுருக்கமாக விளக்குக. இந்த மார்க்கத்தில் நின்று முத்தியடைந்த நாயனார் யார்?

3. **"இங்கென துயிர்போ லுற்ற விளவலு மிளைய சேயுஞ்<br>செங்கையில் வேலோன் றன்னைச் சிறுவனென் றெண்ணல் கண்டாய்<br>பங்கயன் முதலோர் காணாப் பரமனே யாகு மென்றார்<br>அங்கவர் மொழிந்த வாறுஞ் சரதமே யான தன்றோ" (கந்தபுராணம்)**
   - (i) இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள "இளவல்"; "இளையசேய்"; "சிறுவன்"; "பங்கயன்" என்னும் சொற்கள் ஒவ்வொன்றும் யார் யாரைக் குறித்து நிற்கின்றது என்பதை எழுதுக.
   - (ii) "பங்கயன் முதலோர் காணாப் பரமனே யாகும்..... " என்ற பாடல் தொடர் உணர்த்தும் புராணக் கதையைச் சுருக்கமாக எழுதுக.
   - (iii) கந்தபுராணத்தின் ஆறு காண்டங்களினதும் பெயர்களைத் தருக.
   - (iv) வீரசோழியம் என்பது என்ன? அது கந்தபுராணத்துடன் எந்த வகையில் தொடர்புறுத்தப்பட்டுள்ளது?

4. **"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சத்தி<br>பின்னமிலான் எங்கள் பிரான்" (திருவருட்பயன்)**
   - (i) "சத்தி பின்னமிலான்" யார்? அத்தகைய இறைவடிவத்தை என்ன பெயர் கொண்டு அழைக்கின்றனர்?
   - (ii) "மன்னுயிர்கள்" என்பதிலிருந்து உயிர்களின் எத்தன்மைகள் உணர்த்தப்படுகின்றன? சத்தி உயிர்களுக்கு எவ்வாறு உதவுகின்றது?
   - (iii) கடவுளின் சொரூபலக்கணம், தடத்தலக்கணம் ஆகிய நிலைகளைச் சுருக்கமாக விபரிக்குக.
   - (iv) பாதி ஆண், பாதி பெண் ஆகத் தோற்றமளிக்கும் இறைவடிவம் உணர்த்தும் சமய, சமூக தத்துவம் என்ன என்பதைக் குறிப்பிடுக.

5. **"மன்னாருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்திலே திருக்கேதீஸ்வரம் என்னும் தேன்பொந்து ஒன்று உளது." - (நாவலர் பெருமான்)**
   - (i) திருக்கேதீஸ்வரத்தில் எழுந்தருளியிருக்கின்ற இறைவன், இறைவி ஆகியோரின் திருநாமங்களையும் அங்குள்ள தீர்த்தம், புராதன இலிங்கம் ஆகியவற்றின் பெயர்களையும் எழுதுக.
   - (ii) திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தொன்மைச் சிறப்பினைச் சுருக்கமாக விபரிக்குக.
   - (iii) திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் முக்கிய உற்சவங்கள், விழாக்கள் ஆகியவற்றில் இரண்டினைக் குறிப்பிட்டு அவை கொண்டாடப்படுகின்ற காலம், முறை என்பனபற்றிக் குறிப்பு எழுதுக.
   - (iv) "சுயம்புலிங்கம்" என்றால் என்ன என்பதை விளக்குக. இலங்கையில் சுயம்புலிங்கம் உள்ள புராதன திருத்தலங்கள் இரண்டு எழுதுக.

6. **"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" - (ஔவையார்)**
   - (i) ஆயலம் என்பதன் பொருள் யாது? ஆலய அமைப்பு, ஆலயவழிபாடு என்பனவற்றிக் கூறும் சைவ

முதனூல் எது?

(ii) சிவாலயத்தில் முறைப்படி சுவாமி தரிசனம் செய்வது எவ்வாறு அமையவேண்டும் என உம்மைக் கேட்ட ஒருவருக்கு நீர் கூறும் விளக்கத்தைச் சுருக்கமாக எழுதுக.

(iii) ஆயலத்தினுள் சென்ற நீர், அங்கு செய்யத்தகாதன சில செய்யப்படுவதைக் காண்கின்றீர். அவற்றைப் பட்டியல்படுத்திக் காட்டுக.

(iv) "ஆலயம், கலை விருத்திக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் நிலைக்களனாக விளங்கி வருகின்றது" என்னும் கூற்றினை உமது அனுபவங்களிலிருந்து உதாரணங்கள் தந்து ஆராய்க.

7. "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" - (திருமந்திரம்)

(i) மேலே தரப்பட்டுள்ள திருமந்திரப் பாடல் அடியினால் உணர்த்தப்படுவது யாது? திருமந்திரத்தை இயற்றி அருளியவர் யார்?

(ii) சைவநெறியில் நிற்போர் சமூக வாழ்க்கையில் விலக்கவேண்டியவை எவை? மேற்கொள்ள வேண்டியவை எவை?

(iii) எவ்வுயிர்க்கும் தீங்கு நினைக்கவோ, செய்யவோ கூடாது என்பதற்குச் சைவம் கூறும் நியாயங்களை எழுதுக.

(iv) சைவநெறிக்கு ஆதாரமாக இருக்கின்ற அன்பின் சிறப்பைப்பற்றியும், வாழ்க்கையில் அன்பு வழியைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் சுருக்கமாக விளக்குக.

8. (அ) பின்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(ஆ) அவற்றைப் பாடியோர் யாவர் என்பதையும் அவை பாடப்பட்ட சந்தர்ப்பங்கள் எவையென்பதையும் கூறுக.

(இ) அவற்றின் பொழிப்பினை எழுதுக.

(1) "மாதர்ப்பிறைக் கண்ணியானை..."
(2) "முன்னிக் கடலைச் சுருக்கி...."
(3) "உள்ளம் பெருங்கோயில்...."
(4) "கையுந் தலைமிசை....."
(5) "விழிக்குத் துணை...."

********

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1994 டிசெம்பர்
## சைவசமயம் II
### விடைகள்

**1.** (i) திருவாசகம், திருக்கோவையார்

(ii) திருவாதவூரர் எனவழைக்கப்படும் மாணிக்கவாசகருக்கு அரிமர்த்தன பாண்டியனால் வழங்கப்பட்டது.

கலைத்திறன், கல்வியறிவு, ஒழுக்கம் இருந்தமையாலும், முதலமைச்சராகப் பணியாற்றியமையாலும் வழங்கப்பட்டது.

(iii) மணிவாசகரை அரசன் ஒறுத்தமையால் வைகைஆறு பெருகியது. அரசன் தன்னைப் பொறுத்தருளுமாறு அடிகளை வேண்டினான். அடிகளார் சிவனை நினைந்து என்பெல்லாம் நெக்குருக நின்றார். அப்பொழுது வெள்ளம் வற்றத் தொடங்கியது. குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் அணைகட்டுதற்கு அரசனால் ஆற்றங்கரையில் பங்கு அளந்து விடப்பட்டது. தனது பங்கை அடைக்க ஆளில்லையெனச் செம்மனச்செல்வி மதுரைச் சொக்கநாதரிடம் வேண்டினாள்., அப்பொழுது சிவபெருமான் கூலியாளாக வந்து உதிர்ந்த பிட்டைக் கூலியாகப் பெற்று அணைகட்ட உடன்பட்டார். கூலியாக வந்த இளைஞன் வேலை செய்யாது ஆடிப்பாடிப் பொழுதைப் போக்கினான். அணைக்கட்டைப் பார்வையிடவந்த பாண்டியன் தூங்கிக் கொண்டிருந்த இளைஞனின் முதுகில் ஓங்கியடித்தான். அந்த அடி எல்லா உயிர்கள் மீதும் பட்டது.

உண்மை - இறைவன் எல்லா உயிருள்ளவற்றிலும் உயிர் இல்லாதனவற்றிலும் நீக்கமறச் சர்வ வியாபகமாக நிறைந்துள்ளார்.

(iv) அவதரித்த ஊர் - திருவாதவூர்.
ஆட்கொள்ளப்பட்ட இடம் - திருப்பெருந்துறை
நின்றநெறி - ஞானநெறி அல்லது சன்மார்க்கம்
முத்தி பெற்ற தலம் - சிதம்பரம் அல்லது தில்லை.

**2.** (i) சரியை, கிரியை, யோகம், ஞானம்.
சரியை - அரும்பு; கிரியை - மலர்; யோகம் - காய்; ஞானம் - கனி

(ii) தாசமார்க்கம் அல்லது அடிமைநெறி.
சரியைத் தொண்டுகள் எனப்படுபவை
கோவிலைக் கூட்டுதல், மெழுகுதல், நந்தவனம் அமைத்தல், பூவெடுத்தல், பூமாலை தொடுத்தல், இறைவனைப் புகழ்ந்து பாடுதல், விளக்கேற்றுதல், சிவனடியார்களுக்குப் பணிவிடை செய்தல் முதலியன.

(iii) சிவலிங்க பூசை, திருமுறைகள் ஓதல், துதித்தல், திருவைந்தெழுத்து மந்திரத்தைச் செபித்தல், விரதங்கள் அனுட்டித்தல், உண்மை பேசுதல், உயிர்களிடம் அன்பும் பரிவும் காட்டல், அன்னதானம் செய்தல், மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களையும் தூய்மையாக வைத்திருத்தல்.
சாமீபமுத்தி என்பதன் பொருள் சிவனோடு அருகிலிருத்தல் அல்லது நின்மலன் அருகிலிருத்தல் என்பதாகும்.

(iv) சகமார்க்கம் என்றால் தோழமைநெறி அல்லது யோக சாதனம் எனப் பொருள்படும்.
சாதகன் இறைவனைத் தோழனாகப் பாவித்த அன்பு செய்யும் முறையாகும்.
சகமார்க்கத்தில் ஒழுகி முத்தியடைந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார் ஆவார்.

**3.** (i) இளவல் – சிங்கமுகன், இளைய சேய் – இரணியன், சிறுவன் – முருகன், பங்கயன் – பிரமா

(ii) பிரமாவும், விஷ்ணுவும் தாமே பெரியவர் என வாதித்துக் கொண்டிருக்கையில் இலிங்கவடிவான ஓர் ஒளிப்பிழம்பு தோன்றியது. இருவரும் அடி, முடி தேடப்புறப்பட்டனர். காட்டுப்பன்றி வடிவிற் பூமியைப் பிளந்து கொண்டு விஷ்ணு கீழ் நோக்கிச் சென்றார். அன்னப்பறவை வடிவில் பிரமா மேலே பறந்து சென்றார். இருவர் முயற்சியும் பலிக்கவில்லை. தாங்கள் தோற்றதாக அரனடி பணிந்தனர். இலிங்கோற்பவமூர்த்தி வெளிப்பட்ட காலம் மகாசிவராத்திரி ஆகும்.

(iii) உற்பத்தி காண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம்.

(iv) வீர சோழியம் என்பது தமிழிலக்கண நூலாகும். கந்தபுராணம் அரங்கேற்றப்பட்டபொழுது காப்புச் செய்யுளில் வரும் திகழ்தசக்கரம் – திகடசக்கரம் எனப் புணர்ந்தமைக்கு இலக்கண விதி கேட்ட ஒருவருக்க, குமரக் கடவுளே ஒரு புலவராக வந்து, வீரசோழியம் என்ற நூலைச் சான்றாகக் காட்டிப் புலவரை ஏற்கச் செய்தார்.

**4.** (i) சக்தி பின்னமிலான் – சிவபெருமான் இறைவடிவத்தை அர்த்தநாரீஸ்வரர் எனவும் மாதொருபாகன் எனவும் அழைப்பர்.

(ii) மன்னுயிர்கள் என்றுமுள்ளவை; உயிர்கள் பல; சக்தியே உயிர்கள் சிவத்தைச் சார்ந்து முத்தி பெறுவதற்கு உதவுகிறது.

(iii) சொரூப இலக்கணம் கடவுளின் உண்மைத் தன்மையைக் காண்பிப்பது. இந்த நிலையில் கடவுளுக்குப் பெயர், குணம் , குறி முதலியன இல்லை. உருவம் அருவம் அருவுருவம் இல்லை சித்தாந்திகள் பரமசிவம் அல்லது சிவம் என்று கூறுவர்.
தடத்த இலக்கணம் என்பது சிவன் உயிர்களுக்கு அருள் செய்து அவற்றின் துன்பங்களைப் போக்குவதற்குப் பலபடிகள் இறங்கி வந்து பல நிலைகளில் உள்ள கடவுளர்களை அதிட்டித்து நின்று, அவர்கள் மூலமாக ஆணை செலுத்திப் படைத்தல் முதலிய தொழில்களைச் செய்கின்றது. இந்த நிலை கடவுளின் தடத்த இலக்கணம். இந்த நிலையில் சிவத்தோடு சக்தி பிரிவின்றி இருக்கும்.

(iv) அர்த்த நாரீஸ்வரர் உணர்த்தும் சமயதத்துவம் சிவசக்தி சங்கமமாகும். சிவம் இன்றிச் சக்தியில்லை. சக்தியின்றிச் சிவமில்லை என்பதாகும். சமூகதத்துவம் ஆண் பெண் சமத்துவமாகும்.

**5.** (i) இறைவன் – கேசீச்சரநாதர்;
இறைவி – கௌரி அம்பாள் ; தீர்த்தம் – பாலாவி ; புராதன இலிங்கம் – மகாலிங்கம்.

(ii) ஈழத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட ஆறு ஈச்சரங்களில் ஒன்றாகும் தட்சினகைலாயமான்மியம் தலவரலாற்றைச் சிறப்பாகக் கூறும். மகாவம்சம், தாடாவம்சம், யாழ்ப்பாண வைபவமாலை போன்றவற்றிலும் குறிப்பிடப்படுகிறது. சோழர் ஆட்சிக்காலத்தில் இவ்வாலயம் “ராஜராஜேஸ்வரமகாதேவன் கோவில்” சிறப்பிக்கப்பட்டது. பாண்டியப் பேரரசின் ஆதரவையும் பெற்றது.

(iii) ஆலய மகோற்சவம் சித்திரை மாதம் நடைபெறும் விழாக்கள் ஆவன மாசிமாதத்து மகாசிவராத்திரி முக்கியமானது. நான்கு யாமங்களிலும் சிறப்பாகப் பூசை நடைபெறும். பாலாவியில் நீராடி அடியார் வழிபடுவர். பங்குனி உத்தரம், பிரதோசவிரதம் முதலியனவும் கொண்டாடப்படும்.

(iv) தானாகத் தோன்றிய லிங்கம் சுயம்புலிங்கமாகும். ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் சுயம்புலிங்கமுள்ள கோயில்களாகும்.

**6.** (i) ஆலயம் என்பது ஆன்மா இலயித்து நிற்கும் இடம் அல்லது பசுக் கட்டப்படும் இடம் எனப்பொருள்படும். ஆகமம் கோயிலமைப்பு, வழிபாடுபற்றிக் கூறும் நூலாகும்.

(ii) கோபுரம், நந்தி, பலிபீடம், விநாயகர், மூலமூர்த்தி, கோவில் உட்பிரகாரத்தை வணங்கிய பின் இறுதியாகச் சண்டேசுரரை வணங்கி விடைபெறவேண்டும்.

(iii) கால்கழுவாது போதல், வீண்வார்த்தை பேசுதல், விக்கிரகங்களைத் தொடுதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே செல்லுதல், வழிபடுபவர்களுக்கு இடையூறு செய்தல்.

(iv) மாக்கோலமிடுதல், சுவாமிக்குச் சாத்துப்படி சாத்துதல் போன்ற அழகுக்கலைகள் வளர்கின்றன. நாதஸ்வர, தவில் வாத்தியக்கலைவளர ஆலயங்களே நிலைக்களன். ஊரிலுள்ள தெய்வ சந்நிதியில் கற்பூரத்தின் மேலே கையை வைத்துச் சத்தியம் செய்வதன் மூலம் பல வழக்குகள் தீர்க்கப்பட்டன. கோயில் விழக்காலம் தொடங்கி முடியும்வரை மக்கள் விரதம் அனுட்டிப்பதும் சைவ போசனத்தைக் கைக்கொள்வதும் வழக்கமாகும்.

**7.** (i) நாம் அனுபவிக்கும் இன்பத்தைப் போல எல்லோரும் இன்பம் அனுபவிக்கவேண்டும். திருமந்திரத்தை இயற்றியவர் திருமூலர் ஆவார்.

(ii) விலக்கவேண்டியவை:- பொய், களவு, மது, காமம் கொலை, புலால் உண்ணல், பிறவுயிர்களை இம்சித்தல், சுயநலம் என்பவையாகும்.
மேற்கொள்ளவேண்டியவை:- அன்பு, கருணை, அருள், உண்மை, அகிம்சை, சேவை, பிறர் நலம் பேணல், வாய்மை, பொறுமை என்பன போன்றவையாகும்.

(iii) எல்லாவுயிர்களிலும் இறைவன் இருக்கிறான். யாவும் இறைவனின் படைப்புக்கள். சகோதரத்துவம், சகோதர உறவு சிவம் அன்பு சம்பந்தப்பட்டது. ஆதலால் சிவனை வழிபடுபவர்கள் எவ்வுயிர்க்கும் தீங்கிழைக்கக் கூடாது. வினைப்பயன் நம்மை அடையுமாதலால் பிறவுயிர்களுக்கு நன்மை செய்யவேண்டும்.

(iv) அடியார் கண்ட அன்பு நெறியாக எங்கள் சமய நெறி மலர்ந்தது.

"அன்பும் சிவமுமிரண்டென்பர் அறிவிலார்
அனபே சிவமாவதாரு மறிகிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந் திருந்தாரே"

என்று எங்கள் சமயநெறி அன்பின் வடிவமாக இறைவனைக் காண்கிறது. அன்பின் திறம் அவரவர் நிலைக்கேற்ப வெளிப்படுகிறது. எல்லா அறங்களுக்கும் அடிப்படையாக உண்மையின் ஒளி துலங்க உறுதி, அஞ்சாமை, வீரம் என்ற நல்லியல்புகள் விளங்க எங்கள் அடியார் கண்ட அன்புநெறி வளர்ந்தது. அன்பின் வலிவும் துணிவும் வாய்க்கப் பெறுவதற்கு இறையருள் வேண்டும். அன்பின் கனிவினால் ஞானம் விளைகிறது.

8. பாடல்கள், பொழிப்புரை பாடப்புத்தகத்தில் நேரடியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

(i) "மாதர்ப் பிறைக் ............"
பாடியவர் - அப்பர், தலம் - திருவையாறு.

(ii) "முன்னிக் கடலைச் ..........."
பாடியவர் - மாணிக்கவாசகர், தலம் - திருவண்ணாமலை

(iii) "உள்ளம் பெருங் ..........."
(பாடியவர் -) திருமூலரால் திருமந்திரத்தில் பாடப்பட்டது.

(iv) "கையுந்தலை .........."
(பாடியவர் -) சேக்கிழாரால் பெரியபுராணத்தில் பாடப்பட்டது.

(v) "விழிக்குத்துணை ........."
அருணகிரிநாதரால் கந்தரலங்காரத்திற் பாடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1993 டிசெம்பர்

## சைவசமயம் I

1. விநாயகன் என்பதன் பொருள்,
   1. தமக்கு மேலே வேறொரு தலைவன் இல்லாதவன்
   2. தம்மை வழிபடுபவர்க்குத் தலைமைப் பதவியை வழங்குபவன்
   3. கணங்களின் தலைவன்
   4. ஞான நாயகன்

2. பொலனறுவையில் சிவனுக்குக் கோயில் கட்டுவித்துச் சிறப்புப் பெற்ற மன்னன்,
   1. ஆரியச்சக்கரவர்த்தி 2. இராஜராஜசோழன்
   3. குளக்கோட்ட மன்னன் 4. புவனேகபாகு

3. இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் நடைபெற்ற சர்வமத மகாநாட்டில் கலந்துகொண்டு இந்துமதத்தின் சிறப்பினை உலகறியச் செய்தவர்,
   1. சுவாமி சிவாநந்தர் 2. சுவாமி விபுலாநந்தர்,
   3. சுவாமி விவேகாநந்தர் 4. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

4. முப்பொருள் உண்மை பற்றிக் கூறுவது,
   1. வேதாந்தம் 2. மாயாவாதம் 3. அத்துவிதீயம் 4. சைவசித்தாந்தம்

5. "தாண்டக வேந்தர்" எனும் சிறப்புப் பெயர் பெற்றவர்,
   1. அப்பர் 2. சுந்தரர் 3. மாணிக்கவாசகர் 4. சம்பந்தர்

6. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர்,
   1. திலகவதியார் 2. புனிதவதியார் 3. இசை ஞானியார் 4. மங்கையர்க்கரசியார்

7. நான், எனது என்பவை முறையே
   1. மமதை, அகந்தை 2. அகந்தை, மமதை
   3. மமகாரம், அகங்காரம் 4. ஓங்காரம், ஏகாரம்

8. தியானம் என்பது,
   1. இறைவனின் நாமங்களை உச்சரித்தல் 2. இறைவனின் புகழ் பாடுதல்
   3. மனத்தை இறைநினைவில் நிறுத்துதல் 4. மந்திரம் ஓதுதல்

9. மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
   அண்ண லார் அடி யார்தமை அமுது செய்வித்தல்
   என்பதற்கிணங்க வாழ்ந்து காட்டியவர்,
   1. பூசலார் 2. குங்கிலியக்கலையர்
   3. திருநீலகண்டர் 4. இளையான்குடிமாற நாயனார்

10. சிந்துவெளி நாகரிகம் இடம்பெற்ற பிரதேசம், தற்போதைய
    1. இந்தியாவில் உள்ளது. 2. ஈரான் உள்ளது.
    3. எகிப்தில் உள்ளது. 4. பாகிஸ்தானில் உள்ளது.

11. "திரிமலத்தார்" என்பவர்,
    1. விஞ்ஞானகலர் 2. பிரளயாகலர் 3. சகலர் 4. நிமலர்

12. வேதத்தின் ஞானகாண்டத்தைச் சார்ந்தவை,
    1. புராண இதிகாசங்கள் 2. ஆகமங்கள்
    3. உபநிடதங்கள் 4. சங்கிதைகளும் பிராமணங்களும்.

13. சங்ககாலத் தமிழ் நூல்களில் ஆலமர் செல்வன் எனக் குறிப்பிடப்படுபவர்,
    1. சிவன் 2. முருகன் 3. விஷணு 4. இந்திரன்

14. கொடிமரம் குறிப்பது,

1. பதி 2. பாசம் 3. பசு 4. படைத்தல்

15. மாணிக்கவாசகர் நின்ற நெறி,

1. சரிகை 2. கிரியை 3. யோகம் 4. ஞானம்

16. சிவபெருமானை நினைத்து மாசில் வீணையும் என்று தொடங்கும் பதிகத்தைத் திருநாவுக்கரசர் பாடிய சந்தர்ப்பம்,

1. அவர் சமணர்களால் சுண்ணாம்பு நீற்றறையில் அடைக்கப்பட்டிருந்தபோது
2. கல்லுடன் கட்டி அவரைக் கடலிற் போட்ட போது
3. பாம்பு தீண்டி இறந்த மூத்த திருநாவுக்கரசுவை உயிர்ப்பித்தபோது
4. கயிலைக் காட்சியைக் கண்ட போது

17. நவராத்திரி காலத்தில் பாராயணஞ் செய்ததற்குகந்த பாடல்கள் அடங்கிய நூல்,

1. திருப்பாவை 2. திருவாசகம்
3. சகலகலாவல்லிமாலை 4. பராபரக் கண்ணி

18. நற்சிந்தனை எனும் நூலின் ஆசிரியர்,

1. செல்லப்பா சுவாமிகள் 2. பட்டினத்தார்
3. யோகர் சுவாமிகள் 4. தாயுமானவர்

19. சேக்கிழார் பெரிய புராணம் கூறும் வரலாற்றுச் செய்திகள்.

1. அரசர்கள் பற்றியவை 2. சிவனடியார்கள் பற்றியவை
3. ஆழ்வார்கள் பற்றியவை 4. சித்தர்கள் பற்றியவை

20. அன்பும் சிவமும் இரண்டென்பர்.......

1. அறிந்தவர் 2. சைவர்கள்
3. அறிவிலார் 4. தொண்டர்கள்

21. பின்வருவனவற்றுள் சரியை நெறிக்குரியது,

1. குருவைப் பூசித்தல் 2. சிவலிங்கபூசை செய்தல்
3. சமாதி கூடுதல் 4. திருக்கோயிலில் தொண்டுசெய்தல்

22. மாயையின் மகனுமன்றோ வரம்பிலா வருள் பெற்றுய்ந்தான். இங்கு மாயையின் மகன்

1. முருகன் 2. சூரன் 3. வீரவாகுதேவர் 4. இராவணன்

23. புலாலுண்ணலைச் சைவசமயம் அனுமதிப்பதில்லை எனுங் கூற்று

1. சரியானது 2. பொருத்தமற்றது 3. பிழையானது 4. ஆரியருடையது

24. உபசாவம் என்பதன் கருத்து

1. பசித்திருத்தல் 2. விழித்திருத்தல் 3. உடனுறைதல் 4. தனித்துறைதல்

25. பிரமனும் விட்டுணுவும் அடிமுடி தேடிய வரலாறு உணர்த்துவது,

1. கடவுளர் பலர் எனும் கருத்தினை
2. சிவனை விடப் பிரம விட்டுணுக்கள் உயர்ந்தவர்கள் என்பதை
3. முப்பொருள் உண்மையை
4. செருக்கு உள்ளவர்கள் கடவுளை அடையமுடியாது என்பதை

26. சுயம்புலிங்கமாக இறைவன் அமர்ந்துள்ள திருத்தலம்

1. தெய்வந்துறை சந்திரசேகரரீஸ்வரம் 2. கீரிமலை நகுலேஸ்வரம்
3. கொக்கட்டிச் சோலை தான்தோன்றியீஸ்வரம் 4. திருக்கோணேஸ்வரம்

27. மாத்தளை முத்துமாரியம்மன் தேர்த்திருவிழா நடைபெறும் தினம்

1. பங்குனி உத்தரம் 2. ஆடிப்பூரம் 3. தைப்பூசம் 4. மாசி மகம்

28. ஒரு பயன் கருதியே மக்கள் இறைவனுக்கு அர்ச்சனை செய்விக்கிறார்கள் – இது,

1. நிட்காமிய வழிபாடு 2. காமிய பூசை 3. நித்திய பூசை 4. நைமித்திய பூசை

29. "நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளர்ந்த மறைமொழி" யே

1. தந்திரம் ஆகும். 2. யந்திரம் ஆகும். 3. மந்திரம் ஆகும். 4. மருந்து ஆகும்.

30. மூலமலம் எனப்படுவது,

1. ஆணவம் 2. கன்மம் 3. மாயை 4. ஆகாமியம்

31. சைவத் தமிழ் மக்கள் வளர்த்த மெய்யியற்கலை,

1. வேதாந்தம் 2. துவைதம் 3. சித்தாந்தம் 4. ஏகான்மம்

32. அமாவாசை விரதம் அனுட்டிப்பது,

1. இறந்த தந்தையின் ஆத்ம சாந்திக்காக
2. இறந்த தாயின் ஆத்ம சாந்திக்காக
3. உலகமாந்தரின் உய்விற்காக
4. ஆன்ம ஈடேற்றத்திற்காக

33. கடவுள் எல்லா உயிர்களிலும் வியாபித்திருப்பதை உணர்பவர்

1. பிறருக்கு இம்சை புரிவர்
2. எவர்க்கும் இம்சை புரியார்.
3. எடுத்த காரியங்களில் வெற்றிபெறுவர்.
4. தன்னலமுள்ளவராயிருப்பர்.

34. "பற்றுக பற்றற்றான் பற்றினை" என்பதில் பற்றற்றான் எனும் பதம் குறிப்பது

1. இறைவனை 2. ஆன்மாவை 3. ஆணவத்தை 4. துறவியை

35. காந்தியடிகள் வாழ்க்கையில் கடைப்பிடித்த இரண்டு மனித விழுமியங்கள்

1. சத்தியாக்கிரகமும் சனனாயகமும்
2. பகவத்கீதையும் உபநிடதங்களும்
3. சுதந்திரமும் ஒத்துழையாமையும்
4. சத்தியமும் அகிம்சையும்.

36. அருணகிரிநாதரின் திருப்புகழ்,

1. பஞ்ச தோத்திரங்களுள் இடம் பெறுகின்றது.
2. பன்னிருதிருமுறைகளுள் இடம் பெறுகிறது.
3. பன்னிரு திருமுறைகளுள் இடம் பெறவில்லை.
4. மகாவிஷ்ணுவின் பெருமையைப் பாடுகின்றது.

37. சைவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது, முதலில்

1. குசலம் விசாரிக்க வேண்டும்.
2. இருகரங்கூப்பி வணக்கம் சொல்லுதல் வேண்டும்.
3. கைகுலுக்கி வரவேற்க வேண்டும்.
4. மௌனஞ் சாதித்தல் வேண்டும்.

38. சிவபொருமானுக்குச் சங்கரன் எனும் பெயர் வந்தது,

1. சங்காரத்தை நிகழ்த்துவதால்
2. சங்கினைக் கையில் ஏந்துவதால்
3. ஐங்கரனின் தந்தை என்பதால்
4. சகலருக்கும் சுகம் செய்பவன் என்பதால்

39. திருவருட்பயன் முதல் ஐந்து அதிகாரங்களும் நூலில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ஒழுங்குமுறை,

1. பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருள்மலநிலை, அருளுருநிலை, அருளதுநிலை
2. பதிமுதுநிலை, உயிரவைநிலை, அருளதுநிலை, அருளுருநிலை, இருள்மலநிலை
3. பதிமுதுநிலை. இருள்மலநிலை, உயிரவைநிலை, அருளது நிலை, அருளுருநிலை
4. பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருள்மலநிலை, அருளதுநிலை, அருளுரு நிலை

40. பெரியோரை வணங்கும் பழக்கமுள்ளவனுக்கும், தினமும் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும், பெரியவர்களுக்கும் பணிவிடை புரிபவனுக்கும் ஆயுளும் கல்வியும், புகழும், பலமும் பெருகுகின்றன. இக்கூற்று

1. சைவநெறிக்கு உடன்பாடானது.
2. சைவநெறிக்கு புறம்பானது
3. ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று.
4. மனிதமுன்னேற்றத்திற்குத் தடைவிதிப்பதாக உள்ளது.

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1993 டிசெம்பர்

# சைவசமயம் II

1. "................................................. தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" (மாணிக்கவாசகர்)

   1. இறைவன் உயிர்களுக்குப் பிறவிகளைக் கொடுப்பதன் நோக்கம் என்ன? இது இறைவனின் எண்குணங்களுள் எதனைக் காட்டுகின்றது?
   2. இறைவன் மீது கொண்ட அன்பினாலும் உயிர்களிடத்தில் கொண்ட இரக்கத்தினாலும் நாம் செய்கின்ற நல்வினைகள் நான்கு கூறுக.
   3. உயிரின் இயல்பான தன்மை ஒன்று எழுதுக?
      உயிர், சதசத்து என்பதை விளக்குக.
   4. ஓர் உயிர் மீண்டும் பிறவாதநிலையை எய்திவிட்டால், அந்நிலையினை எவ்வாறு அழைப்பர்?

2. "பூமியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி"

   1. பூமியர்கோன் யார்? புகலியர்கோன் யார்?
   2. சமய குரவர்கள் அற்புதங்களை நிகழ்த்தியமைக்குரிய காரணங்களை எழுதுக?
   3. சம்பந்தரும் அப்பரும் இணைந்து ஆற்றிய அற்புதங்களையும் தொண்டுகளையும் சுருக்கமாக விபரிக்க.
   4. சைவ மெய்யடியார்களிடம் காணப்பெற்ற சிறப்பியல்புகள் நான்கு தருக.

3. "நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசை கொள்ள வாராய் பராபரமே" (தாயுமானவர்)

   1. இப்பாடல் தொடரில் பரம்பொருளின் திருக்கோயிலாகக் குறிப்பிடப்படுவது எது? நறுமணத்தூபமாகக் கூறப்படுவது யாது? மஞ்சன நீராகக் கொள்ளப்படுவது எது?
   2. அகப் பூசையின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய மெய்யடியார் ஒருவரின் பெயரினைக் குறிப்பிடுக.
   3. திரிகரண சுத்தி எனும் போது எவற்றின் தூய்மையை அது குறிப்பதாகும்?
   4. யாவராலும் நடைமுறைப் படுத்தப்படக்கூடிய சைவம் போற்றும் நற்செயல்கள் நான்கினைக் கூறுக.

4. "பரப்பமைந்து கேண்மின் இது பாற்கலன்மேற் பூனை கரப்பருந்த நாடுங் கடன் (திருவருட்பயன்)

   1. திருவருள் எமக்குத் துணையாக இருக்கவும் அதனை யாம் அனுபவியாது உலக இன்பங்களை அனுபவிக்க விரும்புவது எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
   2. குருவிடம், மாணாக்கர் பாடம் கேட்கும் போது எவ்வாறு இருந்து கேட்கவேண்டும்?
   3. சந்தான குரவர் நால்வரின் பெயர்களையும் ஒழுங்கு முறையில் எழுதுக. திருவருட்பயன் எனும் நூலினை இயற்றியவர் யார்?
   4. சைவசித்தாந்த அடிப்படைக் கருத்துக்கள் பண்டு தொட்டு தமிழ் மக்களிடையே நிலவி வந்தமைக்கு, ஆதாரங்களைக் காட்டும் தமிழ் நூல்கள் நான்கினைக் குறிப்பிடுக.

5. "ஆலுமறை சூழ்கயிலையின் கனருள் செய்த
சாலுமொழியால்வழி தடுத்தடிமை கொள்வான்" (கந்தபுராணம்)

   1. இறைவன் சுந்தரரின் திருமணத்தைத் தடுத்து அவரை ஆட்கொண்டதேன்?
   2. (அ) சேக்கிழாரது பெரிய புராணத்திற்கு முதல் நூலாகவும், வழிநூலாகவும் விளங்குபவை எவை?
      (ஆ) பெரிய புராணக் காப்புச் செய்யுளில் யாருக்குத் துதி செலுத்தப்பட்டுள்ளது?
   3. சிவபெருமான் அடியார்க்கெளியர் என்பதையும் அகந்தையுள்ளோர் அறிதற்கு அரியர் என்பதையும் விளக்குதற்கு, தடுத்தாட்கொண்ட புராணத்திலிருந்து ஒவ்வொரு சம்பவம் தருக?
   4. ஆலாலசுந்தரர், கமலினியார், அநிந்திதையார் ஆகியோர் இம் மண்ணில் பிறந்தபோது பெற்றுக் கொண்ட பெயர்களை எழுதுக?

6. "சேயோன் மேய மைவரை உலகம்
மாயோன் மேய காடுறை உலகம்"

(தொல்காப்பியம்)

1. சேயோன், மாயோன் எனத் தொல்காப்பியம் குறிப்பிடும் கடவுளர் முறையே எந்தெந்த நிலங்களுக்குரியவர்கள் என்பதைக் குறிப்பிடுக?
2. வைதிக சமயங்கள் ஆறின் பெயர்களையும் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றினதும் முழுமுதற் கடவுளின் பெயரை எழுதுக?
3. (அ) ஞானத்தின் திருவுரு என ஆறுமுகன் அழைககப்படுவதற்குரிய காரணம் யாது?
   (ஆ) குமரக் கடவுள் சுவாமிநாதன் ஆன சம்பவத்தை எடுத்து விளக்குக?
4. (அ) விஷ்ணு என்ற சொல்லின் பொருள் என்ன?
   (ஆ) மகா விஷ்ணு காலந்தோறும் உலகில் அவதாரங்கள் எடுப்பதேன்?

7. சமயம் வேறு, வாழ்வு வேறு அன்று
1. நீங்கள் கற்ற சைவசமயம் பாடப் பகுதிகளுள், வாழ்க்கையோடு இணைந்ததுதான் சமயம் என்பதைப் புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ளவை எவை?
2. சைவர்களுக்கு வாழ்க்கையோடிணைந்த பண்டிகையாகத் தைப்பொங்கல் முக்கியத்துவம் பெறுமாற்றை விளக்குக.
3. தீபாவளிப் பண்டிகையுடன் தொடப்பான புராணக் கதையினைக் கூறி, அக்கதை உணர்த்தும் தத்துவத்தினை எடுத்துக் காட்டுக.
4. சித்திரைப் புதுவருடப் பிறப்பினைக் கொண்டாடுகின்ற முறையினையும் அது தொடர்பாக அனுசரிக்கப்படுகின்ற சமய, சமூக ஆசாரங்களையும் சுருக்கமாக விபரிக்க.

8. (அ) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
   (ஆ) அவற்றைப் பாடியோர் யாவர் என்பதையும் அவை பாடப்பட்ட சந்தர்ப்பங்கள் எவையென்பதையும் கூறுக.
   (இ) அவற்றின் பொழிப்பினை எழுதுக.
   1. "தாயினும் நல்ல தலைவர் ..........."
   2. "ஓசை ஒலியெலாம் ........."
   3. "கோலமால்வரை மத்தென .........."
   4. "திருவாக்கும் .........."
   5. "தனந்தரும் .........."

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1993 டி

# சைவசமயம் I விடைகள்

| வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 1 | 11 | 3 | 21 | 4 | 31 | 3 |
| 02 | 2 | 12 | 3 | 22 | 2 | 32 | 1 |
| 03 | 3 | 13 | 1 | 23 | 1 | 33 | 2 |
| 04 | 4 | 14 | 1 | 24 | 3 | 34 | 1 |
| 05 | 1 | 15 | 4 | 25 | 4 | 35 | 4 |
| 06 | 2 | 16 | 1 | 26 | 3 | 36 | 3 |
| 07 | 2 | 17 | 3 | 27 | 4 | 37 | 2 |
| 08 | 3 | 18 | 3 | 28 | 2 | 38 | 4 |
| 09 | 4 | 19 | 2 | 29 | 3 | 39 | 4 |
| 10 | 4 | 20 | 3 | 30 | 1 | 40 | 1 |

## க. பொ. த (சாதாரணம்) 1993 டிசெம்பர்

# சைவசமயம் II விடைகள்

1. 1. ஆணவத்தின் பிடியிலிருந்து உயிரை விடுப்பதற்காக இறைவன் உயிர்களுக்குப் பிறவிகளைக் கொடுக்கின்றான். கன்மம் அல்லது வினைப்பயன்களை அனுபவிப்பதற்காகக் கொடுக்கிறான். பேரருள் உடைமையைக் காட்டுகின்றது.

2. கடவுள் வழிபாடு, இன் சொல்வழங்குதல், பசிப்பிணி போக்குதல், பிறர் செய்கின்ற பிழைகளைப் பொறுக்குதல் நலிந்தோரைக் காப்பாற்றுதல், கோவிலில் திருத்தொண்டுகள் புரிதல்.

3. உயிர் சார்ந்ததன் வண்ணமானது, அறிவித்தவழியே அறியும் தன்மையுடையது, சுதந்தரமான செயலில்லாத் தன்மையுடையது.
உயிர் பதியைச் சாரும் போது சத்தாகவும், பாசத்தைச் சாரும் போது அசத்தாகவும் ஆகும் தன்மையுடையதால் உயிர் சதசத்து எனப்படும்.

4. முத்தி நிலை அல்லது மோட்சம் அல்லது வீடுபேறு

2. 1. கூன்பாண்டியன் அல்லது நின்றசீர்நெடுமாறன் (பூமியர் கோன் எனவும்) திருஞானசம்பந்தர் புகலியர்கோன் எனவும் அழைக்கப்படுவர்.

2. சமயகுரவர்கள் சகல உயிர்களிடத்தும் அன்பு பூண்டவர்கள். பிறவித் துன்பங்களைத் தமக்கு நேர்ந்ததுன்பங்களாகக் கொள்ளும் அருளாளர்கள். எனவே பிறரின் துன்பங்களை நீக்க வேண்டுமென்ற அன்பு நிலையே அவர்கள் அற்புதங்கள் செய்யக் காரணமாகும். அவற்றை இறைவன் செயல்களாகக் கருதும் பண்பினராவார்.

3. அ. திருவீழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்ட போது சிவபெருமானை வேண்டிப்பாடிப் படிக்காசு பெற்று இருவரும் அடியார்களுக்கு அமுது செய்வித்தனர்.

ஆ. திருமறைக்காட்டில் பூட்டியிருந்த திருக்கதவுகளை அப்பர் திறக்கப் பாடினார். மீண்டும் அடைக்கும்போது சம்பந்தர் பாடினார்.

4. அ. இறைபணிக்கு அர்ப்பணித்தவர்கள்

ஆ. மக்கள் சேவையே மகேசுவரன் சேவையாகக் கொள்பவர்கள், அன்பு, அருள், தூய்மை உடையவர்கள்.

இ. அடியார்க்கும் அடியாராக விளங்குபவர்கள்

ஈ. யாவும் சிவன் செயலாகக் கருதி ஓட்டையும், பொன்னையும் ஒக்க நினைப்பவர்கள்.

3. 1. திருக்கோவில் – மனம் அல்லது உள்ளம்.
நறுமணத்தூபம் – இறைவனைப் பற்றிய நினைவு.
மஞ்சனநீர் – அன்பு

2. பூசலார் நாயனார் எனப்படும் வாயிலார்.

3. மனம், வாக்கு, காயம்.

4. அ. இறைவனுக்கு ஒரு பச்சிலை இட்டு வணங்குதல்.

ஆ. பசுவுக்குச் சிறிதளவேனும் பசும் புல் கொடுத்தல்.

இ. பசியென்று வந்தவர்க்கு உண்ணும் உணவில் ஒருபிடி அல்லது ஒரு கவளம் உணவு கொடுத்தல்.

ஈ. எல்லோருடனும் இனிய சொற்களைப் பயன்படுத்தி உரையாடுதல்.

4. 1. திருவருள் எமக்குத் துணையாக இருக்கவும், அதனை அனுபவியாது விடுத்து உலகவின்பங்களைத் தேடி, அனுபவிக்க விரும்புவது, பாற்குடத்தின் மீது இருக்கும் பூனை அந்தப்பாலைக் குடிக்காமல் அயலில் ஓடுகின்றது கரப்பான் பூச்சியை உண்ண விரும்பி அதனைப் பிடிக்கப் பாய்ந்தோடும் முறைமை என்பதாகும்.

2. குருவிடம் மாணாக்கர் பாடம் கேட்கும் போது மனத்தைப் பலவிடயங்களிலும் அலையவிடாமல் அதனை ஒரு நிலைப்படுத்தி அமைதி பேணிச்சிந்தித்துத் தெளிதல் வேண்டும்.

3. மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார்.

4. தொல்காப்பியம், திருமந்திரம், திருக்குறள், தேவாரம், திருவாசகம், கந்தபுராணம் (ஏதாவது நான்கு).

5. 1. கைலையில் சிவபெருமானின் கட்டளைப்படி ஆலாலசுந்தரர் பூவுலகில் பிறந்து உலகவாழ்வில் ஈடுபட முயலும் போது தம்மை அவ்வாறு, ஈடுபாடு கொள்ள விடாது, தடுத்தாட்கொள்ள வேண்டும் என, இறைவனை இறைஞ்சி இறைவனும் அவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்டமைக்கு இணங்கச் சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்பட்டார்.

2. முதல்நூல் – சுந்தரரின் திருத்தொண்டர் தொகை வழி நூல் – நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி எனும் நூல்.

3. அடியார்க் கெளியர் – சுந்தரரின் திருமணத்தைத் தடுத்தாட்கொள்ள எளிய கிழப் பிராமண வடிவில் வந்தார்.

அறிதற்கரியர் – அகந்தையுடன், சிவபெருமானின் அடிமுடி தேடிய பிரமாவுக்கும், விட்டுணுவுக்கும் அறிதற்கரியவராயிருந்தார்.

4. ஆலால சுந்தரர் – சுந்தரர்
கமலினியார் – பரவையார்
அறிந்திதையார் – சங்கிலியார்.

6. 1. சேயோன் – குறிஞ்சி நிலக்கடவுள்
மாயோன் – முல்லை நிலக்கடவுள்

2. சைவம் – சிவன்
வைணவர் – விட்டுணு
சாக்தம் – சக்தி
காணபத்தியம் – கணபதி
கௌமாரம் – முருகன்
சௌரம் – சூரியன்

3. அ. சிவபெருமானின் நெற்றிக்கண் ஞானக்கண்ணாகும். அந்தஞானக் கண்ணிலிருந்து ஆறுமுகன் தோன்றியமையால் ஞானத்தின் திருவுரு எனப்பட்டான்.

ஆ. தந்தையான சிவனுக்கு ஞானம் போதித்தமையால் சுவாமிநாதன் எனப்பட்டார்.

4. அ. எங்கும் நிறைந்தவர்
ஆ. நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலை நாட்டவும் அவதாரங்கள் எடுக்கிறார்.

7. 1. விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள் என்பன.

2. உணவுற்பத்திக்கும் உயிர்களின் வளர்ச்சிக்கும், சூரியன் வேண்டிய சக்தியைக் கொடுக்கின்றான். தை மாதம் முதல் நாளன்று சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்து முகமாக பொங்கல் பொங்கிச் சூரியனுக்குப் படைத்து வழிபாடு செய்கின்றனர், தொடர்ந்து மாட்டுப் பொங்கல் சைவத் தமிழ் மக்கள் செய்ந்நன்றி அறிதலைப் பெரிதாக மதிப்பவர். இது ஒரு சமூக விழாவாகவும் அமைக்கின்றது.

3. நரகாசுரன் கதை.
நல்லவர் காக்கப்படுவர், தீயவர் அழிக்கப்படுவர், தர்மம் நிலைநாட்டப்படும், ஞானமாகிய ஒளியை அடைதல்.

4. அதிகாலையில் எழுந்து மருத்து நீர் வைத்து மங்கல நீராடிப் புத்தாடை தரித்துக் கோயில் வழிபாடு செய்து பொங்கிப் படைத்துக் கை விசேடம் பெற்றுப் பெற்றோர், பெரியோர் இனசன பந்துக்கள் தரிசனம் கண்டு மாலைநேரங்களில் தேசிய விளையட்டுக்களை விளையாடிப் புத்தாண்டுப் பண்டிகையைக் கொண்டாடுவர் இந்துக்கள்.

8. தேவாரம், பொழிப்புரை விடைகள் பாடப்புத்தகத்தில் நேரடியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆ. 1. தாயினும் நல்ல தலைவர்.....
பாடியவர் – சம்பந்தர் தலம் – திருக்கோணேச்சரம்
2. ஓசை ஒலியெலாம்.....
பாடியவர் – திருநாவுக்கரசர் தலம் – திருவையாறு
3. கோலமால் வரை மத் தென.....
பாடியவர் – சுந்தரர் தலம் – திருப்புன்கூர்
4. திருவாக்கும்......
பாடியவர் – கபிலதேவ நாயனார்
சந்தர்ப்பம் – திருவிரட்டைமணிமாலை – விநாயகர் மீது பாடப்பட்டது. 11ம் திருமுறையிலுள்ளது.
5. தனந்தரும்........
பாடியா – அபிராமிப்பட்டர்
நூல் – அபிராமி அந்தாதி.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர ) ப் பரீட்சை - 1992 டிசெம்பர்

# சைவசமயம் 1

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. விநாயகரை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சமயம்
1) கௌமாரம் 2) சௌரம் 3) காணபத்தியம் 4) சைவம்

02. சிந்துவெளி நாகரிக காலச் சமயநெறியில் இடம்பெற்றிருந்தது.
1) விஷ்ணுவழிபாடு 2) சிவ வழிபாடு
3) விநாயகர் வழிபாடு 4) ஐயனார் வழிபாடு

03. 'கோயில்' என்று சைவரால் சிறப்பித்துக் கூறப்படுகின்ற திருத்தலம்
1) சிதம்பரம் 2) வைத்தீஸ்வரன்கோயில்
3) திருக்கேதீஸ்வரம் 4) திருக்கோயில்

04. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை.
1) நான்கு புருடார்த்தங்கள் 2) நான்கு மறைகள்
3) நால்வகை முத்தி 4) சைவ நாற்பாதங்கள்

05 சைவ சித்தாந்தக்கொள்கைகளைத் தெளிவாகக் கூறுகின்ற முதல் தமிழ் நூல்.
1) திருமந்திரம் 2) திருவாசகம்
3) கந்தபுராணம் 4) திருவருட்பயன்

06 பாசம் என்பதைக்குறிக்கும் வேறொரு சொல்.
1) உயிர் 2) கடவுள் 3) தளை 4) பசு

07 "சிவபூமி" எனத் திருமூலநாயனார் போற்றிய நாடு.
1) இந்தியா 2) இலங்கை 3) பாலித்தீவு 4) அயோத்தி

08 மருணீக்கியார் என்னும் பிள்ளைத் திருநாமத்தைக் கொண்ட அடியார்.
1) திருஞான சம்பந்தர் 2) சுந்தரமூர்த்தி
3) திருநாவுக்கரசர் 4) மாணிக்கவாசகர்

09 மாணிக்கவாசகரின் தேனூறும் திருவாசகப் பாடல்களில் செறிந்து காணப்படும் கருத்துக்கள்.
1) வேதாந்தக்கருத்துக்கள் 2) சைவ சித்தாந்தக்கருத்துக்கள்
3) உலகாயதக் கருத்துக்கள் 4) அவைதிக சமயக்கருத்துக்கள்

10. பிற சமயத்தவர்களுடன் சில காலம் வாழ்ந்து பின் சைவ சமயத்திற்கு மீண்டும் தொண்டாற்றியவர்.
1) அப்பர் 2) சம்பந்தர்
3) சேக்கிழார் 4) அருணகிரிநாதர்

11. "தாயினும் நல்ல தலைவரென்றடியார்" என்று தொடங்கும் தேவாரப் பதிகம் பாடப்பெற்ற தலம்.
1) திருவலஞ்சுழி 2) திருக்கேதீச்சரம்
3) திருக்கோணமலை 4) திருவீழிமழலை

12. திருக்கோயில் அமைப்பு முறைகள் , விக்கிரக அமைப்பு , வழிபாட்டு முறைகள் என்பன பற்றிச் சிறப்பாக உரைக்கும் நூல்
1) வேதம் 2) ஆகமம் 3) இதிகாசம் 4) புராணம்

13. நாம் வாழுகின்ற இக் காலம்.
1) கிருதயுகம் 2) திரோதாயுகம் 3) துவாபரயுகம் 4) கலியுகம்

14. ஆடியமாவாசையன்று பிதிர்க்கடன் நிறைவேற்றப்படும் திருத்தலம்
1) கதிர்காமம் 2) அமிர்தகழிமாமாங்கேஸ்வரம்

3) ஒட்டிசுட்டான்தான்தோன்றீஸ்வரம் 4) சந்திரசேகரம்

15. " ஒரு பொல்லாப்புமில்லை " , " எப்பொழுதோ முடிந்தகாரியம்" ஆகிய மகா வாக்கிய ங்களை மொழிந்த ஞானியார்.
1) செல்லப்பா சுவாமி 2) மகாதேவ சுவாமி
3) யோகர் சுவாமி 4) கடையிற் சுவாமி

16. பின்வருவனவற்றுள் சிவனை நோக்கி அனுட்டிக்கப்படும் விரதம்.
1) மகா நவமி 2) பிரதோஷம்
3) புரட்டாதிச்சனிவிரதம் 4) சட்டிவிரதம்

17. உத்தராயணம் எனப்படும் காலப்பகுதி.
1) தை மாதம் முதல் ஆனிமாதம் வரையிலானது.
2) ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையிலானது.
3) சித்திரை மாதம் முதல் புரட்டாதி மாதம் வரையிலானது.
4) ஐப்பசி மாதம் முதல் பங்குனி மாதம் வரையிலானது.

18. "வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன் " எனும் பாடல் தொடர் இடம் பெறும் நூல்.
1) சிவப்பிரகாசம் 2) திருமந்திரம் 3) திருக்குறள் 4) சிவஞானபோதம்

19. "உண்மை பேசுக , அறம்செய்க ,ஓதுவது ஒழியேல் அன்னையைத் தெய்வமாகப் போற்றுக, தந்தையைத் தெய்வமாகப் போற்றுக, ஆசிரியனைத் தெய்வமாகப் போற்றுக" எனும் அறிவுரையை முன்வைக்கும் உபநிடதம்.
1) தைத்தீரிய உபநிடதம் 2) கட உபநிடதம்
3) சுவேதாஸ்வதரஉபநிடதம் 4) ஈசோபநிடதம்

20. மாசி மகத்தன்று அம்பாள் பஞ்சரதங்களில் பவனிவரும் திருத்தலம்.
1) தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயம்
2) நயினை நாகபூசணியம்மாள் ஆலயம்
3) திருகோணமலை நகரக் காளி கோயில்
4) மாத்தளை முத்துமாரியம்மன் கோயில்

21. "சின்னக் கதிர்காமம் " எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்ற தலம்
1) மண்டூர்க் கந்தசுவாமி கோயில் 2) சித்தாண்டிக் கந்தசுவாமி கோயில்
3) மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் 4) குமாரபுரம் முருகன் கோயில்

22. திருத்தொண்டர் புராணம் என்னும் நூலின் காவிய நாயகன்.
1) திருநாவுக்கரசர் 2) சுந்தரர்
3) மாணிக்கவாசகர் 4) திருஞானசம்பந்தர்

23. உற்பத்தி காண்டம் முதல் தட்சகாண்டம் ஈறாக ஆறுகாண்டங்களை கொண்ட நூல்
1) திருத்தொண்டர்புராணம் 2) திருவிளையாடற்புராணம்
3) சிவராத்திரி புராணம் 4) கந்தபுராணம்

24. சமயகுரவர் நால்வருள் சற்புத்திர மாக்கத்தை கடைப்பிடித்தவர்.
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) சுந்தர மூர்த்தி 4) மாணிக்கவாசகர்

25. சைவசமயத்திற்குரிய மெய்கண்ட சாத்திரங்களின் தொகை.
1) 28 2) 14 3) 63 4) 4

26. சைவசித்தாந்தத்தின்படி பதி , பசு, பாசம் எனும் முப்பொருளும்
1) அநாதியாயுள்ளவை 2) இடையில் வந்தவை
3) நிலையற்றவை 4) நித்தியமற்றவை

27. "உள்ளது இல்லதாகாது , இல்லது உள்ளதாகாது" எனும் கொள்கை.
1) ஏகான்மவாதம் 2) மாயாவாதம் 3) சற்காரியவாதம் 4) உலகாயதம்

28. "நான்" "எனது" எனும் செருக்கை மனிதர்களிடத்தே உண்டாக்குவது.

1) ஆணவம் 2) கன்மம் 3) மாயை 4) ஆன்மா

29. "ஆடிவேல்விழா" சிறப்பாகக் கொண்டாடப்படும் இடம்.
1) கண்டி 2) கதிர்காமம் 3) கொழும்பு 4) மன்னார்

30. திருக்கோயிலில் செய்யத்தகாதது .
1) ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்தல்
2) பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல்
3) ஓடி விளையாடுதல்
4) விநாயகரை வழிபடும்போது தலையில் மும்முறை குட்டுதல்

31. பூரணை விரதம் அனுட்டிப்பது,
1) இறந்த தந்தையின் பொருட்டு 2) இறந்த தாயின் பொருட்டு
3) முருகனை நோக்கி 4) சக்தியை நோக்கி

32. ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்று மலங்களையும் உடையவர்.
1) சகலர் 2) விஞ்ஞானகலர் 3) பிரளயாகலர் 4) சீவன்முத்தர்

33. மாட்டுப்பொங்கல் நடைபெறுவது.
1) சித்திரை வருடப்பிறப்பிற்கு அடுத்தநாள்
2) தைப்பொங்கலுக்கு அடுத்தநாள்
3) தீபாவளிக்கு அடுத்தநாள்
4) ஆடிப்பிறப்புக்கு அடுத்தநாள்

34. இலிங்கோற்பவ காலம்
1. நவராத்திரி நள்ளிரவு
2. சிவராத்திரி நள்ளிரவு
3. திருக்கார்த்திகை நள்ளிரவு
4. மார்கழித் திருவாதிரை அதிகாலை

35. கந்தரலங்காரத்தில் ஆசிரியர்.
1) குமரகுருபரசுவாமிகள் 2) தாயுமானவர் 3) அருணகிரிநாதர் 4) கச்சியப்பர்

36. பஞ்ச தோத்திரங்கள் ஓதப்பட வேண்டிய வரிசைக்கிரமம்.
1) திருவாசகம், திருவிசைப்பா ,திருப்பல்லாண்டு , திருப்புராணம், திருப்புகழ்
2) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்
3) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புகழ்
4) தேவாரம், திருவிசைப்பா, திருவாசகம், திருப்பல்லாண்டு, திருப்புராணம்

37. அரிகரவடிவம் எனும் மூர்த்தம்.
1) வைணவத்தையும் சைவத்தையும் இணைக்கும் அம்சம்
2) வைணவத்தையும் சாக்தத்தையும் இணைக்கும் அம்சம்
3) சைவத்தையும் சாக்தத்தையும் இணைக்கும் அம்சம்
4) காணபத்தியத்தையும், கௌமாரத்தையும் இணைக்கும் அம்சம்

38. மெய்கண்ட தேவர் ,அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நால்வரும்
1) சந்தான குரவர், 2) சமயகுரவர் 3) சைவாசாரியர் 4) சமயாசாரியர்

39. சைவசித்தாந்தத்தின்படி அறிவித்தால் அறிந்து அறிவிக்காவிட்டால் அறியமாட்டாத பொருள்.
1) பதி 2) உயிர் 3) ஆணவம் 4) மாயை

40. பாடசாலையில் சைவசமய விழாக்கள் நடாத்துவதனால்.
1) பாடசாலைக்குப் புகழும் பெருமையும் பெற்றுக்கொள்ளப்படுகிறது.
2) மாணவர் வகுப்பறையில் கற்றுக்கொள்ளமுடியாத பல சமய விடயங்களையும் விழுமியங்களையும் கற்றுக்கொள்கின்றனர்.
3) கல்வித் திணைக்களத்தின் பதிப்புரைகள் நிறைவு செய்யப்படுகின்றன.
4) பெற்றோர் திருப்தியும் மகிழ்ச்சியும் பெறுகின்றனர்.

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர(சாதாரணதர)ப் பரீட்சை- 1992 டிசெம்பர்

## சைவசமயம் 11

01. "மற்று நீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம் பெற்றனை"
(சேக்கிழார் பெரியபுராணம்)
(அ) சுந்தரர், வன்றொண்டன் என்று யாரால் , எந்தச் சூழ்நிலையில் குறிப்பிடப்பட்டார்?
(ஆ) சுந்தரமூர்த்தி நாயனார் நிகழ்த்திய அற்புதச்செயல்கள் நான்கு கூறுக.
(இ) சுந்தரர் இறைவன் அருள் பெறுவதற்குப் பின்பற்றி நின்ற மார்க்கம் எது?
(ஈ) ஈழநாட்டின் எத்திருத்தலத்தை வணங்கிச் சுந்தரர் தேவாரப்பதிகம் பாடினார்? அவர் எங்கிருந்து கொண்டு அப்பதிகம்பாடினார்?

02. "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலாற் காயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" – திருவாசகம்
(அ) சைவ சித்தாந்தம் கூறும் கடவுளின் இரு நிலைகள் யாவை?
(ஆ) ஒரு நாமம் , ஓருருவம், குணம், குறி என்பன இல்லாத நிலையிலுள்ள கடவுளை சித்தாந்திகள் எவ்வாறு குறிப்பிடுவர்? இக்கடவுளை வேதாந்திகள் எவ்வாறு குறிப்பிடுவர்?
(இ) இறைவனின் எண்குணங்கள் எவை?
(ஈ) சைவசித்தாந்தம் கூறும் 'பசுவின்' இயல்பினைச் சுருக்கமாகக் கூறுக?

03. 'ஒரு பொருளுங் காட்டா திருள் உருவங் காட்டும்
இரு பொருளுங் காடடாதிது'. – திருவருட்பயன்
(அ) மும்மலங்கள் எவை?
(ஆ) ஆணவம் இருளினுங் கொடியது என்பதை திருவருட்பயன் ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?
(இ) பிராரத்தம் ,சஞ்சியம் , ஆகாமியம் என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக.
(ஈ) "இறைபணி நிற்றல்" என்பதில் அடங்கியுள்ள சைவ ஒழுக்கங்களை இனங்கண்டு எழுதுக.

04. 'புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி' – கந்தபுராணம்
(அ) பண்டைத் தமிழ் மக்கள் முருகன் பற்றி கொண்டிருந்த கருத்துக்களைத் தெளிவுபடுத்துக?
(ஆ) புராணம் என்பதன் பொருள் என்ன? புராணங்கள் புகட்டும் போதனைகள் யாவை?
(இ) கந்தபுராணம் யாரால் இயற்றப்பெற்றது? அவர் பற்றிச் சிறுகுறிப்பு வரைக?
(ஈ) கந்தபுராணம் மனித உய்விற்கு வகுத்துத் தந்த இரண்டுவிழுமியங்களைக் குறிப்பிடுக?

05. "விரதமாவது மனம் பொறிவழி போகாது , நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விதிப்படி விசேடமாக வழிபடல் ." – நாவலர் பெருமான்
(அ) ஐம்பொறிகள் எவை?
(ஆ) விரதம் அநுட்டிப்பவர் மேற்கொள்ள வேண்டிய சைவ ஆசார ஒழுக்கங்கள் ஐந்தினைத் தருக.
(இ) விரதகாலங்களில் திருக்கோயில் வழிபாடு இன்றியமையாதது. திருக்கோயிலில் செய்யத் தகுந்தவை யாவை?
(ஈ) மகா சிவராத்திரி விரத காலம் , மகிமை , பயன் அதனை அநுட்டிக்கும் முறை என்பன பற்றிச் சுருக்கமாக எழுதுக.

06. "யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகி யாங்கே மாதொருபாகனார் தாம் வருவர் "– சிவஞானசித்தியார்
(அ) மேலே தரப்பட்டுள்ள கூற்றினை ஆதாரமாகக் கொண்டு எமது சைவபாரம் பரியத்தின் தனித்துவமாகக் குறிப்பிடக்கூடிய அம்சம் எது என்பதை எழுதுக.
(ஆ) கோயில்கள் சமுதாய நலன் பேணலுக்கும்,விருத்திக்கும் நிலைக்களனாக விளங்கி வந்திருக்கின்றன என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக .
(இ) கிராமியக் கடவுளர் வரிசையில் நம் நாட்டில் வணங்கப்படும் ஐந்து தெய்வங்களின் பெயர்களை எழுதுக.
(ஈ) கிராமியத் தெய்வங்களைப் பக்தியுடன் மக்கள் வழிபாடு செய்கின்ற முறையினையும்

தெய்வச்சந்நிதிகளில் இடம்பெறுகின்ற கிராமியகலைகள் எவை என்பதையும் விளக்குக.

07. "சைவ சமயத்தில் பிறந்தவர் யாவரும் சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தற்குக் தீட்சை பெற்றுக்கொள்ளல் வேண்டும்."
(அ) தீட்சை (தீக்ஷா) எனும் சொல் உணர்த்தும் பொருள் என்ன?
(ஆ) மும்மலங்களுள் சகலர்க்கு அளிக்கும் தீட்சை எவ்வகையினது? அது எவ்வாறு அளிக்கப்படுகின்றது.
(இ) தீட்சை அளிக்கும் ஆசாரியார் கொண்டிருக்க வேண்டிய தகமைகள் யாவை?
(ஈ) சமய தீட்சை பெற்றவர்கள் கடைப்பிடித்தொழுக வேண்டிய இயம, நியமங்கள் எவை?

08. பின்வரும் பாடல்கள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
(ஆ) அவற்றைப் பாடியோர் யாவர் என்றும் அவை எச்சந்தர்ப்பங்களில் பாடப்பட்டன என்றுங் கூறுக.
(இ) அவற்றின் பொழிப்பினை எழுதுக.

(1) "என்ன புண்ணியஞ் செய்தனை ...................."
(2) "மாதர்ப் பிறைக்கண்ணியானை ...................."
(3) "சீருந் திருவும் பொலிய ...................."
(4) "பண்ணு ம் பரதமும்.................... "
(5) "அண்ணலார் தமக்களித்த மெய்ஞ்ஞானமே ...................."

## கல்விப் பொதுத்தராதரப் பத்திர(சாதாரணதர)ப் பரீட்சை-1992 டிசெம்பர்

## சைவசமயம் 1 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 3 | 21. | 1 | 31. | 2 |
| 02. | 2 | 12. | 2 | 22. | 2 | 32. | 1 |
| 03. | 1 | 13. | 4 | 23. | 4 | 33. | 2 |
| 04. | 4 | 14. | 2 | 24. | 1 | 34. | 2 |
| 05. | 1 | 15. | 3 | 25. | 2 | 35. | 3 |
| 06. | 3 | 16. | 2 | 26. | 1 | 36. | 2 |
| 07. | 2 | 17. | 1 | 27. | 3 | 37. | 1 |
| 08. | 3 | 18. | 1 | 28. | 1 | 38. | 1 |
| 09. | 2 | 19. | 1 | 29. | 3 | 39. | 2 |
| 10. | 1 | 20. | 4 | 30. | 3 | 40. | 2 |

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர(சாதாரணதர)ப் பரீட்சை-1992 டிசெம்பர்

## சைவசமயம் 11 விடைகள்

01. (அ) சிவபெருமானால் சுந்தரர் வன்றொண்டர் எனக் குறிப்பிடப்பட்டார்.
சூழ்நிலை: சுந்தரர், மணப்பந்தலில், மணவாளக்கோலத்தில் வீற்றிருந்த போது, கிழப்பிராமணனாக வந்த சிவபெருமான், அவரைத் தடுத்து அடிமை கொண்டார். தடுத்தாட்கொள்ளப்பட்ட சுந்தரருடன் கிழப்பிராமணர் திருவருட் துறைக்கோயிலுக்குள் சென்றார். அங்கு கிழப்பிராமணர் மறையவே, சுந்தரர் வேதியரைக் காணாமையால் அவரை அழைத்தார். அப்பொழுது இறைவன் காட்சியளித்து சுந்தரரை நோக்கி "நம்மை வன்மையாகப் பேசிய படியால் உனக்கு வன்றொண்டன்" என்னும் பெயர் தந்தோம் என்றார்.

(ஆ) 1) செங்கற்களை பொன்னாக்கியமை
2) இறைவனிடமிருந்து பெற்ற பன்னீராயிரம் பொன்னை , மணிமுத்து நதியிலிட்டு , திருவாரூர் குளத்தில் எடுத்தமை.
3) காவேரியாறு பிரிந்து வழிவிடச்செய்தமை
4) முதலை விழுங்கிய பிள்ளையை மீட்டமை.
5) தேவர்கள் வெள்ளை யானையில் ஏற்றி கயிலைக்குக் கொண்டு சென்றமை.
6) குண்டையூரில் பெற்ற நெல்லை பூதகணங்களின் உதவியால் திருவாரூரில் பெற்றமை.
7) இறைவனிடம் பொதிசோறும் தண்ணீரும் பெற்றமை.
8) கண்ணிழந்து , மீளக் கண் பெற்றமை.
9) இறைவனைப் பரவையாரிடம் தூதாக அனுப்பியமை.

(இ) சகமார்க்கம்/ யோகநெறி

(ஈ) திருக்கேதீஸ்வரம்
இராமேஸ்வரத்தில் நின்று கொண்டு அப்பதிகம் பாடினார்.

02. (அ) சொரூபநிலை/ சொரூபலக்கணம், தடத்த நிலை/ தடத்த லக்கணம்.

(ஆ) சித்தாந்திகள் - " பரமசிவம் / சிவம்
வேதாந்திகள் பிரமம்/ நீர்க்குணப்பிரமம்

(இ) தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல் இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை.

(ஈ) அறியும்ஆற்றல்உடையதாயினும் , அறிவித்த வழியே அறிய வல்லது உலகைச் சாரும்போது அசத்தாகியும் சிவத்தைச் சாரும்போது சத்தாகியும் நிற்கும் (சதசத்து)
பிறவியெடுத்தல்
மலங்களுடைமை - சகலர், விஞ்ஞானகலர்
அநாதியானது - பிரளயாகலர்
எண்ணற்றவை
உண்மைப்பொருள்

03. (அ) ஆணவம், கன்மம் , மாயை

(ஆ) இருள் மற்றைய பொருளைக்காட்டாவிடினும் அதன்உருவைக் காட்டும்.
ஆணவம், பிற பொருள்களையும் காட்டாது. தன்னையும் மறைத்து நிற்கின்றது.

(இ) பிராரத்தம் : - உயிர் முற்பிறப்பின் செய்த வினைத்தொகுதி இப்பிறப்பில் அனுபவிக்கப்படுகிறது. அவ்வாறு அனுபவிக்கப்படும் வினைப்பகுதி பிராரத்தம் ஆகும்.
சஞ்சிதம் : - வரும் பிறப்புக்களில் அனுபவிக்கும் பொருட்டு எஞ்சியிருக்கும் பழவினை
ஆகாமியம் : இப்பிறப்பில் புதிதாகச் சேரும் வினை.

(ஈ) இறை பணிநிற்றல்
1. அகப்பூசை
2. புறப்பூசை
3. மந்திரசெபம்
4. திருக்கோயில் வழிபாடு
5. அடியார் வழிபாடு
6. சமுகத்தொண்டு

04. (அ) முருகன் தமிழர்களுக்குச் சிறப்பான கடவுள்
குறிஞ்கிநிலக் கடவுள்
செந்நிறம் சேயோன்
திருமுருகாற்றுப்படை கூறுவது
ஆலகெழு கடவுளின் புதல்வன்
மலைமகளின் மகன்
கொற்றவையின் சிறுவன்

(ஆ) புராணம் என்பதற்கு பழமை என்பது பொருள்
போதனைகள் – அறம் வெல்லும் மறம் தோற்கும்
**நீதி நிலைக்கும், அநீதி அழியும்**
தேவ மனிதப் பண்புகள் நிறைவான்வை
அசுர அரக்கப் பண்புகள் விலக்கப்படவேண்டியவை
தத்துவக் கருத்துக்களை எளிய வடிவில் போதிக்கின்றன.

(இ) 1. கச்சியப்ப சிவாசாரியரால் இயற்றப்பட்டது.
2. கச்சியப்ப சிவாசாரியார்
காஞ்சிக் குமர கோட்டப் பூசகர்
குமரவேள் அருள் பெற்றவர்
குமரக் கடவுளே கந்தபுராணம் பாடுவதற்கு இவருக்கு " திகடசக்கரம்"
என்ற அடியெடுத்துக் கொடுத்தார்.

(ஈ) செய் நன்றி மறவாமை
தெய்வ நிந்தை புரியாமை
தெய்வ நிந்தை புரிவோரிடம் சேராமை

05. (அ) மெய், வாய் கண் , மூக்கு , செவி

(ஆ) உணவைக் குறைத்தல் அல்லது நீக்குதல்
வாயால் இறைவன் திருநாமத்தை உச்சரித்தல்
மனத்தால் இறைவனைச் சிந்தித்தல்
உடம்பால் இறைபணி செய்தல்
மனம், வாக்கு ,காயம் என்னும் மூன்றும் தூய்மையாக இருத்தல்.
மனம் பொறிவழி செல்லாது தடுத்தல்
வீணான ஆசைகளான காமம், வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை
என்பவைகளை அகற்றல்.

(இ) தோய்த்துலர்ந்த ஆடை தீரித்து பூசைப் பொருட்களைத் தட்டில் வைத்து மார்புக்கு மேலாகத் தூக்கிய வண்ணம் ஆலயத்துக்குச் செல்லல். இறை சிந்தனை , அவன் நாமங்களை உச்சரித்தல், அவன் புகழ் பேசுதல், பாடுதல் , திருவைந்தெழுத்து உச்சரித்தல்.
அமைதி பேணல்
கோபுரத்தை வணங்கி பின்பு துவாரபாலகரையும், திருநந்திதேவரையும் வணங்கி உள்ளே போய் விநாயகரைத் தரிசித்தல் பின் அங்குள்ள மூர்த்தங்களையும் ஏனைய பரிவாரத் தெய்வங்களையும் வணங்குதல் . இறுதியில், சண்டேசுவர வழிபாடு
கோயிலை அலகிடல், மெழுகிடல் , சுத்தம் செய்தல் , விளக்கேற்றல், பூமாலை தொடுத்தல் போன்ற சரியைத்தொண்டுகள் அட்டாங்க நமஸ்காரம் ஆண்கள், பஞ்சாங்க நமஸ்காரம் பெண்கள்.

(ஈ) காலம் : – மாசிமாதம் தேய்பிறை பதினான்காம் நாளிலே ( கிருஷ்ண பட்சத்துச் சதுர்த்தியில் வரும்.)
மகிமை : பிரம விட்டுணு க்களின் அகந்தை ஒழிந்த தினம் .
இலிங்கோற்பவ மூர்த்தி வெளிப்பட்ட காலம்.
பயன் : –சிவகதியடைதல்
முறை : – நாள் முழுவதும் உணவை விடுத்து இரவு முழுவதும் கண் விழித்து, முழு நேரத்தையும் சிவ சிந்தனையிலும், சிவ கதை கேட்பதிலும், சிவனடியார் கூட்டத்திலும் கழித்தல்.

06. (அ) அனைத்தையும் சிவ பரம்பொருளாகவே காணு ம் சிவநெறி எமது மரபில் தனித்துவம்
(ஆ) சமுதாய நலன் பேணு தல் – அன்னதானம் (மகேசுர பூசை)

பிணக்குகள் தீர்த்தல் , கலை வளர்ச்சி, நோய் தீர்த்தல், சுகாதாரம் பேணல் , விருந்தோம்பல்

(இ) வயிரவர், வீரபத்திரர் , ஐயனார் , காளி, கண்ணகி , நாச்சிமார், இடும்பன், முனியப்பர், சீதை , திரௌபதை.

(ஈ) வழிபாட்டுமுறை: – பொதுமக்கள் நேரடியாக பொங்கல், மடை, படையல் செய்து வழிபடுதல் பக்தி, பரவசம் , ஆட்டம்.

கலைகள்: – கரகம், காவடி , உடுக்கு , பறை, கூத்து, நாடகம், வில்லுப்பாட்டு, பிரசங்கம் இவை போன்றவை.

07. (அ) "தீஷா" எனும் சொல் " ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது" என்னும் பொருள் உடையது.

(ஆ) சகலர்க்கு அளிக்கும் தீட்சை, சாதாரண தீட்சை
குருவை ஆதாரமாகக் கொண்டு அளிக்கப்படுவது

(இ) சமய தீட்சை விசேட தீட்சை, நிர்வாண தீட்சை ஆசாரியாபிடேகம் ஆகிய நான்கும் பெற்றிருத்தல்.
மனக்குற்றம் , உடற்குற்றம் அற்றிருத்தல் .
கல்வி , அறிவு ,ஒழுக்கம் நிரம்பியவர்
சைவ ஆகமங்களை ஓதி உணர்ந்தவர் , சைவ நாற்பாதங்களையும் அறிந்து ஒழுகுதல், 16 வயதுக்கும் 70 வயதுக்கும் உட்பட்டவராயிருத்தல்
சீடர்களுக்கு , நல்லொழுக்கம், சைவசமயம் போதித்தலில் திறமையுடையவராயிருத்தல்.

(ஈ) இயமங்கள் : – கொல்லாமை, கள்ளாமை, பிறன்மனை நயவாமை அருளுடைமை, பொறையுடைமை, வஞ்சனையின்மை, மீதூண்விரும்பாமை ,தூய்மை, மனங்கலங்காமை.
நியமங்கள் : தவம் , தெய்வ நம்பிக்கை , ஈகை, மூத்தோர் வழிபாடு, செருக்கின்மை, உண்மை, நூலாராய்ச்சி, நன்மை தீமைகளைப் பகுத்தறிதல், விரதம்.

08. 1. பாடியவர் : திருஞான சம்பந்தர் தலம் : திருவலஞ்சுழி

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம்(ம்) நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே

பொழிப்பு :

மனமே சிறந்த மணியாகிய முத்துக்கள் பொருந்திய காவேரியாறு சூழப்பெற்ற திருவலஞ்சுழிப்பெருமானைப் பக்தியோடு பலமுறை வாயாரப் புகழ்ந்தும் பாடியும் வழிபடும் பேறு இப்போது நீ பெற்றுள்ளமையால் , பெரிய கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் முன்னே நீ செய்துள்ள நல்வினைப்பயன்களுக்கு இடையே இப்பேறு பெறுவதற்கு ஏதுவாய் என்ன புண்ணியம் செய்தாய்? அது பெரியது!

2. பாடியவர் : திருநாவுக்கரசர் தலம் : – திருவையாறு

மாதர்ப் பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந் தேத்திப் புகுவா ரவர் பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயாறடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதங் கண்டறியாதன கண்டேன்.

பொழிப்பு :

கண்டோர் விரும்பத்தக்க பிறைச்சந்திரனைத் தலை மாலையாக அணிந்த பெருமானை மலையரசன் மகளான பார்வதிதேவியுடனே கூடப்பாடி அர்ச்சனைக்குப்பூவும் திருமஞ்சனத்திற்கு நீரும் தாங்கித் துதித்துக்கொண்டு போகும் தொண்டர் பின்னே தொடர்ந்து கைலைக்கு போகின்ற நான் வந்த சுவடு தெரியாமல் அப்பெருமானது திருவருளால் திருவையாற்றை அடைந்த போது அன்புடைய இளைய பெண் யானையோடு ஓர் ஆண்யானையும் சக்தியும் சிவமும் ,போல ஒன்றுபட்டு வருவதைக் கண்டேன். இதற்கு முன் கண்டறியாத அதிசயங்களையும் கண்டேன்.

03.. பாடியவர்: சேந்தனார் - திருப்பல்லாண்டு தலம் : சிதம்பரம்

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழற வுழறி
யுமைமண வாள னுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

பொழிப்பு : -
சிவலோக நாயகன் திருவடிக்கு கீழிருந்து மற்றெவரும் பெறாத சிவஞானப்பெருமையும் முத்திச் செல்வமும் பெருகும் வண்ணம் பெற்றுவிட்டேன் . நான் பெற்ற பேற்றினை இவ்வுலகில் வேறு யார்தாம் பெறுவர் . உமை மணவாளனுக்கு நாம் ஆட்பட்ட தன்மையினை கூறும் உலகில் புகழ்ந்து பேச நாக்குளறி மண்ணு லகும் விண்ணு லகும் அறியும் வண்ணம் பல்லாண்டு பாடுவோம்.

04. பாடியவர் குமரகுருபரர் (சகலகலாவல்லிமாலை)

பண்ணு ம் பரதமும் கல்வியு
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணு ம் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணு ம் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணு ங் கருத்து நிறைந்தாய்
சகலகலாவல்லியே

பொழிப்பு:
கல்வியின் நூலறிவு ஆகும். இனிய சொல்லமைதியுடைய கவி முத்தமிழ் கல்வியும் கவித்துவமும் வேண்டும். வேதத்திற் கூறப்படும் பொருளிலும் ஐம்பூதங்களிலும் நிறைந்திருப்பவன் அன்பர்கள் காட்சிக்கும் தியானத்திற்கும் எளிதில் வந்தருளும் தன்மையுடையவள்.

05. பாடியவர்: சேக்கிழார் - பெரியபுராணம்

அண்ண லார்தமக் களித்தமெய்ஞ்
ஞானமே யானஅம் பலமுந்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழும்
ஆனந்த ஒரு பெருந் தனிக்கூத்தும்
கண்ணின் முன்புறக் கண்டுகும்
பிட்டெழுங் கனிப்பொடுங் கடற்காழிப்
புண்ணியக் கொழுந் தனையவர்
போற்றுவார் புனிதரா டியபொற்பு

பொழிப்பு:
பிள்ளையாரின் உள்ளத்தில் நிறைந்த சிவஞானமும் அதனால் விளையும் சிவானந்தமும் புறத்தே முறையே திருவம்பலமும் அதிலே நடராசப் பெருமான் ஆடும் திருக் கூத்துமாகக் கூறப்பட்டன.

## விற்பனை முகவர்களாக :~

**யாழ் நகரில் :-**

* பூபாலசிங்கம் புத்தகசாலை
* துர்க்கா ஸ்ரேசனரீஸ் (சுன்னாகம்)
* மண்டேலா புத்தகசாலை
* சிறீகரன் புக் சென்ரர் (சுன்னாகம்)
* மக்மிலன் புத்தகசாலை
* சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை (நெல்லியடி)

**கொழும்பு நகரில் :-**

* பூபாலசிங்கம் புத்தகசாலை
* ஜெயா புத்தகசாலை
* வி.ஜே.பி. இன்ரனசினல்
* பிற்றப்பன்
* பமிலா புக் சென்ரர்
* அஷ்டலஷ்மி பதிப்பகம்
* சாயி ஸ்ரேசனரீஸ்
* வின்சர் புக் சொப்
* டானியல் புக் சொப்
* ஆயிஷா புக் சென்ரர்
* பிறைட் புத்தக நிலையம்
* மக்மிலன் புத்தகசாலை
* எம்.டி.குணசேன அன்கோ
* சிறீலங்கா ஜமாத் இஸ்லாமிக் சென்ரர்

**மட்டு நகரில் :-**

* சக்தி நூல் நிலையம்
* யுனைற்டட் புக் சென்ரர்
* அறிவு நூல் நிலையம் (ஏறாவூர்)
* ராஜா புக் சென்ரர்
* கிருஷ்ணா புக் சென்ரர்

**திருமலையில் :-**

* கப்பி புக் சென்ரர்
* ரசாக்கியா புக் சென்ரர்
* எவர்சயின் பிரின்டேர்ஸ் (கின்னியா)
* ராஜா புக் சென்ரர்
* ஈஸ்ற் லிங் கொம்னிகேசன்
* லெஸ்னி புத்தகசாலை
* சிறீ துர்க்கா என்றபிறைஸ்

**வன்னி நகரில் :-**

* கவிதா ஸ்ரோர்ஸ்
* கஜன் சென்ரர்
* கே.பி.கே சென்ரர்
* வாணி புத்தகசாலை

**கல்முனையில் :-**

* அன்பு ஸ்ரோர்ஸ்
* A to Z (நிந்தாவூர்)
* சிற்றி புக் சென்ரர்
* சொய்ஸ் பளெஸ்
* புக்ஸ்வேல்ட்

**கண்டியில் :-**

* கலைவாணி புத்தக நிலையம்
* லங்கா சென்ரர் புத்தகசாலை
* பராசக்தி ஏஜன்சிஸ் (பண்டாரவளை)

**ஹற்றனில் :-**

* நியூ கேசவன்
* முரளி கொம்னிகேசன்

**அக்கரைப்பற்றில் :-**

* சென்ரல் புக் சென்ரர்
* ரோயல் புத்தகசாலை

**புத்தளத்தில் :-**

* பேப்பர் கவுஸ்
* சத்தியா புக் கவுஸ்

* அல்குரஸி புத்தகசாலை - மாத்தளை
* நித்தியா புக் சென்ரர் - மன்னார்`
* பேருவளை புக் சென்ரர் - பேருவளை
* அப்துல் ரஹீம் பிரதர்ஸ் - சம்மாந்துறை
* குமரன் ரேட் சென்ரர் - நுவரேலியா
* கொலிஜ் புக் சென்ரர் - மாவனெல்ல
* மகின்டாஸ் - பதுளை
* விஸ்டம் புக் சென்ரர் - நீர்கொழும்பு
* மில்லேனியம் புக் சென்ரர் - வாழைச்சேனை
* K.M.A காதர் அன் சன்ஸ் - அக்குறன

**அஸ்ரன் பதிப்பகம்**

**100 A/1 W. A. சில்வா மாவத்தை, கொழும்பு – 06.**

கல்வியின் நோக்கம் உயர் மேம்பாடடைவதே.
நோக்கம் வெற்றிபெற கல்வி தொடரவேண்டும்.
கல்வி தொடர பரீட்சை முடிவுகளே மூலாதாரம்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளே
உயர்கல்வி தொடர உண்மையான அத்திவாரம்.
பரீட்சையில் வெற்றிபெற இந்நூல் ஒரு வழிகாட்டி.
தவறான முறைகளை கைவிட உதவும் கருவி

பரீட்சையின் முடிவுகள் உயர்வாக அமைய
இப்பயிற்சி நூல் உதவியாக அமையும்.

*"Work hard victory shall follow"*

பதிப்பாசிரியன்

அஸ்ரன் பதிப்பகம்
100 A/1.W.A. சில்வா மாவத்தை
கொழும்பு - 06

Astan Publications No :100 A/1 W.A De Silva MW Colombo-6
T.P-2366821

178/=